
சாண்டில்யன்
வானதி பதிப்பகம்
நாகதீபம்

முதற் பதிப்பு : பிப்ரவரி 1966
பதிநான்காம் பதிப்பு : ஜூலை 2002
பதினைந்தாம் பதிப்பு : ஏப்ரல். 2005

© Copy with the Author

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 75-00

- Title : NAGA DHEEPAM
- Author : SANDILYAN
- Language : Tamil
- Subject : Historical Novel
- Edition : Fifteenth Edition, April, , 2005
- Pages : 288
- Published by : VANATHI PATHIPPAKAM
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar,
  Chennai – 600 017.
- Price : Rs. 75-00

Laser Typeset by : *Sivaa Graphics*, Chennai. Ph. : 23610810
Printed at Malar Printers 044-8224803

# முன்னுரை

கர்னல் ஜேம்ஸ் டாட் எழுதிய ராஜபுதன வரலாற்று ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்த போது ராணா அமரசிம்மன் ஜஹாங்கீருக்குப் பணிந்து சமாதானம் செய்துகொண்ட சமயத்தில், மேவார் வம்சத்தில் பரம்பரையாக இருந்த, விலைமதிக்க முடியாத சிவப்பு இரத்தினம் ஒன்றை மொகலாய சக்ரவர்த்திக்குக் கொடுத்ததாக ஒரு குறிப்பு இருந்தது. அந்தக் குறிப்பைத் தொடர்ந்து மொகலாய ராஜபுதனட பார்களைப் பற்றி ஆராய்ந்தபோது வரலாற்றின் அந்தப் பகுதி மிகச் சுவையாக இருந்தது. நல்லதொரு கதைக்கும் இடம் இருந்தது.

அந்த வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டு 'நாகதீப'த்தின் கதை புனையப்பட்டது. இக் கதையின் கதாநாயகியான ராஜபுத்திரியைத் தவிர மற்ற எல்லோரும் வரலாற்றில் வாழ்ந்தவர்கள்! இக்கதை இலக்கிய மாதப் பத்திரிகையான 'அமுதசுரபி'யில் ஒன்றரை வருட காலம் தொடர்ச்சியாக வெளிவந்தது. இதைத் தொடர் கதையாக வெளியிட்ட அமுதசுரபி நிர்வாகிகளுக்கும், புத்தக ரூபத்தில் வெளிக் கொண்டு வர முன்வந்த 'வானதி பதிப்பக'த்தாருக்கும் என் நன்றி.

தியாகராய நகர் சாண்டில்யன்
4.2.1966

# இந் நூலாசிரியரின் பிற நூல்கள்

## சரித்திர நூல்கள்

| | |
|---|---|
| ராஜ திலகம் | பல்லவ திலகம் |
| கடல் ராணி | மூங்கில் கோட்டை |
| ராஜ பேரிகை | ராணியின் கனவு |
| யவனராணி I, II | மஞ்சள் ஆறு |
| கன்னி மாடம் | அவனி சுந்தரி |
| ஜலதீபம் I, II & III | மோகனச் சிலை |
| மன்னன் மகள் | மலையரசி |
| ராஜமுத்திரை I, II | வசந்த காலம் |
| ராஜயோகம் | நிலமங்கை |
| சேரன் செல்வி | மங்கல தேவி |
| மலைவாசல் | உதயபானு |
| ஜலமோகினி | இளைய ராணி |
| நாக தீபம் | ராணா ஹமீர் |
| ஜீவ பூமி | நீலவல்லி |
| நாகதேவி | விலைராணி |
| பாண்டியன் பவனி | சந்திரமதி |
| ராஜ்யஸ்ரீ | நீள்விழி |
| இந்திரகுமாரி | மோகினிவனம் |
| | சித்தரஞ்சனி |

## சமூக நாவல்கள்

| | |
|---|---|
| மனமோகம் | செண்பகத் தோட்டம் |
| புரட்சிப் பெண் | மதுமலர் |
| நங்கூரம் | |

## பக்தி நூல்கள்

| | |
|---|---|
| கவர்ந்த கண்கள் | கம்பன் கண்ட பெண்கள் |
| திருப்பாவை | ஸ்ரீ இராமானுஜர் |

# நாகதீபம்

## 1. ஹரிதாஸ் ஜாலா

சரத் காலத்தின் அந்த மாலை நேரத்திலும் சகிக்க வொண்ணாத அளவுக்கு தீட்சண்யத்தைக் கிளப்பி தகித்துக் கொண்டிருந்த ஆதவனின் அத்தனை கொடுமையையும் அலட்சியம் செய்து, கடகடவெனச் சிரிப்பு ஒன்றை உதிரவிட்டான் ஹரிதாஸ் ஜாலா. அவன் வாழ்க்கையைப் போலவே அந்தச் சிரிப்பும் வறண்டு கிடந்தது.

அந்தச் சிரிப்பை அனுபவிப்பதற்கோ, வேண்டாமென விலக்கித் தள்ளுவதற்கோ அக்கம் பக்கத்தில் யாருமில்லை. அப்படி யாருமில்லாத அவன் சிந்தனைக்கும் சிந்தனையின் விளைவாக எழுந்த அந்தச் சிரிப்புக்கும் காரணமாயிருந்திருக்க வேண்டும். அந்தக் காரணத்தைச் சரியென்று வலியுறுத்தும் புன்முறுவலொன்று சிரிப்பைத் தொடர்ந்து அவன் இதழ்களில் சில விநாடிகள் பரவி நின்றது. அதுவரை தலையைக் குனிந்து கொண்டே தீவிர சிந்தனையில் புரவி மீது சென்று கொண்டிருந்த ஹரிதாஸ் ஜாலா, மெள்ளத் தலை நிமிர்ந்து நாலா பக்கத்திலும் தனது கண்களைச் சஞ்சரிக்க வொட்டாமலும் கனலின் ஒளிகளை ஆங்காங்கு கிளப்பிக் கொண்டும் வெள்ளை

வெளேரென்று கண்ணுக்கெட்டும் தூரம் வரையில் பரவிக் கிடந்த அந்தப் பாலைவனப் பிரதேசத்தைக் கவனித்த ஹரிதாஸ் ஜாலா, அந்தப் பாலைவனத்துக்கும் தனக்கும் எத்தனை ஒற்றுமையிருந்தது என்பதை எண்ணினான். அந்த எண்ணத்தின் விளைவாக ஏற்கெனவே அவன் இதழ்களில் தவழ்ந்துநின்ற புன்முறுவல் முகத்திலும் பரவலாயிற்று.

பாலைவனத்தைப் போலவே தன் வாழ்க்கையும் வறண்டு கிடப்பதையும், பெரும் காற்றுகளால் சற்று தூரத்துக்கொருமுறை திரட்டி நிற்க வைக்கப்பட்டிருந்த மணற்குன்றுகளையும், அவற்றையடுத்த பெரும் மணற் பள்ளங்களையும் போலவே, தன் வாழ்க்கையிலும் பெரும் புயல்கள் பல வீசி சில சமயங்களில் தன்னைக் குன்றினளவுக்கு உயர்த்தியும் மற்றும் சில சமயங்களில் பள்ளங்களின் அளவுக்குத் தாழ்த்தியுமிருப்பதை நினைத்த அந்த ராஜபுத்திர வாலிபன், ‘உற்றார் உறவினர் யாருமற்ற எனக்கும் இந்த உலகத்தில் துணையிருக்கிறது’ என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். அத்தகைய துணையையும் நினைத்து மேல்திசையின் தூரத்தே தெரிந்த ஹாராவளி மலைத் தொடரில் மறையத் தொடங்கிக் கொண்டிருந்த கதிரவனையுங் கண்ட அந்த வாலிப வீரன், “ஆதவன் சுடுகிரணங்களால் பாலைவனத்தை வருஷக் கணக்கில் சுட்டும் பாலைவனத்தின் மணல் மற்ற பொருள்களைப் போல் கருகிப் போகாமல் வெள்ளை வெளேரென்று சுயநிலையிலேயே நிற்கிறதல்லவா?” என்று சொல்லிக் கொண்டதன்றி, “வீரர்கள் நிலையும் இப்படித்தான். வாழ்க்கையின் கடுஞ்சோதனைகளால் அவர்கள் வாடு வதுமில்லை; சுயநிலையிலிருந்து மாறுவதுமில்லை” என்று தத்துவ சிந்தனையிலும் இறங்கினான்.



வறண்ட வாழ்க்கைக்கு அவ்வப்பொழுது சிறிது உயிரூட்டும் ஒரே சாதனம் தத்துவந்தான் என்பதை நன்றாக உணர்ந்திருந்த ஹரிதாஸ் ஜாலா, தத்துவங் களிலும் பல மாறுபாடுகள் உண்டென்பதையும் அவை மனித சுபாவத்துக்குத் தக்கபடி மாறுபட்ட உணர்ச்சி களையும் அர்த்தங்களையும் அளிக்க வல்லவையென் பதையும் நினைத்துப் பார்த்தானாகையால், ‘வாழ்வில், எது வளர்ச்சி, எது வீழ்ச்சி என்பதை நிர்ணயிப்பதுகூட சுலபமல்ல’ என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். ஏதும் விளையாமல் வறண்டு கிடக்கும் பாலைவனம் வளர்ச்சியுற்றதா அல்லது தூரத்தே தெரிந்த ஒண்டாலா என்றழைக்கப்பட்ட ஓமதலா சமவெளி வளர்ச்சியுற்றதா என்பது கூட தீர்மானிக்க முடியாத விஷயம் என்று அவன் எண்ணினான். ‘எப்படி முடியும்? வளர்ச்சி விளைவுகளைப் பொறுத்த தல்ல, செயல்களைப் பொறுத்தது’ என்று முடிவு கட்டி அவன் ராஜபுதனமே அதற்குப் பேருதாரணமாக நிற்பதை மனக் கண்ணாடியில் கண்டான். மேவார் தலைநகரமான சித்தூரில் இன்று ஏதுமில்லை. கட்ட டங்களை அலாவுதீனும் அழித்துவிட்டான். அக்பரின் பீரங்கிகளும் அழித்துவிட்டன. கோட்டை படுதூளாகக் கிடக்கிறது. எங்கும் பெருநாசம், போரின் விளைவு அது, ஆனால் அந்த நாசத்திலும் வளர்ச்சியிருக்கிறது. அங்குள்ள இடிந்த கட்டடங்கள் எத்தனை கதை களைச் சொல்லுகின்றன. எத்தனை வீரப் பிரதாபங்கள் அந்தத் தலைநகர வீழ்ச்சியில் இணைந்து கிடக்கின்றன. சூரியன் வாயிலில் வாள் பிடித்து மொகலாயரைப் பெரும் பலி வாங்கிய பிறகே மாண்ட மாவீரர்களான ஜெய்மல்லுக்கும் பட்டாசிம்மனுக்கும் அக்பரே நினைவு ஸ்தூபிகளைக் கட்டவில்லையா? பெரும் வீரச் செயல்கள், நாசமடைந்த அந்தக் கோட்டையில் எழுந்து இன்றும் பேரொலி செய்யவில்லையா? செயல்

களில் வளர்ச்சியில்லையென்று எப்படிச் சொல்ல முடியும் என்று விளக்கம் சொல்லிக் கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அதற்கு நேர் எதிரான நிலையையும் எண்ணிப் பார்த்தான். 'மொகலாயரிடம் சரணடைந்த ராஜபுத்திரர்களின் நகரங்கள் நாசமடையவில்லை; கட்டடங்கள் பெரிதாக எழுந்து கண்ணைப் பறிக்கத் தான் செய்கின்றன. இஸ்லாத்தின் நட்பினால் விளைவு நல்லதுதான். ஆனால் அது வாழ்வின் வளர்ச்சியா? அல்ல அல்ல. வாழ்வின் வீழ்ச்சி அது. அங்கும் செய லுண்டு. ஆனால் அடிமைச் செயல். செயல் சொந்த மானதல்ல. அதிகாரி தூண்டுவதால் அடிமை இயங்கு கிறான். அதில் பணமுண்டு படாடோபமுண்டு. பதவி உண்டு. இல்லாதது மானம் ஒன்றுதான்' என்று நினைத்துப் பார்த்ததால் வெறுப்புக் கொண்ட ஹரிதாஸ் ஜாலா தன் நிலையை நினைத்துப் பெரிதும் மனம் வெதும்பினான். இரண்டு வருடகாலம் மொகலாயர் சிறையில் சிக்கி இம்சைப்பட்டுச் சில தினங்களுக்கு முன்னரே ஜஹாங்கீரால் விடுவிக்கப்பட்ட அந்த ராஜபுத்திரன், 'விடுதலைக்கு நான் ஏன் ஒப்புக் கொண்டேன்? இப்பொழுது நான் செய்ய ஒப்புக் கொண்ட பணியைவிட மொகலாயர் சிறையிலேயே மடிந்திருந்தால் உத்தமமாயிருக்குமே' என்று தன்னைத் தானே இழிவாகவும் பேசிக் கொண்டான்.

இரண்டு வருஷ காலம் மொகலாயர் சிறையில் பட்ட அவதியை நினைக்க நினைக்க, கலங்காத அவன் நெஞ்சமும் கலங்கியது; எத்தனை இழி பணிகள்! எத்தனை சவுக்கடிகள்... நினைக்கக்கூட நெஞ்சம் திடுக்கிட்டது அவனுக்கு. ஆனால் ஜஹாங்கீரிடம் தான் செய்ய ஒப்புக்கொண்ட பணியைவிடச் சிறையில் அவர்கள் இட்ட பணிகள் இழிபணிகளா என்று எண்ணிய ஹரிதாஸ் ஜாலா, 'இல்லை, இல்லை; ஒருக்காலுமில்லை' என்று திட்டமாகத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். அவன் விடுதலைக்குப் பரிசாக ஜஹாங்கீர் விதித்த பணியும் அப்படிப் பெரும் அவமானத்தைத் தரும் பணியன்று. ஜஹாங்கீர் கேட்டதெல்லாம் ஒரு சிறு பொருள். அதை எப்படியாவது மேவார் ராணாவிடமிருந்து கொண்டு வரும்படி பணித்தார் ஜஹாங்கீர்.



இரண்டு வருஷ காலம் சிறையில் படாதபாடுபட்ட தன்னை, ஆஜ்மீர் அரண்மனையில் எத்தனை அன்புடன் மொகலாய சக்கரவர்த்தி வரவேற்றார் என்பதை நினைக்க நினைக்கப் பாலைவனத்தின் கொடுமையான அந்தச் சூழ்நிலையில்கூட வியப்பு உள்ளத்தை ஊடுருவிச் சென்றது, ஹரிதாஸ் ஜாலாவுக்கு. சக்கரவர்த்தியைப் பார்க்கும் முன்பு அவருடைய அரண்மனையில் தனக்கு நடந்த ஸ்நானபானங்கள், ஆடை அலங்காரங்கள், பெரும் மன்னர்களுக்குக் கூட நடக்காது என்பதை அறிந்தான் ஹரிதாஸ் ஜாலா. அரண்மனை ஸ்நான அறையில் பணி மக்கள் ஊற்றிய பன்னீரை விடக் குளுமையான மந்தகாசத்துடன் மொகலாய சக்கரவர்த்தி தன்னை வரவேற்றது அப்பொழுதும் அவன் மனக்கண் முன்னால் எழுந்தது. இருவருக்கும் நடந்த சம்பாஷணையும் அவன் காதுகளில் ஒலித்தது.

மிருதுவான சுபாவத்தை விளக்கிய சிறந்த அழகு பெற்ற ஜஹாங்கீரின் செவ்விய வதனத்தில் முளைத்துக் கிடந்த கருவிழிகள், எதிரே புத்தாடை புனைந்து நீண்ட வாள் இடுப்பில் தொங்க வீரக்களை சொட்ட நடந்து வந்த ராஜபுத்திரனைப் பார்த்ததும் கொள்ளை அன்பை உதிர்த்தன. மெல்லிய மீசைக்குக் கீழே பெண்களின் உதடுகளைப் போல மிருதுவாயிருந்த அதரங்கள் மெல்ல விரிந்து, "வீரனே வருக" என்று முகமனும் கூறின. நவரத்தினங்கள் இழைத்த மஞ்சத்தில் சாய்ந்து

கொண்டிருந்த ஜஹாங்கீரின் வலது கரம் எழுந்து, 'அங்கே உட்காரலாம்' என்பதற்கு அறிகுறியாக மிக அருகிலிருந்த ஒரு மஞ்சத்தையும் சுட்டிக் காட்டியது. பெரிய பெரிய ராஜபுத்திரர்களும் எதிர்பார்க்க முடியாத அத்தனை மரியாதையைக் கண்ட ஹரிதாஸ் ஜாலா, சில வினாடிகள் பிரமித்தே போனான். அவன் பிரமிப்பை சக்கரவர்த்தியும் கவனித்ததால் அவர் இதழ்களில் பரவியிருந்த புன்னகை மேலும் விரிந்தது. "பிரமிப்புக்குக் காரணமில்லை; உட்காரலாம்" என்று சற்று அழுத்தியே சொன்னார் ஜஹாங்கீர்.

"நான் தங்கள் கைதி" என்று சுட்டிக்காட்டிய ஹரிதாஸ் உட்காராமல் நின்று கொண்டே இருந்தான்.

கைதியென்று தன்னைக் குறிப்பிட்டுக் கொண்ட போதும் அந்த ராஜபுத்திரன் குரலிலிருந்த திமிரையும் அலட்சியத்தையும் சக்கரவர்த்தி கவனித்தாரானாலும் கவனிக்காதது போல் பாசாங்கு செய்து, "நேற்றுவரை தான் கைதி, இன்றல்ல" என்று தேனொழுகப் பேசினார்.

ஹரிதாஸ் ஜாலாவின் சந்தேகம் இந்த உபசரணையாலும் இனிப்பான பேச்சினாலும் பன்மடங்கு அதிகமாக உயர்ந்தது. தந்திரத்தில் இணையற்றவர் என்று ஜஹாங்கீர் பெயர் பெற்றிருந்ததை அறிந்திருந்த ஹரிதாஸ் ஜாலா, ஏதோ காரியார்த்தமாகவே ஜஹாங்கீர் தன்னைச் சரிகட்டப் பார்க்கிறார் என்று முடிவு கட்டிக் கொண்டதால், "திடீரென்று இந்த அடிமை மீது இத்தனை அன்பு பிறக்க என்ன காரணம்?" என்று வினவினான்.

சற்று முரட்டுத்தனமாகவே எழுந்த அந்தக் கேள்வியில் ஒலித்த கசப்பை கவனிக்கத் தவறாத ஜஹாங்கீர், "அன்பு மெள்ள மெள்ள முளைப்பதில்லை. திடீ



ரென்று தான் ஏற்படுகிறது. அதுவும் ஆசையைப் போல்தான்" என்றார் சாவதானமாக!

"அப்படியா!"

"ஆம் அழகான மலரைப் பார்க்கிறோம். திடீரென்று ஆசை பிறக்கிறது, ஓர் அழகான பெண்ணைப் பாக்கிறோம். திடீரென்று அன்பும் பிறக்கிறது. அன்பும் ஆசையும் முளைப்பது சில வினாடிகளில்தான். அவற்றுக்கும் காலமும் யோசனையும் தேவையில்லை."

"தங்களுக்கு இப்பொழுது முளைத்திருப்பது அன்பா, ஆசையா?"

"இரண்டுந்தான்."

"புரியவில்லை எனக்கு."

"உன்மேல் அன்பு பிறந்தது. அதற்குக் காரணம் வேறொரு பொருளின்மேல் பிறந்த ஆசை" என்று விளக்கினார் சக்கரவர்த்தி.

அப்பொழுதும் தில்லியின் அதிபர் சொன்னது புரியாத புதிராகவேயிருந்தது ஹரிதாஸ் ஜாலாவுக்கு. குழப்பம் மிகுந்த பார்வையை ஜஹாங்கீர் மீது நாட்டினான் அவன். அந்தப் பார்வையில் குழப்பம் மட்டுமல்ல, பெரும் சந்தேகமும் கலந்து நிற்பதை கவனித்த ஜஹாங்கீரின் முகத்தில் அதுவரை விகசித்திருந்த புன்முறுவல் மறைந்து, அது இருந்த இடத்தைத் தீவிர சிந்தனை சூழ்ந்து கொண்டது. அப்படிச் சிந்தித்த வண்ணம் கேட்டார் ஜஹாங்கீர், "ராஜபுதனத்துக்குத் தற்சமயம் வேண்டுவது என்ன?" என்று.

இந்தக் கேள்வியால் ஹரிதாஸ் ஜாலாவின் முகத்தில் பெரும் சந்தேகச் சாயை படர்ந்தது. "ஏன் கேட்கிறீர்கள் அதை?" என்று வினவினான் அந்த வீரன்.

"காரணமாகத்தான் கேட்கிறேன்" என்றார் ஜஹாங்கீர், ஆழ்ந்த சிந்தனையிலிருந்து விடுபடாமலே.

"வெற்றி" என்று பதில் சொன்னான் ஹரிதாஸ் ஜாலா.

அதுவரை சிந்தனையில் சிக்கிக் கிடந்த ஜஹாங்கீரின் நுதற் பிரதேசம் திடீரென ஒளிபெற்றதன்றி, "இல்லை" என்று அவர் உதடுகளிலிருந்து திட்டமாகச் சொல்லொன்றும் உதிர்ந்தது.

"ராஜபுதனத்துக்குத் தேவை வெற்றி இல்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ஹரிதாஸ் ஜாலா.

"இல்லை" மீண்டும் உறுதியுடன் வந்தது சக்கரவர்த்தியின் பதில்.

"வேறென்ன வேண்டும்?" துணிவுடன் கேட்டான் அந்த ராஜபுத்திர வீரன்.

"அமைதி." இந்தச் சொல்லை மிகுந்த நிதானத்துடன் சொன்ன ஜஹாங்கீர், ஹரிதாஸ்மீது தமது அழகிய கண்களை நாட்டிக் கொண்டு மேலும் பேசினார்: "இல்லை ஹரிதாஸ்! இல்லை. ராஜபுதனத்துக்குத் தற்சமயம் வேண்டுவது வெற்றி அல்ல, அமைதிதான் தேவை. ராணா பிரதாபசிம்மன் பிடிவாதத்தால் மேவாரின் பெரும் நகரங்கள் அழிந்து விட்டன. அவர் மகன் இன்றைய ராணா அமரசிம்மனாலும் இணையற்ற நாசமும் துன்பமும் விளைந்திருக்கிறது ராஜபுதனத்துக்கு, இதுவரை எனக்கும் அவருக்கும் பதினான்கு போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. பதினான்கு போர்களில் அவருக்கு வெற்றிதான். ஆனால் அந்த வெற்றிகள் பெரும் நாசத்தின் அஸ்திவாரத்தில் எழுந்தவை. ஆகவே நிலைக்காத வெற்றிகள் தவிர மொகலாய சாம்ராஜ்யத்தின் பெரும் சக்திக்கு எதிராக மேவார் அதிக நாள் நிலைப்பதும் நடவாது. கடந்த போர்களில் சிசோதய வம்சத்தின் பெரும் படைத் தலைவர்கள் மாண்டு விட்டார்கள். அதன் உபகிளையில் பிறந்து பெரும் சைனியங்களை நடத்தவல்ல நீயும் என்வசம் கைதியாகி விட்டாய். இந்த நிலையில் எத்தனை நாள் மேவார் எதிர்த்து நிற்க முடியும்? எதிர்த்து நின்றாலும் மக்களின் அழிவு உணவின் கோரநிலை இவற்றைத் தவிர்க்க முடியுமா? முடியாது; ஒருக்காலும் முடியாது. வீணாக மக்கள் சேதத்தை விளைவிப்பது விவேகமல்ல. இப்பொழுது ராஜபுதனத்துக்குப் போருமல்ல வெற்றியுமல்ல; அமைதிதான் வேண்டும்."



சக்கரவர்த்தி இப்படி விடுவிடுவென்று பேசிக் கொண்டே போனவர் சட்டென்று பேச்சை நிறுத்தி மஞ்சத்திலிருந்து எழுந்து ஹரிதாஸை நெருங்கி, "ஹரிதாஸ்! அந்த அமைதியை நான் அளிக்க முடியும்" என்றும் மெள்ளக் கூறினார்.

"பதிலுக்கு என்ன எதிர்பார்க்கிறீர்கள்?" என்று வினவினான் ஹரிதாஸ் ஜாலா.

"ஒரு பொருளை எதிர்பார்க்கிறேன்."

"என்ன பொருள் அது!"

"ஒரு பெரும் ரத்தினம்."

"மாணிக்கமா?"

"ஆம். நாகரத்தினம். 'நாக தீபம்' என்று அது அழைக்கப்படுகிறது."

"எங்கிருக்கிறது?"

"மேவார் ராணாவிடம்."

இதைக் கேட்ட ஹரிதாஸ் ஜாலா, வியப்பு மிதமிஞ்சி நின்ற பார்வையொன்றை ஜஹாங்கீர் மீது செலுத்தினான். கேவலம் ஒரு நாகரத்தினக் கல்லுக்காகப் போரையே நிறுத்த ஜஹாங்கீர் தயாராயிருப்பாரென்று நம்பவே முடியவில்லை அவனால்.

"அந்த நாகரத்தினக் கல்லைக் கொண்டு வந்தால் போரை நிறுத்திவிடுவீர்களா?" என்று சந்தேகம் குரலில் பூரணமாக தொனிக்க வினவினான்.

"ஆம்" என்று திட்டமாக அறிவித்தார் சக்கரவர்த்தி.

"தங்களிடம் நவரத்தினங்களுக்குக் குறைவா?"

"இல்லை."

"பின் அந்த நாகரத்தினம் எதற்கு?"

"நூர்ஜஹான் விரும்புகிறாள்."

இதைக் கேட்டதும் ஹரிதாஸ் ஜாலாவின் சந்தேகம் சிறிது விலகியது. நூர்ஜஹானைத் திருப்தி செய்ய சக்கரவர்த்தி எதையும் செய்வார் என்பதை பாரதமே அறிந்திருந்ததால் ஹரிதாஸ் ஜாலா ஜஹாங்கீர் சொன்னதை ஓரளவு நம்பவும் முற்பட்டான். ஆனால் போயும் போயும் செல்வத்தையெல்லாம் இழந்து திண்டாடும் ராணா அமரசிம்மனிடம் இருக்கக்கூடிய நாகரத்தினத்தை எதற்காகக் கேட்கிறாள் நூர்ஜஹான்? மொகலாயச் சக்கரவர்த்தினி விரும்பினால் உலகத்திலுள்ள அத்தனை சிறந்த ரத்தினங்களும் அவள் காலடியில் வந்து விழுமே என்று எண்ணிய ஹரிதாஸ் ஜாலா, அதில் ஏதோ ஆழ்ந்த மர்மமிருக்கிறது என்பதை மாத்திரம் புரிந்து கொண்டான். நவரத்தினத்துக்கு நாகதீபம் என்று ஏன் பெயர் வந்தது என்பது புரியாததன்றி, ராணாவிடத்திலிருக்கும் அந்த ரத்தினத்தைப் பற்றி தனக்கே தெரியாதிருக்க நூர்ஜஹானுக்கு எப்ப



டித் தெரிந்தது என்பது விளங்கவில்லை அந்த ராஜபுத்திர வீரனுக்கு. ஆனால் ஒன்று மட்டும் தெளிவாக விளங்கியது அவனுக்கு. நாகரத்தினத்துக்காக ஜஹாங்கீர் போரை நிறுத்துவதனால் அந்த நாகரத்தினத்திடம் கல்லின் சிறப்பைவிட வேறு ஏதோ சிறப்பும் இருக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. அத்தகைய சிறப்புடைய நாகரத்தினத்தைத் தான் கேட்டால் ராணா கொடுப்பாரா என்ற சந்தேகமும் எழவே ஜஹாங்கீரை ஏறெடுத்து நோக்கிய அந்த வாலிப வீரன். "நாகதீபத்தை நான் கேட்டால் ராணா கொடுப்பாரா?" என்று வினவினான்.

"கொடுத்தாலும் கொடுக்கலாம். அதற்காக நான் போரையே நிறுத்துகிறேனல்லவா?'' என்றார் ஜஹாங்கீர்.

"கொடுக்காவிட்டால்?"

"கொண்டுவர வேண்டியது உன் பொறுப்பு."

"திருடச் சொல்கிறீர்களா?"

''அவசியமில்லை. காவலாளிகளை வெட்டிப் போட்டு வீரத்துடனும் எடுத்து வரலாம். முறையை உனக்கு விட்டு விடுகிறேன்."

"இந்தப் பணிக்கு நான் ஒப்பாவிட்டால்?"

"மீண்டும் சிறைக்குச் செல்லலாம்" என்ற ஜஹாங்கீர், "ஹரிதாஸ்! நீ வாலிபன், இதுவரை போரிலும் சிறையிலும் வாழ்க்கையைச் செலவழித்திருக்கிறாய். இனியும் அந்த வாழ்க்கை வேண்டாம் உனக்கு, சுகப்படப் பார்'' என்று அன்பு ததும்பும் குரலில் சொன்னார். ஹரிதாஸ் ஜாலா நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். திடீரென அவன் மனத்தில் ஓர் எண்ணம் உதயமாகவே சக்கரவர்த்தியை ஏறெடுத்து

நோக்கினான். "நாகதீபத்தைக் கொண்டு வருகிறேன்" என்று உறுதியுடன் கூறவும் செய்தான்.

"உன் வாளின் மேல் ஆணை வை," என்றார் ஜஹாங்கீர்.

நாகதீபத்தைக் கொண்டு வருவதாகப் பிரதிக்ஞை செய்து கிளம்பிய ஹரிதாஸ் ஜாலா, ஆஜ்மீரிலிருந்து ஹாராவளி மலைத் தொடரை நோக்கிச் சென்றான். இடையே பாலைவனத்தில் அகப்பட்டுத் தத்தளித்த அந்தச் சமயத்தில் ஜஹாங்கீருடன் தனக்கேற்பட்ட பேட்டியையும் தான் மேற்கொண்ட பணியையும் எண்ணிப் பார்த்தான்.

எண்ண எண்ண அவன் இதயத்தில் வெறுப்பே ஏற்பட்டது. 'இழிபணிதான். ஆனால் என் இஷ்டப்படி நடந்ததால் ராஜபுதனத்துக்குப் பெரும் லாபம்' என்று தனக்குள் சொல்லிக் கோண்டே மீண்டும் புரவியைத் தூண்டி நடத்த முற்பட்ட அவன், திடீரென்று தனக்குப் பின்னால் பெரும் ஆரவாரம் கிளம்புவதைக் கேட்டுப் புரவியை சற்றே நிறுத்தித் திரும்பினான். சிறிது தூரத்திலிருந்த மணல் சரிவில் அம்பாரியிட்ட ஒட்டக மொன்று அழகியொருத்தியைத் தாங்கிக் கொண்டு காற்றினும் கடுகி வந்து கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து புரவி வீரர் பலர் விரைந்து கொண்டிருந் தார்கள். அடுத்தகணம் ஹரிதாஸ் ஜாலா அந்தத் திசையை நோக்கித் தன் புரவியைத் திடீரெனத் திருப்பினான். திரும்பியதும் அவன் புரவி மட்டுமல்ல, விதி அதைவிட வேகமாகத் திரும்பியது.

## 2. நிலவில் நின்ற நேரிழை

அந்தி வேளை உந்தி எழுப்பிய உஷ்ணத்தைச்
சிறிதும் லட்சியம் செய்யாமல் உள்ளம் எழுப்பிய
உணர்ச்சி அலைகளில் புரண்டு கொண்டு தன் வாழ்
வையே வெறுத்துக் கொண்டும், தான் புரியச் செல்லும்
பணியை நினைத்து மனம் புழுங்கியும் ஒண்டாலா
சமவெளியை அடுத்த ராஜபுதனப் பாலைவனத்தில்
புரவியை மெல்ல நடத்திய வண்ணம் சென்று கொண்
டிருந்த ஹரிதாஸ் ஜாலா, திடீரெனப் பின்னால்
ஏற்பட்ட ஆரவாரத்தைக் கேட்டதும் பட்டென்று தன்
புரவியை நிறுத்திப் பின்புறம் திரும்பிப் பார்த்ததன்றி
ஆபத்துக்கு பயந்து ஒட்டகத்திலமர்ந்து ஓடி வந்து
கொண்டிருந்த அழகியைக் கண்டதும் அவளுக்கு
உதவத் தன் புரவியைக் கணவேகத்தில் திருப்பி அந்த
அழகி வந்த திசையை நோக்கிக் காற்றின் வேகத்தில்
விரைந்தான். மொகலாயச் சக்கரவர்த்தியால் சில
தினங்களுக்கு முன்பே பரிசாக அளிக்கப்பட்டிருந்தா
லும் ஹரிதாஸ் ஜாலாவிடம் நீண்ட நாள் பழகியதைப்
போல் நடந்து கொண்ட அவன் புரவி, அந்த ராஜ
புத்திரனின் எண்ணத்தைப் புரிந்து கொண்டது போல்
அவன் கடிவாளத்தை இழுத்துவிட்டதுமே தான்
ஓடிக்கொண்டிருந்த பெரும் மணல் திட்டிலிருந்
திரும்பி வெகுவேகமாகச் சரிவில் ஓடி, அந்த அழ
வந்து கொண்டிருந்த இடத்தைச் சில விநாடிக்கு
அடைந்துவிட்டது. எதிரியினால் எறியப்பட்
வேலைப்போல் தூரத்திலிருந்து தங்களெதிரே பாய்ந்
வந்த அந்தப் புரவி வீரன் தங்களை ஊடுருவாதிருக்
வேண்டுமென்ற எண்ணத்திலோ என்னவோ அ
அழகி ஏறிவந்த ஒட்டகமும் அதற்குப்பின் வ
புரவிகளும் சட்டென்று ஒன்றுகூடி நின்றன. ஹரிதா
ஜாலா அந்தக் கூட்டத்தின் எதிரே நின்ற வண்ண

அந்த ஒட்டகத்தின் அம்பாரியின் மீது தன் கண்களைச்
சில விநாடிகள் அலையவிட்டாள். அந்தச் சில விநாடி
களுக்குள் அவர்கள் யாரென்பதை உணர முடியா
விட்டாலும் ஒட்டகத்திலமர்ந்த அழகி ராஜபுதன
உயர்குடியில் பிறந்தவளென்பதையும் புரவி வீரர்
அவள் காவலரென்பதையும் ஊகித்துக் கொண்டதால்
ஓரளவு நிம்மதியும் அடைந்தான். ஒட்டகத்தின்
அம்பாரியிலிருந்த உயர்தரப் பட்டுச்சீலைகளையும்
வெள்ளித் தகட்டால் மூடப்பட்ட அம்பாரித் தூண்
களையும் கவனித்த அந்த வாலிப ராஜபுத்திரன்,
'மேவார் மன்னனின் ஆட்சியில் போர்களால் ராஜ
புதனத்தின் பெரும் செல்வம் அழிந்தும் ராஜபுத்திர
ஸ்தீரிகளின் படாடோபம் மட்டும் அழியவில்லை.
பழைய சம்பிரதாயப்படியே அவள் அம்பாரி அமைத்
துக் கொண்டு போதிய பாதுகாப்பின்றி வந்திருக்
கிறாளே' என்று தனக்குள் எண்ணியதால் வெறுப்புக்
கலந்த புன்முறுவலொன்றையும் தன் இதழ்களில் தவழ
விட்டுக் கொண்டான். போதாக் குறைக்கு அவள்
கழுத்திலும் கைகளிலும் விலைமதிக்க முடியாத
ஆபரணங்களும் நிரம்ப இருந்தன. அவள் கால்கள்
சீலைக்குள் மறைந்து கிடந்ததால் அவற்றை ஹரிதாஸ்
பார்க்க முடியவில்லையே தவிர அவற்றிலும் பெரும்
சிலம்புகள் இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்
டான். ஆனால் ஊகம் எதற்கும் அவசியம் இல்லாம
லும் சரியாகப் பார்க்காத கண்களையும் இழுக்கும்படி
யும் அவள் நெற்றிச் சுட்டியின் மத்தியில் சுடர்விட்ட
சிவப்புக்கல் பெரும் மதிப்புள்ளதென்பதை ஆரம்பத்தி
லேயே பார்த்துவிட்ட ஹரிதாஸ் ஜாலாவுக்கு அந்தப்
பெண்ணைச் சந்தித்த நேரத்தில் ஏற்பட்டதெல்லாம்
அவளைச் சுற்றியிருந்த ஆபத்தைப் பற்றியே தவிர
அழகைப்பற்றி நினைக்கவும் இதயம் மறுத்தது.



உண்மையில் அவள் அழகும் பருவமும் முகச்சுட்டி
ரத்தினத்தின் அழகை எடுபடாமல் அடித்திருந்தன.
அவள் அம்பாரி மீது உட்கார்ந்திருந்த தோரணையி
லும் பெரும் லாவகம் இருந்தது. ஜஹாங்கீர் அரண்
மனையில் உலகத்தின் சிறந்த ஓவியர்களால் வரையப்
பட்ட ஒய்யாரச் சித்திரங்கள் கூட அவள் உட்கார்ந்
திருந்த ஒய்யாரத்துக்கு இணையில்லை என்பது
நிஜந்தான். அத்தகைய சித்திரங்களை ஹரிதாஸ் ஜாலா
ஜஹாங்கீரிடம் பேசியபோது அவர் அறைச் சுவர்
களில் பார்த்ததும் வாஸ்தவந்தான். ஆனால் அந்தச்
சித்திரங்களையும் அந்த அழகியையும் ஒப்பிட்டுப்
பார்ப்பதிலோ அவள் அழகைப் பற்றிச் சிந்திப்பதிலோ
அவன் அந்தத் தருணத்தில் ஈடுபடவில்லை. தவிர
வாழ்வில் அவனுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு அதற்கு
இடம் கொடுக்கவுமில்லை. அவன் அப்பொழுது
சிந்தித்துப் பார்த்ததெல்லாம் அவளுக்கிருந்த
ஆபத்தைப் பற்றித்தான். ஆகவே சில விநாடிகளிலேயே
எதிரேயிருந்த கூட்டத்தை அளவெடுத்துக் கொண்ட
ஹரிதாஸ் ஜாலா அம்பாரியிலிருந்த அழகியை நோக்கி,
"யாருக்கு பயந்து ஓடி வருகிறீர்கள்?" என்று குரலில்
இனிமையேதுமில்லாமல் சற்று முரட்டுத்தனமாகவே
வினவினான்.

அவன் கேள்வியும் கேள்வியில் தொனித்த முரட்டுத்
தனமும் அவளுக்கு ஆச்சரியத்தை அளித்ததா அல்லது
கோபத்தை அளித்ததா? இரண்டையும் நிச்சயமாகச்
சொல்ல முடியாத உணர்ச்சி அவள் முகத்தில் பரவி
நின்றது. அவனைப் பார்த்த உடனேயே அவன் ராஜ
புத்திர வம்சத்தில் பிறந்தவனென்பதையும் பெரும்
வீரனென்பதையும் உணர்ந்து கொண்ட அந்த அழகி,
அவனிடம் நாகரிகமும் பெண்களைப் பார்த்ததும்
காட்ட வேண்டிய கண்யமும் இல்லாததைக் கண்ட
தால் வெறுப்புடனேயே பதில் சொன்னாள், "ராஜ

புதனத்துப் பெண்கள் இதயத்தில் பயம் கிடையாது" என்று.

இந்த பதிலைக் கேட்ட அவன் இதழ்களில் இகழ்ச்சி நகையொன்று படர்ந்தது. புரவிகளைப் பெரு வேகத்தில் துரத்தி வந்ததால் இறைக்க இறைக்க நின்று கொண்டிருந்த அவள் வீரர்களைப் பார்த்து அவளை யும் பார்த்தான் ஹரிதாஸ் ஜாலா. அந்தப் பார்வை யைத் தொடர்ந்த கேள்வியிலும் இகழ்ச்சி படர்ந்து நின்றது. "அப்படியானால் ராஜபுதனத்துப் புருஷர்கள் இதயத்தில் பயமிருப்பதாகத் தெரிகிறது" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"என் வீரர்கள் இதயத்திலும் பயம் கிடையாது" என்றாள் அந்த அழகி.

"புரவி ஓட்டப் பயிற்சிக்குப் பாலைவனம் தகுந்த இடம் இல்லை" என்று உணர்த்தினான் ஹரிதாஸ் ஜாலா.

"ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டதாக யார் சொன்னது உனக்கு?"

"புரவிகள் ஓடி வருவதை நானே பார்த்தேன். அது போதாதென்றால் இதோ வீரர்களுக்கும் புரவிகளுக்கும் மூச்சு துரிதமாக வருகிறது. புரவி வீரர் விரைந்ததற்கு ஒன்று பயம் காரணமாயிருக்க வேண்டும், அல்லது புரவிப் பயிற்சி காரணமாய் இருக்க வேண்டும். இரண்டில் எது காரணம்?"

அழகியின் கருவிழிகள் கனலைக் கக்கின. "எது வானால் உனக்கென்ன? எங்களை வழிமறிக்க உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது?" என்று சீறினாள் அவள்.

"கடமை அதிகாரத்தை அளிக்கிறது."



"என்ன கடமை?"

"அபாயத்திலிருக்கும் பெண்ணுக்கு ராஜபுத்திரர்கள் உதவ வேண்டியது கடமை."

"அந்தக் கடமைதான் ராஜபுதனப் பெண்களை அவமதிக்கவும் இடங்கொடுக்கிறதா?"

"அப்படியொன்றும் நான் அவமதிக்கவில்லையே."

"யாருக்கு பயந்து ஓடிவருகின்றேனென்று கேட்க வில்லையா நீங்கள்?"

"கேட்டேன்."

"அதில் அவமதிப்பில்லையா?"

"இல்லை."

"இல்லையா?" -அந்த அழகி கோபம் தலைக்கேறச் சீற்றத்துடன் அந்தச் சொல்லை உதிர்த்தாள்.

அவள் வார்த்தையில் கொட்டிய உஷ்ணம், அழகிய விழிகளில் தெரிந்த கொடூரம் இரண்டும் அந்த வாலிப வீரனின் முரட்டுத்தனத்தையும் ஒரு கட்டுக்குள் கொண்டு வந்தது. அவன் இதழ்களிலிருந்து ஏளனப் புன்னகை மறைந்தது. அந்த இடத்தில் கருணையும் சாந்தமும் கலந்த புன்முறுவல் தோன்றியது. பல வருஷப் போர்களாலும் இரண்டு வருஷ மொகலாய சிறைவாசத்தாலும் அவநம்பிக்கையும் வெறுப்பும் கலந்து பாறையாகிக் கிடந்த அவன் இதயத்திலும் கருணையின் சுனை மெள்ளத் தோன்றியது. அதனால் நெகிழ்ந்த மனத்திலிருந்து எழுந்த உதடுகளிலிருந்து உதிர்ந்த வார்த்தைகளில் சற்றே பணிவு தெரிந்தது. அந்தப் பணிவின் விளைவாக சற்றுப் பொய்யும் பேச்சில் கலந்தது. "நான் சொன்னதில் தவறில்லை;

நீங்கள் தவறாகப் பொருள் கொண்டீர்கள்" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"அப்படியா!" -இம்முறை அவள் சொற்களில் இகழ்ச்சி இருந்தது.

"ஆம்." ஹரிதாஸ் ஜாலாவின் பதிலில் பணிவு இருந்தது.

"நீங்கள் விளங்கச் சொல்லுங்கள்." என்று இகழ்ச்சியுடன் கேட்டாள் அவள்.

"பயந்து ஓடி வருகிறீர்கள் என்று சொன்னது தவறாகப் பட்டது உங்களுக்கு" என்று அவன் இழுத்தான்.

"ஆம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டினாள் அவள்.

"பயம் என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தவறாகாது. அது இருக்க வேண்டிய அம்சம்கூட."

"அப்படியா?"

"ஆம்."

"உங்களுக்கு பயம் உண்டா?"

"என்னைவிடப் பெரிய வீரர்களுக்கும் உண்டு."

"உங்களைவிடப் பெரிய வீரர்களா?"

"காலஞ்சென்ற மேவார் ராணா பிரதாபசிம்மனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"ராஜபுதனத்தின் இணையற்ற வீரர்."

"அவரும் சிலசமயங்களில் ஓடியிருக்கிறார். அவர் ஓடினதும் அவர் சகோதரன் சக்திசிம்மன் அவரைத் துரத்தியதும் சரித்திரப் பிரசித்தம்."



"அதற்கு பயம் காரணமா?"

"ஆம். ஆனால் அது அவசியமான பயம்."

"பயத்தில் அப்படியொன்று உண்டா?"

"உண்டு. பெரும் போர்களில் நமது படைகள் நாசமாகிவிடுமென்ற பயம் ஏற்பட்டால் பின்வாங்குகிறோம். நாம் பிடிபட்டால் நாட்டுக்கு ஆபத்து என்ற பயம் ஏற்பட்டால், எதிரி கையில் பிடிபடாமல் பின்வாங்கி ஓடுகிறோம். இவை தர்மமான பயத்தின் அடையாளங்கள். சரித்திரம் இவற்றை வரவேற்கிறது. இந்த தர்மம் பெண்களுக்கும் உண்டு."

"பெண்களுக்கா!"

"ஆம்! இந்தப் பாலைவனம் மொகலாயர் படைத் தளத்தை நெருங்கியே இருக்கிறது. ஒருநாள் பயணத்தில் மொகலாய சக்கரவர்த்தி இருக்கிறார். இந்த வட்டாரங்களில் மொகலாய வேவுப்படை வீரர்கள் சதா சுற்றி வருகிறார்கள். அவர்களிடம் நீங்கள் பயப்படுவதுதான் முறை. அந்த பயம் வரவேற்கத்தக்கது. அவர்களுக்கு பயந்து ஓடுவதும் வரவேற்கத்தக்கது" என்று விளக்கினான் ஹரிதாஸ் ஜாலா.

அவனுடைய நுண்ணிய அறிவையும் பேச்சுத் திறமையையும் கண்டு ஆச்சரியத்தின் வசப்பட்டாள் அவள். தன் நிலைமையை அப்பட்டமாக அவன் அறிந்து கொண்டு விட்டதையும், ஆரம்பத்தில் உதிர்த்த அவமதிப்புச் சொல்லுக்கு அர்த்த விளக்கம் கூறி தான் சொன்னதில் தவறில்லையென்று சாதித்ததையும் கண்ட அந்த அரசகுமாரி அவனை நோக்கி இன்ப புன்முறுவல் செய்தாள். அத்துடன், "நீங்கள் பேச்சில் வல்லவர்" என்றும் கூறினாள்.

"செயல்களிலும் அப்படி அற்பமல்ல" என்று கூறிய ஹரிதாஸ் ஜாலா, பெரிதாக நகைத்தான்.

"உங்களுக்குத் தற்புகழ்ச்சியில் பிரியம் போலிருக்கிறது" என்று குத்திப் பேசினாள் அவள்.

"தற்புகழ்ச்சியே எனக்குப் பிடிக்காது. உண்மை பிடிக்கும்" என்ற ஹரிதாஸ் ஜாலா, "அதோ அந்த மணல் திட்டிலிருந்தவன் உங்கள் ஆபத்தைக் கண்டு விரைந்து வந்ததே அதற்குச் சாட்சி" என்று கூறிவிட்டு, "இப்படியே நாம் விவாதித்துக் கொண்டிருந்தால் மொகலாய வீரர்களுடன் கைகலக்க வேண்டியிருக்கும்" என்று உள்ள ஆபத்தையும் சுட்டிக் காட்டினான்.

அந்த அழகியின் ஆச்சரியம் பன்மடங்காகியது. "மொகலாய வீரர்கள் எங்களைத் தொடர்ந்து வருவது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினாள்.

"பெண்களைத் துரத்தும் நிலைக்கு ராஜபுத்திரர்கள் வரவில்லை. இந்தப் பாலைவனத்தை அடுத்திருப்பது ஒருபுறம் மொகலாயர், இன்னொரு புறம் ராஜபுத்திரர்" என்று சுட்டிக் காட்டினான் ஹரிதாஸ் ஜாலா.

"நீங்கள் சொல்வது உண்மை. மொகலாய வீரர்கள் இன்னும் சில விநாடிகளில் நம்மைச் சூழ்ந்து கொள்வார்கள்" என்ற அந்த அழகியின் குரலில் கவலை மண்டிக் கிடந்தது.

அதைக்கேட்ட ஹரிதாஸ் ஜாலா சிறிது நேரம் சிந்தித்துவிட்டு அவளுடைய வீரர்களை நோக்கிக் கேட்டான்: "ராஜபுத்திரியை எங்கு அழைத்துச் செல்கிறீர்கள்?" என்று.

"பிரும்மபுரிக்கு" என்றான் அந்த வீரர்களின் தலைவன்.



"அதற்கு இன்னும் ஒருநாள் பயணமிருக்கிறதே!" என்று கூறினான் ஹரிதாஸ் ஜாலா.

"ஆமாம்."

"அதுவரை மொகலாய வீரர்கள் உங்களைச் சும்மா விட்டு வைப்பார்களா?"

இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திணறிய வீரர் தலைவனை வெறுப்பு மண்டிய கண்களுடன் நோக்கிய ஹரிதாஸ் ஜாலா மீண்டும் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து, "ராஜபுத்திரி! நீங்கள் பிரும்மபுரியை அடைவது நடக்கக்கூடிய காரியமல்ல. உங்கள் ஒட்டகமும் வீரர் புரவிகளும் களைத்திருக்கின்றன. எந்த விநாடியிலும் மொகலாய வீரர்கள் உங்களைச் சூழலாம். வீரர்களை அழித்து உங்களைச் சிறைப் பிடித்துச் செல்வதும் பெரும் காரியமல்ல அவர்களுக்கு. ஆகவே பிரும்மபுரியை மறந்து விடுங்கள், வேறு வழியிருக்கிறது" என்றான்.

"என்ன வழி" என்று கேட்டாள் அவள்.

"ஒட்டகத்தைப் படுக்கச் சொல்லி இறங்குங்கள், சொல்கிறேன்" என்றான் அவன்.

அவள் இறங்கியதும் தொலைதூரத்திலிருந்த பாலைவனச் சோலையொன்றைச் சுட்டிக் காட்டினான் ஹரிதாஸ் ஜாலா. "ராஜபுத்திரி! அந்தச் சோலை பார்ப்பதற்குத்தான் அதிகத் தொலைவு. இங்கிருந்து கால்காததூரம்தான் இருக்கிறது. நீங்கள் கால்நடையாகச் சென்றால் கதிரவன் மறையும் முன்பு அந்த இடத்தை அடைந்துவிடலாம். அதுதான் ஒண்டாலா சமவெளியின் ஆரம்பத் தோப்பு. அங்கு கூடாரமடித்துத் தங்குங்கள்" என்று யோசனையும் கூறினான்.

"கால்நடையாக ஏன் செல்ல வேண்டும்?" என்று வினவினாள் அந்த அழகி.

"காரணம் கேட்காதீர்கள்... என்னை நம்புங்கள். ஒரே ஒரு புரவி மீது கூடாரச் சீலைகள், முளைகள், இவற்றை ஏற்றிக் கொண்டு ஒரே ஒரு வீரனை மட்டும் துணை கொண்டு செல்லுங்கள்" என்று உத்தரவிட்டு மற்ற வீரர்களைப் புரவியிலிருந்து இறங்கும்படியும் கூறினான்.

படுத்திருந்த ஒட்டகத்தின் பக்கத்தில் நின்ற அந்த அழகிக்கு அவனிடம் என்ன காரணத்தினால் நம்பிக்கை உதயமாயிற்றோ சொல்ல முடியாது. அவன் சொன்னபடி செய்யுமாறு தனது வீரர்களுக்குக் கட்டளையிட்டு ஒரு புரவியுடனும் ஒரு வீரனுடனும் கால் நடையாகத் தோப்பை அடைவதற்கும் கதிரவன் மலைவாயிலில் விழுவதற்கும் நேரம் சரியாயிருந்தது. கூட வந்த வீரன் சீலையையும் முளைகளையும் கொண்டு அமைத்த கூடாரத்தில் நுழைந்த அவள் பஞ்சணை மீதிருந்த சீலையொன்றை தரையில் விரித்து ஆயாசத்துடன் படுத்துக் கொண்டு விழிகளை மூடினாள்.

நாழிகைகள் ஓடின. சந்திரனும் எழுந்து அந்தத் தோப்பை மிக ரம்மியமாக அடித்தான். ஆனால் அந்த ராஜபுத்திரியின் இதயத்தில் பெரும் வேதனையே இருந்தது. நாழிகைகள் ஓடியும் தன் வீரர்களோ அந்த வாலிபனோ வராததைக் குறித்து விவரிக்க இயலாத வேதனையடைந்தாள் அவள். அத்தனை வேதனையிலும் அந்த வாலிபன்பால் அவள் மனம் ஓடிக் கொண்டிருந்தது. அவனை நினைத்தபோது இன்பமான ஏதோ ஓர் அலை இதயத்தை ஊடுருவிச் சென்றது. இன்பமும் வேதனையும் கலந்து நின்ற இதயத்துடன் சீலையை விட்டு எழுந்து கூடாரத்தின் வாயிலுக்கு வந்தவள்



மூச்சைப் பிடித்துக் கொண்டு சில விநாடிகள் ஸ்தம்பித்து நின்றாள். எதிரேயிருந்த சுனையிலிருந்து அந்த வாலிபன் சிரித்த வறண்ட சிரிப்பு தோப்பை ஊடுருவி அவளிருந்த இடத்தை நோக்கி வந்தது. நன்றாக உற்று கவனித்தாள் அவள். தன் ஆடைகளை முக்கால்வாசிக் களைந்து இடையில் சிறு துணியுடன் தன் புரவியை அந்தச் சுனையில் நீராட்டிக் கொண்டிருந்தான் அந்த வாலிபன். அப்படி நீராட்டிக் கொண்டு நின்ற அந்த வாலிபன் குதிரையின் முதுகைத் கைத்துணியால் தேய்த்துக் கொண்டே திரும்பிக் கூடாரத்தை நோக்கினான். அடுத்த விநாடி ராஜபுத்திரியைப் போலவே அவனும் ஸ்தம்பித்தான். கூடார வாயிலில் ராஜபுத்திரியின் மோகன உருவம் நின்றிருப்பதைக் கண்டான். அதுவரை ஒலிபரப்பிய சிரிப்பு சட்டென்று நின்றது. அதன் இடத்தை பிரமிப்பு ஆட்கொண்டது. நிலவில் நின்ற அந்த நேரிழையை அவன் கண்கள் அணு அணுவாக ஆராய முற்பட்டன. பருவப் பெண்ணை அப்படி நோக்குவது அதர்மம் என்பதை அவன் மனம் உணர்ந்தது. புத்தி உணரவில்லை. புத்தியால் இயக்கப்பட்ட இந்திரியங்களும் உணரவில்லை.

## 3. சந்தித்த கண்கள்

**ச**ரத் காலச் சந்திரன் வானிலிருந்து வீசிய முழு இன்ப ஒளியில் கூடாரத்தின் வாயிலில், மோகனகரமாக நின்ற அந்தப் பருவ மங்கையின் பேரெழிலைப் பார்த்துப் பார்த்து பிரமித்து, நீண்ட நேரம் நின்றுவிட்ட ஹரிதாஸ் ஜாலாவின் மனோநிலை விவரிக்க முடியாத அளவுக்குக் குலைந்து கிடந்தது. தோப்பின் மரங்களிலிருந்து எழும்பிய காற்று அவள் உடலில் பாய்ந்து அலை அலையாக அவள் சீலையைப்

புரட்டிக் கொண்டிருந்தது கூட தன் எண்ணங்களை அடியோடு நிலை குலைந்து போவதற்குத்தான் என அவன் எண்ணினான். பக்கத்தில் பாலைவனச் சுனையில் அரை முழங்கால் நீரில் தன்னுடன் நின்றிருந்த புரவியைத் தேய்க்கத் தண்ணீரில் பிழிந்து எடுத்திருந்த துணியை அவன் கை பற்றியிருந்ததேயொழிய, குதிரையைத் தேய்க்கும் திறனை இழந்து கிடந்தது. அந்தச் சமயத்தில் அவன் இறந்து போன சித்தூர் ராணா பிரதாப சிம்மனைப் பெரிதும் வாழ்த்தினான், 'புவனா என்னும் பூனா நதியால் மிகவும் செழித்திருந்த ஒண்டாலா சமவெளியிலுள்ள பல தோப்புகளை அழித்துப் பாலைவனமாகச் செய்து மொகலாயருக்கு உணவோ, தங்க இடமோ இல்லாமல் அடித்து, கால் நூற்றாண்டுக்காலம் அவர்களைத் தன்னிடம் அணுக வொட்டாமல் செய்து, சுந்தர புருஷனாகவே அமரனுலகு எய்திவிட்ட ராணா பிரதாப்தான் அப்பொழுதிருந்த ஒரு சிறு தோப்பையும் இன்னும் சில நூறு தோப்புகளையும் மட்டும் அழிக்காமல் விட்டது தனக்கு எத்தனை பெரிய உதவியைச் செய்திருக்கிறது என்று எண்ணினான் ஹரிதாஸ் ஜாலா. "இந்தத் தோப்பையும் அவர் வெட்டிச் சுட்டுக் கொளுத்தியிருந்தால் இந்த மோகனாங்கியை நான் எப்படி மொகலாய வீரர்களிடமிருந்து தப்ப வைத்திருக்க முடியும்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டதன்றி, அப்படித் தான் தப்ப வைத்த அழகு எத்தனை இணையற்றது என்றும் நினைத்துப் பார்த்து மலைத்தான். கூடாரத்தின் வாயிலில் அவள் நின்றிருந்த முறையே அத்தனை அழகாயிருந்தது. அப்படி நின்ற முறையால் வெளிப்பட்ட அழகிடங்கள் அங்கங்களின் இணையற்ற கவர்ச்சிக்கும் செழுமைக்கும் அத்தாட்சிகளாக நின்றன.

கூடாரத்தைச் சுற்றிலும் நாலைந்து அடிகளுக்கு மரங்களேதுமில்லாததால் தடையின்றி முழுமதி பாய்ச்



சிய நிலவில் காட்சியளித்த அந்தப் பெண், தனது கைகளிலொன்றால் கூடாரத்தின் மேல் சீலையைப் பிடித்துக் கொண்டும், இன்னொரு கையால் பக்கச் சீலையைப் பிடித்துக் கொண்டும், ஒரு காலை லேசாக வளைத்து ஒருபுறம் சாய்ந்து கொண்டும் நின்றதைக் கண்ட ஹரிதாஸ் ஜாலா, நாட்டிய சாஸ்திரத்தைப் பற்றிய படங்கள் வரைவதானால் இப்படியொரு படம் வரையலாம் என்று எண்ணினான். மேலே சீலை பற்றிய கையும், வளைந்து நின்றதால் துவண்டு திரும்பிய இடையும், பிறகு உறுதியுடன் தரையில் ஊன்றி நின்ற கால்களும், அக்கம்பக்கத்திலுள்ள அம்சங்களைத் தூக்கிக் கொடுத்ததால் யாரையும் நிலை தடுமாறச்செய்யும் காமன் கணைகளுக்கு அவள் இருப்பிடமாக விளங்கியதை அவன் கண்டான். தலையிலிருந்த அவள் பெருங்கருங்குழல் முடியிலிருந்து பிரிந்து காற்றில் மேலே பறந்த மயிரிழைகள் கூடார வாயில் உச்சியை எட்ட முயன்று கொண்டிருந்தும், பிறகு முடியாமல் நெற்றியிலடித்து அங்கேயே லயித்து விட்டதும் மேலேயுள்ள வெறும் இடைவெளியைவிட நுதல் பிரதேசத்தின் உயர்வை அவை அறிந்து விட்டதற்கு அத்தாட்சியாக இருந்தது. அப்படி ஒட்டிக் கொண்ட ஓரிரு விடுபட்ட குழல்களுக்கு இடையே வெளேரென்று எடுபட்ட அந்த முகமும் கண்களின் பக்கங்களில் தொடங்கிய கன்னக் கதுப்புகளின் செழுமையும், அழகுக்கு மட்டுமின்றி நல்ல ஆரோக்கி யத்துக்கும் அடையாளமாகக் காணப்பட்டன. மை தீட்டிய இரப்பைகளுக்கு இடையே ஜொலித்த கண்களில் பெரும் சாந்தத்துக்கும் தன்னுடன் பாலைவனத்தில் வாதாடிய போது இருந்த கோபத்துக்கும் துடிப்புக்கும் எத்தனை வித்தியாசமென்பதை எண்ணிப் பார்த்த அந்த வாலிபன், கோபம் கக்கும் அவள் இதயத்தின் அடிப்படை, உண்மையில் அன்பு மய

என்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டான். சாந்தமான பார்வையைத்தான் அந்தக் கண்கள் வீசின. ஆனால் அந்த சாந்தத்திலும் ஒரு வீரக் கனலும் ஊடே பளிச்சிட்டது. இதுவும் வீரனான ஹரிதாஸ் ஜாலாவின் கண்களிலிருந்து தப்பவில்லை. அழகு அபரிமிதமாயிருந்தாலும், அந்த அழகு லேசில் அணுகத் தக்கதல்ல என்பதை அவன் புரிந்து கொண்டான். அமுதத்தை வர்ஷிப்பது போல் சிவந்து கிடந்த அவள் உதடுகளைப் பார்த்த அந்த வாலிபன் அவற்றில் தெரிந்த உறுதியையும் பார்த்தான். உதடுகள் நல்ல சிவப்பு. அக்கினிச் சிவப்பு, கற்பின் அக்கினி அவற்றில் விளையாடிக் கொண்டிருந்தது. அக்கினி சாட்சியாகக் கைபிடிக்கும் ஒருவனுக்கே அந்த அக்கினி தணிந்து அமுதமாகும் என்பதை அவை சந்தேகமற உணர்த்தின. அந்த உதடுகளைப் பார்த்து ஹரிதாஸ் ஜாலாவின் மனத்தில் ஜோஹரில் தாங்களே எதிர்த்து மாய்ந்த கணக்கில்லா ராஜபுதனக் கற்புக்கரசிகளின் நினைப்பு எழுந்தது.

இவ்வளவு அழகிய பவித்ர உதடுகளுக்குக் கீழே எழுந்த கவர்ச்சிகள் அவன் கண்களை மட்டுமென்ன, இந்திரியங்களையும் பறிக்கத்தான் முற்பட்டன, ஒரு கையைக் கூடாரத்தின் மேலும், மற்றொரு கையைக் கூடாரத்தின் பக்கவாட்டிலும் பிடித்ததால், போர்வைக் குள்ளேயே புரட்சி செய்து, முட்டி எழுந்த கெட்டிக் குவளை மொட்டுகளும் அவற்றைக் கண்டு பயந்து அடியோடு ஒடுங்கிவிட்ட இடையும், பயமென்பதை அறியாமல் அதற்குக் கீழே செழித்து ஓடிய அங்க லாவண்யங்களும் ஹரிதாஸ் ஜாலாவின் மதியை அடியோடு மயக்கத்தான் செய்தன. அந்த மயக்கத்திலும், அவள் நின்ற தோரணை ஒரு பயத்தையும் அளித்தது அவனுக்கு. அவள் ராஜபுதனத்தின் பெருங் குடிமகள், அணுகத் தகாதவள் என்பதைத் திட்டமாகப் புரிந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா.



அந்த ராஜபுத்திரியை அவன் ஆராய்ச்சி செய்த அளவுக்கு அவள் அவனை ஆராயவில்லையென்றாலும், அவன் குதிரையைக் குளிப்பாட்டி நின்ற கோலத்தை அவள் ரசிக்கவே செய்தாள். நல்ல உயரமும் திண்மையும் வாய்ந்திருந்தாலும் உயரத்தில் ஒல்லியாய்த் தெரிந்த தேகமும், உறுதியான தோள்களும், திரும்பி நோக்கிய போது மார்பில் தெரிந்த காயங்களும், அவள் கண்களைக் கவ்விக் கொண்டன. பெரும் வீரனொருவனைத்தான் சந்தித்திருக்கிறோம் என்பதை அவள் தீர்மானித்துக் கொண்டாள். தன்னை அவன் கண்கள் ஊடுருவிப் பார்த்ததால், சினம் கொண்ட தன் மனம் ஏன் அந்தச் சினத்தை மீண்டும் மீண்டும் அடக்கிக் கொள்கிறது என்பதை எண்ணிப் பார்த்த அந்த ராஜபுத்திரி சற்றுக் குழம்பவும் செய்தாள். அங்கிகளையெல்லாம் களைந்து கரையில் வைத்துவிட்டு, ராஜ புதனப் பிராமண பிரம்மசாரிகளைப் போல் அவன் வேஷ்டியைத் தார் பாய்ச்சுக் கட்டிக் கொண்டிருந்ததால் வெளிப்பட்ட தேக வாளிப்பும், அவன் குதிரையைத் தேய்த்தபோது தசைகள் அசைந்த திண்மையும் அவன் பெரும் பலத்துக்கு அத்தாட்சிகளென்பதைப் புரிந்து கொண்டாள் அவள். குதிரையைக் குளிப்பாட்டிய போது அதன் வால் சுழற்றியடித்த நீர் அவன் நெற்றியிலும் மார்பிலும், முத்து முத்தாகச் சந்திர வெளிச்சத்தில் மின்னி நல்ல வெளுப்பாயிருந்த அவன் உடலுக்குப் பெரும் அழகை அளித்ததையும் அவள் கண்டாள். குதிரையைத் தேய்க்கப் பிழிந்த துணியை அவன் கையில் பிடித்தபடியே நின்று தன்னைப் பார்த்து மலைப்பதையும், அவன் அழகுடன் கலந்த வீரக்களை அந்த மலைப்பில் அதிகமாகப் பிரகாசிப்பதையும் கண்டு திறமையும், தந்திரமும், சாமர்த்தியமுள்ள ஒரு புருஷனின் துணை தனக்குக் கிடைத்திருப்

பது பற்றி அவள் ஆசுவாசப் பெருமூச்சு ஒன்றும் விட்டாள்.

இப்படி அவளும் தன்னைக் கூர்ந்து நோக்கியதால் திடீரென சங்கடத்துக்குட்பட்ட ஹரிதாஸ் ஜாலா, அவளைப் பார்ப்பதை விட்டுக் குதிரையை நோக்கித் திரும்பி அதை நன்றாகத் தேய்க்க முற்பட்டான். நிதானமாகத் தேய்த்து அதைக் குளிப்பாட்டிக் கரையேற்றிப் பக்கத்திலிருந்த மரமொன்றில் பிணைத்து விட்டு, மீண்டும் சுனையில் இறங்கித் தன் கைகால்கள், முதுகு, முகம் இவற்றின் மீது தண்ணீரை வாரியடித்துக் கழுவிக் கொண்டான். பிறகு மறைவிடம் சென்று வேறு துணி உடுத்தி மறுபடியும் சுனைக் கரைக்கு வந்து ஈரத் துணியை மரத்தில் கட்டி உலரவிட்டுத் தன் அங்கி முதலானவற்றைத் தோளில் போட்டுக் கொண்டும், நீண்ட வாளை உறையுடன் கையில் பிடித்துக் கொண்டும், புரவியிலிருந்து இறங்கியிருந்த இரு பைகளையும் இன்னொரு கையில் எடுத்துக் கொண்டு ராஜபுத்திரியை நோக்கி வந்தான் ஹரிதாஸ் ஜாலா.

அவன் நடவடிக்கை ஒவ்வொன்றையும் பார்த்துக் கொண்டிருந்த ராஜபுத்திரி வியப்பின் எல்லையை எய்தினாள். சதா மொகலாய ஒற்றர்கள் நடமாடும் பாலைவன எல்லை அருகேயிருக்க, அவன் அந்த இடத்திலிருந்து புறப்படுவதற்கான துரிதத்தைக் காட்டாமல் பரம நிதானமாகக் குதிரையைக் குளிப்பாட்டித் தானும் குளித்து ஏதோ தேசாந்தரம் போகிறவன் போல் இரண்டு பைகளை எடுத்துக் கொண்டு தன்னை நோக்கி வருவதைக் கண்ட ராஜபுத்திரி, 'இவன் நெஞ்சுத் துணிவு எல்லையற்றது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். அவன் வந்த தோரணை, அவன் கைகளில் பொருள்களைத் தாங்கிய முறை, எல்லாமே வேடிக்கையாயிருந்தது அவளுக்கு. அது



மட்டுமன்று, அவன் கூடாரத்துக்கு அருகே வந்ததும் ஏதும் பேசாமல் கூடார வாயிலில் தன் காலடியில் உட்கார்ந்து கத்தியை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டுப் பைகளைத் தன் எதிரில் பிரித்து உள்ளேயிருக்கும் பொருள்களைச் சோதிக்க முற்பட்டது மேன்மேலும் வேடிக்கையாயிருந்தது அவளுக்கு.

அவன் ஏதும் பேசாமல் அவள் காலடியில் உட்கார்ந்து பைகளிலிருந்து பல பொருள்களை நீக்கிவிட்டு அடியிலிருந்த இரண்டு சிறு இலைப்பொட்டலங்களை எடுத்து எதிரே வைத்துக்கொண்டான். பிறகுதான் அவளை ஏறெடுத்துப் பார்த்தான்.

அதுவரை அவன் கொண்டிருந்த சாந்தம் காற்றில் பறந்தது. "என்ன அந்த இலைகளில்?" கேட்டாள் அவள்.

"உணவு! உட்காருங்கள் நீங்களும் சாப்பிடலாம்" என்றான் அவன் பதிலுக்கு.

"இங்கு என்ன வனபோஜனத்துக்கு வந்திருக்கிறீர்களா?" என்று அவள் சற்றுக் கோபத்துடன் கேட்டாள்.

"அப்படியே வந்தாலும் அதில் தவறென்ன?" என்று சாதாரணமாக வினவினான்.

"தவறில்லையா?"

"இல்லை. வனபோஜனத்துக்கு வேண்டிய சகலமும் இங்கு அமைந்திருக்கிறது. நல்ல மலர்களைக் கொடுக்கும் மரங்கள், செடிகள். அள்ளிப் பருக அமுதமாயிருக்கும் சுனை, நல்ல வெண்ணிலவு, அத்துடன்..."

"அத்துடன்?"

"ஒன்றுமில்லை."

"ஏதோ சொல்ல வந்து நிறுத்தி விட்டீர்கள்."

"ஆம்."

"ஏன்?"

"பயமாயிருக்கிறது."

"வீரர்கள் பயப்படலாமா?"

"சில சமயங்களில் பயம் நல்லதென்று தங்களிடம் சற்று முன்பு பாலைவனத்தில் நானே சொல்லவில்லையா?"

"ஆம்."

"அந்தச் சமயங்களில் இதுவும் ஒன்று."

அவன் எதைச் சொல்ல மறுக்கிறானென்பதை அவள் புரிந்துகொண்டாள்! வெண்ணிலவில், சோலையில், சுனையருகில் தானிருப்பதை அவன் கூற முற்பட்டு, அடக்கிக் கொண்டான் என்பதை அவள் உணர்ந்தாள். அதை வெளிக்குக் காட்டாமல் மேலும் பேச முற்பட்ட அவள், அவனைப் பற்றி அறிந்து கொள்ள மெள்ள கேள்விகளை வீசினாள். அவன் அவளை ஏறெடுத்தும் பார்க்காமலே பதில் சொன்னான். கிடைத்த பதில்கள் விளைவித்த உணர்ச்சிகள் விவரிக்க முடியாதவை. அந்த பதில்களால் அவள் உள்ளம் நெகிழ்ந்தது. அவள் கண்கள் அவனை ஊடுருவிப் பார்த்தன. அவனும் தலைநிமிர்ந்து அவளை நோக்கினான். சந்தித்த கண்கள் சந்தித்தபடி நின்றன. எந்த இரண்டு எந்த இரண்டைக் கவர்ந்தது? சொல்ல முடியாத நிலை. ஆனால் நிலைத்தவை என்னமோ நான்கு!

## 4. பழைய நிகழ்ச்சி! புதிய நினைப்பு!

நிலைத்தவை நிலைத்தபடி நின்ற நான்கு கண்களில் முதன்முதலாகச் சலனப்பட்டு, அச்சத்தின் அடையாளமாகவும், அப்படிப் பார்ப்பது கண்ணியக் குறைவென்ற நினைப்பினாலும் நிலத்தில் தாழ்ந்தவை அந்த வாலிபனின் வீரக்கண்களே. தனக்கு முப்பது வயது முற்றிவிட்டதென்பதும் அந்த முப்பது வருட காலத்தில் எந்தப் பெண்ணையும் தான் சரியாக ஏறெடுத்துப் பார்த்தது கிடையாதென்பதும் அவனுடைய மனத்தில் எழவே, எத்தனை நாகரிகமற்ற காரியத்தைச் செய்து விட்டோம் என்ற நினைப்பினால் அவன் மீண்டும் தலையைக் குனிந்து கொண்டான். அப்படி அவன் தலையைக் குனிந்து கொண்ட காரணத்தைப் புரிந்து கொண்டதால் அவள் பெரும் சங்கடத்துக்கும், ஆண் மகன் காட்டும் அடக்கத்தைக் கூட தான் காட்டாததைப் பற்றி வெட்கத்துக்கும் உள்ளாகி, ஏது சொல்வதென்று அறியாமல் சில விநாடிகள் நின்ற நிலையிலேயே இருந்தாள். அப்படி நின்ற சமயத்திலும் அவள் சலனத்துக்கு அறிகுறியாக அவள் பெருவிரல் மணலில் சக்கரமாகக் கோடு கிழித்துக் கொண்டிருந்து. இலைகளைப் பிரித்துச் சாப்பிட முஸ்தீபு செய்து கொண்ட அந்த வாலிபன், தலை குனிந்த காரணத்தினாலேயே தன் கண்ணெதிரே கோடிட்ட அந்த விரலையும் பாதத்தின் பொது அமைப்பையும் கண்டு பெரிதும் வியந்தான். பாதம் பங்கய மலர்போல் மிகவும் மென்மையாய் இருந்தது. வெண்மையான பாதத்துக்கு மேலோடிய கணுக்காலும் வெண்மையும், சிவப்பும் கலந்து மனோகரமாகக் காட்சியளித்தது. மீதியை ஊகிக்கவும் பயமாயிருந்தது அந்த வாலிபனுக்கு. ஊகித்தால் ஏற்படக் கூடிய உள்ளக் கிளர்ச்சி நன்றாகப் புரிந்திருந்தது அவனுக்கு.

மேலும் அவளைப் பற்றிய எண்ணங்களுக்கு இடம் கொடுப்பது அபாயம் என்று எண்ணிய ஹரிதாஸ் ஜாலா, எண்ணங்களை அறுக்கத் தன் மௌனத்தை உடைத்து, "ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள்" என்று அவளைச் சற்றே ஏறெடுத்து நோக்கிக் கூறினான்.

அவன் வேண்டுகோளுக்கு இணங்கிக் கூடாரத்தின் வாயிலேயே அவன் எதிரில் உட்கார்ந்து, ஒருகாலை குத்திட்ட வண்ணம் ஒரு கையை நிலத்தில் ஊன்றி மற்றொரு கையை மடியில் வைத்துக் கொண்டாள் அந்த ராஜபுத்திரி. அப்படி எதிரும் புதிருமாக இருவரும் உட்கார்ந்ததாலும், உட்கார்ந்ததால் ஏற்பட்ட அருகாமையாலும், மீண்டும் இருவர் நிதானமும் காற்றில் பறக்கும் தன்மையை அடையவே, அதிலிருந்து விடுபட உரையாடலைத் தொடங்கிய அந்த ராஜபுத்திரி கேட்டாள், "உங்களுக்குப் பசி அதிகம் போலிருக்கிறது."

"ஆம்" என்றான் அவன்.

"மிகவும் களைத்திருக்கிறீர்கள்" என்றாள் அவள்.

"ஆமாம்" என்றான் அவன்.

இப்படி எதற்கெடுத்தாலும் 'ஆம்' போட்டது அவளுக்கு வெறுப்பாகவே, "எனக்குக் களைப்பில்லை பசியுமில்லை" என்றாள் சற்றுக் கடுமையுடன்.

அவன் மறுபடியும் தன் கண்களை உயரத் தூக்கிப் பார்த்தான். அவன் இதழ்களில் விஷமப் புன்னகையொன்று அரும்பி நின்றது. அதைத் தொடர்ந்து பேச்சிலும் விஷமம் இருந்தது. "தங்களுக்கு இருக்கும் சௌகரியங்கள் இருந்தால் எனக்குக் களைப்பிருக்காது. பசியுமிருக்காது" என்றான்.

"என்ன சௌகரியங்களா?"



"ஆம்! புடைசூழ்ந்து வர பத்து வீரர்கள், அவர்களில் உணவு தாங்க இருவர், ஒட்டகம் செலுத்த ஒருவர், கூடாரமடிக்க ஒருவர், பஞ்சணை விரிக்க இருவர், உங்கள் பணிகளில் பாதி பிறரால் செய்யப்படுகிறது. உங்களுக்கு உழைப்பில்லை. உழைக்காதவர்களுக்குக் களைப்பில்லை; களைப்பில்லையேல் பசியில்லை"

"நீங்கள் அதிகம் உழைக்கிறீர்களாக்கும்?"

"ஆம்."

"என்ன உழைப்போ?"

"எம் தொழில் போர் செய்தல்."

"குதிரை குளிப்பாட்டலும் உண்டு. அது சேவகர் வேலை."

"வேலையில் சேவகர் வேலையென்பது கிடையாது. தன் குதிரையையும் வாளையும் சரியான பதத்தில் வைத்துக் கொள்வது வீரரின் கடமை. அது இருந்த வரை ராஜபுதனத்தை மொகலாயர் அணுக முடியவில்லை. அது குறைந்து, சுகம் தலை தூக்கியது. அடிமை வாழ்வும் மெள்ளமெள்ளத் தலைகாட்டுகிறது."

அவன் தன்னை இடித்துப் பேசுகிறானென்பதை ராஜபுத்திரி உணர்ந்தாலும், அவன் சொல்வதில் உண்மை அதிகமிருப்பதை அவள் அறிந்தாள். ராணா பிரதாப் இறந்ததும், அவன் மகன் ராணா அமர சிம்மன் சில நாட்கள் சுகவாசத்தில் இருந்து துன்மந்திரிகளின் போதனையைக் கேட்டு மொகலாயர் ராஜபுதனத்தில் காலடி வைக்க இடங்கொடுத்திராவிட்டால் ராஜ புதனத்தின் எல்லையில் இன்று எதிரிகளின் நடமாட்டம் இருக்காது என்று அவள் நினைத்தாள். இருப்பினும் பிறகாவது ஸ்லூம்ப்ரா வம்சத்தலைவனின் சொற்கேட்டு அமரசிம்மன் போர்க்கோல

பூண்டதை நினைத்து அவள் மனச்சாந்தி அடைந்தாள். அவள் மனச்சாந்திக்கு அடையாளமாக அவளிட மிருந்து பெருமூச்சொன்று வெளிவந்தது.

அதைக் கண்ட ஹரிதாஸ் ஜாலா புன்முறுவ லொன்றை வெளியிட்டான். அதைப் பார்த்து அவள் கேட்டாள், "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று.

"உங்கள் மனச்சாந்தியைக் கண்டு சிரித்தேன்" என்றான் அவன்.

"ஏன்? சாந்தியில்லாமல் என்ன வந்துவிட்டது இப் பொழுது?" என்று அவள் கோபத்துடன் வினவினாள்.

"ஒரு நாள் பயணத்தில் மொகலாயர்கள் இருக் கிறார்கள்..."

"ஆம். தெரியும்."

"உங்களை அவர்கள் துரத்தி வந்த நாழிகைகள் அதிகமாக ஓடவில்லை."

"ஆம்."

"மீண்டும் அவர்கள், ஏன் இங்கு வரக்கூடாது?"

"வரலாம்."

"வந்தால்?"

"காப்பதற்கு ஒரு மகாவீரர் இருக்கிறார்." -இதைச் சொல்லி அவள் மகிழ்ச்சி ததும்ப நகைத்தாள். அவள் நகைப்பைக் கண்டு அவன் கோபமே அடைந்தான். தன்னை அவள் ஏளனம் செய்ததாகவே நினைத்தான். ஆகவே சினத்துடன் கேட்கவும் கேட்டான்: "அந்த மாவீரனை நம்பித்தான் நீங்கள் பாலைவனப் பகுதிக்கு வந்தீர்களா?"



"இல்லை" என்றாள், அவள் அவனைத் தைரியத் துடன் ஏறெடுத்து நோக்கி.

"பின் யாரை நம்பி வந்தீர்கள்?" உங்கள் பாட்ட னையா?" என்றான் அவன் சீற்றத்துடன்.

"ஆம் பாட்டனையேதான்" என்று அவள் அழுத்திச் சொன்னாள்.

"யார் அந்தப் பாட்டன்" இகழ்ச்சி தொனித்த குரலில் கேட்டான் ஹரிதாஸ் ஜாலா.

அவள் சிரித்துக் கொண்டு தான் பதில் சொன்னாள். பதிலைக் கேட்ட ஹரிதாஸ் ஜாலா மந்திரத்தைக் கேட்ட அரவமென அடங்கினான். அவன் கண்கள் மிகுந்த பிரமிப்புடனும் மரியாதையுடனும் அந்த ராஜபுத்திரியை நோக்கின. பேச்சுக்கு இடையிடையே அன்னக் கவளத்தை வாய்க்குள் அனுப்பிக் கொண் டிருந்த வலது கை, ஒரு கவளம் அன்னத்துடன் பாதி தூரமெழுந்து ஸ்தம்பித்து நின்றுவிட்டது. அப்படி ஸ்தம்பித்தற்குக் காரணமிருந்தது. ராஜபுத்திர வீரன் ஒவ்வொருவனும் காதில் விழுந்ததும் தலை வணங்க வேண்டிய பெயர் அது. அடிமைத் தளையில் விழ இருந்த மேவாரை அதில் விழவொட்டாமல் தடுத்த பிரசித்தி பெற்ற பெயர் அது. ஜயன் சந்தாவத் என்ற பெயரை மெல்லத்தான் அந்த ராஜபுத்திரி சொன்னாள். ஆனால் ஏதோ பெரும் மந்திரம் காதில் விழுவது போலிருந்தது ஹரிதாஸ் ஜாலாவுக்கு.

சந்தாவதர்கள் கிளையைச் சேர்ந்த அந்த ஸ்லூம்ப்ரா வம்சத் தலைவனின் செயல் அன்றுதான் நடப்பது போல் ஹரிதாஸ் ஜாலாவின் கண் முன்னால் எழுந் தது. அவன் கண் முன்னால் அந்தப் பழம் பெரும் சம்பவம், அது நடந்த முறை அனைத்துமே எழுந்தன.

ராணா பிரதாப் சிம்மன் அமர வாழ்வு எய்தியபின் இரண்டொரு வருடங்களுக்குப் பின்பு நடந்தது அந்தச் சம்பவம். வாழ்நாள் முழுவதும் காடுகளிலும் மலைகளிலும் ஓடி ஓடிப் போரிட்டு மேவாரின் சுதந்தரத்தைக் காத்த ராணா பிரதாப்பின் மகன் ராணா அமரசிம்மன் சுகவாழ்வை நாடினான். உதயபுரி ஏரிக்கரையில் தனக்கென பெரிய மாளிகை கட்டி அதற்கு அமர மஹால் என்று தன் பெயரையும் சூட்டினான். அந்த மஹாலில் ஐரோப்பிய நிலைக்கண்ணாடிகளையும் கம்பளங்களையும் வாங்கி நிரப்பி அலங்கரித்தான். அப்படி அலங்கரித்த இடங்களில் மிகப் பிரமாதமாக விளங்கியது அந்த மாளிகையின் மந்திராலோசனை மண்டபம். அதை அழகின் இருப்பிடமென்றும் ஐசுவரியத்தின் களஞ்சியமென்றும் துன்மந்திரிகள் சிலர் சிலாகித்தார்கள்.

அதன் நடுவிலிருந்த அரியணையில் அமர்ந்திருந்தான் அமரசிம்மன். மேவாரின் பிரதான படைத் தலைவர்களும் சில துன்மந்திரிகளும் புடை சூழ அந்த மண்டபத்தில் கீழே விரிந்து கிடந்தது பெரும் சிவப்புக் கம்பளமொன்று. அதன் மூலைகள் சுருங்காதிருக்க தங்கக் கட்டிகள் பாரமாக வைக்கப்பட்டிருந்தன. அரியணைக்குப் பின்னால் சுவரை அடுத்து ஐரோப்பாவிலிருந்து வந்த பெரும் நிலைக்கண்ணாடி காட்சியளித்தது. அதில் சபை முழுவதும் அற்புதமாகப் பிரதிபலித்தது.

அந்த மண்டபத்தில் அந்த நிலையில் மெள்ள மெள்ள மொகலாயர்களுடன் சமரசம் செய்துகொள்ளும் யோசனையை வெளியிட்டான் அமரசிம்மன். அரசனுடைய தலையாட்டிகள் தலைகளை ஆட்டினார்கள். ஆனால் திடீரென நிகழ்ந்தது பயங்கர சம்பவமொன்று. அரசன் உரையைக் கேட்டதும் திடீ



ரென்று ஆசனத்திலிருந்து புலி போல் கீழே குதித்தான் ஸ்லூம்ப்ரா வம்சத் தலைவன். கீழே விரிக்கப்பட்ட கம்பளத்தின் மூலையொன்றிலிருந்த தங்கக் கட்டியொன்றை எடுத்து மேலேயிருந்த ஐரோப்பிய நிலைக் கண்ணாடி மீது விசிறியடித்தான். கண்ணாடி உடைந்து சிதறியது. சபையில் நிசப்தம் சூழ்ந்து கொண்டது. பல உள்ளங்களை பயம் கௌவிக் கொண்டது. ஆனால் நிசப்தத்தை உடைத்தது ஸ்லூம்ப்ரா வம்சத் தலைவனின் கர்ஜனை.

"இந்த நிலைக் கண்ணாடிகளும் பட்டுப் பீதாம்பரங்களும் படாடோபச் சின்னங்களும் அழியட்டும். இந்த போகப் பொருள்களை அனுபவிக்கும் தருணமல்ல இது. பிரதாப் முடிக்காது போய்விட்ட போர் மிகுதியிருக்கிறது. மேவார் வாயிலில் காத்திருக்கிறார்கள் மொகலாயர்கள். சுக வாழ்வு ஒழியட்டும். வீரவாழ்வு மிளிரட்டும். ராஜபுதனம் பிழைக்கட்டும்" என்று கூவிய அவன் திடுதிடுவென்று அரியணையை நோக்கி ஓடி அமரசிம்மனைக் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கீழே இறக்கி, "வாருங்கள் வீரர்களே! கிளம்புங்கள் போருக்கு! ராணா பிரதாப சிம்மன் மகனை அவப்பெயரிலிருந்து காப்பாற்றுங்கள்" என்று மற்ற படைத் தலைவர்களையும் பார்த்து இறைந்துவிட்டு, அமரசிம்மனை இழுத்தவாறே வாயிலுக்குச் சென்று அவனைப் புரவியிலேற்றித் தானும் புரவி மீது ஏறினான். அன்று புரவி ஏறிய அமரசிம்மன் போரில் மும்முரமாக இறங்கினான். அவனைப் போரிடத் தூண்டி மேவாரின் வீரப் பெயரைச் சரித்திரத்தில் இடம்பெறச் செய்த ஸ்லூம்ப்ராத் தலைவனின் பெயர் ராஜபுதனத்தில் இன்றும் போற்றப்படுகிறது. அன்று அது பெரும் தாரக மந்திரமாயிருந்தது ராஜபுத்திர வீரர்களுக்கு. ஆகவே ஹரிதாஸ் ஜாலா அந்தப் பெயரைக்

கேட்டதும் ஸ்தம்பித்ததில் வியப்பேதுமில்லை யல்லவா?

அந்தப் பழைய நிகழ்ச்சி அப்படியே கண்முன் எழவே, கையிலிருந்த கவளத்தை மீண்டும் இலையில் போட்டான் ஹரிதாஸ் ஜாலா. எழுந்து ராஜபுத்திரிக் குத் தலைவணங்கவும் செய்தான்.

"உட்காருங்கள்" என்று அவள் கட்டளையிட்டாள்.

"இல்லை, நிற்கிறேன்" என்றான் அவன்.

"ஏன்?"

"நான் உங்கள் முன்பு உட்காரத் தகுதியற்றவன்."

"ஏன்?"

"நீங்கள் பெருங்குடி மகள்."

"நீங்கள்?"

"தற்சமயம்..."

"சொல்லுங்கள்."

"வேண்டாம்."

"பாதகமில்லை. சொல்லுங்கள்." அவள் மீண்டும் வற்புறுத்தினாள்.

அவன் சொன்னான். அவன் பதிலைக் கேட்ட அவள் பெரும் திகைப்படைந்தாள். அவன் சொன்ன விவரங்கள் உண்மையாயிருக்க முடியும் என்று அவளால் நம்ப முடியவில்லை.

## 5. இடையே புகுந்த புதுக்குரல்

சில நாழிகைகளுக்கு முன்னதாகப் பாலைவனத்தில் சந்தித்துச் சோலைவனத்துக்குத் தான் அனுப்பி வைத்த அந்தப் பைங்கிளி யாரென்பதை அறிந்ததும், பெரும் உள்ளக் கிளர்ச்சிக்குட்பட்டு, இலையிலிருந்து எடுத்த கவளத்தைக் கூட உதறிவிட்டு எழுந்து மிதமிஞ்சிய மரியாதையுடன் தலை வணங்கி நின்ற ஹரிதாஸ் ஜாலாவின் மனோநிலை விவரிக்க இயலாததா யிருந்தது. ஸ்லூம்ப்ரா வம்சத் தலைவனின் குடி மக ளொருத்தியை மொகலாய வீரர்களிடமிருந்து காத்த பெருமையைவிட, அவள் தன்னைப் பற்றிய விவரங் களை அறிந்தால் எத்தனை சிறுமை ஏற்படும் என்ற எண்ணமும், அப்படி அவள் தன்னைப் பற்றிக் குறைவாக நினைக்காதிருக்க வேண்டுமானால், தான் எத்தகைய பதிலைச் சொல்ல வேண்டுமென்ற யோசனையும் அவன் சிந்தையைக் குழப்பவே, "நீங்கள் யார்?" என்று அவள் இரண்டாம் முறையாகக் கேட்ட கேள்விக்கு நீண்ட நேரம் பதில் சொல்லாமலே நின்றிருந்தான். அவள் முகத்தை ஏறெடுத்துப் பாக்கக் கூட சக்தியில்லாததால் அவள் கால்களையே கவனித் துக் கொண்டிருந்த அவன், கண்களில் இயற்கையாக உள்ள உறுதிக்குப் பதில் சஞ்சலமே மண்டிக் கிடந்தது. அந்த மனோ நிலையில் அந்த ஏந்திழைக்குத் தன்னால் உடனடியாக பதில் சொல்ல முடியாதென்ற தீர்மானத்துக்கு வந்த அந்த வாலிப வீரன், "என் பெயர் ஹரிதாஸ் ஜாலா" என்று மட்டும் சொல்லிவிட்டுச் சரேலென்று குனிந்து கீழேயிருந்த இலைப் பொட்ட லங்களை மடக்கி எடுத்துத் தூர எறிந்துவிட்டு, சுனையை நோக்கிச் சென்று கை கழுவி இரண்டு கை நீரெடுத்து அருந்திவிட்டு, மீண்டும் திரும்பி அவன்

உட்கார்ந்திருந்த கூடார வாயிலுக்கு வந்து அவள் முன்பு நின்றான்.

சுனைக்குப் போய்வரச் சில விநாடிகள் பிடித்ததால் கிடைத்த இடைவேளையில் அவன், தான் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறையையும் சொல்ல வேண்டிய பதிலையும் தீர்மானித்துக் கொண்டு விட்டானாகையால், திரும்பி வந்ததும் ஓரளவு திடத்துடனே அந்த எழிலரசியின் முன்பு நின்றான். அவன் செயல்கள் அனைத்தையும் அவள் சந்தேகமறப் புரிந்து கொண்டிருந்தாள். தன் வரலாற்றைச் சொல்ல அவன் பெரிதும் குழம்புகிறானென்பதை அவன் சலனத்திலிருந்தும், திடீரென அவன் இலையை எடுத்துத் தூர எறிந்து விட்டுத் துரிதமாக சுனைக்குப் போய் திரும்பியதிலிருந்தும் உணர்ந்து கொண்ட அவள் மீண்டும் அவனை உட்கார வேண்டினாள்.

"இல்லை நிற்கிறேன்" என்று அவன் பழைய படியே பதில் சொன்னான். அந்த பதிலில் துயரம் ததும்பி நின்றதை அவள் கவனிக்கவே செய்தாள். இருப்பினும் அதைத் கவனியாதவள் போல் கேட்டாள், "ஏன்? நிற்க வேண்டிய அவசியமென்ன?" என்று.

"முன்பே சொன்னேனே, நீங்கள் பெருங்குடி மகள் என்று" என, அவன் இரண்டாம் முறையும் அழுத்திச் சொன்னான்.

"அதனாலென்ன?" என்று கேட்டாள் அவள்.

"உங்கள் முன் உட்காரத் தகுதியற்றவன் நான்" என்று அவன் பதில் சொன்னான், கவிழ்ந்த தலை நிமிராமலே.



"உங்கள் பெயர் ஹரிதாஸ் ஜாலா என்று சொன்னீர்களே?" என்று மறுபடியும் வினவினாள் அவள், அன்பொழுகிய குரலில்.

"ஆம் சொன்னேன்." அவன் பதில் வறண்ட குரலில் வெளி வந்தது.

"அதுவும் ராஜபுதனத்தின் பிரசித்தமான பெயர் தானே?"

"ஆம்; பிரசித்தமானதுதான்."

"அதுவும் சிசோதயர் கிளையல்லவா?"

"உண்மைதான்."

"ஸ்லூம்ப்ராவின் வம்சத்துக்கு அது எந்த விதத்திலும் தாழ்ந்ததல்லவே?"

"இல்லை?"

"அப்படியானால் தாரதம்மியம் பாராட்ட நீங்கள் என் எதிரில் நிற்பானேன்?"

இந்தக் கேள்விக்குச் சற்று அழுத்தம் திருத்தமாக வந்தது ஹரிதாஸ் ஜாலாவின் பதில், "குலத்தை மட்டும் பொறுத்ததல்ல உயர்வு தாழ்வு தேவி!" என்று கூறினான் ஹரிதாஸ் ஜாலா.

"வேறெதைப் பொறுத்தது" என்று அவள் கேட்டாள், வியப்பு குரலில் ஒலிக்க.

"குலத்தில் உதிப்பவன் குணங்களைப் பொறுத்தது; செயல்களைப் பொறுத்தது" என்று அந்த வீரன் பெருமூச்செறிந்தான்.

அந்த ராஜபுத்திரி தன் பங்கய விழிகளை நன்றாக ஏறெடுத்து எதிரே தலை கவிழ்ந்து நின்ற அந்த வாலிப

வீரனை நோக்கினாள். உறுதியான அவன் கால்களை முழந்தாள் வரை மறைத்து இடுப்பில் வரிந்து கட்டப் பட்டிருந்த துணியும், க்ஷத்திரிய வம்சத்தவனாதலால் திண்மையான அவன் திறந்த மார்பின் குறுக்கே பாய்ந்து சென்ற முப்புரி நூலும், வீர நுதலில் தவழ்ந்து விளையாடிய முடியிழைகளும் அவனுக்குப் பெரும் கம்பீரத்தை அளித்திருந்தன. குழம்பி நின்ற முகத்திலும் வீரம் சுடர் விட்டுப் பிரகாசித்தது. அத்தனை வீரத்தி லும் குழந்தை போல் தன்னெதிரே நின்ற அந்த வாலிப வீரனை மிகுந்த பரிதாபத்துடன் பார்த்த அந்த ராஜ புத்திரி, 'இவன் குணத்திலோ செயலிலோ எந்தவித இழுக்குமிருக்க முடியாது' என்ற தீர்மானத்துக்கு வந்தாள். தவிர, 'ராஜபுதனத்தின் பிரதான படைத் தலைவர்களில் ஒருவனும் பல போர்களைக் கண்ட வனுமான ஹரிதாஸ் ஜாலா எந்தத் தவற்றைச் செய்ய முடியும்?' என்றும் தன்னைத்தானே கேட்டுக்கொண்ட அவள், "குணத்திலும் செயலிலும் என்ன தாரதம் மியத்தை நமக்குள் கண்டு விட்டீர்கள்?" என்று வினவினாள்.

"ஜயன் சந்தாவத்தின் குணம் செயல் இரண்டும் ராஜபுதனம் அறிந்தது" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"சொல்லுங்கள்" என்று அவள் தூண்டினாள்.

போரில் ஆயாசமடைந்து மொகலாயரிடம் சமரசம் செய்யப் புகுந்த மேவார் மன்னனை, அரியணையி லிருந்து கையைப் பிடித்து இறக்கிப் போரிலும் இறக்கி யவர்கள் உங்கள் பாட்டனார்."

"ஆம்."

"அதனால் ராஜபுதனத்தின் வீரம் காக்கப்பட்டது. மானமும் காக்கப்பட்டது."



"அதனால் போர்கள் மூண்டன. ஏராளமான வீரர்கள் அழிந்தார்கள். படைத்தலைவர்களில் முக்கால் வாசிப் பேர் அழிந்தார்கள்."

"ஆம், அழிந்தார்கள். ஆனால் மானம் அழிய வில்லை, வீரம் அழியவில்லை. இன்னும் மேவாரின் செங்கொடி சுதந்தரக் கொடியாகவே பறக்கிறது."

"அது பறக்க உதவியவர்கள் ராஜபுதனத்தின் படைத் தலைவர்கள்" என்று ராஜபுத்திரி சுட்டிக் காட்டினாள்.

"ஆம்" என்று ஒப்புக் கொண்டான் ஹரிதாஸ் ஜாலா.

"அந்தப் படைத்தலைவர்களில் ஹரிதாஸ் ஜாலா சிறந்தவர் என என் பாட்டனாரே சொல்லியிருக் கிறார்" என்று சுட்டிக் காட்டினாள் அவள்.

"அப்படியா!" அவன் பதிலில் இகழ்ச்சி மண்டிக் கிடந்தது.

"பாட்டனார் மட்டுமல்ல, ராஜபுதனம் முழுவதுமே சொல்லுகிறது" என்று அவன் இகழ்ச்சியைச் சட்டை செய்யாமல் கூறினாள் அவள்.

"அப்படியா!" இம்முறை இகழ்ச்சியுடன் நகைக்கவும் செய்தான் அவன்.

"ஆம்" என்றும் மேலும் சொன்னாள், "கடைசியாக மொகலாயருடன் நடந்த போரில் முன்னணியில் சென்று மொகலாயப் படைத் தலைவனான அப்துல் லாவை வெட்டிப் போட்ட வீரன் ஹரிதாஸ் ஜாலா என்று ராஜபுதனம் அவரைக் கொண்டாடுகிறது. அந்தப் போரில் எதிரிகளின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டதாலேயே அதுவும் நீண்ட வேலொன்று அவர் மார்பில் பாய்ந்து புரவியிலிருந்து விழுந்த

பின்பே எதிரிகள் அவரைத் தூக்கிச் சென்றதாகவும் என் பாட்டனாரே சொன்னார். அப்பேர்ப்பட்ட வீரனை நான் கண்டதில்லை. வயது முதிர்ச்சியடைந்த வரென்றும் நினைத்தேன். வாலிபர் என்று தெரியாது. எப்படியிருந்தாலென்ன, அத்தகைய வீரபுருஷரின் குணத்திலோ செயலிலோ என்ன குறையிருக்க முடியும்?"

இப்படி ஹரிதாஸ் ஜாலாவின் குணங்களை விவரிக்க விவரிக்க தழுதழுத்த அவள் குரலில் அன்பு பெரிதும் பாய்ந்து நின்றது. கடைசியாக அத்தகைய வீரனின் குணத்திலும் செயலிலும், என்ன குறை இருக்க முடியும் என்று அவள் கேட்டபோது, குரலில் பெருமை மிதமிஞ்சி ஒலித்தது. உள்ள உணர்ச்சிகளைத் தெள்ளென எடுத்துக்காட்டிய அவள் பேச்சு அவன் இதயத்தை சுரீல் என சுட்டது. அவள் இதயத்தில் தன்னைப் பற்றி எழுந்திருந்த அந்தக் கற்பனையை அப்படியே வளரவிட்டாலென்ன என்று ஒரு கணம் எண்ணினாலும், மறுகணம் அந்த எண்ணத்தை ஒதுக்கித் தள்ளினான். 'ஜஹாங்கீரின் பணியாளனான பின்னர் நினைக்கக் கூடிய ஒரே குணம் உண்மையைச் சொல்லுதல். அதையும் ஏன் கைவிட வேண்டும்' என்று எண்ணினான். ஆகவே தன்னை திடப்படுத்திக் கொண்டு, "நீங்கள் சொல்லும் ஹரிதாஸ் ஜாலா இறந்து விட்டான். உங்கள் முன் நிற்பவன் வேறு" என்றான்.

அதிர்ச்சியடைந்த கண்களை அவன் முகத்தை நோக்கி உயர்த்தினாள் ராஜபுத்திரி. "என்ன, ராஜபுதனத்தின் படைத்தலைவரான ஹரிதாஸ் ஜாலா இறந்து விட்டாரா?" என்று கேட்டாள் அதிர்ச்சி குரலிலும் ஒலிக்க.

"ஆம்; இறந்துவிட்டான்" என்றான் ஹரிதாஸ் ஜாலா.



"அப்படியானால்..."

"உங்கள் முன் நிற்பவன் வேறு ஹரிதாஸ் ஜாலா."

"நீங்கள் படைத்தலைவரல்லவா?"

"தற்சமயம் அல்ல."

"வேறு யார்?"

"சக்கரவர்த்தியின் தூதன்."

"மேவார் ராணா..."

"அல்ல அல்ல; மொகலாய சக்கரவர்த்தி ஜஹாங்கீரின் தூதன்!"

இந்தச் சொற்களை வெறுப்புடன் உதிர்த்த ஹரிதாஸ் ஜாலா, அந்தச் சோலையே அதிரும்படியாக வறண்ட குரலில் இரைந்து நகைக்கவும் செய்தான்.

இடி விழுந்ததுபோல் செவிகளில் விழுந்த அந்தச் சொற்களைக் கேட்ட ராஜபுத்திரி திக்பிரமையடைந் தாள். அந்தச் சொற்களைத் தொடர்ந்து அந்த வாலிப வீரனிடமிருந்து வெளிவந்த சிரிப்பு ஏதோ பைத்தியம் பிடித்தவன் சிரிப்புப் போலிருந்ததையும் கவனித்து, மொகலாயர் சிறையில் அவதிப்பட்டதால் அவனுக்குச் சித்தபிரமை ஏற்பட்டுவிட்டதோ என்று கூட நினைத் தாள் அவள். சோலையை பயங்கரமாக ஊடுருவிச் சென்ற முதல் சிரிப்பைத் தொடர்ந்து மறுமுறையும் சிரிப்பொலி வெளிப்பட்டதையும், அந்தச் சிரிப்பிலும் மகிழ்ச்சிக்கு பதில் வெறுப்பின் வறட்சியே மண்டிக் கிடந்ததையும் அவள் கவனித்தாள். வாழ்க்கையில் அவன் பெரும் அவதிக்கு உள்ளாகியிருக்கிறான் என்பதை மட்டும் அவள் புரிந்து கொண்டாள். அதைப் பற்றி அவள் கேட்க வாயெடுக்கும் முன்பு அவனே கூறினான், சற்று சிரிப்பை அடக்கிக் கொண்டு, "ராஜ

என்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டான். சாந்தமான பார்வையைத்தான் அந்தக் கண்கள் வீசின. ஆனால் அந்த சாந்தத்திலும் ஒரு வீரக் கனலும் ஊடே பளிச்சிட்டது. இதுவும் வீரனான ஹரிதாஸ் ஜாலாவின் கண்களிலிருந்து தப்பவில்லை. அழகு அபரிமிதமாயிருந்தாலும், அந்த அழகு லேசில் அணுகத் தக்கதல்ல என்பதை அவன் புரிந்து கொண்டான். அமுதத்தை வர்ஷிப்பது போல் சிவந்து கிடந்த அவள் உதடுகளைப் பார்த்த அந்த வாலிபன் அவற்றில் தெரிந்த உறுதியையும் பார்த்தான். உதடுகள் நல்ல சிவப்பு. அக்கினிச் சிவப்பு, கற்பின் அக்கினி அவற்றில் விளையாடிக் கொண்டிருந்தது. அக்கினி சாட்சியாகக் கைபிடிக்கும் ஒருவனுக்கே அந்த அக்கினி தணிந்து அமுதமாகும் என்பதை அவை சந்தேகமற உணர்த்தின. அந்த உதடுகளைப் பார்த்து ஹரிதாஸ் ஜாலாவின் மனத்தில் ஜோஹரில் தாங்களே எதிர்த்து மாய்ந்த கணக்கில்லா ராஜபுதனக் கற்புக்கரசிகளின் நினைப்பு எழுந்தது.

இவ்வளவு அழகிய பவித்ர உதடுகளுக்குக் கீழே எழுந்த கவர்ச்சிகள் அவன் கண்களை மட்டுமென்ன, இந்திரியங்களையும் பறிக்கத்தான் முற்பட்டன, ஒரு கையைக் கூடாரத்தின் மேலும், மற்றொரு கையைக் கூடாரத்தின் பக்கவாட்டிலும் பிடித்ததால், போர்வைக் குள்ளேயே புரட்சி செய்து, முட்டி எழுந்த கெட்டிக் குவளை மொட்டுகளும் அவற்றைக் கண்டு பயந்து அடியோடு ஒடுங்கிவிட்ட இடையும், பயமென்பதை அறியாமல் அதற்குக் கீழே செழித்து ஓடிய அங்க லாவண்யங்களும் ஹரிதாஸ் ஜாலாவின் மதியை அடியோடு மயக்கத்தான் செய்தன. அந்த மயக்கத்திலும், அவள் நின்ற தோரணை ஒரு பயத்தையும் அளித்தது அவனுக்கு. அவள் ராஜபுதனத்தின் பெருங் குடிமகள், அணுகத் தகாதவள் என்பதைத் திட்டமாகப் புரிந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா.



அந்த ராஜபுத்திரியை அவன் ஆராய்ச்சி செய்த அளவுக்கு அவள் அவனை ஆராயவில்லையென்றாலும், அவன் குதிரையைக் குளிப்பாட்டி நின்ற கோலத்தை அவள் ரசிக்கவே செய்தாள். நல்ல உயரமும் திண்மையும் வாய்ந்திருந்தாலும் உயரத்தில் ஒல்லியாய்த் தெரிந்த தேகமும், உறுதியான தோள்களும், திரும்பி நோக்கிய போது மார்பில் தெரிந்த காயங்களும், அவள் கண்களைக் கவ்விக் கொண்டன. பெரும் வீரனொருவனைத்தான் சந்தித்திருக்கிறோம் என்பதை அவள் தீர்மானித்துக் கொண்டாள். தன்னை அவன் கண்கள் ஊடுருவிப் பார்த்ததால், சினம் கொண்ட தன் மனம் ஏன் அந்தச் சினத்தை மீண்டும் மீண்டும் அடக்கிக் கொள்கிறது என்பதை எண்ணிப் பார்த்த அந்த ராஜபுத்திரி சற்றுக் குழம்பவும் செய்தாள். அங்கிகளையெல்லாம் களைந்து கரையில் வைத்துவிட்டு, ராஜபுதனப் பிராமண பிரம்மசாரிகளைப் போல் அவன் வேஷ்டியைத் தார் பாய்ச்சுக் கட்டிக் கொண்டிருந்ததால் வெளிப்பட்ட தேக வாளிப்பும், அவன் குதிரையைத் தேய்த்தபோது தசைகள் அசைந்த திண்மையும் அவன் பெரும் பலத்துக்கு அத்தாட்சிகளென்பதைப் புரிந்து கொண்டாள் அவள். குதிரையைக் குளிப்பாட்டிய போது அதன் வால் சுழற்றியடித்த நீர் அவன் நெற்றியிலும் மார்பிலும், முத்து முத்தாகச் சந்திர வெளிச்சத்தில் மின்னி நல்ல வெளுப்பாயிருந்த அவன் உடலுக்குப் பெரும் அழகை அளித்ததையும் அவள் கண்டாள். குதிரையைத் தேய்க்கப் பிழிந்த துணியை அவன் கையில் பிடித்தபடியே நின்று தன்னைப் பார்த்து மலைப்பதையும், அவன் அழகுடன் கலந்த வீரக்களை அந்த மலைப்பில் அதிகமாகப் பிரகாசிப்பதையும் கண்டு திறமையும், தந்திரமும், சாமர்த்தியமுள்ள ஒரு புருஷனின் துணை தனக்குக் கிடைத்திருப்

ராஜபுத்திரியின் இதயத்தில் சங்கடம், வெட்கம் முதலிய பலவித உணர்ச்சிகள் எழுந்து தாண்டவமாடின. அத்தனையும் அடக்கிக்கொண்டு அவள் கேட்டாள்: "மனைவி எங்கேயென்று அவர்கள் கேட்கவில்லையா?" என்று.

"கேட்டார்கள்" என்று மென்று விழுங்கினான் ஹரிதாஸ் ஜாலா.

"நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"இந்தச் சோலையில் கூடாரமடித்துத் தங்கியிருப்பதாகச் சொன்னேன்."

"இங்கு அவர்கள் என்னைத் தேடி வந்திருந்தால்?"

அதுவரை தலை கவிழ்ந்தே விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்த ஹரிதாஸ் ஜாலா, திடீரெனத் தலை நிமிர்ந்து நின்றான். அவன் பதில் பளீரென வந்தது. "இந்தச் சோலையை நோக்கி ஒரு மொகலாயன் காலை எடுத்து வைத்திருந்தால் அங்கேயே அவனை வெட்டியிருப்பேன். அவர்கள் இங்கு வருவதானால் என்னைக் கொன்று போட்டு என் உடலைத் தாண்டித்தான் வரமுடியும். என்னைக் கொல்லுவது அத்தனை சுலபமல்ல தேவி" என்ற ஹரிதாஸ் ஜாலாவின் குரலில் வீர ஒலி நன்றாகப் பிரதிபலித்தது.

அந்த வீர ஒலி காதில் விழுந்தபோதிலும் ராஜபுத்திரியின் மனம் சாந்தியடையவில்லை. எப்படியிருந்தாலும் ஜஹாங்கீரின் தூதனல்லவா என்ற எண்ணத்தால் மனம் உடைந்திருந்தாள் அவள். ஆகவே அவள் கேட்டாள்: "என் வீரர்களை உங்கள் வீரர்களென்றும் ஒட்டகத்தை உங்கள் மனைவியுடையதென்றும் சொன்னதை அவர்கள் ஏன் நம்பினார்கள்? சற்று முன்பு



என்னைத் துரத்தியவர்களுக்கு நீங்கள் சொன்னது பொய்யென்று தெரியாதா?"

"பொய்யாயிருந்தாலும் நம்ப வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"என்ன பொறுப்பு?" என்று ராஜபுத்திரி கேட்டாள்.

"இதற்குப் பணிய வேண்டிய பொறுப்பு" என்று கீழேயிருந்த தனது பைகளிலொன்றிலிருந்து ஒரு பொருளை ராஜபுத்திரி முன் நீட்டினான் ஹரிதாஸ் ஜாலா.

அதைக் கையில் வாங்கிப் பார்த்த ராஜபுத்திரியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. அதை ஹரிதாஸ் ஜாலாவின் மீது சுழற்றியடித்த அவள், "கயவனே, போய்விடு. இனி கணமும் இங்கு நில்லாதே. ராஜபுதனத்தில் காலையும் வைக்காதே. வைத்தால் உன்னைக் கண்ட துண்டமாக நானே வெட்டிப் போடுவேன்," என்று பெண் புலிபோல் சீறிவிட்டு, அந்தச் செயலை நிறைவேற்றத் தான் வல்லவள் என்பதை நிரூபிக்க இடையிலிருந்த ஒரு குறுவாளையும் உருவிப் பிடித்துக் கொண்டாள்.

ஹரிதாஸ் ஜாலா நின்ற இடத்திலேயே நின்றான். சிறிதும் நகர மறுத்தான். "அந்தப் பணியை இப்பொழுதே முடித்துவிடு ராஜபுத்திரி. என் உயிரும் உயர்குடி மகளொருத்தியின் கையால் பிரிந்து புனித உலகில் புகும். உன் கையில் இருக்கும் கத்தியை என் மார்பில் பாய்ச்சிவிடு. இங்கு நம் இருவரைத் தவிர யாருமில்லை" என்றான், சொற்களில் வெறுப்பு மண்டிக் கிடக்க. ராஜபுத்திரி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அச்சமயத்தில் மரங்களின் நிழலிலிருந்து, "தவறு ஹரிதாஸ்! இன்னொருவரும் இருக்கிறார்!" என்ற சொற்கள் மிக கம்பீரமாக அந்தச் சங்கடமான சூழ்நிலையை

ஊடுருவி வந்தன. அந்தக் குரலைக் கேட்டு இருவருமே பிரமித்தனர். அந்த இடத்தில் இருவருமே லவலேசங் கூட எதிர்பாராத குரல் அது.

## 6. ஜயன் சந்தாவத்

பாலைவனச் சோலையில் தனது பையிலிருந்து ஹரிதாஸ் ஜாலா எடுத்துக் காட்டிய பொருளைக் கண்டதும், ராஜபுத்திரியின் இதயத்தில் கோபம் குமுறிக் கொண்டு எழுந்து அவள் செவ்விய உதடுகளிலிருந்து கனல் கக்கும் சொற்கள் உதிர்ந்தனவென்றால், அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. பையிலிருந்து அந்த வாலிப வீரன் எடுத்துக் காட்டியது அல்ப சொற்பமான பொருளல்லவென்றாலும், அந்தப் பொருள் ராஜபுத்திரியின் கண்களில் ஹரிதாஸ் ஜாலாவை மிக அற்பனாக அடித்து விட்டதென்பதில் அணுவளவும் சந்தேகமில்லையென்றால், அதற்கு அந்த ராஜபுத்திரியின் மீது அதிக குற்றமும் யாரும் கற்பிக்க முடியாது. ஹரிதாஸ் ஜாலா பையிலிருந்து மோதிரத்தை எடுத்துக் கொடுத்ததும், அது விலை மதிக்க முடியாத மோதிரமென்பதை மட்டுமே அறிந்த அந்த ராஜ புத்திரி, அதை ஒரு முறை திருப்பிப் பார்த்ததும் பெரும் திகைப்பை அடைந்தாள். ஜஹாங்கீரின் முத்திரை மோதிரங்களில் அதுவும் ஒன்று எனச் சுட்டிக் காட்டுவதற்கான அரசாங்க அமைப்புகள் மோதிரத்தின் அடிப் புறத்தில் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்தன. தயமூர் வம்சத்தின் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்த அந்த முத்திரை மோதிரம் அவள் கையைத் தணலெனச் சுட்டது. அது மட்டுமா சுட்டது! அதுவரை இன்பத்தில் திளைத்திருந்த அவள் இதயத்தை எத்தனை எத்தனை துன்பத்தணல்கள் சுட்டன!



அந்த முத்திரை மோதிரம் அவள் கையிலிருந்தது இரண்டொரு விநாடிகளேயானாலும், அந்த இரண்டொரு விநாடிகளில் அவள் இதயத்தில் எழுந்த எத்தனை பெரிய கற்பனைக் கோபுரங்கள் இடிந்து விழுந்து விட்டனவென்பதை அவளாலேயே முழுதும் ஊகித்துப் பார்க்க முடியவில்லை. ராஜபுதனத்தின் வீரனாகவும் பெரும் படைத்தலைவனாகவும் அவள் மனதில் எழுந்திருந்த ஹரிதாஸ் ஜாலா எனும் லட்சியக் கோபுரம் அரைவிநாடியில் படுதூளாக இடிந்து மண்ணோடு மண்ணாகி விட்டது. அவன் வாலிபன் என்று அறிந்ததும் ஏற்பட்ட இன்ப நினைவு எனும் கோபுரமும் அக்பரின் பீரங்கிக்கு இரையான சித்தூரின் கோட்டை மதில்போல் படுதூளாகியது. எதிரே நின்ற அவன் பேச்சு, பார்வை, நடை, கோலம், அத்தனையும் எழுப்பிய ஏதேதோ எண்ணங்கள் எனும் பெரும் ஸ்தூபிகளும் அவள் இதய மேடையில் தடாலென விழுந்தன. இத்தனை பெரிய கட்டடங்களின் வீழ்ச்சிகள் விளைவித்த அதிர்ச்சி அவள் முகத்திலும் கண்களிலும் தெரிந்தது.

அவன் ஜஹாங்கீரின் தூதன் எனச் சொன்னது முழுதும் உண்மை என அப்பொழுதுதான் அறிந்த அந்த ராஜபுத்திரி, பழைய ஹரிதாஸ் ஜாலா இறந்து விட்டான் என்று அவன் சொன்னதில் லவலேசமும் சந்தேகமில்லையென்பதை அறிந்தாள். ஆனால், 'அந்த ஹரிதாஸ் ஜாலா மறைந்துவிட்டான்' என அந்த வாலிபன் சொன்னது குணங்களின் மறைவைத்தான் என்றறிந்த அவள், அந்த குணங்களின் மறைவைவிட அவன் பூதவுடல் மறைந்திருந்தால் ராஜபுதனத்துக்கு எத்தனை பெருமையாயிருந்திருக்கும் என்று எண்ணினாள். அப்படி அவன் ஒழியாமல் குணங்களை மட்டும் ஒழித்துக் கொண்டு தன் முன் நிற்பதைப் பார்த்துப் அவள் உள்ளம் குமுறிக் கொண்டு எழுந்தது. உடலு

துடித்தது. இப்பேர்ப்பட்டவன், தான் அவமானத்துக் குட்பட்டது போதாதென்று தன்னையும் மனைவி யென்று குறிப்பிட்டதை எண்ணிப் பெரும் சீற்றம் கொண்டாள் அந்தப் பெருங்குடி மகள்.

கோபம் யார் கண்ணையும் மறைக்கவல்ல ஒரு பெரும் திரை. அந்தத் திரையைச் சரேல் சரேலென மனிதன் தன் மனத்துக்கு முன்புவிடப் பழகிக் கொண்டுவிட்டால் உலகத்தில் பல சிக்கல்களுக்குப் பரிகாரமேற்படும். ராஜபுத்திரி மட்டும் திடீரென அத்தனை சீற்றத்துக்கு உட்படாமல், சற்று நிதானித்து விஷயங்களை சீர்தூக்கிப் பார்த்திருந்தால், பல உண்மைகளை அறிந்திருப்பாள். ஆனால் கோபம் கண்ணை மறைத்தது. ஆகவே உண்மையையும் மறைத் தது. ஹரிதாஸ் ஜாலா எதற்காக அந்த உண்மையைத் தன்னிடம் சொல்லியிருக்க வேண்டும் என்பதை அவள் சற்று ஆராய்ந்திருந்தால், எதிரே நின்ற அந்த வாலிபனின் கண்ணியத்தையும் சத்தியத்தையும் சத்தியத்தில் விளைந்த நெஞ்சுறுதியையும் உணர்ந்து கொண்டிருப்பாள். ஹரிதாஸ் ஜாலாவென்று அவன் தன் பெயரைச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. சொல்லியிருந்தாலும் தன் மொகலாய வீரரை விரட்டியடித்த முறையைச் சொல்லத் தேவையில்லை. தன் பெயரை மாற்றிச் சொல்லியிருக்கலாம். பெயரைச் சொல்லியிருந்தாலும், மொகலாயச் சிறையிலிருந்து தப்பி வந்துவிட்டதாகச் சொன்னானே அதை மட்டும் சொல்லி, அவளிடம் அந்த மோதிரத்தைக் காட்டா திருக்கலாம். ஆனால் அப்படியெல்லாம் அவன் ஏன் செய்யவில்லை? ராஜபுத்திரப் பெருங்குடி மகளொருத் தியின் முன்பு தன் மதிப்பை எத்தனை தூரம் குறைத்துக் கொள்ள முடியுமோ அத்தனை தூரம் ஏன் குறைத்துக் கொண்டான்? இதையெல்லாம் அவள் இதயம் கேட்டுப் பார்க்கவில்லை கேட்டுப் பார்த்திருந்



தால் உண்மை தெரிந்திருக்கும். முழு உண்மை தெரியா விட்டாலும் எதிரே உள்ள வாலிபன் இதயத்தில் ஏமாற்றும் உணர்ச்சிகள் ஓடவில்லை. தூய்மையான சத்தியத்தின் சக்தி ஓடுகிறது என்ற உண்மையாவது தெரிந்திருக்கும்.

ஆனால் ராஜபுத்திரிகளுக்கு மொகலாயர் பெயர் களையோ அவர்களின் கையாட்களின் பெயர் களையோ கேட்கும்போது, இயற்கையாக எழுந்து வந்த முன் கோபம் அந்தப் பெண்ணின் இதயத்திலும் மண்டிக் கிடந்தது. கையில் இரு விநாடிகளே அவள் தாங்கி நின்ற ஜஹாங்கீரின் மோதிரம் கையைத் தணலெனச் சுட்டது. ஆகையால்தான் அவள் அதை அவன் மீது வீசியெறிந்தாள். உன்னை வெட்டிப் போடு வேன் என்று கையில் குறுவாளையும் ஏந்தினான். அந்தச் சீற்றத்துக்கும் குறுவாளேந்திய கோலத்துக்கும் காரணம் அவள் உள்ளத்தில் தன் மீது எழுந்துவிட்ட வெறுப்பேயென்பதை ஹரிதாஸ் ஜாலா உணர்ந்தான். சற்று முன்பு தன் மீது எழுந்த விருப்பு திடீரென வெறுப்பாக மாறிவிட்டதை அறிந்தான். அதனால் அவன் இதயத்தில் சாந்தியே ஏற்பட்டது. அவள் அவ னிடம் கொண்ட வெறுப்பைக் காட்டிலும் அவனுக்குத் தன்னிடமிருந்த வெறுப்பு அதிகமாதலாலும், தன் னைப் போன்ற ஒரு மனிதனிடம் அத்தகைய ஓர் உயர் குடிமகள் எந்தவித அன்போ பாசமோ காட்டக் கூடாதென்ற நினைப்பாலும் எப்படியும் அவளிடம் உண்மையை மறைக்கக்கூடாதென்ற சிறந்த புத்தியா லுமே ஹரிதாஸ் ஜாலா உண்மையை உரைத்தானாகை யால், அவள் அவன்மீது முத்திரைக் கணையாழியைச் சுழற்றி எறிந்தபோதும், கடும்சொற்களைக் கொட்டிய போதும், அவன் சீற்றத்துக்கு பதில் சாந்தமே அடைந்தான். அந்த ராஜபுத்திரியின் கரத்தால் மாண்டால், தான் செய்த பாவங்களும், செய்ய இருந்த

அவப்பணியும் போய்விடும் என்ற நினைப்பாலேயே அவன் தன் மார்பை அவள் முன்பு திறந்து காட்டி, "உன் கையிலிருக்கும் கத்தியை என் மார்பில் பாய்ச்சி விடு. இங்கு நாம் இருவரைத் தவிர வேறு யாரு மில்லை" என்றான்.

அவள் கத்தியைப் பாய்ச்சிவிடும் மனப் பக்குவத்தி லிருந்தாள். அவனும் அதை வாங்கிக் கொள்ளும் உள்ளப்போக்கில் இருந்தான். இடைஞ்சலாயிருந்தது விதியெனும் விசித்திரக்கரம். அந்தக் கரம் திடீரெனக் குறுக்கே புகவிட இடைஞ்சல், விதியின் வாய் உதிர்த்த சொற்கள், இரண்டும் கூடாரத்தின் வாயிலில் எதிரும் புதிருமாக நின்றிருந்த அந்த இருவர் இதயத்திலும் பெரும் பிரமிப்பை ஏற்படுத்தியதால், இருவரும் செயலற்று அப்படியே நின்று விட்டார்கள். இருவரும் எதிர்பாராத அந்தக் குரலால் ஏற்பட்ட பிரமை அவர்களுக்கு நீங்கு முன்பாகவே, பக்கத்து மரங்களின் மறைவிலிருந்து வெளிவந்த அக்குரலுக்குடையவன் அவர்களிருவரும் நின்றிருந்த கோலத்தைக் கண்டு சற்றுப் புன்முறுவலும் கொண்டான். நிலவில் பளபளத்த கத்தியைக் கையில் பிடித்துக் கூடார வாயி லில் ராஜபுத்திரி நிற்க, அவள் வீசியெறிந்த ஜஹாங் கீரின் முத்திரை மோதிரம் எதிரேயிருந்த வாலிபன் காலுக்கெதிரே மணலில் செக்கச் செவேலென்று ஒளிவிட, அதைச் சிறிதும் கவனிக்காமல் அந்த வாலிபன் மார்பைத் திறந்து காட்டிக் கொண்டு நிற்க, இத்தகைய ஒரு காட்சியைக் கண்டதும் அந்த மனிதன் மெள்ளச் சிரிக்கவும் செய்தான்.

வந்தவன் குரலைக் கேட்டதுமே மற்ற உணர்ச்சி களைக் கைவிட்டு மலைப்புக்கு இடங்கொடுத்த அந்தப் பருவப் பைங்கிளியும், வாலிப வீரனும் அந்த மனிதன் எதிரே வந்ததும், பெரும் குழப்பத்தை



அடைந்து தலைகளைத் தாழ்த்தினர். வந்த மனிதன் எதிரேயிருந்த காட்சியைக் கண்டு நகைத்த பின்னர், "நல்லவேளை, காளிதாஸன் காலமாகி விட்டான்" என்று வேடிக்கையாகப் பேசவும் முற்பட்டான். அவ னுக்கு பதில் சொல்லத் துணிவில்லாத ராஜபுத்திரி, தலையைப் போலவே தனது குறுவாளையும் தாழ்த்தி இடையில் செருகிக் கொண்டாள். தலையைத் தாழ்த் திய ஹரிதாஸ் ஜாலா மட்டும் சில விநாடிகளுக்குப் பிறகு தலையை மெள்ள நிமிர்த்தி எதிரே சிரித்துக் கொண்டு நின்ற ஜயன் சந்தாவத்தை ஏறெடுத்துப் பார்த்தான்.

சுமார் அறுபது ஆண்டுகளைத் தாண்டிவிட்ட ஜயன் சந்தாவத்தின் கண்கள் வாலிபர் கண்களைப் போலவே வீரச் சுடர் விடுவதையும், சிற்சில திரைகள் விழுந்த முகத்தில் சாந்தமும் நிதானமும் பெரிதும் பரவிக் கிடந்ததையும் கவனித்தான், ஹரிதாஸ் ஜாலா. அறுபது வயது தாண்டியதால் சற்றே நரைத்து முகத்தில் தாறுமாறாகத் தொங்கிக் கொண்ட தலைமுடியிழைகள் கூட அந்த முகத்துக்குப் பெரும் கம்பீரத்தைக் கொடுத் ததைக் கண்ட ஹரிதாஸ் ஜாலா, 'இத்தகைய ஒரு பெரு மகன் இருக்கும் வரையில் ராஜபுதனத்துக்குக் குறைவு ஏதுமில்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ஜயன் சந்தாவத் ஆறடி உயரத்துக்கு மேலிருந்தார். உடலில் அதிகச் சதைப்பிடிப்பு இல்லாமல் ஒல்லியாகத் தோற்றமளித்தாலும், அது வயிரம் பாய்ந்த மரம்போல் தோன்றியது. நீண்ட கைகளிரண்டும் மிகவும் சிவந்து காயத்தின் வடுக்களே இல்லா திருந்ததையும், அவர் இடுப்பில் தொங்கிய நீண்ட வாளையும் கண்ட அந்த வாலிப வீரன், 'ஜயன் சந்தாவத்தின் வாள் வீச்சைத் தாண்டி அவர் கையைத் தொட்டவன் இதுவரை யாருமில்லை' என்று தீர்மானித்துக் கொண்டான். அவர் மேலங்கி சற்றே திறந்ததால் தெரிந்த மார்பிலும்

கழுத்திலுமிருந்த பயங்கரக் காய வடுக்கள், அவர் கையில் காயமில்லாததைப் பார்த்து அவரை அணுகுவது எத்தனை அபாயமென்பதை அறிவுறுத்தின. அவர் சிரிப்பில் அசாத்திய தைரியத்தின் ஒளி கலந்திருந்தது. சிரிப்பைக் கக்கிய விழிகளில் பயங்கர எச்சரிக்கையொன்றும் பரவிக் கிடந்தது. முகம் பார்வைக்கு சாந்தந்தான். ஆனால் அவசியமேற்படும்போது அது பெரும் எரிமலையாக மாறும் என்பதற்குக் கண்களில் அத்தாட்சியிருந்தது. உதடுகளின் மீது அசைந்த பெரிய மீசை அவர் தைரியத்தைச் சந்தேகித்தவரை மிரட்டும் வகையில் அமர்ந்திருந்தது. அந்த அத்தாட்சிகளால் மட்டுமல்ல, அவரிடம் ஊழியம் புரிந்த நாட்கள் முதலே ஏற்பட்ட மிகுந்த மதிப்பால் தலையை மீண்டும் வணங்கினான் ஹரிதாஸ் ஜாலா. அப்படி வணங்கிய சமயத்தில் ஜயன் சந்தாவத் தனது இரு கைகளையும் ஒன்று சேர்த்துக் கொண்டு அவனை மட்டுமின்றி ராஜபுத்திரியையும் நோக்கினார். அந்த ராஜபுதனப் பிதாமகனை ராஜபுத்திரியும் திரும்பி நோக்கினாள்.

## 7. ஐந்து வயதுக் கதை

**ரா**ணா அமரசிம்மனை அத்தனை படைத்தலைவர்கள் முன்னிலையிலும் கையைப் பிடித்து பலவந்தமாக அரியணையிலிருந்து இறக்கியதால் சரித்திரத்தில் அழியா இடம் பெற்றுவிட்ட ஜயன் சந்தாவத்தின் துணிவுக் கரங்கள் ஒன்றையொன்று பின்னிக்கொண்டதன்றி அவர் உதடுகளும் "நல்லவேளை, காளிதாஸன் காலமாகி விட்டான்" என்று சொல்லிச் சிரித்ததைக் கேட்ட ராஜபுத்திரியும் ஹரிதாஸ் ஜாலாவும் மிகவும் சங்கடமடைந்தாலும், ஹரிதாஸ் ஜாலாவே அந்தச்



சங்கட நிலையை உடைக்க உரையாடலைத் தொடங்கி "எந்தக் காளிதாஸனைக் குறிப்பிடுகிறீர்கள்" என்று கேட்டான்.

"இங்கு எந்தக் காளிதாஸனைக் குறிப்பிட்டால் பொருத்தமாயிருக்கும்?" என்று சர்வசாதாரணமாகக் கேட்டார் ஜயன் சந்தாவத்.

"விடுகதை விடுத்தவர் தாங்கள். தாங்கள்தான் பதிலும் சொல்ல வேண்டும்" என்று பணிவுடன் சொன்னான் ஹரிதாஸ் ஜாலா.

ராஜபுதனத்தின் பிரதான படைத் தலைவரின் கண்கள் மீண்டும் சிரிப்பைக் கக்கின. "இதில் விடுகதை ஏதுமில்லையே. உள்ள நிலையைத் தானே சொன்னேன்" என்றார் அந்தப் பெருங்குடிமகன்.

"உள்ள நிலையும் புரியவில்லை எனக்கு!" என்று மெள்ள வார்த்தைகளை விட்டான் ஹரிதாஸ் ஜாலா

"நீங்கள் இருவருமே உள்ள நிலையை அறியா குழந்தைகளாகத் தானிருக்கிறீர்கள்" என்று மீண்டு சிரித்தார் அவர்.

"சந்தாவதர்களின் தலைவருக்கு முன்னால் எந் ராஜபுத்திரனும் குழந்தைகளுக்கு இணைதான். அவ வாள் வீரம்..." என்று ஏதோ சொல்லத் துவங்கிய அந் வாலிபனைத் தடுத்த ஜயன் சந்தாவத், "அதிருக்கட்டு இங்குள்ள நிலையைப் பாருங்கள்" என்றார்.

"என்ன நிலை?" புரியாமல் கேட்டான் ஹரிதா ஜாலா.

"பெரும் தோப்பு இது" என்றார் ஜயன் சந்தாவ

"ஆம்."

"மலருள்ள மரங்களும் இருக்கின்றன."

"இருக்கின்றன."

"எதிரே ஒரு சிறு பொழில்."

"ஆம்."

"முழுமதியின் நிலவு விழுந்துள்ள ஒரு கூடாரம்."

"உம்."

"அதன் வாயிலில் குறுவாளேந்தி நிற்கிறாள் ஒரு கன்னி. எதிரே மார்பைத் திறந்து, உம் பாய்ச்சி விடு" என்கிறான் ஒரு வாலிபன்.

இதற்கு ஹரிதாஸ் ஜாலா பதில் ஏதும் சொல்லவில்லை. ஜயன் சந்தாவத்தே பேசினார். "முதல் தரமான நாடகக் கட்டம். இங்கு மட்டும் மகாகவி காளிதாஸன் இருந்தால் முதல் தரமான நாடகம் உருவாகியிருக்கும். ரஸமான கவிதைகள் பெருக்கெடுத்துப் பிரவகித்திருக்கும்" என்று சொல்லிப் பெரிதாகச் சிரித்தார்.

அவர் சிரிப்பை மற்ற இருவரும் ரசிக்கவில்லை. வேதனை நிறைந்த தங்கள் உள்ளங்களை அவர் புரிந்து கொள்ளவில்லையென்றே இருவரும் நினைத்தார்கள். ஹரிதாஸ் ஜாலாவின் இதயத்தைவிட ராஜபுத்திரியின் இதயத்தில் கோபம் அபரிமிதமாக எழுந்தது. அவர் அப்படிப் பேசுவதும் சிரிப்பதும் முறையல்ல என்று அவள் கருதினாள். தவிர ஹரிதாஸ் ஜாலா போன்ற மொகலாயர் கையாளையும் தன்னையும் சமப்படுத்திப் பேசுவதும் அவளுக்குச் சீற்றத்தை அளித்தது. ஆகவே கோபத்துடன் கேட்டாள்: "காளிதாஸ் மகாகவி இத்தகைய நாடகக் கட்டத்தை விரும்புவாரா?" என்று.



"ஏன் விரும்பமாட்டார்?" சர்வ சாதாரணமாகக் கேட்டார் ஜயன் சந்தாவத்.

"அவர் சரச கவி. அவர்..." மேலே சொல்ல முடியாமல் தவித்தாள் அவள்.

"இன்பமுட்டும் காதற்சுவைக் கட்டங்களைத்தான் சிருஷ்டிப்பார் என்கிறாய்?" என்றார் ராஜபுதனத்தின் பிதாமகர்.

"நான் அப்படிச் சொல்லவில்லை."

"உன் நா சொல்லவில்லை."

"பின்?"

"இதயம் சொல்கிறது சரி. அப்படியே வைத்துக் கொண்டாலும்..." என்று இழுத்தார் ஜயன் சந்தாவத்.

ராஜபுத்திரியின் கண்களில் சொல்லவொண்ணாக் கோபம் துளிர்த்தது. "ஏன் நிறுத்திவிட்டீர்கள்? சொல்லுங்கள். அப்படியே வைத்துக் கொண்டாலும் என்ன?" என்று பேசிய அவள் உதடுகள் கோபத்தால் துடித்தன.

ஜயன் சந்தாவத் தமது கருத்தைப் பூர்த்தி செய்தார். அந்தப் பூர்த்தி அவளை மட்டுமல்ல, ஹரிதாஸ் ஜாலாவையும் பெரும் சங்கடத்துக்குள் ஆழ்த்தியது. அதைக் கேட்ட இருவருமே திகைத்தனர். ஆனால் ராஜபுத்திரியின் திகைப்பு எல்லையைக் கடந்தது. வயதான பாட்டனார் தனது பேத்தி முன்பாகப் பேசும் பேச்சா அது என்று எண்ணியதால் அவள் வாயடைத்து நின்றாள்.

"அப்படியே வைத்துக் கொண்டாலும் அந்த சரஸத்துக்கும் இங்கு குறைவில்லை" என்றார் ஜயன் சந்தாவத்.

ராஜபுத்திரி அதற்கு ஏதும் பதில் சொல்லவில்லை. ஹரிதாஸ் ஜாலா மட்டும் அங்கிருந்த சங்கட நிலைமையை நிவர்த்திக்கப் பேசினான். "தளபதியவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் நிலைமையை" என்று ஏதோ சொல்ல முயன்றான்.

ஜயன் சந்தாவத் அவனைக் கையமர்த்தி அடக்கி, "இல்லை இல்லை. சரியாகத்தான் புரிந்து கொண்டேன். இங்கு நீங்கள் வனபோஜனத்தைப் பற்றியும், நிலவைப் பற்றியும், அள்ளிப்பருக இருக்கும் அமுத சுனை பற்றியும், மலர்களைப் பற்றியும் பேசியதைக் கேட்டுக் கொண்டுதானிருந்தேன் அவற்றுடன் ஒரு கன்னியுருமிருப்பதாகக் கூற நினைத்து மழுப்பிய தையும் கவனித்தேன். பிறகு கண்களின் சந்திப்பு. உம்..." என்று சிரித்தார் அவர்.

"நிறுத்துங்கள் சிரிப்பை." ராஜபுத்திரியின் குரல் கடுமையாக ஊடுருவியது.

"சிரிப்பில் என்ன தவறு?" என்று விஷமமாகக் கேட்ட அவர், தனது பெருமீசையை வேடிக்கையாக அசைத்தார்.

"பேச்சில் இருக்கும் தவறு சிரிப்பிலும் இருக்கிறது" என்று அவள் எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடிக்க, உதடுகள் துடிக்கச் சொன்னாள்.

"பேச்சில் என்ன குறை இருக்கிறது?"

"வயதினால் ஏற்பட்ட குறை, சித்தத்தின் கலக்கம்."

"இதுவரை அப்படி யாரும் என்னைச் சொன்னதில்லை.

"இப்படி நீங்கள் பேசி இதுவரை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள்."



"தவறாக என்ன சொல்லிவிட்டேன்?"

"வன போஜனம், சந்தித்த கண்கள் - இதெல்லாம் என்ன?"

"நடக்காததைச் சொல்லவில்லை."

"வேடிக்கைக்கு ஏதாவது பேசியிருப்போம்."

"நானும் வேடிக்கைக்குத்தான் பேசினேன்."

"சில வேடிக்கைப் பேச்சுக்களைப் பெரியவர்கள் பேசக் கூடாது."

"சிறியவர்களுக்குத்தான் அந்த உரிமை உண்டு போலிருக்கிறது."

"எதற்கும் வயது உண்டு, காலம் உண்டு, இருக்கும் நிலை உண்டு."

"அந்த மூன்றுக்கும் இப்பொழுது எந்தக் குறைவு ஏற்பட்டு விட்டது?"

"வயதான நீங்கள் உங்கள் பேத்தியைப் பற்றியும் காதலைப் பற்றியும் பிறர் முன்பு பேசுவது தவறு."

"பிறர் என்பது இவரா?" ஹரிதாஸ் ஜாலாவைச் சுட்டிக் காட்டினார்.

"ஆம்" என்று தலையை அசைத்தாள்.

இதைக் கேட்ட ஜயன் சந்தாவத் மீண்டும் நகைத்தார். ராஜபுத்திரியின் கோபம் எல்லை கடக்கவே, அவள் மட்டும் மரியாதைகளைக் கைவிட்டுப் பேசினாள்: "ராஜபுதனத்தின் பிதாமகரே! இவரை உமக்குத் தெரியாது. இவர் உங்களிடம் ஊழியம் புரிந்த பழைய படைத்தலைவர் அல்லர். ஜஹாங்கீரின் தூதர். இப்பொழுதாவது உமது புத்தியில் விஷயம் விளக்கமாக ஏறட்டும்" என்றாள்.

"அதைத்தான் இவரே உன்னிடம் சொன்னாரே!" என்றார் ஜயன் சந்தாவத்.

நீண்டநேரம் தாங்கள் சம்பாஷணையை மறைவிடத்திலிருந்தே ஜயன் சந்தாவத் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட ராஜபுத்திரி "நீங்கள் வந்து வெகுநேரம் ஆகியிருக்க வேண்டும்" என்று கூறினாள்.

"பேசியதை முழுவதும் கேட்டீர்களா?"

"ஆம்; கேட்டேன்."

"அப்படியானால் இவரை இன்னும் ஏன் கொல்லவில்லை?"

"எதற்காகக் கொல்ல வேண்டும்? ஜஹாங்கீரின் தூதர் என்பதற்காகவா?"

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்."

"தூதர்களைக் கொல்லும் வழக்கம் ராஜபுதனத்தில் கிடையாது. அது க்ஷத்திரிய தர்மம் அல்ல."

"அதில்லாவிட்டாலும் வேறு பிழையிருக்கிறது."

"என்ன பிழை?"

"என்னை மனைவியென்று கூறியிருக்கிறார்." இதை மிகுந்த உஷ்ணத்துடன் உச்சரித்தாள் ராஜபுத்திரி. இதைக் கேட்டதும் ஜயன் சந்தாவத் கொதித்தெழுவார் என்று எதிர்பார்த்தாள். நேர் விரோதமாக நடந்தது விஷயம்.

"சொன்னாலென்ன?" என்று கேட்ட ஜயன் சந்தாவத் தான் ஏதோ பெரிய ஹாஸ்யத்தைக் கண்டு பிடித்து விட்டவர்போல் இடிஇடி என்று நகைத்தார். அவருக்கு ஒருவேளை புத்தி பிசகியிருக்கிறதோவென்று



ராஜபுத்திரி அவரைப் பெரும் சந்தேகத்துடனும் பிரமிப்புடனும் நோக்கினாள். ஹரிதாஸின் நிலை விவரிக்க இயலாததாயிருந்தது. "வாருங்கள் மருகரே!" என்று ஜயன் சந்தாவத் அவனை விளித்துத் தோளிலும் தட்டிக் கொடுத்தார்.

அவர் சித்த சுவாதீனத்தைப் பற்றி ஹரிதாஸ் ஜாலாவுக்குப் பெரும் சந்தேகம் உண்டாயிற்று. அதை வலுப்படுத்தவோ என்னவோ, "ஐந்து வயதுக் கதை உங்கள் இரண்டு பேரில் யாருக்குத் தெரியும்?" என்று கேட்டார் ஜயன் சந்தாவத். இருவரும் ஏதும் புரியாமல் திகைப்படைந்து நின்றார்கள். அடுத்தபடி ஜயன் சந்தாவத் ஐந்து வயதுக் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

## 8. வெடி வீச்சு

**மா**ற்றானொருவன் தன்னை மனைவியென்று அழைத்திருக்கிறான் என்பதைத் தான் வாய்விட்டுச் சொல்லிய பின்பும், தனது பாட்டனார் அதைப்பற்றி வெகுண்டெழாதது மட்டுமல்லாமல், அதனாலென்ன வென்று சர்வசகஜமாக அவ்விஷயத்தைத் தீர்த்துக் கட்டியதைக் கேட்டதும், கோபமும் வியப்பும் கொண்ட ராஜபுத்திரி, ஒரு வேளை இவருக்குப் புத்திமாறாட்டம் கண்டுவிட்டதோ என்று சந்தேகமும் கொண்டாளென்றால் 'மருகரே' எனத் தன்னை ஜயன் சந்தாவத் அழைத்ததைக் கேட்ட ஹரிதாஸ் ஜாலா, நிச்சயமாய் அவருக்குப் புத்தி பிசகியிருக்க வேண்டு மென்றே நினைத்தான். அப்படி அவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட அந்தக் கருத்தை ஊர்ஜிதப்படுத்தும் நோக்கத் துடனோ என்னவோ ஹரிதாஸ் ஜாலாவின் முதுகில்

ஆசையுடன் ஒரு தட்டுத் தட்டிக் கொடுத்த ஜயன் சந்தாவத், "ஐந்து வயதுக் கதை உங்கள் இருவரில் யாருக்குத் தெரியும்?" என்று கேட்கவே, அவர்கள் இருவருமே திகைப்படைந்து ஏதும் புரியாமல் விழித்தனர். அவர்கள் விழித்ததைக் கண்ட ஜயன் சந்தாவத் மேலும் நகைத்து, "அந்தக்காலத்திலும் நீங்கள் இப்படித் தான் விழித்துக்கொண்டு நின்றீர்கள்" என்றார்.

எந்தக் காலத்தை அவர் குறிப்பிடுகிறார், எதைச் சொல்ல முயலுகிறார் என்பதை அறிய இருவரில் ஹரிதாஸ் ஜாலா வெகு சீக்கிரம் தனது உணர்ச்சிகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நிதானத்தை அடைந்து கேட்டான், "எந்தக் காலத்தைக் குறிப்பிடு கிறீர்கள்?" என்று.

அந்தக் கேள்வியைக் கேட்டதும் ஜயன் சந்தா வத்தின் முகத்திலிருந்து சிரிப்பு மறைந்தது. துன்பமும் உக்கிரமும் அதில் தாண்டவமாடின. "ராஜபுதனத்தின் இருண்ட காலம் அது. பெருவாரியான ராஜபுத்திரர்கள் மொகலாயருக்குப் பணிந்து கைகட்டி சேவகம் செய்ய, ஒரே ஒரு வீரன் மட்டும் மலையிலும் காடுகளிலும் மறைந்து மறைந்து மொகலாயப் பேரரசுடன் போர் புரிந்தான். அந்தக்காலத்தில் அந்த வீரனுக்கு ஒரே ஒரு நோக்கம். ஒரே ஒரு கவனம். ராஜபுதனத்தின் விடுதலை, ராஜபுதனத்தின் கௌரவத்தையும் மானத்தையும் காப்பது" என்று ஜயன் சந்தாவத்தின் குரலில் உணர்ச்சி மண்டிக் கிடந்தது.

ராஜபுதனத்தின் அந்தப் பிதாமகன் ராணா பிரதாப சிம்மனையும், அவன் வாழ்வுப் போரையும் குறிப்பிடு கிறாரென்பதை ஹரிதாஸ் ஜாலா மட்டுமல்ல, ராஜ புத்திரியும் புரிந்து கொண்டாலும், உலகமறிந்த அந்த விவரத்தை இப்பொழுது எதற்காக அவர் சொல்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியாததால், இருவரும்



சற்றுக் குழம்பவே செய்தனர். அந்தக் குழப்பத்திலிருந்து முதலில் விடுபட்ட ஹரிதாஸ் ஜாலா மட்டும் சொன்னான்: "அந்த மாவீரரை உலகம் அறியும். அவர் செயல்களே ராஜபுதனத்தின் மானத்தை நிலை நாட்டின."

"உண்மை ஹரிதாஸ், ராணா பிரதாபசிம்மன் ஒருவன் மட்டும் மேவார் வம்சத்தில் பிறக்கவில்லை யென்றால், இந்தச் சமயம் நீயும் நானும் கூட மொக லாயரிடம் பணிபுரிந்து கொண்டிருப்போம்" என்று சுட்டிக் காட்டினார் ஜயன் சந்தாவத்.

அவர் பதிலில் உணர்ச்சி ததும்பியதை கவனித்த ஹரிதாஸ் ஜாலா வெறுப்புக் கலந்த இளநகை பூத்தான். 'உங்களையும் என்னையும் நீங்கள் இணைத்துப் பேசு வது முறையல்ல" என்று கூறினான்.

"ஏன்?" என்று வினவினார் ஜயன் சந்தாவத்.

"நான் இப்பொழுது மொகலாயரிடம் பணி புரிப வன். அவர்கள் தூதன். ஆகையால் சுதந்தர ராஜ புத்திரர் பட்டியலில், அதுவும் உங்களைப் போன்ற புனித புருஷர்கள் பட்டியலில் என்னைச் சேர்க்க வேண்டாம். சேர்த்தால் எனக்குப் பழுதில்லைதான்" என்று ஹரிதாஸ் ஜாலா பேச்சை என்ன காரணத் தாலோ முடிக்காமல் விட்டான்.

"என்ன! என்ன சொல்கிறாய் ஹரிதாஸ்?" என்றார் ஜயன் சந்தாவத்.

"அந்தப் பட்டியலில் என்னைப் போன்றவர் பெயரை இணைத்தால், எனக்குப் பழுதில்லை என்றேன்!"

"வேறு யாருக்குப் பழுது?"

"பட்டியலுக்குப் பழுது."

"பாதை மாற்றிக்கொள்ள வழி உண்டு."

"என் விஷயத்தில் கிடையாது. என் பாவம் மகத்தானது."

"எந்த பாவத்துக்கும் பிராயச்சித்தம் இருக்கிறது."

"என் வரையில் பிராயச்சித்தம் பலிக்காது."

"ஏன்?"

"இந்தத் தூதுப் பணியை வெற்றிகரமாக முடித்துக் கொடுப்பதாக நான் வாளின்மேல் ஆணையிட்டிருக்கிறேன், ஜஹாங்கீருக்கு."

இதைச் சொன்ன ஹரிதாஸ் ஜாலாவின் சொற்களில் பெரும் வெறுப்பும் சுய இகழ்ச்சியும் மண்டிக் கிடப்பதை கவனித்தார் ஜயன் சந்தாவத். அவன் மேலே பேசும் பேச்சைவிட உள்ளத்தின் ஆழத்தில் வேறு ஏதோ பெரும் ரகசியம் பெரும் யோசனை புதைந்து கிடப்பதை அவர் வெகு சுலபத்தில் புரிந்து கொண்டார். ஹரிதாஸ் ஜாலாவைப் பல வருஷங்கள் அறிந்திருந்த ஜயன் சந்தாவத் எந்தவித இழி பணிக்கும் உட்பட அவனால் முடியாது என்பதை அவர் நன்றாக உணர்ந்து கொண்டார். ஆகவே அவன் மொகலாயாரிடமிருந்து மீண்டு வந்தமுறை, காரணம், அவன் உட்கருத்து ஆகிய அனைத்தையும் பூரணமாக உணரு முன்பு அவனைப் பற்றித் தாம் எதையும் தீர்மானிப்பது சரியாகாதென முடிவு செய்தார் ஜயன் சந்தாவத். அப்படிச் செய்த முடிவின் விளைவாக அவனை மேலும் அன்புடனேயே நோக்கினார்.

அவ்விருவர் சம்பாஷணையையும் கேட்டுக் கொண்டிருந்த ராஜபுத்திரியின் மனோநிலை மட்டும் அடியோடு பாட்டன் நினைப்பிலிருந்து மாறுபட்டுக் கிடந்தது. ஹரிதாஸ் ஜாலா தன் பணியை எடுத்துச் சொன்னதை முழு உண்மையென்றே அவள் நினைத்தாள். கௌரவமான ராஜபுத்திரர் பட்டியலில் தன்னைச் சேர்ப்பது பட்டியலுக்குத்தான் பழுது என்று அவன் குறிப்பிட்டது மிகவும் பொருந்தும் என்றே அவள் முடிவு செய்தாள். மொகலாயர் பணியாளாய் அவன் இல்லாவிட்டால், மொகலாயர் பழக்க வழக்கங்கள் அவனுக்குப் பிடித்திராவிட்டால், அவன் என்னை மனைவியென்று பகிரங்கமாகக் கூறும் அளவுக்கு மட்டமாகப் போயிருக்க மாட்டான் என்றே அவள் எண்ணினாள். அவள் அதைச் சொல்லியும், ஜயன் சந்தாவத் அதைப் பற்றி வேடிக்கையாகப் பேசியதும் மருகரே என்று அவனை அழைத்ததும் பிறகு ஏதோ ஐந்து வயதுக் கதையைப் பிரஸ்தாபித்ததும் அவளுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தன. ஆனால் ஹரிதாஸ் ஜாலாவே தான் யார் என்பதை விளக்கிச் சொல்லிவிட்டதால், மொகலாயருக்குப் பணிபுரிய வாள் மேல் ஆணை வைத்து ஒப்புக் கொண்டு விட்டதாகக் கூறி விட்டதால், தனது பாட்டனார் அவரது உள்ளத்தை மாற்றிக் கொண்டு விடுவார் என்று அவள் எண்ணினாள். ஆனால் அவள் பாட்டனார் அத்தகைய மனோபாவம் எதையும் காட்டாமல் ஹரிதாஸ் ஜாலாவை நோக்கியதைக் கண்டதும் மேலும் திகைப்பை அடைந்தாள், அந்தத் திகைப்பு கோபத்தையும் கிளறி விடவே, "இன்னும் மருகரிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்?" என்று வினவினாள் கடும் சொற்களால்.

ஜயன் சந்தாவத்தின் அன்பு விழிகள் தனது பேத்தியைப் பார்த்து நகைத்தன.

"எதிர்பார்த்தது கிடைத்து விட்டது குழந்தாய்" என்றார் அவர்.

"கிடைத்து விட்டதல்லவா?" என்றாள் அவள் வெறுப்பு குரலில் ஒலிக்க.

"ஆம்; கிடைத்து விட்டது" என்று ஜயன் சந்தாவத் தின் குரலில் ஏளனம் மண்டிக் கிடந்தது.

பின் அவள் "ஏன் இன்னும் தாமதிக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"என்ன செய்யச் சொல்கிறாய்?"

"மொகலாயரின் கையாட்களை, ராஜபுதனத்தின் எதிரிகளை என்ன செய்கிறோம்?"

"கொல்லுகிறோம், அல்லது சிறை செய்கிறோம்."

"அப்டியானால் இவரை சிறை செய்யுங்கள்."

"ஏன் கொலை செய்யக் கூடாதா?"

"நீங்கள் தானே சொன்னீர்கள். தூதரைக் கொலை செய்யக் கூடாதென்று."

"ஆம்; ஆம்; மறந்து விட்டேன். சரி அப்பபடியானால் சிறை செய்து விடுவோம்."

இதைக் கேட்டதும் ஜயன் சந்தாவத் ஹரிதாஸ் ஜாலாவைச் சற்று அனுதாபத்துடன் பார்த்தார். பிறகு சொன்னார்: "ஹரிதாஸ்! நீ என்னிடம் படைத்தலைவனாகப் பணி புரிந்தவன்; உன்னிடம் எனக்கு அன்பு அபரிமிதம் இருப்பினும் என் கடமையை நான் செய்ய வேண்டியிருக்கிறது" என்று.

ஹரிதாஸ் ஜாலாவின் முகத்தில் மகிழ்ச்சி படர்ந்தது.



"கடமையைச் செய்யுங்கள் பிதாமகரே" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"உன்னைச் சிறை செய்ய வேண்டியிருக்கிறது" என்றார் ஜயன் சந்தாவத்.

"செய்யுங்கள்" என்றான் ஹரிதாஸ் ஜாலா, மிகுந்த குதூகலத்துடன்.

ஜயன் சந்தாவத்தின் இதழ்களில் இளநகை அரும்பியது. "சிறை செய்வதில் சிறிது கஷ்டமிருக்கிறது!" என்றார் அவர்.

"என்ன கஷ்டம்" என்று வினவினான் ஹரிதாஸ் ஜாலா.

"என் வீரர்கள் அருகிலில்லை."

"அதனாலென்ன?"

"சிறை செய்து உன்னை யாரிடம் ஒப்படைப்பது?"

"உங்களிடம் ஒப்படைத்துக் கொள்ளுங்களேன்."

"அது முடியாது."

"ஏன்?"

"நான் இங்கிருந்து ஒண்டாலா கோட்டைக்குப் போகவில்லை."

"வேறு எங்கு போகிறீர்கள்?"

"எதிரியின் தூதனான உன்னிடம் நான் எப்படிச் சொல்ல முடியும்?"

"உண்மை! முடியாது தான்."

"பிறகு இதற்கு வழி?"

"எனக்குப் புரியவில்லை."

இந்தச் சமயத்தில் ராஜபுத்திரியின் குரல் கம்பீரமாக இடையே புகுந்தது: "என்னிடம் ஒப்படையுங்கள் இவரை. என் வீரர்கள் சீக்கிரம் இங்கு வந்து விடுவார் கள். ஒண்டாலா கோட்டைக்கு இவரைக் கொண்டு போய் அங்குள்ள காவலரிடம் ஒப்படைத்து விடு கிறேன்" என்றாள் ராஜபுத்திரி.

ஜயன் சந்தாவத்தின் கண்கள் விஷமத்தைக் கக்கின. "உன்னிடம் ஒப்படைக்க முடியாது இவரை" என்றார் ஜயன் சந்தாவத் குரலில் விஷமம் விளையாட.

"ஏன்?" என்று அவள் கேட்டாள் கோபத்துடன்.

"மனைவியிடம் கணவனை ஒப்படைப்பது அத் தனை விவேகமல்ல" என்று ஜயன் சந்தாவத் பெரிதாக நகைத்தார்.

அவர் சிரிப்பு அவளுக்கு வேப்பங்காயாக இருந்தது. "என்ன உளறுகிறீர்கள்?" என்று ஆத்திரத்துடன் அவள் கூச்சலிட்டாள்.

"உளறுவது நானல்ல" என்றார் அவர் மீண்டும் நகைத்து.

"பின் யார்?"

"நீதான்."

"நானா இவரைக் கணவரென்று சொன்னேன்?"

"சொல்லாதது தான் உளறல்."

ராஜபுத்திரி திடுக்கிட்டாள், "என்ன! என்ன சொல்கிறீர்கள்?" என்று பெரும் பிரமிப்புடன் கேட்டாள்.

ஜயன் சந்தாவத் அவளைப் பரிதாபத்துடன் நோக்கினார். "உன் ஐந்து வயதுக் கதை அது குழந்தாய்! உன் ஐந்தாம் வயதில் இவர் வாளுக்கு நீ மாலையிட்டு விட்டாய். ராஜபுதனத்தின் சம்பிரதாயப்படி நீ இவர் மனைவி" என்று பெரும் வெடியை எடுத்து வீசினார் ஜயன் சந்தாவத்.

ராஜபுத்திரி, ஹரிதாஸ் ஜாலா இருவர் நிலையும் விவரிக்க இயலாததாயிற்று.

## 9. வழியும் வசதியும்

"உனது ஐந்தாம் வயதில் இவர் வாளுக்கு நீ மாலையிட்டு விட்டாய்; ராஜபுதனத்தின் சம்பிரதாயப் படி நீ இவர் மனைவி" என்று ராஜபுத்திரியை நோக்கி ராஜபுதனப் பிதாமகர் எடுத்து வீசிய பெருவெடி ராஜபுத்திரியை மட்டுமின்றி ஹரிதாஸ் ஜாலாவையும் திணற அடித்து அவன் சிந்தையைப் பெரிதும் கலக்கி விடவே, அவன் பெரும் பிரமை பிடித்து நீண்ட நேரம் மௌனமாக நின்றான். எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தி லும் சிறிதும் நிதானத்தை இழக்காத நெஞ்சுரம் பிடித்த மகாவீரனான ஹரிதாஸ் ஜாலா, சென்ற இரண்டு மூன்று தினங்களில் தனக்கு ஏற்படாத பெரும் திகைப்பு அந்தச் சில விநாடிகளில் ஏற்பட்டு விட்டதை நினைத்து 'எந்த வல்லவனையும் வாட்டும் நிலைகள் மனித வாழ்வில் நிச்சயமாக உண்டு' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். ராஜபுதனத்தின் தலைசிறந்த ரத்தினமான நாகதீபத்தைக் கொண்டுவர ஜஹாங்கீர் சொன்னபோது கூட சலிக்காத தன் மனம் ஜயன் சந்தாவத் சோலைவனத்தில் தோன்றிய அந்தச் சில நிமிஷங்களில் பெரிதும் குழம்பிவிட்டதை எண்ணிப் பார்த்தான். அப்படி எண்ணிப் பார்த்ததில் குழம்பாத தன் மனம் குழம்பியிருப்பதற்குக் காரண

மிருந்ததையும் புரிந்துகொண்டான். என்று ஜஹாங்கீரின் தூதனாக புறப்படத் தீர்மானித்தானோ அன்றே வாழ்வின் சுக அம்சங்களுக்கும் தனக்கும் சம்பந்தமில்லையென்பதை ஹரிதாஸ் .தீர்மானித்துக் கொண்டானாகையால் கண்ணைக் கவரும் அந்த ராஜபுத்திரியைச் சந்தித்த பின்பு தன் மனத்தையும் உணர்ச்சிகளையும் பெரிதும் அடக்கிக் கொள்ளவே முயன்றான். அந்த முயற்சி ஜயன் சந்தாவத்தின் சொற்களால் திடீரென உடைந்து விட்டதாலும், அதுவும் பெரும் விபரீதமான வழியில் அது உடைக்கப்பட்டதாலும், பெரும் குழப்பம் தன்னைச் சூழ்ந்து கொண்டது என்ற உண்மையைப் புரிந்துகொண்ட அந்த வாலிபவீரன் ராஜபுத்திரியையோ ஜயன் சந்தாவத்தையோ கண்ணெடுத்தும் பார்க்கக்கூட சக்தியற்றவனாகி நிலத்தில் கண்களைத் தாழ்த்தினான்.

நிலத்தில் கண்களைத் தாழ்த்திப் பழக்கமில்லாதவன் தாழ்த்தினான். சங்கடமான நிலைகளில் நிலத்தில் கண்களைத் தாழ்த்தும் பண்பும் நாணமும் வாய்ந்தவளான ராஜபுத்திரியும் தனது இயற்கைக்கு மாறாகவே அந்தச் சூழ்நிலையில் நடந்து கொண்டாள். எந்த ஹரிதாஸ் ஜாலாவை ஜஹாங்கீரின் தூதன் என்பதற்காக அவள் வெறுத்தாளோ அந்த ஹரிதாஸ் ஜாலா தன் கணவன் என்பதை உணர்ந்ததால் பெரும் அதிர்ச்சிக்கு மட்டுமின்றி சீற்றத்துக்கும் உள்ளான ராஜபுத்திரி, தன் கமல விழிகளால் ஹரிதாஸ் ஜாலாவை மட்டுமின்றி ஜயன் சந்தாவத்தையும் வெறித்து நோக்கினாள். வெறித்த அந்தப் பார்வையில் வெறுப்பு இருந்தது. சீற்றம் இருந்தது. திகைப்பும் இருந்தது. இத்தனையும் தன் பார்வையிலிருந்ததை அவள் உணர்ந்தாள். மற்ற இருவருங்கூட உணர்ந்தார்கள். ஆனால் இத்தனையும் மீறிய ஓர் அடிப்படை உணர்ச்சியும் அவள் இதய



ஆழத்தில் புதைந்து கிடந்ததை மட்டும் அவள் உணரவில்லை. கண்ணை மட்டும் அவள் சற்று உட்புறம் திருப்பியிருந்தால் அத்தனை ஆத்திரத்துக்கும் அடியில் கணவன் என்ற ஒரு புதுப் பாசமும் புதைந்து கிடப்பதை அவள் உணர்ந்திருப்பாள். உணர்ந்திருந்தால் இந்தக் கதையின் போக்கும் வேறாயிருக்கும். ஆனால் சீற்றமாகிய மேகம் அந்த அடிப்படைப் பாசத்துக்குத் திரையிட்டிருந்தது. வெறியெனும் நீறு அந்த நெருப்பின் மீது பாலமாகப் படர்ந்து கிடந்தது. ஆகவே உள்ளத்தின் உண்மையை உணராமலே அவள் இருவரையும் தன் விழிகளால் வெறித்து நோக்கினாள்.

ஹரிதாஸ் ஜாலா தலை குனிந்து நின்றதைக் கண்ட அவள் அப்பொழுதும் அவனைப் பற்றித் தவறாக எடை போட்டாள். அவன் ராஜபுதனத்தின் துரோகியாதலால்தான், மனைவியென்று அறிந்த பின்பும் தன்னை ஏறெடுத்துப் பார்க்கத் துணிவில்லாமல் நிற்கிறான் எனத் தீர்மானித்த ராஜபுத்திரி, ஜயன் சந்தாவத்தின் மீது தன் கண்களைச் சில விநாடிகள் ஓட்டினாள். ராஜபுதனத்தின் எத்தனையோ சிக்கல்களை மிகத் துணிவுடன் அவிழ்த்திருக்கும் ஜயன் சந்தாவத்தின் முகத்தில் அப்பொழுது ஏளனப் புன்முறுவல் படர்ந்து நிற்பதைக் கண்ட ராஜபுத்திரியின் சீற்றம் பன்மடங்காகவே, "உங்கள் இதயத்தில் மகிழ்ச்சி நிரம்பிக் கிடக்கிறது போல் தெரிகிறது" என்று சொற்களைச் சுடச்சுட உதிர்த்தாள்.

"ஆம்" என்றார் ஜயன் சந்தாவத், சர்வசாதாரணமாக.

"எதனால் மகிழ்ச்சி?" என்று அவள் மீண்டும் கேட்டு அவரைச் சுட்டுவிடுவதுபோல் பார்த்தாள்.

"நல்ல காரியங்களைச் செய்வதால் எனக்கு எப்பொழுதும் மகிழ்ச்சி உண்டு. நல்லவர்களின் குணம் அப்படிப்பட்டது" என்று சொல்லி பிதாமகர் நகைத்தார்.

"நீங்கள் நல்லவராக்கும்?" ராஜபுத்திரி இந்தக் கேள்வியில் கோபத்துடன் இகழ்ச்சியையும் கலந்து கொண்டாள்.

"அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் பிதாமகர்.

"சுய ஸ்தோத்திரம் பலமாயிருக்கிறது" என்றாள் ராஜபுத்திரி.

"பிறர் பாராட்டாதபோது சுய பாராட்டு அவசியமாகிறது."

"அப்படிப் பாராட்டிக் கொள்ள வேண்டிய பெரும் காரியத்சைச் சாதித்து விட்டீர்கள்! அப்படித்தானே உங்கள் எண்ணம்?"

"ஆம்; கணவனையும் மனைவியையும் சேர்த்து வைப்பது பெரும் காரியமல்லவா? சாதாரணமாகவே அது சிறப்பான பணி. உங்கள் விஷயத்தில் அந்தக் காரியம் பன்மடங்கு சிறப்படைகிறது" என்று சொல்லி வாய்விட்டு நகைத்த ஜயன் சந்தாவத், "கணவன் மனைவி என்று தெரியாத இருவரை திடீரெனச் சேர்த்து வைப்பது யாருக்கும் கிடைக்காத பெரும் பாக்கியம்" என்றார்.

அவர் சிரிப்பும் பேச்சும் சகிக்க முடியாத அளவுக்கு எரிச்சலைத் தந்தது ராஜபுத்திரிக்கு. "போதும் நிறுத்துங்கள் உங்கள் பேச்சை" என்றாள் ராஜபுத்திரி அந்த எரிச்சல் குரலிலும் அலைபாய.



"ஏன்? உண்மை கசப்பாயிருக்கிறதா?" என்று விஷமத்துடன் வினவினார் ஜயன் சந்தாவத்.

"சில உண்மைகள் விரும்பத் தகாதவை" என்று பதில் சொன்னாள் ராஜபுத்திரி.

"இது அப்படியல்ல. கசப்புமல்ல. விரும்பத்தகாததுமல்ல" என்ற ஜயன் சந்தாவத் குரல் திடீரென மாறுபட்டதைக் கண்ட ராஜபுத்திரியும் ஹரிதாஸ் ஜாலாவும் அவர் மீது கண்களை நாட்டினார்கள்.

ஜயன் சந்தாவத் கடைசியாகச் சொன்ன சொற்களைச் சற்று அழுத்தியும் பெரும் உறுதியுடனும் உச்சரித்தார். அவர் முகத்தில் அதுவரையிலிருந்த விஷமமும் நகைப்பும் மாறி, முதலிலிருந்த உறுதி முகத்திலும் பிரதிபலித்தது. உறுதி மிக்க வார்த்தைகளை அவர் மேற்கொண்டு உதிர்க்கத் தொடங்கி ராஜபுத்திரியை நோக்கி, "பெண்ணே! இவர் ஜஹாங்கீர் தூதர் என்பதால்தான் உன் புத்தி புரண்டுவிட்டது. கணவனுக்கு மனைவி காட்ட வேண்டிய மரியாதையைக் கூடக் காட்ட மறுக்கிறாய், இது சுத்த தவறு. ஹிந்து மதத்தின் பண்பாட்டுக்கும் தர்மத்துக்கும் முற்றும் முரண்பட்டது. கயவரானாலும் கணவன் என்பதை உணர வேண்டும் நீ" என்று சுட்டிக் காட்டினார்.

"கயவர்களை வெறுத்து வாழ்விலிருந்து விரட்டிய ராஜபத்தினிகளின் கதைகளை நான் கேட்டிருக்கிறேன்" என்றாள் ராஜபுத்திரி.

"கேட்டிருக்கலாம். ஆனால் அப்படி விரட்டியதால் ராஜபுதனம் பயனடையவில்லை. விரட்டப்பட்ட வீரர்கள் மொகலாயர் வசம் சென்று விட்டார்கள். ராஜபுதனம் பலவீனப்பட்டு விட்டது. ராஜபுதனத்துக்கு இன்று வீரர்கள் தேவை, இருக்கும் ஓரிருவரும் விரட்டப்பட்டால் ராஜபுதனம் நாளையே மொகலாயர்

வசமாகிவிடும் பெண்ணே! எனக்கு அடுத்தபடி ராஜ புதனப் படைகளை நடத்தவல்ல ஒரே படைத்தலைவர் இந்த ஹரிதாஸ் ஜாலாதான் என்பது தெரியுமா?" என்று வினவினார் ஜயன் சந்தாவத்.

ராஜபுத்திரியின் இதயம் பட்பட்டென்று அடித்துக் கொண்டது. ஹரிதாஸ் ஜாலா பெரும் வீரனென்றும், படைத் தலைவனென்றும் கேள்விப்பட்டிருந்தாள் அவள். ஆனால் யுத்த தந்திரத்தில் ராஜபுதனம் பிதா மகருக்கு அடுத்தபடி திறனுள்ளவன் அந்த வாலிபன் தானென்பதை அறியாததால் அவள் திகைத்தாள். அந்தத் திகைப்புடன் சொன்னாள்: "எனக்குத் தெரியாது..." என்று.

"இப்பொழுதாவது தெரிந்துகொள்" என்றார் ஜயன் சந்தாவத், சற்றுக் கோபத்துடன்.

"தெரிந்து கொண்டேன்." ராஜபுத்திரியின் பதிலில் இகழ்ச்சி தொனித்தது.

"என்ன தெரிந்து கொண்டாய்?"

"உங்களுக்கடுத்த பெரும் படைத்தலைவர் இவர் என்று. அது மட்டுமல்ல..."

"வேறென்ன?"

"அத்தகைய பெரும் படைத்தலைவர்...."

"சொல்."

"எதிரியின் கையாள், இனிமேல் ராஜபுதனத்துக்கு எதிராகப் படைகளை நடத்துவார் என்பதையும் தெரிந்து கொண்டேன்."

இதைக்கேட்ட ஜயன் சந்தாவத் பெரிதும் வெகுண்டார். "எதிரிப் படைகளை நடத்தப் போவதாக இவர் உன்னிடம் சொன்னாரா?" என்று வினவினார் கோபத்துடன்.

'இல்லை; சொல்லவில்லை; சொல்ல வேண்டுமா?" இதைச் சொன்ன ராஜபுத்திரி இகழ்ச்சியுடன் நோக்கினாள், ஹரிதாஸ் ஜாலாவை.

"சொல்லமாலேயே புரிந்து கொண்டாயா?"

"எதிரியின் பக்கத்திலிருப்பவர் எதிரிப் படைகளை நடத்துவாரென்பது சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

"எங்களுக்குச் சொல்லித்தான் தெரிய வேண்டும். உனக்குத் தேவையில்லை."

"ஆம், தேவையில்லை."

"புரிந்து கொண்டேன், புரிந்து கொண்டேன்."

"என்ன புரிந்து கொண்டீர்கள்?"

"கணவன் மனத்தை புரிந்து கொள்ளும் சக்தி மனைவிக்கல்லாமல் வேறு யாருக்கு இருக்கும்? இதைத் தான் புரிந்து கொண்டேன்." இதைச் சொன்ன ஜயன் சந்தாவத் பழைய ஜயன் சந்தாவத்தாகி, விஷமத்துடன் சிரிக்கவும் செய்தார்.

"உங்கள் பேச்சும் சிரிப்பும் எனக்குப் பிடிக்கவில்லை" என்று கூறினாள் ராஜபுத்திரி. அத்துடன் தரையில் காலையும் கோபத்துடன் உதைத்தாள்.

"ஆகா!" என்று சிரித்தார் ஜயன் சந்தாவத்.

"என்ன ஆகா!" என்று அதே கோபத்துடன் கேட்டாள் ராஜபுத்திரி.

"ராணா அமரசிம்மன் செய்யத் துணியாததை நீ செய்கிறாய்" என்றார் அவர்.

"நீ உதைத்ததுபோல் பூமியில் காலை என்னெதிரில் உதைக்கும் துணிவு மேவார் ராணாவுக்குக் கிடையாது" என்று சுட்டிக் காட்டிய ஜயன் சந்தாவத், "பெண்ணே! நீ கோபத்திலிருக்கிறாய். கோபத்திலிருப்பவர்களுக்கு நிதானம் கிடையாது. நிதானமிழந்தவர்கள் நிலையைச் சரியானபடி ஆராய முடியாது. நிலையை ஆராய முடியாதவர்கள் சாதாரண மனிதர்களையே எடை போட முடியாது. ஹரிதாஸ் போன்ற தலைவரையா எடை போட முடியும்? முடியாது. ஹரிதாஸ் ஒருநாளும் மொகலாயர் கையாளாக மாற முடியாது" என்றார் திட்டவட்டமாக.

"உங்களுக்கு எப்படித் தெரியும் அது?" என்று ராஜபுத்திரி கேட்டாள், சற்றுக் கோபம் தணிந்து.

"அவன் உடலில் ஓடும் இரத்தம் அத்தன்மையானது. ஜாலா வம்சத்தை நான் அறிவேன்."

"குலத்தில் தவறிப் பிறப்பவர்கள் இல்லையா?"

"அந்தக் குலத்தில் கிடையாது."

"ஜஹாங்கீர் தூதர் என்று அவரே ஒப்புக் கொள்ளுகிறார்."

"ஆம்."

"அது எதைக் காட்டுகிறது?"

"சத்தியசந்தர், ஜாலா வம்சத்திற்கேற்ற வீரர் என்பதைக் காட்டுகிறது."

"உங்கள் முடிவு அப்படி!"

"புத்திக்கேற்ற முடிவு கிடைக்கிறது. பெண்ணே! எதையும் திடீரென முடிவு செய்யாதே. ஹரிதாஸ் ஜாலா ஜஹாங்கீரின் தூதனாயிருந்தாலும் அதனால்



ராஜபுதனத்தின் கௌரவம் பாதிக்கப்படாது. அந்த வம்சத்தின் போக்கே அப்படி. எத்தனை அழுக்கு நீர் கலந்திருந்தாலும் கடல் எப்படிக் கெடுவதில்லையோ அப்படி இவர் வம்சமும் எந்த இணைப்பினாலும் கெடாது. என்ன எண்ணத்தினால் இவர் ஜஹாங்கீரின் தூதரானார்; என்ன பணியை மேற்கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. அதை எப்படி நிறைவேற்றுவார் என்பதும் எனக்குத் தெரியாது. அதை ஆராய இப்பொழுது சமயமுமில்லை. ஒண்டாலா கோட்டையில் அதை ஆராய்வோம். ஆராய்ந்து குற்றவாளியானால் மன்னர் அவரை தண்டிப்பார். அது வரை நீ இவர் மனைவியென்பதை நினைப்பில் வைத்துக் கொள். ஐந்து வயதில் இட்ட மாலையே உங்களிருவரையும் கணவன் மனைவியாகப் பிணைத்து விட்டது. ஒண்டாலாவில் அந்தப் பிணைப்பை இன்னும் பலப் படுத்துவோம். உங்கள் திருமணத்தை அரசரே முன்னின்று நடத்த ஏற்பாடு செய்கிறேன். நான் அங்கு வர இன்னும் சில நாட்களாகும்" என்று கூறிய ஜயன் சந்தாவத், "ஹரிதாஸ்!" என்று எதிரே மீண்டும் தலையைக் கவிழ்த்துக் கொண்ட அந்த வாலிபனை விளித்தார்.

ஹரிதாஸ் தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்தான். "ஹரிதாஸ்! உன் வாளை இப்படிக் கொடு" என்றார் ஜயன் சந்தாவத். கீழேயிருந்த வாளை எடுத்து அவரிடம் நீட்டினான் ஹரிதாஸ். அதைக் கையில் வாங்கிக் கொண்டு அவனை நோக்கி வாளின் முனையைத் திருப்பிய ஜயன் சந்தாவத், "ஹரிதாஸ்! ஒண்டாலாவுக்கு நான் திரும்பி வரும் வரை ராஜபுதனத்திற்கு எதிரான பணியில் எதிலும் ஈடுபடுவதில்லையென வாளின் மீது ஆணை வை" என்றார்.

அவர் சொன்னபடி ஹரிதாஸ் ஜாலா ஆணை வைத்ததும் ஜயன் சந்தாவத் வாளை அவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு அவனைச் சில விநாடிகள் உற்று நோக்கிவிட்டுப் பிறகு சொன்னார்: "ஹரிதாஸ்! உன் வாளுக்கு இவள் மாலையிட்டது இன்னும் என் கண்முன் நிற்கிறது. ராணா பிரதாபசிம்மன் முன்னிலையிலேயே அந்தப் பெரும் வைபவம் நடந்தது. அன்று வரை அரச மரியாதைகளுக்கும் போர் மரியாதைகளுக்கும் போரிட்டு வந்த சந்தாவதர்களையும் ஜாலா வம்சத்தினரையும் இணைக்க ராஜபுதனத்தின் இணையில்லாத் திலகம் பிரதாபசிம்மன் செய்த ஏற்பாடு அது. அரசரின் வலது கைப் புறத்தில் யார் அமருவது, அவரது படையில் முன்னணியில் சென்று உயிர் துறக்கும் மரியாதை யாருக்கு உரியது என்பதற்காகவே சண்டையிட்டு வந்த அந்த இரண்டு வீரக் கூட்டங்களையும் உங்கள் விவாகத்தால் இணைத்தார் அவர். அப்பொழுது நான் உட்பட ராஜபுதனத்தின் பெரும் வீரரெல்லாம் இருந்தோம். பிரதாபசிம்மனுடன் நாட்டுச் சுதந்திரத்துக்காக, ராஜபுத்திர கௌரவத்துக்காக மலையிலும் காடுகளிலும் வாழ்ந்து மொகலாயரிடம் பெரும் போரிட்டு வந்த பிரபல படைத்தலைவர் அனைவரும் இருந்தார்கள். அன்று முதல் இரண்டு வம்சங்களும் ஒன்றுபட்டன; நீங்கள் மட்டும் ஒன்றுபடவில்லை."

"ஏன்?" என்று வினவினான் ஹரிதாஸ் ஜாலா.

"இவள் சிறு வயது, நீயும் சிறு வயது. இவள் தந்தை வயது வந்ததும் பெண்ணை அனுப்புவதாகக் கூறி, மலைப் பிரதேசத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டார். வயது வந்த பிறகு குடும்பத்தின் தலைவன் என்ற முறையில் என்னிடம் அழைத்து வந்து ஒப்படைத்தார். அப்பொழுது நீ இல்லை. ராஜபுதனப் படைகளின்



முன்னிலையில் போயிருந்தாய். பிறகு மொகலாயரிடம் சிறைப்பட்டாய். ஆகவே நீங்கள் சந்திக்க வசதியில்லை. உன் மனைவியை உன்னிடம் ஒப்படைக்க எனக்கு வழியில்லை. வசதியும் வழியும் இன்றுதான் ஏற்பட்டன. இதோ உன் மனைவியை ஒப்படைக்கிறேன். அவளைக் காத்து ஒண்டாலா அழைத்துச் செல். அங்கு வந்ததும் உங்கள் திருமணம் நடக்கும்" என்று கூறிய ஜயன் சந்தாவத் வீரர்கள் வந்ததும் அவர்களைப் புறப்படச் சொல்லித் தானும் புறப்பட ஆயத்தமானார்.

ஹரிதாஸ் ஜாலாவின் புத்தி பெரிதும் குழம்பியிருந்தது. மனைவியைத் தானடைய வசதியும் வழியும் அந்த இடத்தில் அந்த முறையில் தானிருந்த அந்த கதியிலா ஏற்பட வேண்டும் என்று எண்ணினான். இப்படி எண்ணிக் கூடாரத்தைப் பிரிக்கவும் கட்டளையிட்டான். கூடாரம் பிரிபடுவதற்கும் மற்ற வீரர்கள் பாலைவனத்திலிருந்து வருவதற்கும் சரியாயிருக்கவே, அவர்களையும் புறப்பட அவன் உத்தரவிட்டான். புறப்பட அதிக ஆயத்தம் தேவையில்லாதிருந்தது. மற்ற வீரர்கள் பயண முறையிலேயே வந்திருந்ததால் கூடாரம் பிரித்துச் சுற்றப்பட்டதும் அம்பாரி ஒட்டகத்தைத் தனியாகப் பிடித்து வரச் சொல்லிவிட்டு அரச குமாரியையும் ஒரே புரவியில் அமர்த்தி அழைத்துக்கொண்டு ஒண்டாலாவை நோக்கிப் பயணமானான் ஹரிதாஸ் ஜாலா. அவர்களுடன் அன்றிரவு முழுவதும் பயணம் செய்த ஜயன் சந்தாவத், விடிவதற்கு முன்பே அவர்களிடமிருந்து பிரிந்து வீரர் இருவருடன் வேறு மார்க்கத்தில் சென்றார். ஒண்டாலா கோட்டைக்கு அடுத்து ஒரு நாள் பயணம் இருந்தது. அந்த ஒரு நாளில் ஹரிதாஸ் ஜாலா ஜயன் சந்தாவத் குறிப்பிட்ட வசதியையும் வழியையும் பற்றித் தீர்க்காலோசனையில் இறங்கினான். அந்த வசதியும் வழியும் தன்னை எ தனை இக்கட்டான நிலையில் நிறுத்திவிட்டன எ

பதை நினைத்துப் பெருமூச்செறிந்தான்! சென்றவழியில் வசதி கிடைத்தது; ராஜபுத்திரியுடன் தனித்திருக்க வசதியும் கிடைத்தது. பிறகு ஒண்டாலா கோட்டையிலும் அந்தச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால் அந்த வசதிகளும் வழிகளும் அவனுக்குச் சிறிதும் உதவாமல் மீளமுடியாத பெரும் ஆழத்தில் அந்த வீரனை ஆழ்த்திக் கொண்டே சென்றன.

## 10. புது முறைகள்

ஒண்டாலா சமவெளியின் ஆரம்பத் தோப்பிலிருந்து ராஜபுத்திரியுடனும் ஜயன் சந்தாவத்துடனும் அன்றிரவின் இரண்டாம் ஜாமத்தில் கிளம்பிய ஹரிதாஸ் ஜாலா, தன் புரவியை நடத்திய வண்ணமே மீண்டுமொரு முறை வறண்ட சிரிப்பு ஒன்றை உள்ளுக்குள்ளேயே உதிரவிட்டுக் கொண்டான். இந்தக் கதையின் ஆரம்பத்தில் சூரிய உஷ்ணம் மிஞ்சிக் கிடந்த நேரத்தில் பாலைவனத்து மணல்வெளியில் உதிரவிட்ட பெரும் சிரிப்புப் போன்றதே இச்சிரிப்பும் என்றாலும், இரண்டுக்கும் பல விஷயங்களில் வித்தியாசம் இருக்கிறது. அப்பொழுது அவன் உதிரவிட்டது பொறுப்பற்ற பெரும் சிரிப்பு. தன் வறண்ட வாழ்க்கை அஸ்தமித்து விட்டாலும் பாதகமில்லை என்ற துணிவில் வாழ்வைவிட மானத்தை விரும்பிய வெறுப்புக் கலந்த சிரிப்பு அது. ராஜபுதனத்தின் பெரும்படைத் தலைவன் ஜஹாங்கீரின் தூதனாகிவிட்ட பிறகு, அதுவும் மேவார் குலச் சொத்தான நாகதீபத்தைக் கொண்டுவர வாளின் மேல் ஆணை வைத்த நிலை வரையில் கீழே இறங்கிவிட்ட பிறகு, எது எப்படிப் போனால் என்ற நினைப்பால் ஏற்பட்ட அலட்சியச் சிரிப்பு அது. ஆனால் ஒண்டாலா சமவெளியின் ஆரம்பத்தில் ஏற்பட்ட சம்பவங்



களுக்குப் பிறகு ஏற்பட்ட சிரிப்பு பொறுப்பற்றதல்ல. இகழ்ச்சித் தன்மையும் உடையதல்ல. விதியின் விளையாட்டை எண்ணி ஏற்பட்ட வைராக்கியச் சிரிப்பு; உள்ளத்தை ஊடுருவிச் சென்றது. முந்திய சிரிப்பைப் போல் வாய்விட்டு வெளிவராத சிரிப்புதான். ஆனால் உள்ளுக்குள் உதிர்ந்த அந்தச் சிரிப்பு அவன் இதயத்துக்கருகே பெரும் இரைச்சலைக் கிளப்பியது. வாழ்க்கையை வெறுத்தவனுக்கு எதிர்பாராதபடி வாழ்வும், வாழ்வை வளப்படுத்த ஒரு மனைவியும் கிடைத்ததை எண்ணிச் சிரித்த அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து பற்பல எண்ணங்களும் அவன் மனதிலே எழுந்து உலாவின. வாழ்வும் மனைவியும் கிடைத்த சமயமும் முறையும் அவனுக்குப் பெரும் விசித்திரமாகவும் விபரீதமாகவும் தெரிந்தன. 'இதே வாழ்வும் மனைவியும் ஜஹாங்கீரின் தூதனாவதற்கு முன்பு கிடைத்திருந்தால் வாழ்வுக்கும் அர்த்தமிருக்கும். மனைவிக்காக மானத்தையும் எதிர்நோக்கிப் போரிட்டிருக்கலாம். இப்பொழுது இரண்டும் கிடைத்தும் என்ன பயன்?' என்று தன்னைத் தானே அவன் கேட்டுக் கொண்டான். அனுபவிக்க முடியாதவனுக்கு அஷ்டஐசுவரியம் கிடைத்தால் எப்படிப் பயனில்லையோ அப்படியே வாழ்வும் மனைவியும் தனக்கு அச்சந்தர்ப்பதில் பயனற்றவை என்று நினைத்த ஹரிதாஸ் ஜாலா, அனுபவிக்க முடியாத நிலையையும் ஏற்படுத்தி அனுபவத்துக்கான வசதிகளையும், அளித்த விதியின் விந்தைக் கரங்களை எண்ணி வியந்தான். அந்த வியப்பே அவன் உள்ளத்தில் நகைப்பாக உருவெடுத்தது.

அப்படித் தன் விசித்திர நிலையை எண்ணி நகைத்துக் கொண்டே புரவியை நடத்திக் கொண்டு தன்னை விட்டுச் சற்று விலகியே சென்ற ஹரிதாஸ் ஜாலாவை, மற்றொரு புரவியில் வந்து கொண்டிருந்த ராஜபுத்திரி இரண்டொரு முறைக் கடைக்கண்ணால் நோக்கினாள்

அவளும் தன் நிலையை எண்ணி உள்ளுக்குள் நகைத்துக் கொண்டாள். அந்த நகைப்பில் வறட்சி இல்லை, வெறுப்பு இல்லை; கோபம் மிதமிஞ்சிக் கிடந்தது. கோபத்தின் இடையிடையே வேறோர் இன்ப உணர்ச்சியும் குறுக்கிட்டது. ஆனால் மனம் மீண்டும் மீண்டும் ஒதுக்கித் தள்ள கோப நகையை மட்டும் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டாள். அந்தக் கோபம் தன்னைப் பற்றியதா, தன் பாட்டனாரைப் பற்றியதா, ஹரிதாஸ் ஜாலாவைப் பற்றியதா என்று தீர்மானிக்க மட்டும் அந்த அழகியால் முடியவில்லை. அந்த மூவர் மீதும் அவளுக்குக் கோபம் இருக்கிறது. சற்று தூரத்தே வந்த ஹரிதாஸ் ஜாலா அத்தனை சம்பவங்களுக்குப் பின்பும் திடமாகவும் அலட்சியமாகத் தலையைச் சற்று கர்வத்துடன் தூக்கிக் கொண்டு புரவியில் அமர்ந்து சென்ற விதத்தைக் கடைக்கண்ணால் கண்ட அவள் அவன் மீது சீற்றம் கொண்டாள். 'மொகலாய மன்னன் தூதரான இவர் உண்மையான ராஜபுத்திரனாயிருந்தால் தன் நிலையை எண்ணி வெட்கித் தலை குனிய வேண்டும். அப்படி ஏதுமில்லாமல், போருக்குச் சென்று வெற்றியுடன் தலைநகருக்குத் திரும்பும் அரசனைப் போல் எத்தனை அகங்காரத்துடன் புரவியில் உட்கார்ந்திருக்கிறார்?' என்று எண்ணினாள். 'இத்தகைய ஒரு வெட்கங்கெட்ட ராஜபுத்திரருடன் அடிக்கடி பாட்டனார் எதற்காகச் சகஜமாகச் சம்பாஷித்துக் கொண்டு வருகிறார். இவர், எதிரியின் கையாள் என்பதை அறிந்தும் வாளைப் பிடுங்கிக் கொண்டு எனது வீரர்கள் வசம் இவரை ஒப்படைத்திருக்கலாமே. அப்படியின்றி இவர் வசம் என்னையும் என் வீரர்களையும் ஒப்படைத்து எத்தனை சகஜமாகப் பேசிக் கொண்டு வருகிறார்! ராஜபுதனப் பிதாமகருக்கும் சுரணை கெட்டுவிட்டதா என்ன?' என்று அவர் மீதும் சீற்றத்தைப் பெருக்கவிட்டாள். இத்தனையிலும்



அவள் மனம் அடிக்கடி ஹரிதாஸ் ஜாலாவைச் சுற்றிச் சுற்றி அலைந்தது. கண்கள் மீண்டும் மீண்டும் அவனிருந்த இடத்தை நாடின. 'எதற்காக இவரைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன். என்ன அப்பேர்ப்பட்ட சுதந்தர வீரர் இவர்? எனக்கும் சுரணை கெட்டுவிட்டதா? இல்லை; கண்ணை வேண்டுமென்றே புத்தி அந்த திசைக்குத் திருப்புகிறதா? வெட்கம்! வெட்கம்! என்ன புத்தி இது!' என்று தன் மீதும் தன் புத்திமீதும் சீற்றம் கொண்டு உள்ளூரக் கோப நகை நகைத்தாள்.

அந்தச் சமயத்தில் ஹரிதாஸ் ஜாலாவிடம் ஏதேதோ கேள்விகள் கேட்டுக்கொண்டே புரவியில் சென்று கொண்டிருந்த ஜயன் சந்தாவத்தும் உள்ளுக்குள் நகைத்துக் கொண்டார். அந்த நகைப்பு மற்ற இருவர் நகைப்பைப் போன்றதல்ல. அதில் இரு குழந்தைகளைப் பற்றிய அன்பு இருந்தது, ராஜபுதனத்தின் க்ஷேமத்துக்கு அந்த இரு குழந்தைகளின் சேர்க்கை எத்தனை அத்தியாவசியமானது என்ற நினைப்பு இருந்தது. வழியும் வசதியும் கிடைத்தால் எந்த மனிதனும் மாறி விடுவான் என்ற எண்ணமும் இருந்தது. ஒருவருடன் ஒருவர் உறவு கொள்ளும் உரிமையுள்ள ராஜபுத்திரிக்கும் அந்த ஜாலா வம்ச வாலிபனுக்கும் வழியும் வசதியுமிருந்தால் அவர்கள் உறவுடன் இணைய அதிக நாளாகாது என்று தீர்மானித்தார்; மனித உணர்ச்சிகளை எடை போடுவதில் நிகரற்ற ஜயன் சந்தாவத். அந்த நள்ளிரவிலிருந்து ஒண்டாலாக் கோட்டைக்குப் போக இருந்த ஒன்றரை நாள் அந்தத் தம்பதிகளுக்குப் பல வழிகளையும் வசதிகளையும் காட்டும் என்பதிலோ அவற்றின் விளைவாக அந்த இருவர் மனநிலையும் மாறும் என்பதிலோ அந்த மகாவீரனுக்கு எள்ளளவும் சந்தேகமில்லாதிருந்தது. அப்படி உறுதி கொண்டிருந்தவர் பயணத்தின் இடையிடையே ராஜபுத்திரியையும் ஹரிதாஸ் ஜாலாவையும் ஓரக் கண்ணால் கவனித்தார். ராஜபுத்திரியின் கண்கள்

அடிக்கடி ஹரிதாஸ் ஜாலாவைக் கவனித்ததையும், பிறகு அவள் தலை கோபத்துடன் வேறு திசையில் திரும்பியதையும் கண்ட அவர், அந்தக் கோபத்தின் அடிப்படை காதல் என்று சந்தேகமற உணர்ந்து கொண்டார். ஹரிதாஸ் ஜாலா புரவி மீது திடமாக உட்கார்ந்திருந்தாலும் அவன் உடலில் அநாவசியமாக ஒரு விறைப்பு இருந்ததையும், தலை தூக்கியிருந்த அலட்சியத்திலும் சிறிது சங்கடம் கலந்திருந்ததையும் கவனித்த ராஜபுதன பிதாமகர் உள்ளே எழுந்த அன்பு உணர்ச்சிகளை உடைக்க அந்த வீரன் பெரும்பாடு படுகிறான் என்பதைப் புரிந்து கொண்டார். இப்படி அந்த வாலிபப் பருவத்தினர் இருவரும் படும் அவதியைக் கண்டு உள்ளுக்குள் நகைத்துக் கொண்டார் ஜயன் சந்தாவத். இதன் முடிவு இந்த இருவர் சேர்க்கை தான். அந்தச் சேர்க்கை மீண்டும் ராஜபுதனத்துக்குப் படைத்தலைவனை அளிக்கும்; சந்தேகமே இல்லை என்று எண்ணி, "வாலிபத்தின் வேகத்தில் எத்தனை நன்மைகள் கிடைக்கின்றன" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு சிரித்தார் ராஜபுதனத்தின் பிதாமகர்.

இப்படி அந்த மூவரும் மூவகைச் சிரிப்பு சிரித்துக் கொண்டு பலதரப்பட்ட உணர்ச்சிகளுக்கு இலக்காகி இரவின் நான்காம் ஜாமம் வரை பயணம் செய்த போது, ராஜபுத்திரி மட்டும் ஏதும் பேசாமல் வந்தாலும் ஜயன் சந்தாவத்தும் ஹரிதாஸ் ஜாலாவும் சம்பாஷித்துக் கொண்டு சென்றனர். அந்த சம்பாஷணையிலிருந்து பல விஷயங்கள் புரிந்து கொண்டாலும் அவருக்குப் புரியாத ஒரு மர்மம் ஊடுருவி நின்றது. அவர் எதிர்பாராத பதில்களையெல்லாம் ஹரிதாஸ் ஜாலா தினையளவும் சிந்திக்காமல் பட்பட்டென்று சொன்னான். ஆனால் அத்தனை தெளிவான பதில்களிலும் ஏதோ ஒன்று மறைந்து கிடப்பதை அறிந்த ஜயன் சந்தாவத், அது என்ன என்பதை அறியாமல் திணறினார். அவனை எடை போட மெள்ள மெள்ளக் கேள்விகளை வீச முயன்ற ஜயன் சந்தாவத், அவன் பதில்கள் தயக்கமின்றி வருவதைக் கண்டு பிரமிப்பே ஆரம்பித்தில் அடைந்தார். வாளின் மேல் ஆணையிட்டு வந்திருக்கும் அந்த வாலிப வீரனிடம் ஜஹாங்கீரைப் பற்றி அதிகமாக எதுவும் அறிந்து கொள்ள முடியாதென்ற நினைப்பிலேயே பேச முற்பட்டு, "ஹரிதாஸ்! நீ மொகலாயர் வட்டாரத்தைவிட்டுக் கிளம்பி எத்தனை நாளாகிறது?" என்று வினவினார் முதலில்.



"இரண்டு நாட்கள் ஆகிவிட்டன" என்று பதில் சொன்னான் ஹரிதாஸ்.

"மொகலாயர் இருக்குமிடத்திற்கும் ஒண்டாலா சமவெளியின் ஆரம்பத்திற்கும் ஒரே நாள் பயணம் தானே இருக்கிறது?" என்று மீண்டும் வினவினார் அவர்.

"ஆம்."

"அப்படியானால் இரண்டு நாட்கள் ஆகக் காரணம்?"

"தூது போக ஜஹாங்கீரிடம் ஒப்புக்கொண்டேன்..." என்று ஏதோ பேச்சைத் தொடங்கி முடிக்காமல் விட்டான் ஹரிதாஸ்.

"ஆம்; ஒப்புக் கொண்டாய்."

"ஆனால் அன்று ஜஹாங்கீர் பணியைச் சொன்னாரே தவிர, அதற்கான அடையாளமோ லிகிதமோ எதுவுமே தரவில்லை."

"அதற்காக ஒரு நாள் தங்கினாயா?"

"ஆம். தங்கினேன்."

"பிறகு, கிடைத்ததா உனக்கு வேண்டியது?"

"கிடைத்தது."

"என்ன கிடைத்தது?"

"ஜஹாங்கீரின் முத்திரை மோதிரம்."

"அது எதற்காக?"

"நான் ஜஹாங்கீரின் தூதுவன் என்பது தெரிய வேண்டுமல்லவா?"

"அதற்கு ராஜமுத்திரையுடன் கூடிய லிகிதம் போதுமே."

"போதும்."

"லிகிதம் கிடைத்ததல்லவா?"

"இல்லை."

"ஏன்?"

"இரண்டாம் முறை யோசித்த போது லிகிதம் அவசியமில்லையெனத் தீர்மானித்தேன்."

"லிகிதமின்றி ராணா உன் தூதை ஒப்புக்கொள்வாரா?"

"ஒப்புக்கொள்வார்."

"எப்படி?"

"தூதன் என்பதற்கு அடையாளமாக முத்திரை மோதிரமிருக்கிறது கையில், தூது இருக்கிறது நாவில்."

ஜயன் சந்தாவத் சில விநாடிகள் மௌனமாயிருந்தார். பிறகு அழைத்தார் அந்த வீரனை, "ஹரிதாஸ்!" என்று.



ஹரிதாஸின் கண்கள் அவரைத் திடீரென ஏறெடுத்து நோக்கின. அவர் அழைத்த குரலில் பெரும் அர்த்த புஷ்டியிருந்ததாக அவனுக்குத் தோன்றியது.

"ஏன் பிதாமகரே" என்று கேட்டான் அவன்.

"உன் வம்சத்தார் சத்திய சந்தர்கள்..." என்று இழுத்தார் அவர்.

"ஆம்."

"நீயும் அப்படித்தான் என்று நினைக்கிறேன்."

"இதுவரை நான் பொய் சொன்னதில்லை."

"அப்படியானால் இந்தக் கேள்விக்குப் பதில் சொல். ஜஹாங்கீரின் முத்திரை மோதிரத்தை அடையாளம் தேவை என்பதற்காகத்தான் ஒரு நாள் தங்கிப் பெற்றாயா?"

"ஆம்."

"அந்த அடையாளத்தை இந்தத் தூதுக்கு மட்டும் தான் பயன்படுத்த நினைத்தாயா?" இந்தக் கேள்வியைச் சரேலென அம்புபோல் வீசி, அம்பினும் கூரிய கண்களை ஹரிதாஸ் ஜாலா மீது நாட்டினார் ஜயன் சந்தாவத்.

ஹரிதாஸ் ஜாலாவின் விழிகள் ஈட்டிக் கண்களுடன் தைரியத்துடன் கலந்தன. "இல்லை" என்ற பதில் அந்த வீரனிடமிருந்து மிகத் தெளிவாகவும் பளீரென்றும் வெளிவந்தது.

அதைக் கேட்ட ஜயன் சந்தாவத்தின் முகத்தில் பெருமகிழ்ச்சி படர்ந்தது. இதழ்களில் புன்முறுவல் தோன்றியது. "ஹரிதாஸ்! நீ குலத்துக்கேற்ற பிள்ளை. உண்மையை உரைத்தாய். நீ முத்திரை மோதிரம் பெற்ற

காரணங்களில் ஆஜ்மீரிலுள்ள ஜஹாங்கீர் படை பலத்தை அறிவதும் ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியுமா?" என்று வின்வினார் ஜயன் சந்தாவத்.

ஹரிதாஸ் ஜாலாவின் உள்ளத்தில் வியப்பு பெரிதும் எழுந்தது. சில கேள்விகளுக்குள்ளாகவே தன் அந்தரங் கத்தை அவர் புரிந்து கொண்டுவிட்டதை அறிந்த ஹரிதாஸ் ஜாலா, ஜயன் சந்தாவத்தின் கூரிய அறிவை நினைத்துப் பெருமிதம் கொண்டான். இத்தகைய பிதாமகர் ராஜபுதனத்தில் இருக்கும் வரை ராஜ புதனத்தை ஆயிரம் ஜஹாங்கீர்கள் வந்தாலும் வெற்றி கொள்ள முடியாது என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அந்த எண்ணத்தால் ஏற்பட்ட உவகை குரலில் தாண்டவமாட வெளிவந்தது அவன் பதில். "முத்திரை மோதிரம் பெற்றதற்கு நீங்கள் சொன்னதும் ஒரு காரணம்" என்றான் ஹரிதாஸ்.

"ஜஹாங்கீரின் படைபலம் இப்பொழுது எவ் வளவு?" என்று வினவினார் ஜயன் சந்தாவத்.

"சுமார் இருபதனாயிரம் பேர் காலாட்படை, ஐயாயிரம் குதிரைப்படை, பீரங்கிப் படை ஆயிரம்" என்று பதில் கூறினான் ஹரிதாஸ்.

"பலமான படைதான். ஆனால் ராஜபுதனத்தின் படையைவிடப் பெரிதல்ல."

"பெரிதல்ல, இருந்தாலும் வலுவுடையது."

"எப்படி?"

"ஜஹாங்கீரின் பீரங்கிகளை இயக்குபவர்கள் வெள்ளைக்காரர்கள்."

"இருந்தாலென்ன?"



"ஒவ்வொரு பீரங்கியும் நமது படைப்பிரிவு ஒன்றை அழிக்கும் திறனுள்ளது."

"எதிரி தூதென்பதால் அவர்களைப் புகழ்கிறாயா?"

"இல்லை. எதிரியின் பலத்தைச் சரியாக உணர்ந்து கொள்வது எந்தப் படைத்தலைவனுக்கும் அவசியம் என்பதால் உள்ள நிலையைச் சொல்கிறேன்."

"அப்படியானால் ராஜபுதனம் ஜெயிக்காதா?"

"ஜெயிக்கும். சில வசதிகளைச் செய்து கொண் டால்."

"என்ன வசதி?"

"பீரங்கி வசதி. நாமும் பீரங்கிப் படையை பலப் படுத்த வேண்டும்."

"ராஜபுத்திரர்கள் வாளைத்தான் நம்புகிறார்கள்."

"போதாது."

"ஏன்?"

"காலம் மாறுகிறது. வாளைவிட பலமான ஆயு தங்கள் வந்துவிட்டன."

"அப்படியானால் வாளைத் துறக்க வேண்டுமா?"

"தேவையில்லை. படைகள் நெருங்கிப் போராடும் போது வாள் தேவை. நெருங்குமுன் தொலைவிலிருந்து விளையும் சேதத்தைத் தடுக்கவோ, எதிரிக்கு பதில் சொல்லவோ பீரங்கிகள் தேவை." இதைத் திடமாக அழுத்திச் சொன்னான் ஹரிதாஸ் ஜாலா. அவர் கேட்காமலே தன் கருத்தைச் சொல்லத் தொடங்கிய அந்த வாலிப வீரன், "ராணா பிரதாப் அடைந்த தோல்வி களுக்கும் சித்தூர் சீரழிந்ததற்கும் புது ஆயுதங்களில் நாம் நம்பிக்கை வைக்காததே காரணம். சித்தூரின்

இணையற்ற வீரர்களான ஜெய்மல்லும், பட்டாவும் அழிந்தது எதனால்? சித்தூர் கோட்டை படுதூளானது எதனால்? எல்லாம் பீரங்கிக் குண்டுகளால். காலத்துடன் ராஜபுதனம் மாறவில்லை. போர்களின் படிப்பினையை உணரவில்லை. அதனால் வந்த வினை இது. இல்லையேல் ராஜபுதனம் இந்த நிலையில் இராது. மொகலாயர் ராஜபுதனத்தின் பக்கத்தில் வந்திருக்க முடியாது. ராஜபுத்திரரிடம் ராஜபக்தியிருக்கிறது. தேசபக்தியிருக்கிறது. இணையற்ற வீர உணர்ச்சி இருக்கிறது. இவை இருந்தும் வெற்றியில்லையென்றால், காரணம் புது முறைகள், புது ஆயுதங்கள் இல்லை. புது முறைப் போர்த் தந்திரங்களும் இல்லை. பண்டைய போர் முறை, பண்டைய ஆயுதங்கள் எல்லாம் பழைமை" என்றான் அலுப்புடன்.

"பழைமையில் நம்பிக்கை இல்லையா உனக்கு?" என்று ஜயன் சந்தாவத் கேட்டார்.

"இருக்கிறது. அதைப் புதுமையுடன் பிணைக்க வேண்டும்" என்றான் ஹரிதாஸ்.

"உனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் பிணைப்பாயா?"

"பிணைப்பேன்."

"அதற்குப் பொறுப்பளித்தால் ஏற்கத் தயாராயிருக்கிறாயா?"

"தற்சமயம் தாயாராயில்லை."

ஜயன் சந்தாவத் இதற்குப் பிறகு ஒரே கேள்வி கேட்டார்.

"நீ வந்த காரணம் என்ன?" என்று வினவினார் திடீரென்று திடமான குரலில்.



"சொல்வதற்கில்லை." அதை விடத் திடமாக வந்தது ஹரிதாஸின் பதில்.

இந்த பதில் ராஜபுத்திரியின் காதில் தெளிவாக விழுந்தது. அவன் மீது அவளுக்கிருந்த வெறுப்பு பன் மடங்காயிற்று.

ஜயன் சந்தாவத்தின் இதயத்தில் வெறுப்பு இல்லை. ஆழ்ந்த சிந்தனையுடன் பேசாமல் அவர் பயணம் செய்தார். நான்காம் ஜாமத்தின் ஆரம்பத்தில் சமவெளித் தோப்பின் கடைசிப் பகுதி வந்தது. "இங்கு இரவின் மீதியைக் கழியுங்கள்" என்று உத்தரவிட்ட ஜயன் சந்தாவத், வீரர்களில் இருவரை மட்டும் அழைத்துக் கொண்டு தான் செல்ல வேண்டிய இடத்துக்குப் பயணப்பட்டார். ராஜபுத்திரிக்குக் கூடாரம் அமைக்க வீரர்களுக்கு உத்தரவிட்ட ஹரிதாஸ் ஜாலா புரவியிலிருந்து கீழே இறங்கினான். வீரர்கள் விரைவில் கூடாரத்தை அடித்து முடித்ததும் அதற்குள் சென்று உறங்கும்படி ராஜபுத்திரிக்கு உத்தரவிட்டான், ராஜபுதனத்தின் அந்த மாஜிப் படைத்தலைவன். அவன் உத்தரவிட்டது அவளுக்கு வேப்பங்காயாக இருந்தது. சீற்றம் மிகுந்த விழிகளை ராஜபுத்திரி அவன் மீது திருப்பினாள்.

## 11. பின்னாலும் கண் உண்டு

இரவின் நான்காம் ஜாமத்தின் ஆரம்பத்தில் ஒண்டாலா சமவெளித் தோப்பின் இறுதிப் பகுதியில் வீரர்கள் கூடாரத்தை அமைத்துக் கொடுத்ததும் உள்ளே சென்று படுத்து உறங்கும்படி ஹரிதாஸ் ஜாலா உத்தரவிட்டதைக் கேட்ட ராஜபுத்திரி, சீற்றம் மிகுந்த விழிகளை அவன் மீது திரும்பினாளென்றால், அதற்கு

காரணம் பலமாக இருக்கத்தான் செய்தது. அவன் எதிரியின் கையாள் என்ற காரணம் மட்டுமல்ல அவள் இதயத்தில் கோபக் கனலை மூட்டியது. அவன் எதிரியின் கையாள் என்பதை அறிந்த பின்பும் தனது பாட்டனார் நடந்த கொண்ட முறையையும் அவனிடம் வழி பூராவும் பேசிக் கொண்டு வந்த தோரணையும் கடைசியில் தன் பாதுகாப்பையே அவனிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றுவிட்ட வகையும் எல்லாமே அவளை அளவுக்கதிகமாகக் கொதிக்க வைத்தன. தவிர ராஜபுதனத்தின் பிதாமகர் எதிரியின் படை பலத்தைப் பற்றி விசாரித்த போது அவன் அதைப் பற்றியும் விவரமாக அவரிடம் கூறியதும் அவளுக்குப் பெரும் வெறுப்பை அளித்திருந்தது. 'இவர் ராஜபுதனத்தைக் காட்டிக் கொடுக்க மொகலாயர் பக்கம் சேர்ந்திருக்கிறார். அப்படியிருக்க அவர்கள் படைபலத்தையும் பாட்டனாரிடம் சொல்கிறாரே. எந்தப் பக்கத்துக்கும் உண்மையாயிருக்க இவரால் முடியாது போல் இருக்கிறது! சந்தர்ப்பத்தையொட்டி யாரையும் காட்டிக் கொடுத்துவிடும் இவரை நம்பிப் பாட்டனார் என்னை எப்படி இவர் வசம் ஒப்புவித்துப் போனார்' என்று எண்ணி, வெறுப்பும் கோபமும் கலந்த உணர்ச்சிகளுக்கு உட்பட்டிருந்தாள் ராஜபுத்திரி. கடைசியில் தூது வந்த காரணத்தை மட்டும் அவன் பாட்டனாரிடம் கூறாமல் மறுத்துவிட்டதும் அவளுக்கு அவனிடம் வெறுப்பையும் கோபத்தையும் அளித்திருக்கிறது. இத்தனையையும் மீறி அவளை வாட்டி வதைத்தது இத்தகைய ஒரு மனிதனுக்குத் தான் சம்பிரதாயப்படி மனைவி என்ற எண்ணம். அந்த எண்ணம் ஊள்ளூரப் புகைந்து கொண்டிருந்ததால், கூடாரத்துக்குள்ளே சென்று உறங்கும்படி ஹரிதாஸ் ஜாலா உத்தரவிட்டதும் அவள் கடுங்கோபத்துக்குள்ளாகி, அவனைத் திருப்பிச் சுட்டுவிடுவது போல் நோக்கிக் கூடாரத்துக்



குள் செல்லாமல் நின்ற இடத்திலேயே சில விநாடிகள் நின்றாள்.

அவள் கோபவிழிகளை ஹரிதாஸ் ஜாலா கண்டான். கோபத்துக்குக் காரணமும் அவனுக்குச் சந்தேகமறப் புரிந்திருந்தது. ஆகவே அதைப்பற்றி அவன் அதிகமாக லட்சியம் செய்யாமலே, "இரவின் நான்காம் ஜாமம் தொடங்கி விட்டது ராஜபுத்திரி" என்று சுட்டிக் காட்டினான்.

"அது தெரியும் எனக்கு" என்றாள் ராஜபுத்திரி உள்ளேயிருந்த கோபம் குரலிலும் பரிமளிக்க.

"படுத்து உறங்க ஏழெட்டு நாழிகைகளே உள்ளன" என்றான் மீண்டும் ஹரிதாஸ் ஜாலா.

"அதுவும் எனக்குத் தெரியும்" என்றாள் ராஜ புத்திரி.

"அப்படியானால் கூடாரத்துக்குள் செல்லலாம்." இந்தச் சொற்களைச் சற்று உஷ்ணத்துடனேயே உதிர்த்தான் ஹரிதாஸ் ஜாலா.

கோபத்தால் நிதானத்தை இழந்திருந்த ராஜபுத்திரி எதைப் பேசுகிறோம், யாரிடம் பேசுகிறோம் என்பதை அறியாமலே, "எனக்கு உத்தரவிட நீ யார்?" என்று ஏக வசனத்தில் கேள்வியை வீசினாள்.

கோபத்துடன் இகழ்ச்சியும் கலந்த இளநகையொன்று ஹரிதாஸின் இதழ்களில் தவழ்ந்தது, "தங்கள் பாட்டனாரே அதை விளக்கியிருக்கிறார்" என்றான் அந்த ராஜபுத்திரன்.

'தங்கள்' என்ற மரியாதைச் சொல்லைக் கவனிக்கும் சக்தி ராஜபுத்திரிக்கு இருந்திருந்தால் அவள் பேச்சு சுவடு மாறியிருக்கும். கோபத்தின் விளைவாக அதை

கவனிக்காத ராஜபுத்திரி, "என் பாட்டனார் எதை விளக்கினார்?" என்று கேட்டாள்.

"உங்களுக்கு உத்தரவிடும் உரிமை எனக்கு உண்டு என்பதை" என்ற ஹரிதாஸ் ஜாலாவின் இதழ்களில் விஷமச் சிரிப்பு மேலும் வளர்ந்தது.

"என்ன சொல்கிறாய்?" என்று சீறினாள் ராஜபுத்திரி.

இதுவரை அடக்கத்துடன் பேசிவந்த ஹரிதாஸ் ஜாலா, "ராஜபுத்திரி! முறை தவறிப் பேச வேண்டாம். சொற்களை அளந்து உபயோகிப்பது நல்லது!" என்று சுட்டிக் காட்டினான்.

"என்ன முறை தவறி விட்டேன் நான்?"

"இருவருமே முறை தவறிப் பேசுகிறோம்."

"எனக்கு விளங்கவில்லை."

"நீ என்றும், 'சொல்கிறாய்' என்றும் உங்கள் வாயிலிருந்து சொற்கள் வருகின்றன. நானோ 'தாங்கள்' என்கிறேன். இரண்டும் மாறியிருப்பதுதான் முறை."

ஹரிதாஸ் ஜாலா எதைப் பற்றிக் குறிப்பிடுகிறானென்பதை அப்போதுதான் உணர்ந்து கொண்ட ராஜபுத்திரியின் கோபம் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகவே, அவள் பேசும் சக்தியை அறவே இழந்தாள். தங்களிருவருக்குமுள்ள கணவன் மனைவி முறையையே அவன் குறிப்பிடுவதையும், தான் மரியாதையின்றி அவனை அழைத்ததையே அவன் சுட்டிக் காட்டுவதையும் உணர்ந்த ராஜபுத்திரியின் இதயம் பலமாக அடித்துக் கொண்டது. அவள் உடலும் லேசாக நடுங்கியது. அந்த நடுக்கத்தையும், முகம் சந்தேகமின்றி எடுத்துக் காட்டிய அவள் சஞ்சலத்தையும் விநாடி நேரத்தில் கவனித்த ஹரிதாஸ் ஜாலாவின் இதயத்தில்



அவளைப் பற்றிய அனுதாபம் பலமாக எழுந்தது. அதன் விளைவாக அவன் சொன்னான், "ராஜபுத்திரி! நீங்கள் என் மனைவி. கணவனுக்குச் சொந்தமான உரிமைகளை உங்களிடம் பெற நான் முயன்றால் அது தவறும் ஆகாது. ஆனால் அந்த உறவை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. உங்களுக்கு என் மீது ஏற்பட்டிருக்கும் கசப்பும் அதற்குக் காரணமும் எனக்குத் தெரியும். பெண் குணத்தையும் குரோதத்தையும் காட்டி என்னைத் துன்புறுத்த மட்டும் முயலாதீர்கள். நான் அளிக்கும் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். உள்ளே சென்று உறங்குங்கள்."

அவன் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளில் கண்டிப்பு இருந்தது. குரலில் கடுமை அதிகமாக இருந்தது. அவன் கண்கள் சிறிதும் சலனமின்றி அவளை உறுதியுடன் பார்த்தன. அந்தப் பார்வையைச் சந்திக்க சக்தியில்லாமல் கண்களை நிலத்தில் தாழ்த்தினாள் ராஜபுத்திரி. பிறகு சரேலென்று தலைய ஒரு திருப்பு திருப்பிக் கொண்டு கூடாரத்துக்குள் நுழைந்து திரையை அதிவேகமாக அவிழ்த்துவிட்டு கூடார வாயிலை மறைத்தாள். அந்தத் திரையைச் சில விநாடிகள் நின்றபடியே கவனித்த ஹரிதாஸ் ஜாலா, தனது புரவியை இழுத்துக் கொண்டு மரத்தடிக்குச் சென்று மரத்தில் அதைப் பிணைத்தான். பிறகு வீரர்களை ஜாக்கிரதையாக இருக்கும்படி எச்சரித்துவிட்டுத் தோப்பின் முனைக்குச் சென்று எதிரேயிருந்த மணற்பரப்பை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே நின்றான்.

நான்காம் ஜாமம் மிகவும் மெள்ள மெள்ளவே நகர்ந்து கொண்டிருந்தது. உதயமாக அப்பொழுதும் நாழிகைகள் பல இருந்ததால் சந்திரன் சிறிதும் ஒளி குன்றாமலே அந்தப் பாலைவனத்தை மிக ரம்மியமாக அடித்துக் கொண்டிருந்தான். அந்தப் பாலைவனத்தை

அப்படியே விழுங்கி விடுபவன்போல் பார்த்துக்
கொண்டிருந்த ஹரிதாஸ் ஜாலா, வளமற்ற அந்தப்
பாலைவனத்தைக் காக்க எத்தனை ராஜபுத்திரத்
தலைமுறைகள் அந்த மணலில் தங்கள் இரத்தத்தைப்
பாய்ச்சியிருந்தன என்பதை எண்ணிப் பார்த்து பெரு
மூச்செறிந்தான். அத்தனை இரத்தத்தைக் குடித்ததும்
செந்நிறம் படர்ந்திருந்த அந்தப் பாலைவனத்தின் நன்றி
கெட்ட நிலையையும் எண்ணித் தன்னையும் எண்ணி,
தனக்கும் அதற்கும் அதிக வித்தியாசமில்லையென்றே
தீர்மானித்தான். 'பாலைவனம் ராஜபுதனத்தின்
இரத்தத்தை உறிஞ்சியிருக்கிறது. நானும் ராஜபுதனத்தின்
உணவால் வளர்ந்திருக்கிறேன். அந்த உணவை அருந்
தியும் நான் ஜஹாங்கீரின் தூதுப் பொறுப்பை ஏற்க
வில்லையா? இந்தப் பாலை வனத்துக்கும் எனக்கும்
இரண்டு பேருக்குமே நன்றியில்லை. உணர்ச்சிகள்
வறண்டுவிட்டன' என்று தனக்குள் சொல்லிக் கொண்
டான். இருப்பினும் அந்தப் பாலைவனத்தின் இயற்கை
எழிலைக் கண்டு வியந்தான் ஹரிதாஸ் ஜாலா. "இதன்
கவர்ச்சிக்கும் மதியின் ஒளிதான் காரணம்; என்
சக்திக்கும் பெருமைக்கும் தற்சமயம் நான் ஜஹாங்
கீரின் தூதனாயிருப்பது காரணம். வறண்டு போன
வர்கள் பிறர் சக்தியால் பரிமளிக்கிறார்கள். இது
வரலாறு காட்டும் உண்மை" என்று தன்னையும்
அதையும் சேர்த்துக் கடிந்து கொண்டான் ஹரிதாஸ்
ஜாலா. இருப்பினும் பிறந்த நாட்டின் அந்த மணலை
ஆசையுடனேயே பார்த்தான். குனிந்து ஒரு பிடி
மணலைக் கையில் அள்ளியும் பார்த்தான். அந்த
மணலின் ஸ்பரிசம் அவனுக்குப் பேரானந்தத்தைக்
கொடுத்தது. அந்த ஆனந்தத்துக்குக் காரணம் அவனுக்
குத் தெரிந்தது. "என் மூதாதையர் நடந்த மண் இது.
பெரும் போர்களையும் தீரச் செயல்களையும் இது
கண்டிக்கிறது. வீரர்கள் குருதியும் தியாகத்தின் குருதி



யும் இதன் கர்ப்பத்தில் இருக்கிறது" என்று சொல்லிக்
கொண்டு, அதை ஆனந்தத்துடன் நெருடிக் கீழே உதிர்த்
தான். இந்த மண்ணில்தான் ராஜபுத்திரியும் பிறந்தாள்
என்ற எண்ணமும் அவனை மகிழ்ச்சி வெள்ளத்தில்
ஆழ்த்தியது. அவள் நினைப்பு அவளை மனக்கண்ணில்
எழச் செய்தது. ராஜபுத்திரியின் எழிலை, உடலசைவை,
கண்களின் கோபப் பார்வையை, சரேலென அவள்
கூடாரத்துக்குள் சென்ற வேகத்தை, அனைத்தையும்
மனக்கண்ணில் கண்டான் அவன். அத்தகைய
மனைவியிருந்தும் அவளுடன் கூடாரத்துக்குள் நுழைய
உரிமையிருந்தும், அவள் தனித்திருந்ததால் வசதியிருந்
தும் அவற்றைத் தான் பயன்படுத்த முடியாமலிருப்
பதை எண்ணிய ஹரிதாஸ் ஜாலா பெருமூச்செறிந்
தான்.

இந்தப் பாலைவனத்துக்கு அருகில்தானிருக்கிறது
புஷ்பங்களும் கனிகளும் நிறைந்த இந்தச் சோலையும்.
ஆனால் பாலைவனத்தால் சோலையை அனுபவிக்க
முடிகிறதா என்ன? நான் மாத்திரம் விதிவிலக்கா?
நானும் இந்தப் பாலைவனத்தைப் போலத்தான்
அருகில்தானிருக்கிறாள் அந்த அழகுச் சோலை
அங்கும் கனிகள் இருக்கின்றன. அண்ட யோக்கியதை
இல்லையே எனக்கு. நான் போயும் போயும் மொக
லாயர் தூதன், என தன்னையே வெறுத்துக்கொண்ட
ஹரிதாஸ் ஜாலா, மீண்டும் சோலைக்குள் நுழையாம
அதன் முகப்பில் பாலைவன மணலிலேயே உட
கார்ந்து கொண்டான்.

கூடாரத்துக்குள் சென்ற ராஜபுத்திரியின் நிலையு
கிட்டத்தட்ட ஹரிதாஸ் ஜாலாவின் நிலையை
போலவே இருந்தது. அவன் உத்தரவின் விளைவாலு
பேச்சின் கடுமையாலும் கூடாரத்துக்குள் நுழைந்
ராஜபுத்திரி திரையை விட்டுத் தரையில் விரித்திருந்

பஞ்சணையில் வெகுவேகத்துடன் படுத்தாள். உடனே பலவந்தமாகக் கண்களையும் மூடிக் கொண்டாள். புற உலகத்தினின்று உள்ளத்தை மறைக்கவே கண்ணை மூடிய பின்பு அவள் மனதில் புற உலகம் பெரிதாகவும் வேகமாகவும் விரிந்தது. அதில் ஹரிதாஸ் ஜாலாவின் உருவம் பெரிதாக எழுந்தது. அவன் கோபக் கண்கள் அவளை உற்றுப் பார்த்தன. அவனது உறுதியான உதடுகள் அவளை நோக்கி நகை புரிந்தன. அந்தச் சிரிப்பே அவனுக்குத் தன்னிடமுள்ள உரிமையை வலியுறுத்துவதாகத் தோன்றியது. அவளுக்கு அந்தச் சமயத்தில் அவன் தன் பக்கத்தில் வந்து படுத்தாலும் தடுக்கத் தனக்கு உரிமையில்லை என்பதை உணர்ந்தாள் ராஜபுத்திரி. அந்த உணர்ச்சி அவளுக்குப் பெரும் வேதனையை அளித்தது. அது இன்பமளித்த வேதனையா துன்பமளித்த வேதனையா என்பதை அவளால் உணர முடியவில்லை. அதுவரை தான் வாழ்வில் காணாத பெரும் சங்கடம் தன்னை வளைத்துக் கொண்டதை மட்டும் அவள் உணர்ந்து கொண்டாள். ஹரிதாஸ் ஜாலாவின் நினைப்பு தன் தைரியத்தையெல்லாம் எங்கோ ஓட்டி விட்டதை அவள் உணர்ந்து கொண்டாள். ஆண் மகன் அருகிலில்லாதபோது கூட அவன் எண்ணம் விளைவிக்கும் வேதனையின் சக்தி இத்தன்மையைதா என்று வியக்கவும் செய்தாள் ராஜபுத்திரி. அந்த வியப்புடன் அவன் ஏதோ பக்கத்திலிருப்பது போன்ற பிரமையும் ஏற்படவே அவள் பஞ்சணையிலிருந்து சற்றுத் தள்ளியும் படுத்தாள். ஏதோ விவரிக்க இயலாத பயமும் அவள் உள்ளத்தில் குடி கொண்டிருந்தது. அது ஹரிதாஸ் ஜாலாவைப் பற்றிய பயந்தான் என்பதை ராஜபுத்திரி சந்தேகமற உணர்ந்து கொண்டாள். அது என்ன பயம்? கணவன் என்ற நினைப்பால் ஏற்பட்ட பயமா? ‘கணவனிடம் மனைவி எதற்காக பயப்பட வேண்டும்? உலகத்தில் மனைவிமார்



பயப்படத்தான் செய்கிறார்கள். அதுவும் இயற்கையின் நியதியா .என்ன? இல்லை இல்லை அந்த நியதி இல்லை. இருந்தாலும் நான் அஞ்சப் போவதில்லை’ என்று உறுதியுடன் சொல்லிக் கொண்டாள் அவள். அந்த உறுதி உண்மை உறுதியல்ல, வீண் வம்பு என்பதை அவள் மனம் எடுத்துச் சொல்லியது. மனம் மட்டுமல்ல, உடலும் உணர்ச்சிகளும் அதை எடுத்துக் கூறின. திரும்பத் திரும்ப அவள் மனம் அவனையே நினைத்துக்கொண்டிருந்தது. அந்த நினைப்பை அகற்ற அவள் பஞ்சணையில் புரண்டு புரண்டு படுத்தாள். உடல் புரண்டது. ஆனால் உள்ளம் நிலை கொள்ளவில்லை. சிந்தை சாந்தி குலைந்து கிடந்தது. ஆகவே சாந்தியை நாடி அவள் எழுந்து கூடாரத்தின் வாயிலை நாடி திரையை அகற்றி மெள்ள வெளியே தலையை நீட்டினாள். அங்கு எங்காவது ஹரிதாஸ் ஜாலா இருப்பானோ என்ற பயம் அவளைச் சில விநாடிகள் தாமதிக்கச் செய்தது. பயத்துடன் திரையை அகற்றி வெளியே பார்த்து யாருமில்லாது போகவே தைரியத்துடன் வெளியே வந்தாள் அவள். வெளியே சோலைக்குள் நடந்தாள்.

சோலைச் செடி கொடிகளின் வாசமலர்கள் அவள் தலையையும் கன்னங்களையும் தடவிக் கொடுத்தன. ஓரிரண்டு கொடிகள் மார்பின் குறுக்கேயும் பாய்ந்து நடையைத் தடை செய்தன. அந்தக் கொடிகளை விலக்கிக் கொண்டு அவள் சோலையின் எல்லையை நாடினாள். நாடினவள் பிரமித்து நின்றாள். பாலைவன மணலை வெறித்துப் பார்த்துக் கொண்டு ஹரிதாஸ் ஜாலா உட்கார்ந்திருந்ததைக் கவனித்த ராஜபுத்திரி அந்த இடத்தைவிட்டு நகரப் பின்புறம் மெள்ள ஒரு காலை எடுத்து வைத்தாள்.

"நில் அப்படியே!" என்ற ஹரிதாஸ் ஜாலாவின் குரல் அவள் நடையைச் சரேலெனத் தேக்கியது. அவன் திரும்பிப் பார்க்காமலே இருக்க, தான் வந்தது அவனுக்கு எப்படித் தெரிந்தது என்று வியந்தாள்.

"இப்படி வந்து உட்கார்." ஹரிதாஸ் ஜாலா தலையைத் திருப்பாமல் கூறினான். அவள் உட்கார வேண்டிய இடத்தையும் கையால் சுட்டிக் காட்டினான்.

அவன் குரலிலிருந்த அதிகாரத்தின் காரணத்தாலோ என்னவோ அவள் மெல்ல நடந்து அவன் காட்டிய இடத்தில் உட்கார்ந்தாள். உட்கார்ந்தவள், "நான் வந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றும் கேட்டாள்.

"பார்த்தேன்."

"தலையைத் திருப்பவில்லையே."

"இல்லை."

"பின் எப்படிப் பார்க்க முடிந்தது? பின்னால் கண் உண்டா!"

"என் உடலின் ஒவ்வோரிடத்திலும் கண் உண்டு."

அதற்கு மேல் பேசத் தெரியாமல் விழித்தாள் அவள். அவன் பலமாக நகைத்தான். எதற்கு நகைக்கிறான் என்பது அவளுக்குப் புரியவில்லை. "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"கண்களை நினைத்து நகைத்தேன்."

"நகைப்பதற்கு என்ன இருக்கிறது இதில்?"

"வாழ்வும் இருக்கிறது. நாசமும் இருக்கிறது."

"இரண்டும் கலப்பதுண்டா?"

"சிலர் வாழ்வில் கலப்பதுண்டு."

"உங்கள் வாழ்வு..." அவள் பேச்சை முடிக்கவில்லை.

"அத்தன்மையது" என்று முடித்த அவன், தன் பேச்சின் பொருளை விவரித்தான். அவன் விவரிக்க விவரிக்க அவள் மனம் இளகியது. கண்களில் நீர் சுரந்தது. தூர உட்கார்ந்தவள் அவனை நெருங்கினாள். மலர்க்கை ஒன்றையும் எடுத்து அவன் தோளில் வைத்தாள்.

## 12. கண்களின் கதை

**வா**ழ்வின் இனிப்பான காலங்களில் யாரும் நகைக்கலாம். வாழ்வின் கசப்பான காலங்களில் ஞானியோ அல்லது வீரனோதான் நகைக்க முடியும். இனிப்பான நகைப்பில் உல்லாசமிருக்கும். ஆழமிருக்காது. கசப்பான நகைப்பில் பொருளிருக்கும். ஆழமிருக்கும். அந்தச் சிரிப்பின் தன்மையிலே ஒரு புதுமையிருக்கும். அத்தகைய ஒரு புதுமையைக் கண்டுதான் ராஜபுத்திரி, "ஏன் நகைக்கிறீர்கள்?" என்று ஹரிதாஸ் ஜாலாவை அந்தச் சோலையின் முகப்பில் உட்கார்ந்த வண்ணம் வினவினாள்.

அவன் எதிரேயிருந்த பாலைவன மணலை வெறித்துப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது, திரும்பிப் பாராமலே தான் பின்னால் வந்ததை அறிந்து "நில் அப்படியே" என உத்தரவிட்டது, பிறகு தன்னை அருகில் உட்காரச் சொல்லி இடம் காட்டியது, எல்லாமே அவளுக்கு விசித்திரமாயிருந்தது. அந்த வீரன் அருகில் உட்கார்ந்தபோது எட்டிப் பிடிக்க முடியாத, லேசில் அறிவினால் உணர முடியாத ஒரு பெரும்

சக்தியின் அருகில் தான் உட்கார்ந்திருந்த உணர்வு மட்டும் ஏற்பட்டது ராஜபுத்திரிக்கு. முந்தின மாலையில் அந்த வாலிபனைச் சந்தித்ததிலிருந்து அவன் மீது கோபமும் தாபமும் வெறுப்பும் தனக்கு ஏற்பட்டாலும், அவனைப் பற்றிப் பூரணமாக ஏதும் தன்னால் தெரிந்து கொள்ள முடியவில்லையென்பதை மட்டும் உணர்ந்து கொண்ட ராஜபுத்திரி, வியப்பும் குழப்பமும் கலந்த பார்வையை அவன்மீது வீசினாள். ஆனால் அவனோ பக்கத்தில் உட்கார்ந்த பின்னும் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. பாலைவன மணலையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

அவள்தான் அவனைப் பேசத் தூண்டி "நான் சற்று முன்பே கேட்டேனே-" என்று ஏதோ சொல்ல முற்பட்டாள்.

"என்ன கேட்டீர்கள்?" என்று வினவினான் ஹரிதாஸ், மணல் மீதிருந்த கண்களை எப்புறமும் அகற்றாமலே.

"உங்களுக்குப் பின்னாலும் கண் உண்டா என்று கேட்டேனே" என்றாள் ராஜபுத்திரி.

"ஆம். கேட்டாய்" அவசியத்தை முன்னிட்டு பதில் சொல்வதுபோல் சொன்னான் ஹரிதாஸ்.

"என் உடலின் ஒவ்வோர் இடத்திலும் கண் உண்டு என்று பதில் சொன்னீர்களல்லவா?" என்று மறுபடியும் வினவினாள் ராஜபுத்திரி.

"ஆம் சொன்னேன்." சம்பிரதாயமான பதிலே வெளிவந்தது அந்த வாலிபனிடமிருந்து.

"பிறகு நகைத்தீர்களே?"

"ஆம் நகைத்தேன்."



"ஏன் நகைக்கிறீர்கள் என்று கேட்கவில்லையா?"

"கேட்டீர்கள்."

"கண்களை நினைத்து நகைப்பதாகச் சொன்னீர்கள்! பிறகு அதில் வாழ்வும் இருக்கிறது, நாசமும் இருக்கிறது என்றீர்கள். உங்கள் வாழ்வும் அத்தன்மையது என்று கூறினீர்கள், எல்லாம் ஒரே புதிராக இருக்கிறது எனக்கு. கண்களுக்கும் வாழ்வுக்கும் நாசத்துக்கும் என்ன தொடர்பு? எனக்கு எதுவுமே புரியவில்லையே!" என்றாள் ராஜபுத்திரி. அவள் பெரிதும் குழம்பியிருந்தது அவள் குரலிலிருந்தே தெரிந்தது அந்த வாலிப வீரனுக்கு. தெரிந்தும் அவன் உடனே பதிலேதும் சொல்லவில்லை. நீண்ட நேரம் மௌனமாகவே உட்கார்ந்திருந்தான். பிறகு அவன் பேச முற்பட்ட போதும் எதிரேயிருந்த பால் மணலை வெறித்துப் பார்த்துக்கொண்டே பேசினான். அவன் குரலில் தீவிரமான உறுதியிருந்தது. அந்த உறுதியுடன் துயரமும் கலந்திருந்தது. அத்தனை துயரத்திலும் ஓர் அலட்சியமும் ஊடுருவி நின்றது. "ராஜபுத்திரி, கண்களுக்கும் வாழ்வுக்கும் நாசத்துக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது, என்று கேட்கிறீர்களல்லவா? பெரும் சம்பந்தமிருக்கிறது. இதை சாஸ்திரமும் ஒப்புக்கொள்கிறது. வாழ்வின் அனுபவம் ஒப்புக் கொள்கிறது. போயும் போயும் சாஸ்திரம் என்பது என்ன? அறிவாளிகள் வாழ்க்கை அனுபவங்களின் கோப்புதானே சாஸ்திரம்..." என்று ஏதோ பேசிக்கொண்டே போனான் ஹரிதாஸ் ஜாலா. அவனை ராஜபுத்திரி தடையேதும் செய்யவில்லை. அவன் பேச்சில் ஆழ்ந்த பொருளிருந்ததை கவனித்தாள் அவள். அவன் குரல் அவள் இதயத்தருகே சென்று ஒலித்தது. இதயத்தை மெள்ள மெள்ளத் தொட்டுக் கொண்டும் இருந்தது.

ஹரிதாஸ் ஜாலா மேலும் சொன்னான்: "நான் வேதாந்தமாகவே பேசவில்லை ராஜபுத்திரி! பேச எனக்கு உரிமையும் இல்லை. வாழ்வின் நாசகாலத்தில் வேதாந்தம் உருவாகிறது. உண்மைதான். ஆனால் புறவாழ்வை மட்டுமின்றி அக வாழ்வையும் நாசப் படுத்திக் கொண்டவன் வேதாந்தம் பேசுவதில் பொரு ளில்லை! ஆகையால் உண்மையைச் சொல்கிறேன் கண்கள்தாம் வாழ்வுக்கும் நாசத்துக்கும் காரணம், கண்களின் சந்திப்பில் காதல் பிறக்கிறது. கோபம் பிறக்கிறது. இன்னும் நல்லவை பலவும் கெட்டவையும் பிறக்கின்றன, மனிதர்களின் தராதரத்துக்கும் உள்ளக் கிடக்கைக்கும் தக்கபடி. என் கண்களைப் பற்றி நான் என்ன சொல்லட்டும்? அவற்றைப் பற்றிப் பல கதைகள் உண்டு! என் சிறிய வயதில் என் தாய் அதைப் பற்றி அதிகமாகப் புகழ்ந்தாள். என் கண்களில் அழகு சொட்டுவதாகச் சொன்னாள். 'அந்தக் குழந்தையின் கண்களைப் பார். எத்தனை குறுகுறு வென்று இருக்கின்றன' என்று பக்கத்து மாளிகைப் பெண்கள் சொன்னார்கள். மாலையில் என் தாய் திருஷ்டி கழித்தாள் எனக்கு. தாய்ப்பாசம் அப்படிச் செய்யச் சொல்கிறது என்று நினைத்தேன். ஆனால் வயது வந்த பிறகு என் வாளாசிரியரும் வில்லைப் பயில்வித்தவ ரும் அதையே சொன்னார்கள். இவன் கண்களிலிருந்து எதுவும் தப்பாது! என்ன குறி! என்ன குறி என்று வியந்தார்கள். இப்படி எல்லோரும் சொல்லிச் சொல் லிக் கண்களைப் பற்றிய பெருமையுடன் வளர்ந்தேன். அதனால் அகங்காரம் ஏற்பட்டது எனக்கு. அகங்காரம் என் கண்களுக்கு அலட்சியப் பார்வையை அளித்தது. பிறகு நான் ராணாவின் தளபதிகளிலே ஒருவனான பின்பு, அந்த அலட்சியப் பார்வையையும் எல்லோரும் புகழ்ந்தார்கள். அதை வீரனின் லட்சியம் என்று ராஜபுதனக் கவிகள் கவிதை புனைந்தார்கள். இப்படி



எல்லோரும் சொல்லச் சொல்லக் கண்களைப் பெரி தும் சாணை பிடித்துக் கொண்டேன் நான். உணர்ச் சிகள் கூர்மையுற்றன. என் பின்னால் புல்லசைந்தாலும் உணர்ச்சிகளின் மூலம் அறியும் சக்தியைப் பெற்றேன். அதைப் பல போர்களில் நிரூபிக்கவும் செய்தேன். என்னைப் பின்னால் அணுகும் வீரர்களின் ஆயுத அசைவைக்கூட என்னால் பார்க்க முடிந்தது. அப்படி உடலெங்கும் கண்களை உண்டாக்கிக் கொண்டேன். அந்த உணர்ச்சிக் கண்கள் என் வாழ்வை வளப்படுத் தின. வீரத்தைப் பறை சாற்றின. வாலிபப் பருவத்துக் குள் யாரும் எட்ட முடியாத ராஜபுதனப் படைத் தலைவன் பதவியையும் பெற்றேன். பதவியும் புகழும் என்னை வந்தடைந்தன. எல்லாம் கண்களால்தான். ஆனால் எந்தக் கண்ணுக்கும் ஓர் ஊனமும் துர்ப்பாக் கியமும் உண்டு...?" இந்த இடத்தில் ஹரிதாஸ் ஜாலா பேச்சை நிறுத்திப் பெருமூச்செறிந்தான்.

"எந்த ஊனத்தைச் சொல்கிறீர்கள்?" என்று கேட் டாள் ராஜபுத்திரி.

"என் தாயை என் கண்கள் பார்த்திருக்கின்றன. ஆனால் அவள் என் சிறு வயதில் போய்விட்டாள். அவள் முகம் திட்டமாக என் நினைப்பிலில்லை. தாயைப் படம் பிடித்து மனத்திலிருத்த முடியாத கண்கள் என்ன கண்கள் ராஜபுத்திரி! அவள் எத்தனை ஆசையுடன் என்னை வளர்த்தாள். எத்தனை ஆசை யுடன் இந்தக் கண்களைப் பார்த்திருப்பாள்! அவளை இவை நிறுத்தவில்லையே. நினைப்பில் நன்றிகெட்ட கண்கள். துர்பாக்கிய கண்கள்" என்று வெறுப்புடன் சொன்னான் ஹரிதாஸ் ஜாலா.

அவன் உணர்ச்சி வேகத்தை ராஜபுத்திரி புரிந்து கொண்டாள். அவன் தாய் அவன் கண்களைப் பற்றிப் புகழ்ந்தது, திருஷ்டி கழித்தது முதலியவற்றைக் கூட

பிற்காலத்தில் பிறர் சொல்லித்தான் அவன் தெரிந்து கொண்டிருக்க வேண்டுமென்பதையும் உணர்ந்து கொண்டாள். தாயை அதிகமாக அறியாதவன் தாயைப் பற்றிக் கொண்டுள்ள பாசத்தைப் பற்றியும் நினைத்துப் பார்த்தாள். தாய்ப்பாசம் எப்படித் தள்ள முடியாதது என்பதையும் புரிந்து கொண்ட ராஜபுத்திரி, தனக்கு ஒரு வேளை அப்படி ஒரு மகன் பிறந்தால்- என்பதை எண்ணி, என்ன காரணத்தாலோ சரேலென எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். அந்தச் சமயத்தில் அவள் மனதில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்து ஓடிக் கொண்டிருந்தன. எல்லாவற்றையும் விட தாயை நினைத்து ஏங்கிய அந்த வாலிபனைப் பற்றிய அனுதாபம் அவள் இதயத்தை அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. தாய் உணர்ச்சியால் அவள் துடித்தாள். அந்த வாலிபனைக் குழந்தையைப் பார்ப்பது போல் பார்த்தாள் அவள். புருஷனைப் பராமரிப்பதில் மனைவி தாயின் ஸ்தானத்தை வகிக்க வேண்டுமென்ற பழமொழி அனுபவத்தையொட்டியதுதான் என்பதை அந்தத் தருணத்தில் சந்தேகமற புரிந்து கொண்டாள் அவள். அவள் தேகம் துடித்தது. குனிந்த அந்த வாலிபன் சரீரநிலை அவளை வாட்டி வதைத்தது. தாய் குழந்தையை அணைப்பதுபோல அவனை அணைத்து விட வேண்டும் போலிருந்தது அவளுக்கு. அவன் ஜஹாங்கீரின் தூதன் என்பதை அறவே மறந்தாள். அவன் தாயற்ற குழந்தை என்பது மட்டுமே அவள் இதயத்தைச் சூழ்ந்து கிடந்தது. அதனால் லேசாகப் பெருமூச்சு விட்டாள் அவள்.

அந்தப் பெருமூச்சு சொல்லிய பெரும் கதையை ஹரிதாஸ் புரிந்து கொண்டான், புரிந்து கொண்டதால் சொன்னான்: "அனுதாபப்படாதே ராஜபுத்திரி! எந்த நல்ல பெண்ணின் அனுதாபத்தையும் பெற அருகதையில்லாதவன் நான்" என்று. அத்துடன் மேலும்



தொடர்ந்தான்: "கண்களின் வாழ்வுக் கதையைக் கேட்டாய்; இனி நாசக் கதையைக் கேள், கண்களின் தீட்சண்யத்தால் வீரனானேன், புகழ்பெற்றேன். வாழ்வு இணையற்றதாக விளங்கிய சமயத்தில் மொகலாயர் சிறையில் சிக்கினேன், அங்கும் என் கண்களுக்கு வரவேற்புக் கிடைத்தது. என் அலட்சியப்பார்வை காவலாளிகளுக்குப் பிடிக்கவில்லை. அலட்சியமாகப் பார்ப்பதற்கே இருமுறை கசையடிபட்டிருக்கிறேன். சிறைச்சாலைத் தலைவனொருவன், 'இன்னொரு முறை அப்படிப் பார்த்தால் அந்தக் கண்களைத் தோண்டி விடுவேன்' என்றும் மிரட்டினான். இது என் சிறை வாசத்தின் கடைசிப் பகுதியில் நடந்தது. இன்னும் சில நாட்கள் நான் சிறையிலிருந்திருந்தால் சிறைச்சாலைத் தலைவன் என் கண்களை அழித்திருப்பான். மொகலாயர் சிறைச் சாலையில் கண்களை அழிப்பது சர்வ சகஜமான காரியம். அப்படி நடந்திருந்தாலும் நல்லதாயிருக்கும். கண்கள் நாசமாயிருக்கும், வாழ்வு நாசப்பட்டிருக்காது. ஆனால் என் கண்களைப் பிடித்த நல்ல காலமோ, கெட்ட காலமோ அந்த வேலை நடக்கவில்லை. அதற்குப் பிறகு என் கண்கள் புதுப் பணியைத் தேடிக் கொடுத்தன. சிறைச்சாலையைப் பார்வையிட வந்த ஜஹாங்கீர் என் கண்களைச் சில விநாடிகள்தான் பார்த்தார். பிறகு ஏதோ யோசித்தார். சிறைச்சாலைத் தலைவனிடம் ஏதோ சொல்லிவிட்டுப் போனார். அன்று முதல் சிறை எனக்கு அரண்மனையாக மாறியது. கண்களில் இரும்பைச் சொருக நினைத்த காவலர் பன்னீர் கட்டினார்கள். புது ஆடைகளைக் கொடுத்தார்கள். ஒரே வார காலத்தில் நான் பார்வைக்குப் பழைய படைத்தலைவனானேன். ஜஹாங்கீரிடம் அனுப்பப்பட்டேன். பிறகு தூது கிடைத்தது, பதவி கிடைத்தது எதிரியின் படையாக.

பணி சரியாக நிறைவேறப் பணமும் இருக்கிறது. ஆனால்...”

“சொல்லுங்கள்.” துயரத்துடன் தூண்டியது ராஜ புத்திரியின் குரல்.

“வாழ்வில்லை. வாழ்வு நாசப்பட்டு விட்டது. எதிரி யின் பணியாள் நான்.”

“அந்தப் பணியை உதறி விட்டால்.”

“உதற முடியாது.”

“ஏன்?”

“ஆணை கட்டுப்படுத்துகிறது.”

இதற்கு ராஜபுத்திரி பதில் சொல்லவில்லை. துன்பப் பெருமூச்செறிந்தாள்.

அதைக் கவனித்துவிட்ட அவன் சொன்னான்: “ஆம் ராஜபுத்திரி! வாழ்வு நாசப்பட்டு விட்டது. என் உடலெங்கும் கண்கள், அவை இனி எதிரிக்குப் பயன்படும். அவை ராஜபுதனத்தில் எதையும் பார்க்கச் சக்தியை இழந்து கிடக்கின்றன. கட்டின மனைவியைப் பார்க்கும் உரிமைகூட அவற்றுக்குக் கிடையாது. அவை துரோகியின் கண்கள். அந்தக் கண்களை உடையவன் ராஜபுதனம் சம்பந்தப்பட்டவரை ஓர் அநாதை” என்று.

இதைச் சொன்ன அவன் குரலில் வெறுப்பு மண்டிக் கிடந்தது. ராஜபுத்திரியின் உள்ளமோ வெந்து உருகிக் கொண்டிருந்தது. எத்தனையோ சக்திகளிலிருந்தும் தன்னை அநாதையென நினைத்து மனமுடைந்து உட் கார்ந்திருந்த ஹரிதாஸ் ஜாலாவை மீண்டுமொரு முறை பார்த்தாள் அவள். அவன் தன் இரு முழந்தாள்களை யும் பற்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அநாதை உட்கார்ந்திருப்பது போலவே இருந்தது அந்த நிலை.



அதைக்கண்ட ராஜபுத்திரியின் கண்களில் நீர்த்துளிகள் ததும்பி எழுந்தன. அவள் கரமொன்றும் எழுந்து அவன் தோளைத் தொட்டது.

அவள் தனக்கு அருகில் நகர்ந்து உட்கார்ந்து விட் டதை அறிந்தான் ஹரிதாஸ் ஜாலா. அவள் கரத்தின் ஸ்பரிசத்தை அடுத்து அவள் உடலும் அவன் மீது நெருங்கிப் படவே அவன் சற்றே நிலைகுலைந்து போனான். “இது சரியல்ல ராஜபுத்திரி!” என்று குழைந்த குரலில் மெதுவாகச் சொல்லவும் சொன்னாள்.

பதிலுக்கு அவள் வலது கை தோளில் தவழ்ந்து கழுத்தைச் சுற்றிச் சென்றது. ஏதோ புஷ்பமாலை கழுத்தைச் சுற்றி வளைப்பது போன்ற உணர்ச்சியைப் பெற்ற ஹரிதாஸ், “வேண்டாம் ராஜபுத்திரி, வேண டாம்” என்றான் தழுதழுத்த குரலில். அவன் மட்டும் சிறிது பக்கவாட்டில் திரும்பிப் பார்த்திருந்தால் நிலைமை என்ன ஆயிருக்குமோ தெரியாது, பக்கப் பகுதியில் திரும்பாமலே அவன் அந்த வார்த்தைகளைச் சொன்னாலும், அவள் கன்னம் தன் கன்னத்துக்கரு கில் நெருங்குவதை அவன் உணரவே செய்தான். “எதை வேண்டாமென்றீர்கள்?” என்று அவன் காதுக்கருகில் ஒலித்தன இன்பமான சொற்கள்.

“கை... என் மேல்” என்று குழறினான் ஹரிதாஸ் ஜாலா.

“ஆம்! உங்கள் மேல்தானிருக்கிறது” என்று அவள் மீண்டும் ரகசியமாகச் சொன்னாள்.

அந்த ரகசியம் அவன் சங்கடத்தை அதிகப்படுத்தி யது. உட்கார்ந்திருந்தபடியே தத்தளித்தான் அவன். பிறகு சங்கடத்துடனேயே சொன்னான், “இருக்கக் கூடாது” என்று.

"எது இருக்கக் கூடாது?"

"உங்கள் கை... என் மேல்"

"ஏன்?"

"முறை... முறையல்ல."

அவள் அவன் காதுக்கருகில் நகைத்தாள். அந்த மகா வீரன் பேசமுடியாமல் திகைத்தது, உளறியது எல்லாமே அவளுக்கு இன்பமாயிருந்தது. பெண்ணுக்கருகில் வரும்போது எப்பேர்ப்பட்ட வீரனும் உளறுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட அவள், இரண்டாம் முறை நகைத்தாள்.

"ஏன் நகைக்கிறாய்" என்று கேட்டான் அவன், உணர்ச்சிகள் பெரும் குழப்பத்தை விளைவிக்க.

"அப்படி வாருங்கள் வழிக்கு" என்றாள் அவள்.

"என்ன வழிக்கு வந்துவிட்டேன்?" என்று வினவினான் அவன் ஏதும் புரியாமல்.

"ஏன் சிரிக்கிறாய் என்று கேட்டீர்களே?"

"கேட்டாலென்ன?"

"முறைப்படி அழைத்தீர்கள். என்னை நீங்கள் தாங்கள் என்ற பன்மையெல்லாம் இல்லை, அந்த அழைப்பில் மரியாதை இல்லை."

"தவறு தவறு! மன்னிக்க வேண்டும்."

"தவறு ஏதுமில்லை, மன்னிக்க அவசியமில்லை அதில்."

"ஏன்?"

"முறைப்படி அழைத்தீர்கள்? கணவன் மனைவியை அழைக்கும் முறை அது."



"நான்..."

"என் கணவரல்லவா?"

"ஆம்; ஆம்."

"ஏன் அதிலும் சந்தேகமா!"

"இல்லை. பிதாமகரே சொல்லிவிட்டாரே."

"அப்படியானால் இன்னும் என்ன தயக்கம்?"

"எதற்கு?"

"மனைவியை முறைப்படி அழைக்க... முறைப் படி..."

"சொல் ராஜபுத்திரி!"

"உரிமை கொண்டாட."

"அதைத்தான் சொல்ல வந்தாயா?"

"இல்லை."

"வேறு என்ன சொல்ல வந்தாய்?"

அவன் காதுக்கருகே சொன்னாள் சொல்ல வந்ததை. அதுவரை மணலைப் பார்த்த கண்கள் சரேலென அந்தப் பெண்ணை நோக்கித் திரும்பின. அடுத்த விநாடி அவள் செய்கையில் எத்தனை விபரீதம்! அதற்கும் அவன் கண்கள்தான் காரணமா! அப்படித்தானிருக்கும், இல்லாவிட்டால் எத்தனை மாற்றம் அவளிடம்! அவன் கண்களின் சாதனையா! அல்லது வாழ்வின் சோதனையா! இரண்டுமிருக்கலாம். ஆனால் அவள் செய்கையால் அவன் இரண்டையும் யோசிக்கவில்லை. சிந்திக்கும் சக்தியை அறவே இழந்துவிட்டான். சிந்திக்கும்- ஏன் உடலெங்குமிகுந்த கண்களின் பார்வையையே- அழித்து விட்டாள் ராஜபுத்திரி.

# 13. உண்மையின் கொடுமை

ராஜபுத்திரியின் எதிர்பாராத செய்கையால் உணர்ச்சிவசப்பட்டுத் தன் கண்களின் சக்தியை அறவே இழந்துவிட்ட ஹரிதாஸ் பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தான். தன் தோளைத் தொட்டுக் கழுத்துப் புறமாகத் தவழ்ந்து சுற்றி வளைத்த கரத்தினாலேயே கருத்தை ஓரளவு இழந்திருந்த ஹரிதாஸ் ஜாலா, அவள் திடீரென தனது இன்னொரு மலர்க்கரத்தையும் வீசித் தன் முகத்தை திடீரெனத் திருப்பித் தன்னை உற்றுப் பார்த்ததும் அவன் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தான். அவள் தன் கன்னத்துக்கருகில் தன் கன்னத்தைக் கொண்டு வந்து காதுக்கருகில் சொன்ன அரைகுறை மொழிகள் அவனை ஏதேதோ செய்தன. அவன் முகத்தைத் திருப்பி ஒரு விநாடியே அவனை உற்றுப் பார்த்த ராஜபுத்திரி திடீரெனத் தனது முதுகுப் புறத்தை அவனை நோக்கித் திருப்பித் தலையையும் குனிந்து கொண்டு உட்கார்ந்தாள். அப்படி அவள் உட்கார்ந்து தலையைக் குனிந்ததால் அவள் தலையில் குடியிருந்த வாசமலர்க் கொத்து அவன் நாசிக்கருகில் இருந்தது. வாசமலரின் நறுமணம் போதையை அளித்தது அந்த வாலிபனுக்கு. அந்த வாசமலர்க் கொத்தைத் தாங்கி நின்ற கார்மேகக் கூந்தலின் வாசனைத் தைல மணமும் அவன் சிந்தையை மயக்கியது. அந்தக் கார்மேகக் கூந்தலின் கொண்டைக்குக் கீழே தெரிந்த வெளேரென்ற கழுத்துப் புறத்திலிருந்து உடலின் பரிமளம் எழுந்தது. ஆனால், இந்த மூன்றில் எது அதிக போதையை அளித்ததென்பதை அறிய முடியவில்லை ஹரிதாஸ் ஜாலாவினால். வாசமலர் நறுமணம், வாசனைத் தைலத்தின் நறுமணம், அவள் கழுத்தின் சுகந்தம் இந்த மூன்றில் எது சிறந்தது என்பதை ஊகிக்க முடியாமல் திணறினான் அந்த வாலிபன். அந்த



மூன்று இடங்களையும் திரும்பத் திரும்ப அவன் கண்கள் வெறித்துப் பார்த்தன. பாலைவனப் பால் மணலைச் சற்றுமுன் பார்த்த வெறிப் பார்வையல்ல அது. வேறு ஒருவித வெறி அந்தப் பார்வையில் தெரிந்தது. அந்த வெறிக்கு அவன் இடம் கொடுத்திருந்தால் நடந்திருக்கக் கூடிய கதையே வேறு.

அவள் மலரும், கூந்தலும், கழுத்தும் அடுத்தடுத்து அளித்த விருந்தை அவன் பெரிதும் தடுத்து தேக்க முயன்றான். ஆனால் அவள் நன்றாகக் குனிந்ததால் வளைந்து உயர்ந்த அவள் முதுகு அவன் மார்பின் மீது உராய்ந்து கொண்டிருக்கவே, அவன் தனது முயற்சியில் பெரும் தோல்வியுற்றான். சற்று முன்பு அவள் தன் உரிமைகளைப் பற்றிச் சுட்டிக்காட்டி, 'முறைப்படி அழைக்க' என்று கூறிப் பிறகு 'முறைப்படி...' என்று முதலில் தடுமாறியதும், கடைசியாகத் தனது காதுக்கருகில் வந்து 'அணைக்க' என்ற சொல்லை உதிர்த்து விட்டதையும் நினைத்துப் பெரிதும் அடைந்த தத்தளிப்பை மேலே தவழ்ந்த அவள் மலர்க்கரமும் முகத்தைத் திருப்பிய பூங்கையும், திடீரெனத் திரும்பி உட்கார்ந்ததால் மார்பில் உராய்ந்த முதுகுப் பகுதியும் இன்னும் அதிகப்படுத்தின. அந்தச் சமயத்திலும் அவன் பேசாமலே உட்கார்ந்து அவளை கவனித்தான். தன் கைப் பெட்டியில் பெரும் தனமிருந்தும் அதை அனுபவிக்கக் கொடுத்து வைக்காத லோபிக்கும் தனக்கும் அந்தச் சமயத்தில் அதிக வித்தியாசமில்லை என்பதை ஹரிதாஸ் ஜாலா உணர்ந்து கொண்டான், ஆனால் சூழ்நிலை உணர்ச்சிகளின் வேகம் அவனை முழு லோபியாக அடிக்க மறுத்ததால் அவன் கைகளிரண்டும் அவள் தோள்களைக் கெட்டியாகப் பிடித்தன.

அந்தப் பிடிப்பில் அவள் அசைந்தாள், ஏதோ புதுவித உணர்ச்சி, மின்சாரம் போல் அவள் உடலில்

பாய்ந்து சென்றது. மாலை முதல் சற்று முன்புவரை அந்த வாலிபனைக் கசப்புடன் பார்த்த அவள் இதயம் அந்தத் தருணத்தில் எத்தனையோ இன்ப எண்ணங் களை எண்ணத் தூண்டியது. 'கை எதற்காக அந்த இடத்திலேயே இருக்க வேண்டும்' என்று தன்னையே கேட்டுக் கொண்டாள் ராஜபுத்திரி. காதல் சூழ்நிலை யில் மனம் சிக்கும்போது புத்திக்கு மறதி பெரிதும் ஏற்படுகிறது. ராஜபுத்திரி அவனைப் பற்றிய சலனத்தை மறந்தாள். அவன் நாட்டின் துரோகியென்பதை மறந்தாள். சற்று முன்புதான் அவனை ஏகவசனத்தில் பேசியதை மறந்தாள். அவன் துடுக்குத் தனத்தையும் தன்னை அதட்டியதையும் மறந்தாள். மறக்காததும் ஒன்றிருந்தது. அந்தச் சமயத்தில் அவன் தன் மணா ளன் என்பதுதான் அது.

அவனுடன் தனித்திருப்பது சரிதானா என்று ஒரு கணம் அவள் தனக்குள் சந்தேகத்தை எழுப்பிக் கொண்டாள். அடுத்த கணம், 'ஏன் இதிலென்ன தவறு, என் கணவனுடன்தானே உட்கார்ந்திருக்கிறேன்?' என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண் டாள். அந்தச் சமாதானத்தில் ஒரு பெருமையும் இன்பமும் இருந்தது அவள் இதயத்துக்கு. அத்துடன் ஓர் ஏமாற்றமும் கலந்து கொள்ளவே அவள் சோகப் பெருமூச்சு விட்டாள். பின்னால் உட்கார்ந்திருந்த ஹரி தாஸ் ஜாலா தோளில் வைத்த கைகளை மேற்கொண்டு அசைய விடவில்லை. ஏதோ மரக்கட்டை போல் உட் கார்ந்திருந்தான். தன் மனத்தைத் தானே வேண்டு மென்று இரும்பாக்கிக் கொண்டு சில விநாடிகளுக்குப் பிறகு தோள்களிலிருந்து கைகளையும் எடுத்து விட்டான்.

அந்நிலை அவளுக்குக் கோபத்தை ஊட்டியதால் அவள் ஏதோ முணுமுணுத்தாள். அந்த முணுமுணுப்



பைக் கேட்ட அவன், "ராஜபுத்திரி! என்ன முணு முணுக்கிறீர்கள்?" என்று வினவினான்.

ராஜபுத்திரி அந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தாள். ஹரிதாஸ் ஜாலா அவள் மனோ நிலையை, ஓரளவு உணர்ந்து கொண்டாலும் மேலுக் குக் கேட்டான், "ஏன் பதிலில்லை ராஜபுத்திரி!" என்று.

"கேள்வி சரியில்லை." கடுமையா எழுந்தது அவள் சொற்கள்.

"என்ன சரியில்லை?"

"மரியாதை அதிகமிருந்தது!"

"என்ன மரியாதை!"

"முணுமுணுக்கிறீர்கள் என்கிறீர்கள்?"

"முணுமுணுக்கிறாய் என்று கேட்க வேண்டுமா?"

"வேறெப்படிக் கேட்பதாம்."

"நீங்கள் ராஜபுத்திரி. பிதாமகரின் பேரப் பெண்..."

"ஆம், பிறருக்கு."

"எனக்கு?"

"அதைத்தான் பிதாமகரே சொன்னாரே."

ஹரிதாஸ் சில விநாடிகள் மௌனம் சாதித்தான். அவள் தன் மனைவியென்பதை வற்புறுத்தப் பார்க்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா பிரமித்தான். மாலை முதல் தன்னிடம் எந்த உறவும் கொண்டாட இஷ்டப்படாத ராஜபுத்திரி, இப்பொழுது மனைவியாக முழு உரிமை கொண்டாட ஏன் முயலுகிறாள் என்பதை அறியாமல் திணறினான். 'அப்பப்பா பெண் என்பது பெரும் புதிர்' என்று

தனக்குள் சொல்லிக் கொண்டான். ஆகவே மெள்ளக் கேட்டான்: "பிதாமகர் சொன்னது சரிதான். இருப்பி னும் என்னிடம் அந்த உறவு முறை கொண்டாட உனக்கு விருப்பமா?" என்று வினவினான் அந்த வாலிபன்.

"எப்படித் தோன்றுகிறது உங்களுக்கு? மற்றவர்களுக் குத்தான் எப்படித் தோன்றும் நாமிருக்கிற நிலையைக் கண்டால்?" என்று கேட்டுச் சிரித்தாள் ராஜபுத்திரி.

மயக்கம் தரும் சிரிப்பு அது! ஆனால் அதற்கு மசிய வில்லை ஹரிதாஸ் ஜாலா. அடுத்து அவன் சொற்கள் துயரத்துடன் உதிர்ந்தன. "பெண்ணே! பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது உன்னிடத்தில், ஆனால் அது விரும்பத்தக்கதல்ல" என்றான் அந்த வாலிப வீரன்.

"என்ன மாற்றத்தைக் குறிப்பிடுகிறீர்கள்?" அவள் மென்மையான குரலில் கேட்டாள்.

"முன்பு உன்னிடம் வெறுப்பு இருந்தது."

"ஆம்."

"இப்பொழுது விருப்பு இருக்கிறது."

"ஆம்."

"முன்பு உன் விழிகள் என்னைக் கண்டு சீறின."

"ஆம்..."

"இப்பொழுதோ..."

"சொல்லுங்கள்."

"காதலை உதிர்க்கின்றன."

"தவறென்ன அதில்?"



அவள் கேள்வி திட்டமாக வந்தது, அவன் பதிலை யும் திட்டமாக சொன்னான்: "பெண்ணே! ராஜ புதனம் நாளை உன்னைத் தூற்றும். நாட்டின் துரோகி யின் பத்தினியென்று மக்கள் பழிப்பார்கள். பார்க்குமி டங்களிலெல்லாம் ராஜபுதனத்தின் வீரப் பெண்கள் உன்னைக் கண்டு நகைப்பார்கள். இத்தகைய நிலையை நான் விரும்பவில்லை. பிதாமகரின் பேரப் பெண். சந்தாவதர்களின் தலைமகளொருத்தி அத்தகைய இழிந்த வாழ்க்கையை மேற்கொள்வதை நான் விரும்ப வில்லை. என் உயிர் போனாலும் உன்னை நான் கைப் பிடிக்கமாட்டேன்" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

ராஜபுத்திரி மீண்டும் சோகப் பெருமூச்சு விட்டாள். "என்ன அத்தனை அக்கறை உங்களுக்கு என் மீது? நீங்கள் என்னைச் சந்தித்து மூன்று ஜாமங்கள் தானே ஆகின்றன" என்று கேட்டாள் அவள்.

"ஆம்; மூன்று ஜாமங்கள், இல்லை இல்லை; மாலை யையும் சேர்த்துக் கொண்டால் மூன்றரை ஜாமங்கள்" என்றான் ஹரிதாஸ் ஜாலாவும்.

"அதற்குள்ளாக என்மீது ஏன் இத்தனை பரிவு?" என்று வினவினாள் அவள்.

இதற்கு பதில் சொல்லத் தயங்கினான் அவன். சத்திய சந்தனான ஹரிதாஸ் ஜாலாவின் நாக்கில் பொய் எழ மறுத்தது. ஆகவே வழக்கப்படி சத்தியத் தையே பேசினான். அந்தச் சத்தியம் அவனுக்குப் பெரும் சிக்கலைக் கொண்டு வந்து விட்டது. அவன் காலுக்கும் கைக்கும் இன்னோர் அடிமைத்தளையும் பூண்டது. உண்மை எத்தனை கொடுமையை விளை விக்கவல்லது என்பதை நினைத்து அவன் சொன்ன உண்மை அவனுக்கு மட்டுமல்ல, ராஜபுத்திரியின் வாழ்க்கையிலும் பெரும் சிக்கலையும் சங்கடங்களை

யும் விளைவித்தன. அடுத்த சில நாட்களில் அந்தச் சிக்கலின் வலையில் இருவரும் சிக்கித் தவிக்கவே செய்தார்கள்.

## 14. தெய்வ மங்கை

**சோ**லைவனப் பகுதியின் இறுதி விளிம்பில், அதை யடுத்து விரிந்து பறந்து ஓடத் துவங்கிய பாலைவன மணலின் முகப்பில் தனது பக்கத்தில் உட்கார்ந்திருந்த வண்ணம் ஹரிதாஸ் ஜாலா உரைத்த உண்மையைக் கேட்ட ராஜபுத்திரி, விவரிக்க இயலாத பலவித உணர்ச்சிகளுக்கு இலக்கானாள். தனக்கு ஏற்பட்டது மகிழ்ச்சியா, துயரமா, வெறுப்பா, விருப்பா, அதிர்ச்சியா, கொந்தளிப்பா என்று எதுவுமே புரியாத நிலையை அடைந்தாள் ராஜபுத்திரி. அந்த வாலிப வீரன் சொன்ன பதிலால் வெட்கத்தை விட்டு வெறுப்பைவிட்டு 'அணைக்கவும் உனக்கு உரிமை யுண்டு' என்று தான் சொல்லியும், தன் கையால் அவன் கழுத்தைச் சுற்றி வளைத்தும், தன் அன்பையெல்லாம் கொட்டிக் காட்டியும், "உன் மாற்றம் விரும்பத்தக்க தல்ல ராஜபுத்திரி" என்று மெள்ள அவன் சொன்ன தன் பொருள் ஆரம்பத்தில் விளங்கவில்லை அவளுக்கு. 'நான் உன்னை மனைவியாக ஏற்றால் உன்னை ராஜபுதனத்தின் வீரப் பெண்மணிகள் துரோகியின் மனைவியெனத் தூற்றுவார்கள்' என்று அவன் சொன்ன பிறகுதான் அவன் மனப்போக்கின் புதிர் சற்று அவளுக்கு விளங்கியது, இருப்பினும், 'இத்தனை பரிவு உங்களுக்கு ஏன்?' என்று அவள் கேட்ட பின்பு கிடைத்த பதில் அப்பப்பா எத்தனை இன்பம் அதி லிருந்தது துவக்கத்தில்! ஆனால் அதன் முழுக்கதையும் விளக்கப்பட்ட பின்பு அதில்தான் எத்தனை துன்பம்



பிணைந்து கிடந்தது. இன்பத்துக்கும் துன்பத்துக்கும் எத்தனை பிணைப்பு- ரோஜாவையும் முள்ளையும் போல்.

இப்படிப் பலப்பல விதமாக எண்ணும் நிலையைச் சிருஷ்டித்தன ஹரிதாஸ் ஜாலாவின் சொற்கள். அவன் உதடுகள் உதிர்த்த சொற்களை விட கண்கள் சொன்ன செய்தியில் வேகமிருந்தது, விளக்கம் இருந்தது, விசாரணையிருந்தது. 'ஏன் இத்தனை பரிவு உங்களுக்கு என்மீது?' என்று கேட்டதும் ஹரிதாஸ் ஜாலா சில விநாடிகள் மௌனமாக உட்கார்ந்திருந்தான். அந்த மௌனத்தில் ராஜபுத்திரிக்கு இணையற்ற மகிழ்ச்சி யிருந்தது. தனது முதுகுப் புறத்தில் உட்கார்ந்திருந்த ஹரிதாஸ் ஜாலாவின் மார்பு அப்பொழுது அவளது முதுகைத் தடவிக் கொண்டிருந்தது. அத்தனை உணர்ச்சி வேகத்திலும் நிதானமாகவும் திடமாகவும் அளந்து கொண்டிருந்த அவன் இதய சப்தத்தைக் கூட அவள் முதுகின் நரம்புகள் வாங்கி அவள் உடலெங் கும் பரப்பிக் கொண்டிருந்தன. தனது உடல் பூராவுமே இதயம் சப்திக்கிறதென்ற உணர்வடைந்த ராஜபுத்திரி அந்த மௌன நிலையையே பெரிதும் விரும்பினாள். அவன் இதயம் தன்னை இத்தனை தூரம் ஊடுருவ முடியும் என்பதை அவள் சொப்பனத்திலும் நினைக்க வில்லையாதலால் அவளுக்கு அந்த அனுபவம் புத்தம் புதியதாயிருந்தது. காதலைப் பற்றிப் படித்திருக்கிறோம். பாடல்கள் கேட்டிருக்கிறோம். அந்தப் படிப்பிலும் கேள்வியிலும் உண்டாகும் அறிவுக்கு அப்பால் அனுப வத்தில் எத்தனை படிப்பினைகள், எத்தனை பாடல் கள் இருக்கின்றன என்று எண்ணி பிரமித்தாள் ராஜ புத்திரி. பின்னால் சப்திக்கும் இதயத்துக்கே இத்தனை வேகமென்றால் நாங்கள் எதிரே எதிரேயிருந்த இதயங்கள் எதிரே எதிரே பொருந்திச் சப்தித்தால்... இதற்கு மேல் எண்ணவும் அஞ்சினாள் அந்த ஏந்திழை

நிச்சயம் இருவர் உயிர்களும் உடல் மாறும். கூடு விட்டுக் கூடுபாயும் வித்தை பொய்யில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் ராஜபுத்திரி. அத்தகைய எண்ணங்களின் அனுபவத்திலேயே மிதந்து கொண்டிருக்க விரும்பிய ராஜபுத்திரி சரேலென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். அதிர்ச்சியுடன் ஹரிதாஸ் ஜாலாவின் கைகள் மீண்டும் அவள் தோள்களைப் பற்றியதால் ஏற்பட்ட இன்ப அதிர்ச்சி அது.

ஹரிதாஸ் ஜாலா சரேலென்று பழையபடி அவள் தோள்களை அழுத்திப் பற்றினான். பற்றியது மட்டுமல்ல, பற்றிய அவளைத் தன்னை நோக்கித் திருப்பினான். அவன் கைகள் தோளைப் பற்றிச் சுற்றிய வேகத்தில் 'கிர்' என்று திரும்பிய ராஜபுத்திரி, ஹரிதாஸ் ஜாலாவின் தீட்சண்யமான கண்கள் தன் கண்களுடன் கலப்பதை அறிந்தாள். எதிரே தன்னைப் பார்க்கும் ராஜபுத்திரியைத் திருப்பிவிட்ட பிறகும் ஹரிதாஸ் ஜாலா அவள் தோள்களை விட்டு தன் கைகளை எடுக்கவேயில்லை, அந்த முரட்டுக் கைகள் சில சந்தர்ப்பங்களில் எத்தனை மிருதுவாக இருக்க முடியும் என்பதை ராஜபுத்திரி அந்தச் சில நிமிஷங்களில் அறிந்தாள். அவன் கைகள் அவள் தோளை ஆசையுடன் மிக மெதுவாகத் திருகின. பிறகு, சற்றுக் கீழிறங்கி கைகளின் மத்திய பகுதிகளை வருடின. சற்றுக் கிட்டேயும் இழுத்தன. அவன் தன்னை அணைக்க இழுக்கிறானென்றே நினைத்த ராஜபுத்திரியின் உணர்ச்சிகள் பெரும் கொந்தளிப்பை அடைந்தன! உடலின் நரம்புகள் துள்ளி விளையாடின. இதயம் ஏதோ போர் முகாம்போல் திடீர் திடீரென உள்ளே அடித்துக் கொண்டது. வெற்றி வீரனை முரசும் விருதுகளும் கொண்டு அழைக்கத் தயாராயிருக்கும் கோட்டை போல விளங்கினாள் அந்தக் கட்டழகி. அந்த முரசும் எதிரேயிருந்த வீரனின் சித்தத்தில் தவிக்கத்தான் செய்தது. விருதுகளும் கண்ணுக்குத் தெரியத்தான் செய்தன. இருப்பினும் அவற்றை ஏற்கும் நிலையில் ஏற்று ஆண்டு அனுபவிக்கும் நிலையில் அந்த வெற்றி வீரன் இல்லை. அவன் சம்பந்தப்பட்ட வரையில் அந்த வெற்றி பயனற்றது.



அத்தகைய பலனை அடைய முடியாத பரிதாபப் பார்வையை ஹரிதாஸ் ஜாலாவின் கண்கள் ராஜபுத்திரி மீது வீசின. அந்தக் கண்களில் ஆசையுமிருந்தது. நேசமுமிருந்தது, ஏமாற்றமும் இருந்தது. ஏமாற்றத்திற்குக் காரணம் மட்டும் ராஜபுத்திரிக்கு விளங்கவில்லை. மெள்ள மெள்ள அவன் உதிர்த்த சொற்கள் விளக்கின அந்த மர்மத்தை. "ராஜபுத்திரி நீ என்ன கேட்டாய் என்னை?" என்று அவள் கைகளை அழுந்தப் பிடித்த வண்ணம் கேட்டான் ஹரிதாஸ் ஜாலா, அவள் கண்களோடு தன் கண்களைக் கலக்கவிட்டு.

ராஜபுத்திரி அந்தக் கண்களின் பார்வையிலிருந்து விலக முயன்றாள். முடியவில்லை அவளால். இரும்பை இழுத்து நிறுத்தும் காந்தமெனக் கவர்ந்து நின்ற அந்த வாலிபனின் கண்கள் அவள் மலர்விழிகளை அணுகவே, அவனைப் பார்த்தவண்ணமே செம்பவள இதழ்களைத் திறந்த ராஜபுத்திரி, "ஏன் இந்தப் பரிவு என்று கேட்டேன்" என்று முணுமுணுத்தாள்.

அவன் சொற்கள் மெள்ள மெள்ள வெளிவந்தன. ஒலியும் பலமற்றுக் கிடந்தது, தன்னை மயக்க ஏதோ அவள் மந்திரத்தை உச்சரிப்பது போலிருந்தது ஹரிதாஸ் ஜாலாவுக்கு, அவள் முக லாவண்யம் அவன் மனத்தில் இல்லாத போராட்டத்தை விளைவித்துக் கொண்டிருந்தது. புருவங்கள்! புருவங்களா அவை? அல்ல அல்ல கரும்பு விற்கள்! இப்படியெல்லாம் எண்ணி எண்ணி அவள் அழகைப் பருகிய ஹரிதாஸ்

ஜாலா, "சொல்லட்டுமா ராஜபுத்திரி?" என்று கேட்டான் மெதுவாக.

ராஜபுத்திரி பரம சங்கடத்திற்குள்ளிருந்தபடியால் ஏதோ பதில் சொல்ல வேண்டுமென்பதற்காக, "எதைச் சொல்லட்டுமா என்று கேட்கிறீர்கள்?" என்றாள்.

"உன்மேல் எனக்கு ஏன் பரிவு என்று கேட்கவில்லையா நீ" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"ஆம். கேட்டேன்" என்றாள் ராஜபுத்திரி.

"காரணம் சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்."

"ராஜபுத்திரி..."

"உம்."

"நான்..."

"ஹூம்..."

"நான் ஜாலா வம்சத்தினன்."

"ஆம், ஆம்."

"பொய் சொல்லும் வழக்கம் என் மரபில் கிடையாது."

"ஆம்."

"ஆகவே உண்மையைச் சொல்லுவேன்."

"சொல்லுங்கள்."

மறுபடியும் சற்று நிதானித்தான், ஹரிதாஸ் ஜாலா. பிறகு இழுத்தான், "என் பரிவுக்குக் காரணம்...?" என்று.



"சொல்லுங்கள்." ராஜபுத்திரியின் பெருமார்பு எழுந்து எழுந்து தாழ்ந்தது உணர்ச்சிகளின் கொந்தளிப்பால்.

ஹரிதாஸ் ஜாலாவின் கைகள் அவள் கைகளை வலிக்கும்படியாக முரட்டுத்தனமாக பிடித்தன. கொஞ்சம் கடுமையாகவும் கோபத்துடனும் ஒலித்தன. "காதல், உன்னிடம் ஏற்பட்டுள்ள காதல்" என்று கூறினான் அவன்.

கூறினானா, சீறினானா என்று புரியவில்லை ராஜபுத்திரிக்கு. காதலிப்பதை அத்தனை முரட்டுத் தனமாகவும் கோபத்துடனும் யாரும் செய்வார்கள் என்பதை அவள் கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை. தோளுக்குக் கீழிருந்த தன் கைப்பகுதிகளை அவன் கன்னிச் சிவக்கும்படி பிடித்ததும் பெரிதும் வலித்தது அவளுக்கு. அந்த வலியிலும் ஆனந்தமிருந்ததை அவள் உணர்ந்தாள். அந்த தண்டனையை ஏன் அத்துடன் நிறுத்தி விட்டான் என்று ஏங்கவும் செய்தாள் ராஜபுத்திரி.

தன் போக்கே பெரும் புதிராயிருந்தது ராஜபுத்திரிக்கு. அந்த முரடனை அப்படியே அணைத்து விட்டாலென்ன என்று கூட எண்ணினாள். அந்த எண்ணத்தை நினைத்துத் தன்னைப் புரிந்து கொள்ளவும் செய்தாள். 'ஒரு பெருங்குடி மகள் கொள்ளக்கூடிய நினைப்பல்ல இது' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட ராஜபுத்திரி, 'மனைவி ஸ்தானத்தைப் பெற்ற பின் பெருங்குடிமக்களுக்கும் சிறு குடி மக்களுக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்? இந்த விஷயத்தில், பெண் குலம் ஒரே குலம். அவர்கள், ஆசைகள், உணர்ச்சிகள், ஏக்கங்கள் எல்லாம் ஒரே வகை' என்று தனக்குள் சமாதானமும் சொல்லிக் கொண்டாள்.

அவள் கைகளின் இலேசான நடுக்கத்திலிருந்து அவள் நிலைகுலைந்து போயிருக்கிறாளென்பதைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அவளை பரிதாபத்துடன் பார்த்தான். பிறகு மெள்ள அருகில் இழுத்து, “இதோ என் கண்களை நன்றாக உற்றுப் பார் ராஜ புத்திரி.” என்று கூறினான்.

அவள் கண்கள் மீண்டும் அவன் கண்களைப் பார்த்தன, “இப்பொழுது புரிகிறதா உனக்கு?” என்று மெள்ளக் கேட்டான் அவன்.

“எதைக் கேட்கிறீர்கள்?”

“எதை என்று நான் சொல்ல வேண்டுமா உனக்கு? என் கண்கள் பேசவில்லையா?”

“உதடுகள் தான் பேசும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.”

“அது வெளிப்படை பேச்சு. அதில் ஒலி சம்பந்தம்.”

“கண்களின் பேச்சு...”

“உணர்ச்சியின் பேச்சு, அதில் ஒலியில்லை. இருப்பினும் அதனினும் வலிய ஒளி உண்டு. முதலில் உலகத்தில் உண்டாவது அதுதான்.”

“எது?”

“ஒளி.”

“உம்.”

“ஆம். ஒளிதான். ஆகவே ஆதிமனிதர்கள் கண்களைக் கொண்டுதான் பேசினார்கள். பின்புதான் உதடுகள் பேசின, மொழிகள் பிறந்தன, கண்ணும் பேசும், அதன் மொழி வேறு. அதற்கு–”



“ஊம்.”

“எழுத்து தேவையில்லை! எண்ணம் மட்டுமிருந்தால் போதும்.”

“இத்தனை கற்றுக் கொண்டிருக்கிறீர்களா?”

“ஆமாம்.”

“எங்கு கற்றுக் கொண்டீர்கள்; மொகலாயர் அந்தப்புரத்திலா?”

“அங்கு கற்றுக் கொண்டிருந்தால் நான் சொன்னது முற்றிலும் உண்மையாகிவிடும்.”

“எது?”

“கண்கள் பேசும் என்பது.”

“ஏன்?”

“நாவினால் பேச முடியாது.”

“ஏன் முடியாது?”

“மொகலாயர் நாவைத் துண்டித்திருப்பார்கள்.”

இதைச் சொன்ன ஹரிதாஸ் ஜாலா மீண்டும் பழைய நிலையை அடைந்து மெள்ள நகைத்தான். அந்த நகைப்பு நீடிக்கவில்லை. சட்டென்று நின்றது. கைகள் அவள் கைகளை விட்டு அகன்றன. கண்களும் மீண்டும் பாலைவனத்தை நோக்கின. பழையபடி திரும்பி அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அவளையும் பக்கவாட்டில் திருப்பி அவள் இடையில் தனது கையைச் சுற்றிவிட்டு அவளை அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பில் ஆதரவு இருந்தது. காதல் இல்லை போலிருந்தது ராஜபுத்திரிக்கு.

கோபத்துடன் சொற்கள் உதிர்ந்தபோதிருந்த காதல், இன்பமான இந்த அணைப்பில் ஏன் இல்லை என்று புரியவில்லை அவளுக்கு. அவன் எட்ட இருந்த சமயத்தில் இருந்த வேகம் கிட்டியபின் ஏன் இல்லை யென்று தெரியவில்லை அவளுக்கு. சில விநாடிகளுக்கு நிதானமாயிருந்துவிட்ட ஹரிதாஸ் ஜாலா சொன்னான்: "ராஜபுத்திரி! என் வாழ்க்கையுடன் உன் வாழ்க்கையை இணைக்க இச்சை தூண்டுகிறது என்னை- ஆனால் இதயம் அதை எதிர்க்கிறது."

"இதயத்திலிருந்து இச்சை பிறப்பதில்லையா?" என்று கேட்டாள் ராஜபுத்திரி. கட்டை விரலால் எதிரே இருந்த மணலைக் கிளறிக்கொண்டே.

"இதயத்தில் பிறப்பது காதல்; இந்திரியங்களில் பிறப்பது இச்சை" என்றான் ஹரிதாஸ் ஜாலா பெரு மூச்சு விட்டுக் கொண்டே.

"இரண்டுக்கும் வித்தியாசமுண்டா?"

"ஆம்; காதல் வேறு, இச்சை வேறு. இச்சைக்குப் பூர்த்தி உண்டு. காதலுக்குப் பூர்த்தியில்லை."

"அப்படியா?"

"அப்படித்தான் சாத்திரங்கள் கூறுகின்றன."

"எந்த சாத்திரமோ அது?"

"ஸநாதன தர்ம சாத்திரங்கள், மனித வர்க்கங் களுக்கு இச்சை ஏற்படுகிறது. தெய்வ மனித சம்பந்தத் தில் காதல் பிறக்கிறது. அதே காதல் மனிதர்களுக்குள் ஏற்படும் போது மனிதர்களுக்கு தெய்வத் தன்மை ஏற்படுகிறது. நிரந்தரமான, திகட்டாத அந்தக் காதலில் சதிபதிகள் பரஸ்பர ஆன்மாக்களைப் பார்க்கிறார்கள்.



உடலுக்கும் அப்பாற்பட்ட இன்பங்களையும் அனுப விக்கிறார்கள்."

இதைக்கேட்ட ராஜபுத்திரி கோபத்துடன் சிரித் தாள். "ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டான் ஹரிதாஸ் ஜாலா.

"துறவியுடன் காதல் கொண்டுவிட்டேனே என்று சிரிக்கிறேன்" என்றாள் அவள்.

"தெய்வ மங்கையருக்கு அது சகஜந்தான்" என்றான் ஹரிதாஸ்.

"இதென்ன புகழ்ச்சியா இகழ்ச்சியா?"

"எதுவாயிருந்தாலென்ன? தெய்வ மங்கையர் துறவிகளின் தவத்தைக் கெடுக்கத்தானே ஏற்பட்டிருக் கிறார்கள்? ஆனால் நீ மட்டும் என் தவத்தைக் கெடுக்க முடியாது."

"எனக்குச் சக்தியில்லையா அதற்கு?"

"இல்லை!"

"ஏன் இல்லை!"

"தவம் அப்பேர்ப்பட்டது, கெடுக்க முடியாது உன்னால், கொடுக்க முடியும்."

"என்ன?"

"ஆம். ராஜபுத்திரி! உன் காதலைப் பெறத்தனே தவம் கிடக்கிறேன். அதை நீ கொடுத்தால் உனக்கும் நஷ்டம், எனக்கும் நஷ்டம்."

ராஜபுத்திரி அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனும் பார்த்தான். "நீங்கள் இருந்தாலும்..." என்று ஆரம்பித்து இதழ்களை விஷமத்துடன் மடித்தாள்.

"சொல் ராஜபுத்திரி!" அவன் உதடுகள் மட்டுமல்ல கண்களும் கேட்டன.

"மிகவும் துஷ்டர்."

"இப்பொழுதுதான் அதைத் தெரிந்து கொண்டாயா?"

"ஆம்."

"இனி என்னை வெறுப்பாய்."

"ஆம். வெறுப்பேன்."

"பிறகு?"

"தண்டிப்பேன்."

"அதற்கு தாமதம் வேண்டாம். இப்பொழுதே தண்டித்துவிடு" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

அந்த தெய்வ மங்கை அவனை தண்டித்தாள். என்ன தண்டனை அது? இந்தக் கேள்வியைச் சோலை மலர்கள் கேட்டன. கிளையிலிருந்த கிள்ளைகள் கேட்டன. வெறித்துப் பார்த்த பாலைவனமும் கேட்டது. அது மட்டுமல்ல, ஹரிதாஸ் ஜாலாவின் இதயமும் கேட்டது.

## 15. சீற்றம்

அவள் தண்டனை அத்தனை துணிகரமாகவும் திடீரென்று ஏற்படும் என்பதை எதிர்பாராததால் ஹரிதாஸ் ஜாலா சில விநாடிகள் திகைத்துப் போனான். திகைப்பு நீங்கிய பின்பும் நீண்ட நேரம் உட்கார்ந்த இடத்தை விட்டு நகராமலே ஆழ்ந்த சிந்தைக்கு உள்ளானான். அவள் தண்டித்தது அத்தனை இன்பமாகவும்



துன்பமாகவும் இருக்குமென்பதை நினைத்துக் கூடப் பார்க்காத அந்த வாலிப வீரன், ராஜபுத்திரியின் உணர்ச்சி வேகத்தையும் துடிப்பையும் எண்ணிப் பெரிதும் வியப்பை அடைந்தான். 'இதோ தண்டனை' என்று கூறி இமைப்பொழுதில் அவன் தலையை இழுத்துக் கன்னத்தில் இதழ்களை உணர்ச்சி வேகத்தில் புதைத்து விட்ட ராஜபுத்திரி, திடீரென எழுந்து தன் கூடாரத்தை நோக்கி ஓடினாள். முதலில் சந்தித்தபோது கடுங்கோபத்தையும், தான் எதிரியின் தூதன் என்றறிந்த போது கடும் வெறுப்பையும், கணவனென்று அறிந்த பின்பு, அதுவும் தான் அவளைக் காதலிப்பதாகக் கூறிய பிறகு கடும் இன்பத்தையும் அள்ளிவிடத் தக்க ராஜ புத்திரியின் சுபாவத்தை மிக எளிதில் புரிந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. சாதாரணமாக எந்தப் புருஷனையும் எட்டடி தள்ளியே நிற்க வைக்கும் உறுதியைக் காட்டிய அந்த உத்தமியின் கொவ்வையிதழ்கள் செவ்வையாகத் தன் கன்னத்தில் புதைந்ததற்குக் காரணம், மனைவியென்ற சொல்லளித்த உரிமையும், இருவரும் இருக்க நேரிட்ட தனிமையும், அந்தத் தனிமையை அளித்த ஜயன் சந்தாவத் கையாண்ட முறையும் உரைத்த உண்மையுமே என்பதையும் நினைத்துப் பார்த்த ஹரிதாஸ் ஜாலா, அந்தச் சமயத்தில் இன்பத்தைவிடப் பெரும் துன்பத்தையே அடைந்தான். அவள் அழகு, அருகாமை, துள்ளியெழுந்த உணர்ச்சிகள் எல்லாம் இன்பத்தை அள்ளிக் கொட்டினாலும், தான் எடுத்துக் கொண்டிருக்கும் பணியும் தனது பிற்காலமும் அவள் வாழ்வை எந்த விதத்திலும் வளப்படுத்த முடியாதென்பதை எண்ணிப் பெருமூச்சு விட்டான் அந்த வாலிபன். அவள் எழுந்து கூடாரத்தை நோக்கி ஓடிய பின்பும் அவள் தன் பக்கத்தில் அமர்ந்திருப்பது போன்ற பிரமையே இருந்து கொண்டிருந்தது அவனுக்கு. அவள் தலைமலரின் சுகந்தமும்,

வாசனைத் தைலத்தின் நறுமணமும், கழுத்தின் இன்ப மணமும் அப்பொழுதுகூடத் தன்னை வட்டமிட்டுக் கொண்டிருப்பதாக நினைத்தான் ஹரிதாஸ் ஜாலா. அவளை ஏன் சந்தித்தோம் என்று பெரும் துயரப்பட் டான் அவன். அந்தச் சில விநாடிகளில், மொகலாயர் பாசறை அருகிலிருக்கும் ஒண்டாலா சமவெளிக்கருகில் இவள் எதற்காக வந்தாள், என்னை ஏன் சந்தித்தாள் என்று திரும்பத் திரும்ப நொந்து கொண்ட அந்த ராஜபுதனப் படைத்தலைவன், விதியின் கொடிய தன்மையைப் பற்றிப் பெரிதும் நிந்தித்தான்.

இப்படிப் பலப்பல வேதனைக்குட்பட்ட ஹரிதாஸ் ஜாலா, நீண்ட நேரத்திற்குப் பிறகு ஆகாயத்தை நோக் கினான். சூர்யோதயம் ஆகிக் கொண்டிருந்தது. அதை முன்னிட்டு ஆகாயம் மெள்ள வெளுக்கத் தொடங்கிக் கொண்டிருந்தது. அதுவரை தோப்பில் சப்தித்த பல்லி, சின்னஞ்சிறு குருவிகள், மைனா, சாதகம் முதலிய பட்சி ஜாலங்களின் இன்பக் கூச்சல்கள் எழுந்து கொண்டிருந்தன. ஆங்காங்கு கட்டப் பட்டிருந்த ஓரிரண்டு புரவிகள் கூட விடிய அதிக நேரமில்லை என்பதை நிரூபிக்கக் கனைத்தன. பட்சிகளின் ‘கலகலா’ சப்தங்கள் அதுவரை அவன் கண்ட துன்பக் கனவைக் கண்டு நகைப்பனபோல் தோன்றியது ஹரிதாஸ் ஜாலாவுக்கு. ‘இந்த மரங்கள் ஏன் இப்படிப் பல்லை இளிக்கின்றன?’ என்று மரத்தில் விகசித்த மலர்களை யும் கோபத்துடன் பார்த்தான் அவன். ‘என் ஊடே ஓடும் இந்த புவனா நதியில் கூட எப்பொழுதாவது தண்ணீர் வரும்; அது நிரந்தரம் என்று நான் நினைப்ப தில்லை. நீர்போல உன் வாழ்வில் வந்த ராஜபுத்திரி யையும் சதமென்று நினைக்காதே, உன் வாழ்வும் என் வாழ்வும் வறண்டு போனவை. நம்மை வளப்படுத்த இயற்கையின் சக்திகளும் பயனற்றவை, உன்னையும் என்னையும் வளப்படுத்த வேறு ஒரு பகீரதன் பிறந்து ஆகாய கங்கைதான் வரவேண்டும்’ என்று பாலை வனம்கூட தன்னை பரிகசிப்பதாகத் தோன்றியது ஹரி தாஸ் ஜாலாவுக்கு.

தன்னை எள்ளி நகையாடும் அத்தனை சுற்றுப்புற சாதனங்களை எழுந்து நின்று ஒருமுறை கோபப் பார்வையாகப் பார்த்தான் ஹரிதாஸ் ஜாலா. பிறகு எழுந்து மெள்ள நடந்து காவலர் இருந்த இடத்தை நோக்கி நடந்தான். இருந்த இடத்துக்கும் பாலைவன முகப்புக்கும் இடையே இருந்த ராஜபுத்திரியின் கூடா ரத்தைத் தாண்டியே அவன் செல்ல வேண்டியிருந்த தால் அந்த இடத்தை அடைந்ததும், அவன் கால்கள் தாமாகவே தடைப்பட்டு நின்றன. கூடாரவாயிலி லிருந்த திரையை ஊடுருவி உள்ளே பார்க்க இஷ்டப் பட்டன போல் அவன் கண்கள் ஜொலித்தன. மெள்ள திரையை அணுகின கால்கள். திரையைத் தள்ளிக் கொண்டு உள்ளே செல்ல உள்ளம் துடித்தது. கால்கள் மட்டும் அதற்கு இஷ்டப்படாமல் சத்தியாகிரகம் செய்தன. அப்படி வெளியிலேயே நிற்க நேரிட்டதால் கண்களின் பணியைக் காதுகள் ஏற்றுக் கொண்டன. கண்கள் பார்த்து புத்திக்கு அனுப்ப வேண்டிய பணியைக் காதுகள் செய்யத் தொடங்கியதால், உள்ளே ஏற்பட்டுக் கொண்டிருந்த சின்னஞ்சிறு அசைவின் ஒலியைக்கூட அவை கிரகித்தன.

பஞ்சணை அடிக்கடி அசைவது காதுகளுக்குக் கேட்டதால், ராஜபுத்திரி படுக்கையில் புரண்டு படுக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டான் அந்த வாலிபன். அவள் இரண்டொரு தடவை விட்ட பெரு மூச்சு அவள் சஞ்சலத்தை நன்றாகப் புலப்படுத்தியது அந்த வீரனுக்கு. அந்தத் திரையைத் தள்ளி உள்ளே சென்று ராஜபுத்திரி ஏன் கஷ்டப்படுகிறாள் என்பதை விசாரிக்கலாமா என்று நினைத்தான் ஹரிதாஸ் ஜாலா.

அந்த ஜாலா வம்சத்தைத் தவிர வேறு யாராவது அந்த நிலையில் இருந்தால் அப்படித்தான் விசாரிப்பார்கள். ஆனால் சத்திய சந்தனான அவன் விசாரிக்கவில்லை. 'ராஜபுத்திரியின் கஷ்டம் என்னவென்று எனக்குத் தெரியும். அப்படியிருக்க ஒரு பொய்க் காரணத்தையும் பொய்க் கேள்வியையும் துணை கொண்டு உள்ளே செல்வானேன்? பொய் எனது மரபுக்கே உதவாது. ஏன் ராஜபுத்திரி மரபுக்கே உதவாது. ராஜபுத்திரியை அடைய இஷ்டமிருந்தால் வலிய அடைவதே க்ஷத்திரிய தர்மம். அதை உலகம் பாராட்டவும் செய்யவும். சம்யுக்தையைத் தூக்கி வந்ததை ராஜபுதனம் பாராட்டவில்லையா? ஆகவே பொய் எதற்கு?' என்று அந்த யோசனையை உதறித் தள்ளிய அவன், திடீரென்று கூடாரத்தின் வாயிலை விட்டுச் சட்டென்று பாதரட்சைகள் ஓசைப்பட நடந்து காவலர் இருக்குமிடம் சென்றான். அந்த பாதரட்சை சத்தம் கேட்டு கூடாரத்துத் திரையை விலக்கிக் கொண்டு வெளியே வந்த ராஜபுத்திரி, அவன் வேகமாகப் போவதை கவனித்தாள். பிறகு திரைக்குக் கீழே தரையைப் பார்த்தாள். அவள் முகத்தில் மந்தகாசம் விரிந்தது.

திரைக்குக் கீழே பூமியில் அவன் பாதச்சுவடுகள் பதிந்து கிடந்தன. அவன் அங்கு சில விநாடிகள் நின்றிருக்க வேண்டுமென்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்ட ராஜபுத்திரி, அவன் உள்ளப் போராட்டத்தை நன்றாகத் தெரிந்து கொண்டாள். 'எத்தனை சிறந்த மனிதர் இவர்! இவரை ராஜபுதனம் இழந்து விட்டதே. அட துரதிர்ஷ்டம் பிடித்த நாடே! உன் துரதிர்ஷ்டமல்லவா இவரை எதிரிகளிடம் சிறைப்படுத்தியது' என்று நாட்டைக்கூட வெறுத்தாள் அவள். 'இந்தப் பைத்தியக்காரர் எதற்காக வாயிலில் நிற்க வேண்டும்? உள்ளே வந்தாலென்ன? நான் பிடித்துக் கொண்டு விடுவேனா!' என்றும் நினைத்து இன்ப நகையை இதழ்களில் கூட்டினாள். இன்பமும், இன்பம் தூண்டிய வேதனை உணர்ச்சிகளும் அவள் உடலெங்கும் வியாபித்ததால் அவள் பரவசப்பட்டு நீண்ட நேரம் நின்று கொண்டேயிருந்தாள். பிறகு பொழுது புலருவதைக் கண்டு பிரயாணத்துக்கு சித்தம் செய்ய உள்ளே சென்றாள்.



விடிவதற்கு முன்பாகவே புறப்பட்டுவிடக் காவலருக்கு உத்தரவு பிறப்பித்த ஹரிதாஸ் ஜாலா, தன் குதிரையை இழுத்துக் கொண்டு புவனா நதியின் கரைக்குச் சென்றான். புவனா நதியில் நீர் சிறிதே ஓடிக் கொண்டிருந்தது. அந்த நீரில் பல் துலக்கி முகம் கழுவிக் குதிரையின் முகத்திலும் நீரை வாரியடித்தான் அந்த வாலிப வீரன். பிறகு அதன் கால்களையும் முதுகையும் தானே வருடிவிட்டுக் கூடாரத்துக்கு அருகில் சேணத்தைப் பூட்டினான். அதற்குள் ராஜ புத்திரியும் பிரயாணத்துக்குத் தயாராகிப் புது உடை உடுத்தி, அந்தச் சோலையிலிருந்த பெருமலர் ஒன்றைத் தலையில் செருகிக் கொண்டு, உதய கால தேவதை போல் கூடாரத்தின் திரையை விலக்கிக் கொண்டு வந்ததும், ஒரு முறை மட்டுமே அவளைப் பார்த்த ஹரிதாஸ் ஜாலா, மேற்கொண்டு தன் பார்வையைப் புரவி மீது நாட்டிக் கொண்டான். அவன் சங்கடத்தை அறிந்து அவள் மெள்ள நகைத்தாள். அதை கவனித்ததும் கவனிக்காதவன் போல், "உம். கிளம்புங்கள், எத்தனை நேரம்'' என்று சீற்றத்துடன் காவலரை நோக்கிக் கூவினான் ஹரிதாஸ் ஜாலா.

அவன் கோபத்துக்குக் காரணம் காவலருக்குப் புரியாவிட்டாலும் ராஜபுத்திரிக்குப் புரிந்தது. ஆண்களின் பலவீனத்தை நினைத்து உள்ளூர நகைத்துக் கொண்ட அவள், வீரர்கள் பயணத்துக்கு முனைந்து விட்டதைக் கண்டு கூடாரத்தை விட்டு சில அடி

தூரம் நடந்து வந்து நின்று கொண்டாள். சில நாழிகை களில் கூடாரம் வரிக்கப்பட்டுக் கட்டப்பட்டதும் ராஜபுத்திரியையும் புரவியிலேறச் சொல்லி தானும் புரவிமீது தாவி உட்கார்ந்து பயணத்துக்கு உத்தரவளித் தான் ஹரிதாஸ். காவலர் புரவிகள் பின்தொடர ஒட்டகம் அம்பாரியுடன் பெருநடை போட, பாலை வனத்தில் புவனா நதிக்கரையோரமாகவே பயணம் செய்த ஹரிதாஸ் ஜாலா, பயணம் தொடங்கிய நீண்ட நேரத்துக்குப் பின்பும் ராஜபுத்திரியைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கண்களை தூரத்தில் நாட்டி பாலை வனத்தைப் பார்த்தபடியே பயணம் செய்து கொண் டிருந்தவன், சட்டென்று குதிரையை நிறுத்தித் திருப்பிப் பார்த்தான்,

"என்ன பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள், பக்கத்தில் புரவியில் வந்து கொண்டிருந்த ராஜபுத்திரி.

"வீரர்கள் வெகுதூரம் பின்னடைந்து விட்டார்களே யென்று பார்க்கிறேன்" என்றான் ஹரிதாஸ் ஜாலா, சற்று தூரத்தில் மெல்ல வந்த வீரர்களைப் பார்த்து.

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது அது? அடடே! ஆம் ஆம்; மறந்து விட்டேனே. உங்களுக்குப் பின்னால் கண் உண்டு என்பதை" என்று சொல்லி அவள் சிரித்தாள்.

"ஹூம்" என்று உறுமினான் அவன்.

"நான்தான் அவர்களைப் பின்னால் வரும்படி உத்தரவிட்டேன்" என்றாள் ராஜபுத்திரி.

"எனக்குக் கேட்கவில்லையே உத்தரவு!"

"எப்படிக் கேட்கும். கையால் சைகை செய்தேன்."



"சரி சரி" என்று சொல்லி ஹரிதாஸ் ஜாலா குதி ரையை நடத்தினான். சற்று நேரத்திற்குப் பிறகு கேட்டான் அவளை, "ஏன் அவர்கள் பின்னால் தள்ளி வரவேண்டும்?" என்று.

"உங்கள் ரசனையைக் கெடுக்காதிருக்க" என்றாள் ராஜபுத்திரி.

"எதை ரசிக்கிறேன் நான்."

"உங்கள் புரவியை."

"புரவியையா!"

"இல்லை; பாலைவனத்தை."

"பாலைவனத்தையா!"

"ஆமாம், இரண்டையுந்தான் திரும்பித் திரும்பிப் பார்க்கிறீர்கள்."

"வேறு எதைப் பார்ப்பது?"

"வேறு எதுவுமில்லையா அக்கம் பக்கத்தில்?"

ஹரிதாஸ் ஜாலா சிறிது நேரம் பேசவில்லை. பிறகு மெள்ளச் சொன்னான்: "பார்க்கலாம். பார்ப்பது தவறு என்று தோன்றியது."

"எது தவறு?"

"பார்ப்பது."

"கண்ணால் பார்ப்பதா?"

"ஆம்."

"புறக் கண்ணைத்தானே சொல்கிறீர்கள்?"

"வேறு ஏது கண்?"

"உள்ளக் கண் இருக்கிறது. காதுகள் இருக்கின்றன."

"இருந்தாலென்ன?"

"திரையெதிரில் இருந்தாலும் உள்ளே நடப்பதை ஊகிக்கலாம். அசைவுகளின் ஒலியைக் காதில் வாங்க லாம். கண்ட கற்பனைகளைச் செய்யலாம். அவை யெல்லாம் நேர்மை, நேராக, உண்மையாகப் பார்க்கக் கூடாது. இதுதான் ஜாலா வம்சத்தின் சத்தியமார்க் கம்!" என்று சொல்லிக் கலகலவென நகைத்தாள் ராஜபுத்திரி.

ஹரிதாஸ் ஜாலா அவளை ஏறிட்டு நோக்கினான். "நான் திரைக்கு முன்பு நின்றது உனக்கெப்படித் தெரியும்?"

"உங்கள் பாதச்சுவடுகள் வாயிலில் அழுந்திக் கிடந்தன," என்றாள் ராஜபுத்திரி. காதலையெல்லாம் கொட்டும் பார்வையொன்றை அவன் மீது வீசி.

"ராஜபுத்திரி! ஒற்றுப் பார்க்கும் என் வேலையை நீ மேற்கொண்டு விடு" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"மொகலாயருக்கா?"

"ஆம்."

"ஏன் அத்தனை மட்டமானவளா நான்?" இம்முறை ராஜபுத்திரி சீறினாள்.

## 16. ஆணை

மலர்ச் சோலையில் எழிலரசியின் கயல்விழிகளுக் கெதிரில் தன் மன இல்லத்தின் இரும்புக் கதவுகளைத் திறந்து காட்டிவிட்டதால், ஓரளவு தன்னைப் பற்றிய



வெறுப்புடனேயே மறுநாட்காலைப் பயணத்தைத் துவக்கிய ஹரிதாஸ் ஜாலா, "பெரும் போர்களிலும் ராஜதந்திரிகளின் முன்னிலையிலும்கூட மனத்தைத் தளரவிடாத நான், கேவலம் இந்தப் பெண்ணுக் கெதிரில் எத்தனை பலவீனத்தைக் காட்டிவிட்டேன்!" என்று மீண்டும் மீண்டும் அலுத்துக் கொண்டே புரவியை நடத்தினான். அப்படிப் புரவியை நடத்திய போது அவன் பக்கத்திலேயே புரவியில் வந்து கொண் டிருந்த ராஜபுத்திரி சைகையினாலேயே காவல்வீரர் களைப் பின்னடையச் செய்து, தன்னிடம் விஷமமாகப் பேசத் துவங்கியதைக்கூட அதிகமாக ரசிக்க அவனால் முடியவில்லை. பக்கத்தில் வந்து கொண்டு தன்னுடன் தனிமையை நாடிய ராஜபுத்திரி தன் பேச்சுக்கும், பேச்சில் தொனித்த இச்சைக்கும்தான் சிறிது இணக்கம் காட்டிாலும், அவள் வாழ்வு தீராத புயலில் சிக்கி விடுமென்பதை உணர்ந்த அந்த வாலிப வீரன், அவள் பேச்சுக்கு முதலில் இடம் கொடுத்தானானாலும் நாழிகைகள் செல்லச் செல்ல தன் இதயக் கதவுகளை அடியோடு மூடவும், உதடுகளுக்குப் பூட்டுப் போட்டு மௌனம் சாதிக்கவும் முயன்றான். ஆனால் அந்த முயற்சி அத்தனை எளிதில் பலனளிக்கவில்லை ஹரி தாஸ் ஜாலாவுக்கு.

புரவியின் நடையில் அசைந்த அவள் அங்க லாவண்யங்களைப் பற்றிய நினைப்பு அடிக்கடி மூட முயன்ற அவன் இதயக் கதவுகளுக்குக் குறுக்கே பாய்ந்ததால் கதவுகளை மூடப் பெரிதும் தத்தளித்தான் ஹரிதாஸ் ஜாலா. அவள் திடீர் திடீரெனக் கோபத்தின் வசப்பட்டும் வாய்விட்டு நகைத்தும் மாறி மாறி வீசிய மன்மத பாணங்கள், அடைத்த அவன் உதடுகளையும் அடிக்கடி திறக்கவே வைத்தன. ஆகவே ஓரளவு பதில் சொல்லியும் மறுபடியும் மௌனம் சாதித்துப் பலவித

இம்சைகளுக்குட்பட்டே பயணம் செய்தான் அந்த வாலிபன்.

புவனா நதியின் சலசலத்த நீரோட்டத்தை அடுத்து நின்ற கரையோரமே பயணம் செய்துவந்த ஹரிதாஸ் ஜாலா, மீண்டும் மீண்டும் பக்கத்திலிருந்த நீரோட்டத்தைப் பார்த்து தன் மனத்தின் சலசலப்பு அதிகமல்ல வென்று நகைக்கவே, திடீரெனப் புரவியிலிருந்தபடியே அவளை நோக்கித் திரும்பிய அந்த வாலிபனைப் பார்த்த ராஜபுத்திரி, "ஏன் அப்படி எரித்துவிடுவது போல் பார்க்கிறீர்கள்? சிரிப்புக்குக்கூட தடை விதிக்கிறீர்களா?" என்று கேட்டாள் புரவியில் அசைந்தபடியே.

ஹரிதாஸ் ஜாலாவின் கோபக் கண்கள் அவளையும் நோக்கி வெகுதூரம் பின்னடைந்து வந்து கொண்டிருந்த வீரர்களையும் கவனித்தன.

அவன் விழிகளின் ஓட்டத்தை கவனித்த ராஜபுத்திரி கேட்டாள்: "ஏன் பயமாயிருக்கிறதா?" என்று.

மனம் சாதாரண நிலையிலிருந்தால் அந்தச் சொற்களில் தொனித்த ஏளனத்தை ஹரிதாஸ் ஜாலா கவனித்திருப்பான். ஆனால் குழம்பிக் கிடந்த மனத்தின் விளைவாகக் கோபத்துடன் உதிர்ந்தன அவன் சொற்கள், "எனக்கா! பயமா" என்று சீறினான் அந்த வாலிபன்.

"வேறு யாருக்கு?" வேடிக்கையுடன் கேட்டாள் ராஜபுத்திரி.

"ஹரிதாஸ் ஜாலாவுக்கு பயமிருப்பதாகச் சொல்லி, அடுத்த விநாடி உயிர் வாழ்ந்த வீரன் எவனுமில்லை" என்றான் கடுங்கோபத்துடன் அவன் மீண்டும்.





"வீராங்கனைகள் இருக்கலாம்..." என்று விஷமத்துடன் இழுத்தாள் ராஜபுத்திரி.

"வீராங்கனைகள்! பன்மையிலிருக்கிறதே பேச்சு!" இதைச் சொன்ன போதும், அவன் குரலில் குரோதமே இருந்தது.

"ஒருமையில் இருந்தால் ஒப்புக் கொள்வீர்களாக்கும்?" என்ற ராஜபுத்திரி இதழ்களில் இளநகையொன்றைப் படரவிட்டாள்.

"அப்பொழுது மட்டும் ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று சீறினான் ஹரிதாஸ் ஜாலா.

"உண்மையை ஒப்புக்கொள்வது ஜாலா வம்சத்தினர் வழக்கமாயிற்றே."

"ஆமாம்."

"அதனால்தான் ஒப்புக்கொள்வீர்கள் என்று சொல்கிறேன்."

"எதை?"

"பயத்தை."

"யாரிடம் பயம்."

"ஒரு பெண்ணிடம்"

"எந்தப் பெண் அவள்?"

"இதோ இருக்கிறாள்?" என்று கூறிய ராஜபுத்திரி, சட்டென்று புரவியை அவன் புரவியுடன் மோதிக் கடிவாளம் பிடித்த அவன் கரத்தை இழுத்துத் தன் மார்பில் வைத்துக் கொண்டாள்.

கடிவாளத்தைப் பிடித்திருந்ததால் முஷ்டி பிடித்தது போலிருந்த கரத்தை அவள் திடீரென இழுத்துத் தன்

மார்பகத்தில் வைத்துக் கொண்டதால், ஹரிதாஸ் ஜாலா பெரிதும் நிலைகுலைந்து போனான். அவன் மனம் பெரிதாக அடித்துக் கொண்டது. அந்தப் பெண் சம்பந்தப்பட்ட வரையில் தான் பெரும் பயங்கொள்ளி என்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. அந்தத் திடீர் செய்கையால் சங்கடமடைந்தது ஹரிதாஸ் ஜாலா மட்டுமல்ல. ஏதோ விளையாட்டுக்கு அவனை விஷமம் செய்ய ஆரம்பித்து அவன் கையை வலுவில் இழுத்துத் தன் இதயத்தைக் காட்ட முயன்ற ராஜபுத்திரி, இதயத்தைக் காத்து நின்ற எழிலின் திண்மையில் அவன் கைபட்டு விட்டதும் சற்று அதிர்ச்சிக்கே உள்ளானாள். அந்தச் செய்கை அந்த வாலிபனுக்குத் தன் மீது தவறான எண்ணத்தைக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்றும், அந்த அதிர்ச்சியின் விளைவாக ஏங்கவும் செய்தாள் அவள். ஆகவே அதற்குப் பின் இருமுறை அவனையும் பின்னடைந்து வந்து கொண்டிருந்த காவலர் குழாத்தையும் மிரள மிரள நோக்கிவிட்டு திடீரெனக் குதிரையை வேகமாக நடத்தினாள். ஹரிதாஸ் ஜாலாவும் காரணமின்றிப் புரவியின் வயிற்றில் செருப்பை உந்த அவன் புரவியும் பெருநடையிலிருந்து ஓட்டத்தைக் காட்டத் தொடங்கியது.

இப்படி அரை ஓட்டமாகப் புரவிகளை விட்டுக் கொண்டு அதற்கு மேல் பெரும் மௌனமாகப் பயணத்தை நடத்திய ஹரிதாஸ் ஜாலா, சரியாக உச்சி வேளையில் ராஜபுத்திரிக்குக் கூடாரமைக்கக் காவலருக்கு உத்தரவிட்டான். காவலர் கூடாரமைக்கும் போதும் தன் பக்கத்தில் நின்றிருந்த ராஜபுத்திரியிடம் ஏதும் பேசாமலேயிருந்த ஹரிதாஸ் ஜாலா, கூடாரம் உருவான பிறகுங்கூட ராஜபுத்திரியை நோக்கி ஏதும் சொல்லாமல், "சீக்கிரம் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு உணவருந்துங்கள். இன்னும் ஒரு நாழிகைக்



குள் பயணத்தைத் தொடங்க வேண்டும்" என்று காவலருக்கு உத்தரவிட்டு, தன் புரவியை இழுத்துக் கொண்டு புவனாவின் சலசலத்த நீரோட்டத்தை நோக்கி நடந்தான்.

ராஜபுத்திரி அவன் போவதைப் புன்முறுவலுடன் பார்த்துக்கொண்டு நின்றாள். அவன் இதய நெகிழ்ச்சி அவளுக்கு நன்றாகப் புரிந்திருந்தது. தன்னிடம் மையலில் சிக்கி அவன் திண்டாடுகிறான் என்பதை அவள் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தாள். அவன் கோபம், தாபம், மௌனம், சீறல் அத்தனைக்கும் காரணம் அவள்மீது கொண்ட காதலேயென்று அவளுக்குப் புரிந்திருந்ததால், அவள் விழிகளில் கருணை பாய்ந்து நின்றது. அந்தச் சமயத்தில் ராஜபுத்திரி அடியோடு குணங்களில் மாறுபட்டு நின்றாள். அவள் சீற்றமெல்லாம் பழைய கதையாகிவிட்டதை உணர்ந்தாள். ஆண் ஸ்பரிசம் பெற்ற பெண் எத்தனை எளிதில் மாறுபடுகிறாள் என்ற புது அறிவு அவளை வியப்பில் சிக்க வைத்தது. அந்த வியப்பு அகலாமலே அவள் கூடாரத்துக்குள் நுழைந்தாள். பிறகு ஸ்நான உடைகளை எடுத்துக்கொண்டு புவனா நதியின் கரை சற்று உயர்ந்த இடமாகப் பார்த்து மறைவில் நீராடத் துவங்கினாள். நீராடத் துவங்கிய போதும் சரி, நீராடி முடித்துத் தன்னை நன்றாகப் போர்த்துக் கொண்டு கூடாரத்துக்குச் சென்றபோதும் சரி, கூடாரத்துக்குள் ஆடை களைந்து மாற்றாடை அணிந்தபோதும் சரி, சொல்லவொண்ணா வெட்கத்துக்கும் சங்கடத்துக்கும் உள்ளானாள் ராஜபுத்திரி. ஒவ்வொரு சமயத்திலும் ஹரிதாஸ் ஜாலா பக்கத்திலிருப்பது போலும், அவன் கண்கள் தன் அழகையெல்லாம் கூர்ந்து நோக்குவது போலுமிருந்ததால் ராஜபுத்திரி கூடாரத்தின் மறைவிலும் ஓர் உடையை மற்றோர் உடையால் மறைத்த வண்ணமே மாற்றாடை புனைந்தாள். முதலிரவின்

நான்காம் ஜாமத்தில் மலர்ச் சோலையில் ஹரிதாஸ் ஜாலாவின் கன்னத்தில் தைரியத்துடன் புதைந்த அவள் இதழ்கள் அதை நினைத்ததும் பயத்தால் துடித் தன. 'பயம் யாருக்கு என்னைப் பார்த்து அவருக்கா? அவரைப் பார்த்து எனக்கா?' என்று மீண்டும் மீண்டும் ராஜபுத்திரி தன்னைக் கேட்டுக் கொண்டாள். 'பயம் அவருக்குத்தான். என்னைப் பார்த்து அவருக்கு பயம். இந்த பயம் காதலின் போர்வை. பயத்தை உதறினால் காதல் சுவை கைகூடிவிடும். ஆனால் உதற முடியவில் லையே!' என்றும், நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டாள் ராஜபுத்திரி.

இப்படிப் பலப்பல எண்ணங்களுக்கிடையே, இன்ப வேதனைகளுக்கிடையே, பெருமூச்சுகளுக்கிடையே, உடை உடுத்தி அலங்காரத்தை முடித்துக்கொண்ட ராஜபுத்திரி அருகே அடுத்த நாழிகை ஆகாரம் கொண்டு வரப்பட்டது. எதிரே மஞ்சத்தில் தங்கத் தாம்பாளத்தில் வைக்கப்பட்ட அறுசுவை உண்டியை யும் கனி வர்க்கங்களையும் பல விநாடிகள் தொட்டுப் பார்க்காத ராஜபுத்திரி காவலனை நோக்கி, "அவர் சாப்பிட்டாகி விட்டதா?" என்று வினவினாள்.

"இல்லை" என்றான் காவலன்.

"அவர் சாப்பிடாமலிருக்க எனக்கு மாத்திரம் என்ன அவ்வளவு அவசரம்?" என்று வினவினாள் ராஜபுத்திரி கோபத்துடன்.

"அவர் உத்தரவு!" என்றான் காவலன்.

"உத்தரவா; என்ன உத்தரவு?" என்று சீறினாள் அவள்.

"உணவு கொண்டு வர உத்தரவு."

"உத்தரவிட்டவர் என்ன செய்கிறார்?"



'புரவியைக் குளிப்பாட்டுகிறார்."

இந்த பதிலைக் காவலன் சொன்னதும் திடீரெனத் தூக்கிவாரிப் போட்டது ராஜபுத்திரிக்கு. முதல் நாளிரவு சுனையில் அவன் வேஷ்டியை இழுத்துக் கட்டி முப்புரி நூல் துலங்க வாளிப்பான சரீரத்துடன் குதிரையைக் குளிப்பாட்டிய காட்சி அவள் கண்முன் எழுந்தது. அந்த சரீரவாகிலேயே, அதிலிருந்து வீசிய ஒளியிலேயே வீரம் ததும்பி நின்றதை அந்தச் சமயத்தி லும் அவள் மனக் கண்ணால் கண்டாள். இப்படி அந்தக் காட்சி மனத்தில் எழுந்ததால் எதிரேயிருந்த உணவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராஜ புத்திரி, "சரி சரி; நீ சீக்கிரம் போய் அவரையும் இங்கே உணவருந்த வரச் சொல்" என்று காவலனுக்கு உத்தர விடவே, காவலன் வெளியில் பறந்தான்.

அடுத்து சில நிமிடங்கள்தான் ஓடியிருக்கும். ஆனால் சில வருஷங்கள் ஓடிவிட்டதாகத் தோன்றியது ராஜபுத்திரிக்கு. புத்தாடை புனைந்து இடையில் வாள் துலங்க வந்த ஹரிதாஸ் ஜாலாவைக் கண்டதும் கேட் டாள் ராஜபுத்திரி: "ஏன் இத்தனை நேரம்?" என்று.

"புரவியைக் குளிப்பாட்டினேன்" என்றான் ஹரி தாஸ் ஜாலா எதிரே நின்றுகொண்டே. இதைக்கேட்ட ராஜபுத்திரி மஞ்சத்தில் சற்று நகர்ந்து தன் பக்கத்தில் உட்கார அவனுக்கு இடமளித்து, "புரவியிடம் அத்தனை அன்பா உங்களுக்கு?" என்றாள் சற்று அலுப்புடன்.

"அதைவிட என் உயிரிடம் எனக்கு அன்பா என்று கேட்கலாமே" என்று சொல்லிக்கொண்டே, அவள் பக்கத்தில் சற்று ஒதுங்கியே உட்கார்ந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா.

"புரவியும் உயிரும் உங்கள் மனத்தட்டில் சரி சமானம் போலிருக்கிறது?" என்று கேட்டாள் ராஜ புத்திரி.

"ஆம்."

"வேறு எதற்கும் அங்கு இடம் கிடையாதா?"

"இருக்கிறது."

"எதற்கு?"

"என் வாளுக்கு!"

"வேறு எதற்கும் இடமில்லையா?"

இந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியாமல் தயங்கினான் ஹரிதாஸ் ஜாலா. பிறகு, "உம்... உம்... இருக்கிறது" என்று தட்டுத் தடுமாறிச் சொன்னான்.

"எதற்கு?" என்று கேட்டாள் ராஜபுத்திரி.

"வேண்டாம், கேட்காதே'' என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"கேட்கத்தான் கேட்பேன்."

"வேண்டாம்."

"சொல்லுங்கள். சொல்லித்தானாக வேண்டும்..."

"தர்மசங்கடத்தில் என்னைக் கொண்டு விடாதே ராஜபுத்திரி."

"இதில் தர்மசங்கடமிருக்கிறதா? உங்கள் உயிர், புரவி, வாள் இதற்கடுத்தது என்ன என்று கேட்டேன்."

"கேட்கவேண்டிய அவசியமென்ன?"



ராஜபுத்திரி ஹரிதாஸ் ஜாலாவை நெருங்கி உட்கார்ந்து கொண்டாள். அவள் அழகிய தோள் மிக மிருதுவாக அவன் தோளுடன் உராய்ந்தது. "நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லட்டுமா?" என்று மெள்ள வினவினாள் அவள்.

"சொல்லேன்'' என்றான் ஹரிதாஸ் ஜாலா தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு.

அவள் வலது கரம் கழுத்தைச் சுற்றிச் சென்றது. அவள் இடது கை குனிந்த அவன் தலையை முகவாய்க் கட்டையைப் பிடித்து நிமிர்த்தியது. விழிகள் அவனைக் கூர்ந்து நோக்கின. "அடுத்தது நானாயிருக்குமோ என்று கேட்டேன்" என்று உதடுகள் காதலுடன் சொற்களை உதிர்த்தன.

ஹரிதாஸ் ஜாலா, "ஆம் நீதான்! புரியவில்லையா உனக்கு?" என்று முணுமுணுத்தான்.

அவள் முகம் அவனுக்கு வெகு அருகில் வந்தது. "தெரியும் எனக்கு?" என்று அவளும் ரகசியம் சொன்னாள். பிறகு சம்பாஷணை பரம ரகசியமாக நடந்தது.

"பின் எதற்குக் கேட்டாய்?" என்றான் அவன்.

"உங்கள் வாயால் கேட்டுக்கொள்ள."

"மனம் அறிந்தால் போதாதா?"

"போதும். புலன்களைக் கொண்டு விவரிப்பதிலும் இருக்கிறது. ஆனால்..."

"என்ன ஆனால்...?"

''புரவியையும் என்னையும் ஒன்றாக எடை போடுகிறீர்களே, அது சரியா?"

"ஏன் சரியில்லை?"

"அது மிருகம்."

"ஆம்."

"அதுவும் நானும்..."

"ராஜபுத்திரர்களின் வழக்கம் உனக்குத் தெரியாதா?"

"என்ன வழக்கம்?"

"ராஜபுத்திரனுக்குப் புரவியும் மனைவியும் வாளும் சமம். இந்த மூன்றையும் பிறர் கைக்கொள்ள அவன் சம்மதிக்க மாட்டான்."

"அப்படியானால் கையடித்துக் கொடுங்கள்."

"பழக்கத்திற்குக் கையடித்துக் கொடுப்பானேன்?"

"கேள்வி கேட்க வேண்டாம்."

ஹரிதாஸ் ஜாலா ஏதுமறியாமல் அவள் கேட்டபடி ஆணையிட்டான். அவள் சாந்திப் பெருமூச்சுவிட்டாள். "ஏன் ஆணையிடச் சொன்னேன் தெரிகிறதா?" என்றாள்.

"புரியவில்லை."

"நான் உங்கள் மனைவி."

ஹரிதாஸ் ஜாலா மௌனம் சாதித்தான். "என்னைப் பிறர் கைக்கொள்ள நீங்கள் விடக்கூடாது. பிற மாதர் என்ன, ராஜபுதனமே நகைத்தாலும் கைவிடக்கூடாது. தெரிகிறதா?" என்றாள் ராஜபுத்திரி. அடுத்த விநாடி அவள் அவன் முரட்டு அணைப்பிலிருந்தாள். "இல்லை, இல்லை. வேறு யாரும் உன்னைத் தொட விடமாட்டேன்" என்று உணர்ச்சி மேலிட்டு இரைந்து கூவினான் ஹரிதாஸ் ஜாலா.



உணர்ச்சி வேகம் இருவரையும் ஆட்கொண்டது. அந்த வேகத்தில், காதலில், கூடாரத்தின் திரையை விலக்கிக் கொண்டு நின்ற ஓர் ஆடவனை இருவருமே கவனிக்கவில்லை.

## 17. அவன் ஓதிய மந்திரம்

**க**னியில் உறையும் சுவைபோல ஹரிதாஸ் ஜாலாவின் அணைப்பில் உறைந்துவிட்ட ராஜபுத்திரி உலகத்தை மறந்து விட்டாளென்றால், அந்தச் சுவையை ஈர்த்துக்கொண்ட முரட்டுக் கனியும் இதயம் விரிந்து பூரித்த நிலையில் இருந்தபடியால், சுற்றும் முற்றும் நடப்பது என்னவென்று இந்தக் கனிக்கும் தெரியவில்லை. அப்படித் தெரியவில்லையென்பதை அறிந்து கொண்ட எதிரே மஞ்சத்தின் தட்டிலிருந்த மற்ற கனி வர்க்கங்கள், பஞ்சணையிலிருந்த முரட்டுக் கனியை ஏளனத்துடன் நோக்கின. உணவுக்காக வைக்கப்பட்டிருந்த வெடித்த மாதுளைக் கனியொன்று தன் செம்பற்களைக் காட்டி நகைக்கவும் செய்தது. தட்டின் இடையிலிருந்த அறுசுவை உணவு வர்க்கங்கள்கூட எத்தனை நேரம் இவர்களுக்காகக் காத்திருப்பது என்ற கோபத்தினால் புகைந்து கொண்டிருந்தன. காதல் உணர்வுள்ளபோது மற்ற உணர்வுகள் தேவையற்றவை என்பதை அந்தக் கூடாரத்தில் பறந்த கால விநாடிகள் நிரூபித்தன. விநாடிகள் துரிதமாகப் பிரிந்து சென்றனவேயொழிய காதலர் இருவரும் பிரியவில்லை. ஹரிதாஸ் ஜாலாவின் கரங்கள் ராஜபுத்திரியைப் பலமாகப் பிணைத்தே நின்றன. பிரிந்து விலக அந்த முரட்டுக் கரங்கள் அவளை அனுமதிக்கவில்லை. அனுமதிக்கத் தேவையுமில்லை, ராஜபுத்திரி அந்த அனுமதியை

நாடவுமில்லை. அந்த அணைப்பு எத்தனையோ நிம்மதியை அளித்திருந்தது அவளுக்கு.

எதிரே மஞ்சத்திலிருந்த உணவைத் தொடாமலும், திரை விலகிய சத்தத்தைக்கூட கவனியாமலும், தங்களிருவரையும் தவிர உலகத்தில் யாருமில்லையென்ற நினைப்புடனும், தழுவிக் கிடந்த அந்தக் காதலர் இருவரையும் கூடார வாயிலில் நின்று கவனித்த அந்தப் புது மனிதன், வியப்பின் எல்லையை அடைந்தான். அந்த இன்பக் காட்சியை அந்தக் கூடாரத்தில் காண முடியுமென்று அவன் கனவில்கூட நினைக்கவில்லையாகையால், சொல்லவொண்ணா பிரமிப்பின் வசத்தில் சிக்கி நின்ற இடத்தில் அசைவற்றுப் பல விநாடிகள் அவன் நின்றான். காதலர் அணைந்திருக்கும் நிலையில் தான் அங்கு நிற்பது அநாகரிகம் என்பதைக்கூட அந்த மனிதன் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்பதை அவன் முகபாவம் காட்டியது. முகத்தில் நிலவிக் கிடந்தது வெறும் பிரமிப்பு மட்டும்தான். அதிர்ச்சியும் அதில் கலந்திருந்ததா என்பதை நிர்ணயிக்க முடியாத உணர்ச்சிகள் முகத்தில் துரிதமாக ஓடிக்கொண்டிருந்தன. சில விநாடிகள் எதிரே இருந்த காட்சியைப் பார்த்து அசைவற்றுவிட்ட அந்த மனிதனின் கண்கள் மெல்லச் சுரணை அடைந்து நிலத்தை நோக்கின. காதலரை எச்சரிக்கும் பாவனையில் இருமுறை தொண்டையையும் கனைத்துக் காட்டினான் வந்த மனிதன். அந்த ஒலியைக் கேட்டதும் திடீரென மின்னல் தாக்கியதுபோல் அதிர்ச்சியுற்று பிரிந்து பஞ்சணையில் தனித்து உட்கார்ந்த காதலரிருவரும் கூடார வாயிலை நோக்கியதும், வெவ்வேறு விதமான உணர்ச்சிகளை அடைந்தார்கள். ராஜபுத்திரியின் இதயத்தில் கோபம் வழிந்தது. அந்தக் கோபம் முகத்தில் பெரிதும் பரவி, உதடுகளையும் சிறிது துடிக்க வைத்ததால் அந்தத் துடிப்புடனேயே



கேட்டாள் அவள், "உத்தரவின்றி உன்னை யார் வரச் சொன்னது உள்ளே?" என்று.

அந்தக் கேள்வியால் வந்த மனிதன் சிறிதும் கலங்காமலும் சிறிது வினயத்துடனும் பதில் சொன்னான். "ராஜபுத்திரி தனிமையாயிருப்பதாகக் காவலர்கள் சொன்னார்கள். ஆகையால் வந்தேன். துணையுடன் இருப்பதைப்பற்றி யாரும் சொல்லவில்லை" என்று மிகவும் அடக்கத்துடன் பேசுவதுபோல் போக்கிரித்தனத்துடன் பேசினான்.

ராஜபுத்திரியின் விழிகள் அவனை மிகுந்த தைரியத்துடனும் அசட்டையுடனும் எழுந்து நோக்கின. "நான் தனிமையாயிருப்பதாகச் சொன்னார்களா வீரர்கள்" என்று சர்வ சாதாரணமாகக் கேட்டாள் ராஜபுத்திரி.

"அப்படித்தான் சொன்னார்கள். இல்லாவிட்டால்..." என்று இழுத்தான் வந்தவன்.

"உள்ளே நுழைந்திருக்க மாட்டீர்கள்?" என்று வாசகத்தை முடித்துக் கேள்வியைத் திருப்பினாள் ராஜபுத்திரி.

"ஆம், ராஜபுத்திரி" என்றான் வந்தவன்.

ராஜபுத்திரியின் விழிகளில் கோபம் மெள்ளத் துளிர்த்தது. "பெண்கள் தனிமையாயிருக்கும்போது தான் கூடாரத்தில் நுழைவீர்கள்? இதுதான் நீங்கள் ராஜபுதனத்தில் கற்றுக்கொண்ட பண்பாடு?" என்ற ராஜபுத்திரியின் சொற்கள் கலகலவென உதிர்ந்தன.

ராஜபுத்திரியின் சீற்றத்தையோ, சீற்றத்தை வெளிப்படையாகக் காட்டிய கடும் சொற்களைளையோ, வந்த மனிதன் லட்சியம் செய்யாமலே தன் விஷமத்தை அணுவளவும் கைவிடாமல் பேசினான்: "அரசாங்க காரியங்களைத் தனிமையில் பேச ராஜபுதனத்தில்

அனுமதி உண்டு. பெண்கள் தனிமையிலிருந்தாலும் அடிமை அவர்களை அணுகலாம், உத்தரவும் கேட்க லாம்” என்றான் அவன்.

“பெண்கள் எந்த நிலையிலிருந்தாலும் கூடாரத்தில் நுழைய அந்த அனுமதி இடந்தருமா?” என்று கேட்கத் துடித்தது ராஜபுத்திரியின் உள்ளம். ஆனால் அதைக் கேட்க நா எழவில்லையாகையால், அவள் மேற் கொண்டு மௌனமே சாதித்தாள்.

இத்தனை சம்பாஷணையிலும் ஹரிதாஸ் ஜாலா சம்பந்தப்படாமலும், பஞ்சணையில் தான் உட்கார்ந்த இடத்தைவிட்டு அகலாமலும், உட்கார்ந்தது உட் கார்ந்தபடியே வந்த மனிதனைத் தன் கண்களால் ஆராய்ந்து கொண்டிருந்தான். அந்த மனிதன், தங்கள் தனிமையை உடைக்கும் வரை உணர்ச்சி வெள்ளத்தில் சிக்கியிருந்த ஹரிதாஸ் ஜாலாவின் இதயம் திடீரென இறுகிவிட்டதைக் கல்லென மாறிவிட்ட அவன் முகம் சந்தேகமற நிரூபித்தது. அந்த முகம் திடீரென உணர்ச்சி யற்றுக் கல்லாகிவிட்டதைப் பார்த்து வந்த மனிதனும் சற்று எச்சரிக்கையடைந்திருக்க வேண்டும். ஆகவே அவன் மேற்கொண்டு ராஜபுத்திரியுடன் பேசாமலும், அவள் மேற்கொண்ட மௌனத்திற்கு குறுக்கே புகாமலும் ஹரிதாஸ் ஜாலாவிடமே பேச முற்பட்டு, “உன்னை நான் இங்கு எதிர்பார்க்கவில்லை ஹரிதாஸ்” என்றான்.

கிட்டத்தட்ட தன் உயரமும் தன் வயதும் உள்ள அந்த மனிதன் தன்னை நோக்கிப் பேச முற்பட்டதும், முகத்தில் கொஞ்ச நஞ்சமிருந்த உணர்ச்சிகளையும் போக்கடித்தது. ஹரிதாஸ் ஜாலா வறட்டுக் குரலில் பதில் சொன்னான்: “ஆம்; எதிர்பார்க்க நியாய மில்லை” என்று.



“நீ...” என்று ஏதோ துவங்கிய அந்த மனிதனை இடைமறித்த ஹரிதாஸ் ஜாலா, அவன் மனத்திலிருந்த தைப் புரிந்துகொண்டு, “ஆம்; மொகலாயர் சிறையில் தானிருந்தேன்” என்று வார்த்தையை முடித்தான்.

“அப்படியானால்...?” என்று ஏதோ துவக்கினான் வந்தவன்.

“விடுதலை செய்தார்கள். வந்தேன்” என்று வறட்டுக் குரலிலேயே பதில் சொன்னான் ஹரிதாஸ் ஜாலா.

“அது தெரியும்...” என்று மேலும் ஏதோ சொல்லப் போன அந்த மனிதன், திடீரெனப் பேச்சைப் பாதியில் அறுத்துக் கொண்டான். அவன் முகத்தில் அச்சத்தின் சாயையும் லேசாகப் படர்ந்தது.

அந்த மனிதனின் வார்த்தைகள் திடீரென அறுந்த தையும், முகத்தில் விநாடியே துளிர்த்துவிட்டு மறைந்த அச்சத்தின் சாயையும் கண்ணிமைக்கும் நேரத்தில் கவனித்துவிட்ட ஹரிதாஸ் ஜாலா, “சுந்தர்தாஸ் உனக்கு என் மீதிருக்கும் அக்கறை மட்டும் ராஜபுதனத் தில், மற்றவர்களுக்கிருந்தால் இத்தனை நாள் மொக லாயர் சிறையில் இருந்திருக்க மாட்டேன். ஆனால் உனக்கிருக்கும் வசதி மற்றவர்களுக்குக் கிடையாது. ஆகவே அவர்கள் மீது பழி சொல்லியும் பயனில்லை” என்றான்.

அதுவரை சுந்தர்தாஸின் முகத்திலிருந்த திடம் திடீ ரென மறைந்தது. “வசதியா! என்ன சொல்கிறாய் ஹரி தாஸ்?” என்று குழப்பத்துடன் கேட்டான் சுந்தர்தாஸ்.

ஹரிதாஸ் ஜாலாவின் இதழ்கள் இகழ்ச்சியுடன் மடிந்தன. அவன் மேல்பற்கள் இரண்டும் கீழுதட்டை லேசாகக் கடித்தன. அடுத்துச் சொன்னான் ஹரிதாஸ்

ஜாலா: "அதைப்பற்றிப் பிறகு பேசுவோம், வேறு அவகாசம் இருக்கிறது" என்று.

"அவகாசமிருக்கிறதா!" என்று குழப்பத்துடன் வின வினான் சுந்தர்தாஸ்.

"நிரம்ப இருக்கிறது" என்று கூறிய ஹரிதாஸ் ஜாலா, "உள்ளே வா சுந்தர்தாஸ். அப்படி உட்கார்" என்று சற்று தூரத்திலிருந்த மஞ்சத்தைச் சுட்டிக் காட்டினான்.

விலக்கிய திரையைத் தொங்கவிட்டு உள்ளே வந்து, ஹரிதாஸ் ஜாலா சுட்டிக்காட்டிய ஆசனத்தில் அமர்ந்த சுந்தர்தாஸின் முகத்தில் குழப்பம் முன்னை விட அதிகமாயிற்று. அந்தக் குழப்பத்தை உச்ச நிலைக் குக் கொண்டு போக வினவினான் ஹரிதாஸ் ஜாலா, "நாம் இருவரும் பரஸ்பரம் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன சுந்தர்தாஸ். அதற்கு நிரம்ப அவகாசமும் இருக்கிறது. ஆகவே அந்த விஷயங்களை இப்பொழுது பேச வேண்டாம். பிறகு தனிமையில் பேசிக் கொள்வோம்" என்று மேலும் ஏதோ சொல்லப் போவதை இடைமறித்த இராஜபுத் திரி கேட்டாள்: "நீங்களிருவரும் தனிமையில் பேச வேண்டிய விஷயங்கள் அத்தனை இருக்கிறதா?" என்று.

"கொள்ளை இருக்கிறது" என்று பதில் சொன்ன ஹரிதாஸ் ஜாலா, "வேண்டுமானால் சுந்தர்தாஸைக் கேட்டுப்பார் ராஜபுத்திரி" என்றான்.

சுந்தர்தாஸின் முகத்தில் விவரிக்க இயலாத உணர்ச் சிகள் தாண்டவமாடின. ஹரிதாஸ் ஜாலா தன்னைப் பெரும் ஆபத்தான வழியில் இறக்குகிறானென சந்தேக மறப் புரிந்து கொண்டான் சுந்தர்தாஸ். தவிர ராஜ புத்திரியை அவன் ஏக வசனத்தில் அழைப்பதையும் கவனித்தான். அதைக் காரணமாக வைத்துப் பேச்சைத்



திருப்ப முயன்ற சுந்தர்தாஸ், "ராஜபுத்திரியை மரியாதையின்றி அழைப்பது..." என்று நிறுத்தினான்.

"தவறுதான்." தயக்கமின்றி வந்தது ஹரிதாஸ் ஜாலாவின் பதில்.

"தவறை ஏன் செய்ய வேண்டும்?"

"ஒரு தவறு பல தவறுகளுக்கு அடிகோலுகிறது."

"ஒரு தவறா!"

"ஆம். நீ நுழைந்தபோது ஒரு தவறு நடந்ததை கவனித்தாய். தலைக்கு மேல் ஓடிய வெள்ளம் சாண் போனால் என்ன, முழம் போனாலென்ன?"

இந்த இடத்தில் குழப்பத்தை உதறிய சுந்தர்தாஸ் திடீரென ஆசனத்திலிருந்து எழுந்து, "இதை இனிமேல் நான் அனுமதிக்க முடியாது" என்றான்.

"எதை சுந்தர்தாஸ்?" இரும்பில் இரும்படித்தது போன்ற ஒலியில் வெளிவந்தன ஹரிதாஸ் ஜாலாவின் கேள்வி.

"ராஜபுத்திரியை நீ மரியாதையின்றி நடத்துவதை."

"அனுமதிப்பதற்கும் அனுமதிக்காதிருப்பதற்கும் நீ யார்?"

"அரசரின் ஆணை பெற்றவன்."

"என்ன ஆணை?"

"ராஜபுத்திரியைத் தேடிப் பிடித்து எந்தத் தீங்கும் நேரிடாமல் காத்து அழைத்து வருமாறு ராணா அமர சிம்மன் உத்தரவு பெற்று வந்திருக்கிறேன்."

"நான் ராஜபுத்திரியுடனிருப்பது ராணாவுக்குத் தெரிந்திருக்காது."

“தெரியாது.”

“தெரிந்திருந்தால்...”

“உன்னைச் சிறை செய்து கொண்டு வரவும் உத்தரவிட்டிருப்பார்.”

“ஏனப்படி உத்தரவிட வேண்டும்?”

“ஒற்றர்களை ராஜபுதனத்தில் சிறை செய்யாமல் என்ன செய்வார்கள்?”

இந்த இடத்தில் சற்று நிதானித்த ஹரிதாஸ் ஜாலா எழுந்திருந்து சுந்தர்தாஸின் எதிரில் வந்து நின்றான்.

“நான் மொகலாய ஒற்றனென்று ராணாவுக்குத் தெரியுமா?” என்று கேட்டான்.

இப்படிக் கேட்ட ஹரிதாஸ் ஜாலாவின் குரலிலும், அவன் நின்ற தோரணையிலும், ஏதோ விபரீதமிருப்பதைக் கண்ட சுந்தர்தாஸ் சற்று எச்சரிக்கையுடனேயே பேசினான்.

“தெரியும்” என்று.

“ஒற்றனென்று தெரியுமா? தூதனென்று கூடத் தெரியுமா?” என்று ஹரிதாஸ் ஜாலா மீண்டும் வினவினான்.

“இரண்டுக்கும் அதிக வித்தியாசமிருக்க முடியாதென்று ராணா நினைக்கிறார்.”

“அவரை அப்படி நினைக்கச் செய்தது யார்?” சுரீலென எழுந்தது ஹரிதாஸ் ஜாலாவின் கேள்வி.

“அது யாரோ! எனக்கெப்படித் தெரியும்!”

ஹரிதாஸ் ஜாலாவின் குரல் திடீரென மாறியது. குரலில் அதுவரையில் தெரிந்த உஷ்ணம் மாறியது.



“ஆம் ஆம், உனக்கெப்படித் தெரியும்?” என்று ஒப்புக் கொண்ட ஹரிதாஸ் ஜாலா, சுந்தர்தாஸின் தோளில் கையைப் போட்டு மஞ்சத்திலிருந்து அவனை எழுப்பினான். அந்த இரும்புப் பிடியில் தப்ப முடியாமல் எழுந்த சுந்தர்தாஸை அணைத்தபடியே கூடாரத்தின் வாயிலை நோக்கித் திரும்பிய ஹரிதாஸ், “சுந்தர்தாஸ்! இன்னும் ஒரு நாழிகைக்குள் நாம் பயணமாக வேண்டும். வெளியே சென்று வீரர்களைப் பயணத்துக்குத் தயார் செய்” என்று கூறிக்கொண்டே வாயிலை நோக்கி இரண்டடி நகர்ந்தான்.

“நீ, நீ ஹரிதாஸ்!” என்று விளக்கம் காணாத குரலில் கேட்டான் சுந்தர்தாஸ்.

“என் மனைவியுடன் உணவருந்திவிட்டு வருகிறேன்” என்ற ஹரிதாஸ் ஜாலாவின் பதில், சுந்தர்தாஸை அயர வைத்தது. “என்ன! உன் மனைவியா! யார் உன் மனைவி?” என்று திடீரென திரும்பிக் கேட்டான் சுந்தர்தாஸ்.

“நான் சொல்ல வேண்டுமா சுந்தர்தாஸ்?” என்று கேட்டான், ஹரிதாஸ் புன்முறுவலொன்றை உதடுகளில் விட்டு.

“ராஜபுத்திரி உன் மனைவியா! இருக்க முடியாது!” என்று கூவினான் சுந்தர்தாஸ்.

“அதற்கு என்ன தடையிருக்கிறது?” என்று கேட்டு நகைத்தான் ஹரிதாஸ் ஜாலா.

“ராணா ஒப்புக் கொள்ள மாட்டார்.”

“ஏன்?”

“ராஜபுத்திரியை வேறொருவருக்கு மணமுடிக்கத் திட்டமிட்டிருக்கிறார்.”

"ராணா எப்பொழுது புரோகிதரானார்?" என்று கேட்டு நகைத்தான் ஹரிதாஸ் ஜாலா சற்று இரைந்தே.

சுந்தர்தாஸ், ஹரிதாஸ் ஜாலாவின் இரும்புப் பிடியிலிருந்து விலகி அவனைச் சுடும் விழிகளால் நோக்கினான். "ஹரிதாஸ்! ராணாவை அவமதிப்பவர்களுக்கு ராஜபுதனத்தில் என்ன தண்டனை தெரியுமா?" என்று வினவினான் கோபத்துடன்.

"தெரியும், மரண தண்டனை" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"தெரிந்துமா அவரை அவமதிக்கிறாய்?" என்று வினவினான் சுந்தர்தாஸ்.

"அதுமட்டும் தெரிந்திருந்தால் அப்படிப் பேசியிருக்க மாட்டேன்" என்றான் ஹரிதாஸ் ஜாலா. இதைச் சொன்ன ஹரிதாஸ் ஜாலாவின் குரலில் விபரீத ஒலியிருந்ததைக் கவனித்தான் சுந்தர்தாஸ். "வேறென்ன தெரியும் உனக்கு?" என்று கேட்டான் சந்தேகத்துடன்.

ஹரிதாஸ் ஜாலாவின் பதில் நிதானமாகவும் அழுத்தமாகவும் வந்தது. "ராஜ துரோகத்துக்கும் மரண தண்டனை உண்டு என்பதும் எனக்குத் தெரியும். அது மட்டுமல்ல..."

அந்தச் சிரிப்பில் பெரும் ஆழமிருந்ததைக் கவனித்த சுந்தர்தாஸ் வேகமாக நடுங்கினான். "வேறென்ன!" என்று நடுக்கத்துடன் கேட்கவும் செய்தான்.

"தூக்கிலாடுவதானால், நான் தனியாக ஆட மாட்டேன் என்பதும் நிச்சயம்!" என்று மீண்டும் நகைத்தான்.



அந்த நகைப்பு சுந்தர்தாஸுக்கு வேப்பெண்ணெயாக இருந்தது. ஏதும் பதில் சொல்லாமல் சரேலென வெளியேறினான் அவன்.

அவன் வெளியேறியதும் சர்வ சாதாரணமாகத் திரும்பிப் பஞ்சணையில் வந்து உட்கார்ந்துகொண்ட ஹரிதாஸ் ஜாலா, "ராஜபுத்திரி! வா உணவருந்துவோம், நேரமாகிறது புறப்பட" என்றான்.

அதுவரை ஹரிதாஸுக்கும் வந்த மனிதனுக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த ராஜபுத்திரியின் இதயத்தில் வேதனை ஆறு பலமாக ஓடிக் கொண்டிருந்தது. சுந்தர்தாஸின் பேச்சு பலப்பல போராட்டங்களை அவள் மனத்திலே சிருஷ்டித்தன. அப்படி மனம் நிலைகுலைந்து நின்றதால் உணவைத் தொடவும் முற்படவில்லை ராஜபுத்திரி. ஹரிதாஸ் ஜாலா அவள் சித்தத்திலே சுழன்ற எண்ணங்களையெல்லாம் புரிந்து கொண்டான். ஆகவே அவளை ஒரு கையால் அணைத்து மற்றொரு கையால் மாதுளைக் கனியை எடுத்து, "இந்தா ராஜபுத்திரி, இதைச் சாப்பிடு" என்று அவள் மலர்க் கையில் கொடுத்தான்,

மாதுளைக் கனி அவள் வாயருகில் செல்லவில்லை. "அவன் சுந்தர்தாஸ்..." என்று சொற்களை மட்டும் உதடுகள் உதிர்த்தன.

"யாரைப்பற்றியும் அஞ்சாதே ராஜபுத்திரி. சுந்தர்தாஸல்ல, ராணாவல்ல, ராஜபுதனம் முழுவதும் திரண்டாலும் ஹரிதாஸிடமிருந்து அவன் மனைவியைப் பிடுங்க முடியாது. மனைவி, வாள், குதிரை மூன்றும் இன்னொருவன் வசப்படுவதை எந்த ராஜ புத்திரனும் அனுமதிக்க மாட்டானென்பதை முன்பே ஒருதரம் நான் சொல்லவில்லை?" என்று ஆதரவுடன் அந்த வார்த்தைகளைச் சொன்ன ஹரிதாஸ், அவளை

மெள்ள மெள்ள உணவருந்த வைத்தான். நீரைத் தான் எடுத்துக் குவளையிலிருந்து ஊற்றிக் குடித்த அரச குமாரியின் அதரங்களைத் தன் கையாலேயே துடைத் தான். பிறகு அவள் முதுகைத் தட்டிக் கொடுத்து, "ராஜ புத்திரி! நம் வாழ்வு சிக்கலில் துவங்கியது. சிக்கலில் மேலும் ஆழ்கிறது. இருப்பினும் கவலைப்படாதே. சிக்கலை அவிழ்க்க என்னிடம் மந்திரமிருக்கிறது" என்று ஆதரவுடன் சொன்னான்.

"என்ன மந்திரம்?" என்று கேட்டாள் ராஜபுத்திரி.

மந்திரத்தை அவள் காதில் ஓதினான் ஹரிதாஸ். அவள் முகத்தில் விவரிக்க இயலாத நிகழ்ச்சிகள் தென் பட்டன. "அந்த விஷயம் உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும்" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"யார் சொன்னது உங்களுக்கு?" என்று வினவினாள் அவள்.

ஹரிதாஸ் ஜாலா பதில் சொலலாமலே அவளை விட்டு வெளியே சென்றான்.

'யார் சொன்னது இவருக்கு! யார் சொன்னது? பெரும் மர்மம் என்றல்லவா நான் நினைத்துக் கொண் டிருக்கிறேன்' என்று வியப்பில் அசைவற்றுப் பல விநாடிகள் கூடாரத்தின் நட்டநடுவில் நின்று விட்டாள் ராஜபுத்திரி.

## 18. முதல் படி

இருப்பது சொர்க்கமா, பூமியா என்ற நிலையில் ஆழ்ந்து கிடந்த தங்களிருவருக்கும் குறுக்கே புகுந்து



சுந்தர்தாஸ் பேசிய பேச்சால் திக்பிரமை பிடித்து அடியோடு நிலை குலைந்து போன ராஜபுத்திரிக்கு. தானே கனிவர்க்கங்களை ஊட்டி நீரையும் குவளையில் ஊற்றிப் பருக வைத்த ஹரிதாஸ் ஜாலா, "நம் வாழ்வு சிக்கலில் துவங்கியது சிக்கலில் மேலும் ஆழ்கிறது. இருப்பினும் அஞ்சாதே" என்று தைரியம் சொன்ன தன்றி, அப்படி ஏற்பட்ட சிக்கலை அவிழ்க்கவும் தன்னிடம் மந்திரம் இருப்பதாகக் கூறி, அவள் காதில் அந்த மந்திரத்தை ஓதியதும், ராஜபுத்திரி பெரும் பிர மிப்புக்குள்ளானாள். தான் பெரும் மர்மம் என்று நினைத்துக்கொண்டு இருக்கும் அந்த விஷயத்தை ஹரிதாஸ் ஜாலா எப்படித் தெரிந்து கொண்டான் என்பதும் அவளுக்குத் தெரியாத புதிராயிருந்தது. ராஜ ரகசியமென்று ராஜபுதனப் பிதாமகரான ஜயன் சந்தாவத்தே தன்னிடம் தனிமையில் கூறியிருக்கும் அந்த மர்மம், யார் மூலமாக வெளியாகி இருக்கும் என்று நினைத்துப் பார்த்து மேலும்மேலும் பிரமிப்பே அடைந்தாள் ராஜபுத்திரி. இந்த மர்மம் வெளியானால் ராஜபுதன வீரர்களுக்கு இடையே பெரும் கலவரம் ஏற்படும் என்பதையும், மேவாரின் பிற்காலத்துக்கும் அதனால் விபரீத விளைவுகள் உண்டாகுமென்பதை யும் அறிந்திருந்த ராஜபுத்திரி சற்று வருத்தப்பட்டாலும், அந்த மர்மத்தை ஹரிதாஸ் அறிந்திருப்பது அவனுக்குப் பெரும் கவசமென்பதை உணர்ந்து கொண்டாளாகை யால் உள்ளூரத் திருப்தியும் அடைந்தாள்.

அவன் மந்திரத்தை மெள்ளத்தான் ராஜபுத்திரியின் காதில் ஓதினான். இருப்பினும் அவன் சொற்கள் மிகப் பெரிதாக அவள் காதில் ஒலித்தன. "சுந்தர் தாஸைப் பற்றிக் கவலைப்படாதே ராஜபுத்திரி. இவனையும் அவசியமானால் ராணாவையும் நாம் பெரும் ஆபத்தில் சிக்க வைக்க முடியும்" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

வியப்பு மண்டிய விழிகளை அவன் மீது திடீரெனத் திருப்பியதால், காதுக்கருகிலிருந்த அவன் உதடுகள் அவள் கன்னத்தில் உராய்ந்தன. அந்த இன்பத்தைக் கூட கவனிக்காத ராஜபுத்திரியின் இதயத்தில் அந்தச் சமயத்தில் வியப்பே மண்டிக் கிடந்ததால், அந்த வியப்பும் அது சம்பந்தமான கேள்வியுமே அவள் கண்களில் விரிந்து கிடந்தன. கேள்வியைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா மீண்டும் அவள் கன்னத்தைத் தன் கையால் திருப்பிக் காதுக்கருகில் உதடுகளைக் கொண்டு போய், "ஜஹாங்கீரிடம் ரகசியப் பேச்சு வார்த்தை ராணா நடத்துகிறார். அது ராஜபுதனத்தில் யாருக்கும் தெரியாது. இதைப்பற்றி மூச்சு விடாதே யாரிடமும்" என்று கூறிவிட்டு எழுந்து, வீரர்களைப் பயணத்துக்குத் தயார் செய்ய வெளியே சென்றான்.

மொகலாயரிடம் பலமாகப் போர் தொடுத்து ராணா பிரதாப்பின் பெயருக்குப் பெருமை தேடிவிட்டார் என்று ராஜபுதனம் கொண்டாடி வந்த ராணா அமரசிம்மன், உண்மையில் யாரோ ஒரு தூதன் மூலம் மிக ரகசியமாக ஜஹாங்கீரிடம் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக பிதாமகரே ராஜபுத்திரியிடம் மிக ரகசியமாகச் சொல்லியிருந்தார். "ராஜபுத்திரி! நான் உயிருடனிருக்கும் வரையில் ராணா ராஜபுதனத்தின் கௌரவத்தை விற்றுவிட அனுமதிக்க மாட்டேன். அது நடப்பதானால் என் ஆயுட்காலத்துக்குப் பின்புதான் நடக்க வேண்டும். இதை மனத்திற்குள் வைத்துக்கொள். ராணாவை நானே கவனித்து வருகிறேன். அவர் சிறிது முறை பிசகி நடந்தாலும் போரை நிறுத்த ஏற்பாடு செய்தாலும், ஒன்று நானிருக்க மாட்டேன். அல்லது அவரிருக்க மாட்டார்" என்று சொல்லியிருந்தார்.



ராஜபுத்திரிக்குப் பிதாமகரின் பேச்சைக்கூட நம்புவது கடினமாய் இருந்தது. 'மொகலாயர்களைத் தன்னந்தனியாக ஆயுள் முழுவதும் போரிட்டு ராஜபுதனத்தின் கௌரவத்துக்காகவே காட்டுக் குடிசையில் மாண்ட ராணா பிரதாப்பின் மைந்தன் மொகலாயரிடம் சரண்புக விரும்புவானா?' என்று கூடப் பல முறை அவள் தன்னைத்தானே கேட்டுக் கொண்டிருக்கிறாள். இருப்பினும் பிதாமகர் பொய் சொல்ல மாட்டார் என்பதையும் முதலில் போரிலிறங்க மறுத்த ராணாவை, அரியணையிலிருந்து அவர் கையைப் பிடித்து இழுத்து இறக்கியதையும், அவள் கேள்விப்பட்டிருந்தாளாகையால் அத்தகைய ராணா ஒருவேளை சமாதானத்தை விரும்பினாலும் விரும்பலாமென்று நினைத்தாள். 'என்ன இருந்தாலும் பிரதாப்பின் மைந்தன் போரை நிறுத்த மாட்டார். நிறுத்தினாலும் பிதாமகர் சம்மதிக்க மாட்டார். பிதாமகர் சம்மதப்படாமல் ராஜபுதனத்தில் எதுவும் நடக்க முடியாது' என்றும் அடிக்கடி தன்னுள் சொல்லிக் கொண்டாள். அப்படித் தன்னுள் சர்ச்சை செய்து கொண்டு பிதாமகருக்கும் தனக்கும் மட்டுமே தெரியுமென்று நினைத்திருந்த அந்த ராஜ ரகசியம், இரண்டு வருடங்கள் மொகலாயர் சிறையிலிருந்து விட்டு வந்துள்ள ஹரிதாஸ் ஜாலாவுக்குத் தெரிந்தது பெரும் வியப்பாகவே இருந்தது அவளுக்கு. அந்த வியப்புடன் பயண உடை அணிந்து பஞ்சணையில் உட்கார்ந்திருந்த ராஜபுத்திரி, சிறிது நேரத்திற்குப் பின் ஹரிதாஸ் ஜாலா வீரர்களை சித்தப்படுத்தி அவளை அழைத்துச் செல்ல உள்ளே வந்ததும், அவனை அதைப்பற்றிக் கேட்கவும், செய்தாள், "உங்களுக்கு எப்படித் தெரிந்தது அது?" என்று வினவினாள் ராஜபுத்திரி.

ஹரிதாஸ் ஜாலா அவளுக்கு வெகு அருகில் வந்தான். அவள் தோள் மீது தனது இரு கைகளையும்

வைத்துக் கொண்டு அவள் விழிகளைக் கூர்ந்து நோக்கினான். "எது ராஜபுத்திரி?" என்று கேட்கவும் செய்தான்.

"சற்று முன்பு காதுக்கருகில் ஓதினீர்களே. அது."

"அதுவா!" என்று சர்வ சாதாரணமாகச் சொன்ன ஹரிதாஸ், "புறப்படு. ராஜபுத்திரி, புரவியில் போகும் போது பேசிக்கொண்டே போகலாம்" என்ற அவன் ஒரு கையைப் பிடித்து அவளை மஞ்சத்திலிருந்து எழுப்பினான்.

அவன் அப்படித் தூக்கியதால் எழுந்து உடலுடன் உடல் உராய நின்ற ராஜபுத்திரி, "புரவியில் போகும் போதுதான் பேசமுடியாதே" என்றாள்.

"ஏன்?"

"அவன் இருப்பானே கூட."

"ஆம்."

"அவனைப் பற்றிக் கவலைப்படாதே."

"அவன் உங்களை பயமுறுத்தினானே."

"அதைவிட நான் பன்மடங்கு பயமுறுத்தியிருக்கிறேன், கவலைப்படாதே. அவன் நம்மிடம் மிகுந்த எச்சரிக்கையுடனிருப்பான் இனி."

"என்ன அவ்வளவு திடமாகச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள் ராஜபுத்திரி, ஹரிதாஸ் ஜாலாவின் தோளில் ஒரு கையை வைத்துத் தனது தலையைத் தூக்கி அவன் முகத்தை நோக்கி.

"பாம்பின் கால் பாம்பறியும் ராஜபுத்திரி" என்றான் ஹரிதாஸ் ஜாலா.



"நீங்களும் பாம்பா?" என்று வினவினாள்.

"அப்படியும் வைத்துக் கொள்ளலாம்."

"நீங்கள் விஷப் பிராணியா?"

"நல்லவர்களுக்கு நான் விஷப் பிராணியல்ல, விஷப் பிராணிகளுக்கு நான் விஷப் பிராணிதான். உதாரணமாக சுந்தர்தாஸ் இருக்கிறானே, அவன் சம்பந்தப்பட்ட வரையில் நான் சிறிதும் கருணை காட்ட மாட்டேன்."

ராஜபுத்திரி சிறிது நேரம் யோசித்து விட்டுச் சொன்னாள், "பிதாமகருக்கும் இவனிடம் நல்ல அபிப்பிராயமில்லை" என்று.

ஹரிதாஸ் ஜாலா அவள் கபோலங்களைத் தடவிக் கொடுத்துக் கொண்டே, "ராஜபுத்திரி, அதுவும் எனக்குத் தெரியும், அவனை உதறிவிட பிதாமகர் எத்தனையோ முயன்றும், ராணாவின் கரம் அவனைக் காப்பதால் முடியவில்லையென்பதும் எனக்குத் தெரியும். சுந்தர்தாஸ் வடிகட்டின அயோக்கியன். சுயநலத்துக்காக எதையும் செய்ய அஞ்சமாட்டான், ஆனால் அவன் செய்த துரதிருஷ்டம் நான் திடீரென இங்கு வந்து குதித்து விட்டேன்" என்று கூறினான்.

ராஜபுத்திரிக்கு முழு உண்மை விளங்காவிட்டாலும் ஓரளவு உண்மை தெரிந்தது. சுந்தர்தாஸின் சுயநலத்துக்கு ஹரிதாஸ் வருகை பெரும் இடைஞ்சல் என்பதை அவள் புரிந்து கொண்டாள். அது மட்டுமல்லாமல் சுந்தர்தாஸுக்கும் ஹரிதாஸுக்கும் தன் முன்னிலையில் நடந்த உரையாடலில் இருந்து, சுந்தர்தாஸைப் பற்றி மற்ற யாருமே அறியாத பல உண்மைகளை ஹரிதாஸ் அறிந்திருந்தான் என்பதையும் உணர்ந்து கொண்டாள். ஆனால் ஒரு விஷயம் புரியவில்லை

ராஜபுத்திரிக்கு. 'இவர் ராஜ துரோகத்தைப் பற்றி ஏதோ பேசினாரே! அதன் கருத்து என்ன? சுந்தர்தாஸ் ராஜ துரோகியா? ராஜ துரோகியானால் ராணாவுக்கு ஏன் உடந்தையாய் இருக்கிறான்? ராணாவின் உள்ளெண்ணத்தை நிறைவேற்றுபவன் எப்படி ராஜ துரோகியாக முடியும்? எல்லாம் முழு முரண்பாடாக இருக்கிறதே' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். அவள் உள்ளத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா கூறினான்: "ராஜபுத்திரி! உனக்கு இப்பொழுது பல விஷயங்கள் புரியாது. போகப்போக நீயே புரிந்து கொள்வாய். இப்பொழுது ராஜபுதனத்தில் இரண்டு கட்சிகள் இருப்பதை மட்டும் புரிந்துகொள். ஒன்று சுதந்தரக் கட்சி, இன்னொன்று சுயநலக் கட்சி" என்று.

"சுதந்தரக் கட்சியில் இருப்பது யார்? சுயநலக் கட்சியில் இருப்பது யார்?' என்று வினவினாள் ராஜபுத்திரி.

"சுதந்தரக் கட்சியில் ஜயன் சந்தாவத்தால் காக்கப்பட்ட ராஜபுதனம் முழுவதும் இருக்கிறது!" என்றான்.

"சுயநலக் கட்சியில்?"

"இரண்டே பேர்."

எந்த இருவரைக் குறிப்பிடுகிறான் ஹரிதாஸ் ஜாலா என்பதை ராஜபுத்திரி புரிந்து கொண்டாலும், அதைப் புரிந்து கொள்ளாததுபோல் கேட்டாள்: "யார் அந்த இருவர்?" என்று.

"ஒருவர் ராணா அமரசிம்மன், இன்னொருவன் சுந்தர்தாஸ்" என்று கூறிய ஹரிதாஸ் ஜாலா, "அஞ்சாதே ராஜபுத்திரி! தவிர்க்க முடியாத சக்தி ஜயன் சந்தாவத்துக்கு உதவும்" என்றும் குறிப்பிட்டான்.



"எது எந்தச் சக்தி?" என்று ராஜபுத்திரி வினவியதற்குத் தன் இடையிலிருந்து வாளைப் பெருமையுடன் தட்டிக் காட்டிய ஹரிதாஸ் ஜாலா, அதற்குமேல் உரையாடலை வளர்த்த விடாமல் ராஜபுத்திரியை அழைத்துக் கொண்டு வெளியே சென்றான்.

பயணத்துக்குப் புரவி வீரர்கள் சித்தமாக நின்றிருந்தார்கள். அவர்களில் இருவர் ராஜபுத்திரியின் புரவியையும் ஹரிதாஸ் ஜாலாவின் புரவியையும் அக்கம் பக்கத்தில் நிறக வைத்துக் கடிவாளங்களைப் பிடித்துக் கொண்டு காத்திருந்தார்கள். சற்றுப் பின்னடைந்து புரவியுடன் நின்று கொண்டிருந்த சுந்தர்தாஸ், ராஜபுத்திரியும் ஹரிதாஸ் ஜாலாவையும் கூடாரத்திலிருந்து புன் சிரிப்புடன் ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ந்து கொண்டு வந்ததையும், இருவரும் தன்னைக் கவனியாமலே புரவிகளின்மீது ஏறிவிட்டதையும் கண்டு பொறாமைப் பெருமூச்சுவிட்டான். அவ்விருவரும் புரவிகள் மீது ஏறியதும் ஹரிதாஸ் ஜாலாவின் உத்தரவுப்படி மற்ற வீரர்கள் புரவிகள் மீது ஏறி, வரிசையாகப் பின் தொடர்ந்ததும் சுந்தர்தாஸும் புரவி மீது ஏறி வேகமாகத் தன் புரவியை ராஜபுத்திரிக்குப் பக்கத்தில் கொண்டு போய் சரி சமானமாகச் சவாரி செய்ய முற்பட்டான்.

அவன் அப்படித் தன்னருகில் வந்ததைச் சிறிதும் லட்சியம் செய்யாத ராஜபுத்திரி தலையை ஆணவத்துடன் நிமிர்த்தி புரவியைத் தனது இடது காலால் சற்று உதைத்து ஹரிதாஸ் ஜாலாவின் குதிரைக்கு வெகு அருகில் அதைச் செலுத்திக் கொண்டே சென்றாள். அதை கவனித்த சுந்தர்தாஸின் உள்ளத்தில் கோபம் பெரிதும் சுடர் விட்டாலும், அதைக் காட்டிக் கொள்ளாமலே பயணம் செய்தான் சுந்தர்தாஸ். இருப்பினும் அவன் முகபாவத்தாலும், புரவியில் உட்கார்ந்திருந்த

முறையாலும் அவன் உள்ளக் கொந்தளிப்பை உணர்ந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அந்தப் பொறாமை நெருப்புக்கு எண்ணெய்விட முற்பட்டு, "ராஜபுத்திரி! கூடாரத்தில் என்னிடம் ரகசியமாக ஏதோ சொன்னாயே..." என்று பேச்சைத் தொடங்கினான்.

ராஜபுத்திரி அவன் மனோபாவத்தைப் புரிந்து அவனுக்குச் சரியாகப் பேச ஆரம்பித்து, "ரகசியம் நான் எங்கு சொன்னேன்? நீங்கள் அல்லவா என் காதுக் கருகில் முணுமுணுத்தீர்கள்" என்றாள்.

"பொய் சொல்லாதே!" என்றான் ஹரிதாஸ் ஜாலா சிரித்துக் கொண்டு.

"நானா பொய் சொல்கிறேன்?"

"ஆம்."

"என்ன பொய் சொன்னேன்?"

"நான் ரகசியம் சொன்னதாகச் சொன்னாயே?"

"அது பொய்யா?"

"ஆமாம். நான் சொன்னது உனக்கு முன்பே தெரிந்திருக்கிறது. அப்படியிருக்க அது எப்படி ரகசியமாகும்?"

அதைக் கேட்ட ராஜபுத்திரி கலகலவென நகைத்தாள். அந்தச் சிரிப்பை அடியோடு வெறுத்த சுந்தர்தாஸின் இதயத்தில் கோபம் கொழுந்துவிட்டு எரிந்தது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அவர்கள் பேச்சைக் கேட்க இஷ்டப்படாத சுந்தர்தாஸ், தன் குதிரையின் வேகத்தைச் சிறிது தளர்த்திப் பின்னடையச் செய்தான். அவன் பின்னடைந்து விட்டதை கவனித்த ராஜபுத்திரியும் ஹரிதாஸ் ஜாலாவும்



பெரிதாக நகைத்தார்கள். அந்த நகைப்பைத் தொடர்ந்து ஹரிதாஸ் ஜாலா சொன்னான்: "இதில் மட்டும் பின்னடைவதில்லை ராஜபுத்திரி" என்று.

"எதில்? போரிலா?" என்று கேட்டாள் ராஜபுத்திரி. காதல் ததும்பும் விழிகளை அவன் மீது திருப்பி.

அவன் கண்களும் அவள் கண்களைச் சந்தித்தன. "போரிலும் சரி, காதலிலும் சரி" என்று மெள்ளப் பேசுவதுபோல் பின்னால் வந்துகொண்டு இருந்த சுந்தர்தாஸின் காதில் விழும்படி கூறினான்.

சுந்தர்தாஸின் மனம் வெடித்துவிடும் எரிமலையின் நிலையிலிருந்தது. முன் சென்ற இருவரும் தன்னை ஏளனம் செய்கிறார்களென்பதை அவன் புரிந்து கொண்டான். இருப்பினும் உணர்ச்சிகளை அடியோடு அடக்கிக் கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்தான். வழியெல்லாம் அந்தக் காதலர் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டு சென்றார்கள். ஹரிதாஸ் ஜாலா ஒருமுறை பெரிதாக நகைத்தான். இந்தக் கதை ஆரம்பத்தில் அவன் சிரித்த வறட்டு சிரிப்பல்ல இம்முறை அவன் நகைத்தது. இந்த நகைப்பில் வறட்சியில்லை, வளம் இருந்தது; மன வறட்சியில்லை, வளம் இருந்தது; மன வெறுப்பு இல்லை. மகிழ்ச்சி இருந்தது, கவலையில்லை காதல் இருந்தது.

இப்படிச் சிரித்த ஹரிதாஸ் ஜாலாவைக் கண்ட சுந்தர்தாஸின் மனம் மேலும் மேலும் எரிந்தது. அவன் உள்ளத்தில் தன் வெறுப்பைக் காட்டவும் ஹரிதாஸைத் தீர்த்துக் கட்டவுமான திட்டம் ஒன்று உருவாயிற்று. பெரும் அபாயமான திட்டத்தை வகுத்தான் சுந்தர்தாஸ், அன்றிரவு அவர்களனைவரும் ஒண்டாலா கோட்டையை அடைந்ததுமே, திட்டத்தின் முதற்படியை நிர்மாணித்தான் சுந்தர்தாஸ், முதற்படியே பயங்கர

மாய் இருந்தது. பெரும் குழப்பத்தையும் ஹரிதாஸ் ஜாலாவின் இதயத்தில் உண்டாக்கியது. அந்த முதற்படி ராணாவின் முதற்கட்டளை. அந்தக் கட்டளையைத் தூண்டியவன் சுந்தர்தாஸ் என்பதை அறிந்த ஹரிதாஸ் ஜாலா, என்ன செய்வதென்றறியாமல் திகைத்தான்.

## 19. மணக்கோலம்

ஹரிதாஸ் ஜாலாவும் ராஜபுத்திரியும் சிரித்துக் கொண்டும் பேசிக்கொண்டும் பரஸ்பரம் காதல் சொட்டும் கண்களால் பார்த்துக் கொண்டும் உல்லாச மாகப் பயணம் செய்ததால் ஊள்ளூரப் பொறாமைத் தீ சுடர் விட்டு எரிய, அந்தத் தீயை வெளியே காட்ட வழியில்லாமல் மௌனமாகவே நாள் முழுவதும் அவர்கள் புரவிகளுக்குச் சற்றுப் பின் தள்ளியே தன் புரவியை நடத்தி வந்த சுந்தர்தாஸ், நன்றாக இருள் மூண்ட பின்பே அந்தக் கோஷ்டி ஒண்டாலா கோட் டையை அடைந்ததைப் பெரிதும் வரவேற்றான். குரூர சிந்தனைகளுக்கும் வியாதிகளுக்கும் இராக்காலம் கடுமையானதால், உள்ளூர கல்மிஷம் பெரிதாக துள்ளிக் கிடந்த சுந்தர்தாஸ், அந்த இருட்டைக் கண்டு ஓரளவு குதூகலிக்கவும் செய்தான். அவன் குதூகலத் துக்குக் காரணம் இருக்கவும் செய்தது.

மொகலாயர் முகாம் இரண்டு நாள் பயணத்துக்குள் இருந்ததால், எப்பொழுதும் போருக்குத் தயாராகி யிருந்த ஒண்டாலா கோட்டையில் நுழைவதோ வெளியே செல்வதோ அத்தனை சுலபமாயிராதபடி கடும் கட்டுப்பாடுகளைச் செய்திருந்தான் ராணா அமரசிம்மன். உள்ளே நுழையும் ஒவ்வொருவரும் பூரணப் பரிசோதனைக்குப் பின்பே கோட்டைக்குள்



அனுமதிக்கப்பட்டார்கள். அரசரின் முத்திரை பொறித்த அனுமதிச் சீட்டின்றி, யாரும் வெளியேயும் அனுமதிக்கப்படவில்லை. முத்திரையோ அரசரின் பொக்கிஷக்காரரிடம் இருந்தது. ஆகையால் வெளியே போக ஓலை பெறுவது என்பது கிட்டத்தட்ட அரசரிடம் நேரில் அனுமதி பெறும் கஷ்டத்தை ஒத்திருந்ததால், ஒருமுறை ஹரிதாஸ் கோட்டைக்குள் நுழைந்து விட்டால் அவன் தப்ப வசதி ஏதுமில்லை என்பதை உணர்ந்திருந்த சுந்தர்தாஸ், அன்றிரவே ஹரிதாஸை மிகவும் எக்கச் சக்கமான ஏற்பாட்டில் சிக்க வைக்க உறுதி கொண்டான். அப்படிச் சிக்க வைத்துவிட்டால், ஹரிதாஸ் ஜாலா தப்பியோட முடியாதாகையால் ஒன்று அரசர் விரோதத்துக்கு அல்லது மொகலாயர் விரோதத்துக்கோ உள்ளாக வேண்டி இருக்குமென்றும், யார் விரோதத்துக்கோ இலக்கானாலும் அவன் மரணம் நிச்சயமென்று நம்பினான் அவன். அப்படி ஹரிதாஸ் ஜாலா தூக்கிலிடப்பட்டால், ராஜபுத்திரி தன்னிடமிருந்து எந்தவித்திலும் தப்ப முடியாது என்று உள்ளூர எண்ணி மகிழ்ந்தும் கொண்டான். ஆகவே தன் திட்டத்துக்கு இராக்காலத்தைத் தவிர வேறு காலம் சௌகரியப்படாதென்ற நினைப்பால் கோட் டைக்குள் நுழைந்ததும், ஹரிதாஸ் கோஷ்டியிடமிருந்து பிரிந்து சொல்லிக் கொள்ளாமல் திடீரெனப் புரவி யைத் திருப்பி வேறு மார்க்கத்தில் சென்றுவிட்டான்.

அவன் சென்றதைக் கவனித்தாலும் கவனிக்காதது போலவேயிருந்த ஹரிதாஸுக்கு ராஜபுத்திரியே அவன் போவதை சுட்டிக் காட்டி, "சுந்தர்தாஸ் அதோ அந்தப் பக்கம் போகிறான்" என்றாள் சற்றுக் கலக்கத்துடன்.

ராஜபுத்திரி காட்டிய திசையைத் திரும்பிப் பார்க்கா மலே, "போகட்டும். நமக்கென்ன?" என்று பதில் சொன்னான் ஹரிதாஸ் வெகு அலட்சியத்துடன்.

"அவன் போகிற பக்கத்தில் தான்..." என்றும் மேலும் ஏதோ சொல்ல முயன்றாள்.

"மன்னர் மாளிகை இருக்கிறது" என்று வாசகத்தை முடித்த ஹரிதாஸ் ஜாலா, "அவனைப் பற்றிக் கவலைப் படாதே ராஜபுத்திரி! நாம் நமது இருப்பிடம் செல்வோம். நீ முன்னே புரவியை நடத்திச் செல், நான் தொடர்ந்து வருகிறேன்" என்று கூறிப் பிறகு அடியோடு மௌனமாகி விட்டான்.

ஒண்டாலா கோட்டையை அடைந்த விநாடியிலிருந்து ஹரிதாஸ் ஜாலாவின் மனோநிலை பெரிதும் மாறியிருந்ததால், அவன் பேசும் சக்தியை அறவே இழந்தான். அந்தக் கோட்டையின் நிலையை அதில் புகுந்த உடனேயே கண்டு கொண்டவீரனான ஹரிதாஸ் ஜாலா சில விநாடிகள் திகைத்தே போனான். அது போர்ச் சித்தமாயிருக்கும் பயங்கரக் கோட்டையா அல்லது போலிச்சித்தமும் உண்மைக் கேளிக்கையும் நிரம்பிய உல்லாசக் கோட்டையா என்பதை நிர்ணயிக்க முடியவில்லை அவனால், அந்தக் கோட்டையில் பார்ப்பதற்குப் போர் சன்னத்தம் பலமாயிருந்தது. அதன் பெரும் வாயில்களைச் சுமார் ஐம்பது வீரர்களுக்கு மேல் உருவிய வாட்களுடன் காத்து நின்றார்கள். கோட்டையின் மேல்புறத்தின் இரண்டு பீரங்கிகள் எதிரிகளை எதிர்பார்ப்பன போல் பாலைவனத்தை பயங்கரமாகப் பார்த்துக் கொண்டுதான் நின்றன. சொற்ப வீதிகளே உள்ள ஒண்டாலா கோட்டையின் உட்புறத்திலும் சப்த புரவி வீரர் கூட்டமும் ஆயுதங்களின் ஒலிகளும் கண்களிலும் காதுகளிலும் படவே செய்தன. இருப்பினும் அத்தனையும் கேலிக் கூத்தாகத்தான் தெரிந்தது ஹரிதாஸ் ஜாலாவுக்கு. அணிவகுத்துக் காவல் சென்ற வீரர்கள் பேசிக் கொண்டு சென்றார்கள். கோட்டையைத் திறந்துவிட்ட



வீரர்கள் சுந்தர்தாஸைக் கண்டவுடன் நிமிர்ந்து நின்று தலை வணங்கினார்களென்றாலும், அவன் சென்ற பிறகு சர்வசாதாரணமாகப் பேசிக்கொண்டு நின்றார்கள். தன் கோஷ்டி கோட்டைக்குள் நுழைந்து தெருக்களில் சென்ற பின்பும், கோட்டைக் கதவுகள் சாத்தப்படாததைக் கண்ட ஹரிதாஸ், காவலருக்குக் காவலில் பரபரப்போ சிரத்தையோ இல்லாததைக் கண்டு வியந்தான்.

ராஜபுதன வீரர்களை அவன் அப்படி எந்நாளும் பார்த்ததில்லை. ராஜபுதனத்தின் பிதாமகரின் கீழ் அமரசிம்மன் பெயரால் பல போர்களை ஜஹாங்கீருக்கு எதிராக நிகழ்த்திப் பெருவெற்றிகளை அடைந்த ராஜபுதனப் படைவீரனின் துடிப்பையும் துணிவையும் பார்த்திருந்த ஹரிதாஸ் ஜாலா ராஜபுதனத்தில், இப்படியொரு கும்பல் இரண்டு வருடங்களுக்குள்ளாகவே ஏற்பட்டு விட்டது என்று சிந்தித்து, வியப்பு மட்டுமின்றிக் கோபமும் அடைந்தான். ஒண்டாலாவில் அதிக வீதிகள் இல்லை. நாலைந்து வீதிகள்தாம். அவற்றில் குடியிருந்த சாதாரண மக்களும் சொற்பம். சுமார் ஐநூறு அறுநூறு குடும்பங்களே அந்தக் கோட்டையில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அடைத்துக் கொண்ட இரண்டு வீதிகளைத் தவிர, மற்ற வீதிகள் போர் வீரர்களாலேயே நிரப்பப்பட்டிருந்தன. உண்மையில் ஒண்டாலா கோட்டை நிறுவப்பட்டதே குடியிருப்புக்காக அன்று. மொகலாயாரைத் தேக்கி நிறுத்த முக்கியமான ஓர் அரணாக அது கருதப்பட்டதால், அதில் ராணுவ பந்தோபஸ்தே அதிகமாக இருந்தது. இப்படி ராணுவமே முக்கால்வாசி நிரம்பி நின்ற அந்தக் கோட்டையை அவன் முன்பும் பார்த்திருக்கிறான். முன்பு பார்த்ததற்கும் அன்று பார்ப்பதற்கும் வித்தியாசம் மலைவுக்கும் மடுவுக்கும் இருந்தது. முன்பு அவன் பார்த்தது போர்ச்சோலை. இப்பொழுது அவன் பார்ப்

பது போரின் போர்வையில் ஒரு பெரும் போலிச் சோலை.

இந்த மாற்றத்துக்குக் காரணம் அவனுக்குத் திட்டமாகப் புரியாவிட்டாலும், அங்கிருந்த யாரும் போரைச் சமீபத்தில் எதிர்பார்க்கவில்லை என்பது மட்டும் திட்டமாகப் புரிந்தது அவனுக்கு. ஆரம்ப முதலே பிதாமகரின் முரட்டுக் கட்டாயத்துக்கு வசப் பட்டுப் போரிலிறங்கிய அமரசிம்மனுக்கு, உண்மையில் போரிட இஷ்டமில்லை என்பதை ஹரிதாஸ் ஜாலா அறிந்தே இருந்தான். 'ராணாவின் விருப்பம் மொகலா யருடன் சமாதானந்தான். இருப்பினும் மொகலாயரும் அதற்கு ஒப்பி வரும் வரையில் போர் ஏற்பாடுகளைத் தளர்த்துவது எத்தனை அபாயம்? ஒரு பக்கம் சமா தான ஆசைகாட்டி இன்னொரு பக்கம் ரகசியமாகப் படைகளை நடத்தும் பழக்கமுள்ள ஜஹாங்கீர், ஓசைப் படாமல் ஒண்டாலா கோட்டையை வளைத்தால் இது வீழ்ந்துவிட ஒரு விநாடி பிடிக்காதே. அப்படிப் பிடிக்கப்பட்டு ஏற்படும் சமாதானத்தால் கௌரவ மான வசதிகளும் ஏற்படாதே. ஆகவே ஏன் இப்படி யிருக்கிறது இந்தக் கோட்டை!' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

கேள்விக்கு அவனுக்கு விடை கிடைக்கவில்லை. பிதாமகருக்கும் தெரியாத பெரும் சூது ஏதோ இதில் நடக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொண்டான், அந்த ராஜபுத்திர வீரன். அத்தனையிலும் ஒரு மகிழ்ச்சி இருந்தது அவனுக்கு. தன்னைப் பார்த்ததும் எதிரே வந்த வீரர்கள் அதிர்ச்சியுடன் தலைவணங்குவதைக் கண்ட ஹரிதாஸ் ஜாலா, தான் பழைய படைத்தலைவ னென்பதை வீரர்கள் மறக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டதால், அளவில்லாத ஆனந்தமடைந்த அவன், 'இவர்கள் என்னை யாரென்று புரிந்து



கொண்டதிலும் லாபமிருக்கிறது' என்று தன்னைத் தானே சிறிது திருப்தியும் செய்து கொண்டான். இப்படி ஒண்டாலா கோட்டை வீரர்களையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அளவெடுத்துக் கொண்டே ராஜபுத் திரியின் பின்னால் சென்ற ஹரிதாஸ் ஜாலா, தனது புரவி தானாக நின்று விட்டதைக் கூட ராஜபுத்திரி இருமுறை தன்னை அழைத்த பின்தான் உணர்ந்து கொண்டான்.

உணர்வு பெற்று இறங்கிய ஹரிதாஸ் ஜாலாவை வியப்புடன் நோக்கிய ராஜபுத்திரி, "ஏன் புரவியின் மீது வரவர ஆசை அத்துமீறி போகிறது?" என்று கேட்டு நகைத்தாள்.

"இல்லை இல்லை" என்று ஏதோ முணுமுணுத்தான் ஹரிதாஸ் ஜாலா.

"என்ன இல்லை?" என்று வினவினாள் அவள்.

"குதிரை மீது ஆசையாலல்ல இறங்காமலிருந்தது" என்றான் ஹரிதாஸ் ஜாலா ஆழ்ந்த யோசனையுடன்.

"வேறு யார் மீது ஆசையோ?" என்று வினவினாள், ராஜபுத்திரி.

சாதாரண சமயமாயிருந்தால் 'உன்மீதுதான்' என்று சொல்லியிருப்பான் ஹரிதாஸ் ஜாலா. அதைக் கேட்டு அவளும் மகிழ்ச்சி நகை புரிந்திருப்பாள். ஆனால் அந்த விநாடியில் காதலை அந்த வீரன் மனம் அடியோடு மறந்திருந்தது, அவன் மனத்தில் ஒண்டாலா கோட் டையின் நிர்க்கதியான நிலையே திரும்பத் திரும்ப எழுந்து வலம் வந்து கொண்டு இருந்தது. ஆகவே ராஜ புத்திரி எதிர்பார்த்த பதில் அவனிடமிருந்து வர வில்லை, அவன் பதிலேதும் சொல்லாமல் புரவியின் சேணத்தை வீரனொருவனிடம் கொடுத்து அதைத்

தனிக் கொட்டடியில் கட்டும்படிப் பணித்துவிட்டு வேகமாக மாளிகைக்குள் நுழைந்தான்.

மாளிகையின் காவல் வீரர்கள் நடந்து கொண்ட முறையிலிருந்தும் உள்ளேயிருந்த ஏற்பாடுகளிலிருந்தும் அது ஜயன் சந்தாவத் தங்குமிடம் என்பதையும் அங்கிருந்த காவலர்கள் ஜயன் சந்தாவத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவருக்கே ஊழியம் புரிபவர்களென்பதையும் புரிந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. வீதியில் அவன் பார்த்த வீரர்களுக்கும் மாளிகை வீரர்களுக்கும் வித்தியாசம் பலமாயிருந்தது. ஜயன் சந்தாவத் மாளிகையின் ஒவ்வோர் இடத்திலும் காவல் பலமாயிருந்தது; கோட்டைக்குள் மற்றொரு கோட்டை போல் நிர்மாணிக்கப்பட்ட அந்த மாளிகையின் சுவர்கள்கூட, வீரப் பார்வை பார்ப்பதாகத் தோன்றியது ஹரிதாஸ் ஜாலாவுக்கு. மாளிகையின் ஒவ்வொரு கட்டிலும் காவலர் நிரம்பியிருந்தார்கள். அவர்களிடமெல்லாம் போர்க் கோலங்கள் பயங்கரமாகக் காட்சியளித்தன. அந்த மாளிகைக்குள் நுழைவதையே பெருமையாக நினைத்த ஹரிதாஸ் ஜாலா, ஒண்டாலா கோட்டையில் உண்மை வீரர்களுக்கும் ஓர் இருப்பிடமிருப்பதை நினைத்து உள்ளூர உவகை கொண்டான்.

அந்த உவகையுடன் உள்ளே நுழைந்த ஹரிதாஸ் ஜாலாவுக்குத் தனி இடத்தைக் காட்டும்படி வீரர்களுக்கு உத்தரவிட்ட ராஜபுத்திரி, அவனிடம் அதிகமாகப் பேசாமல் தனது அறையை நோக்கிச் சென்றாள். ஹரிதாஸ் ஜாலா வீரர்கள் காட்டிய அறைக்குச் சென்று வெகு சீக்கிரம் நீராட்டத்தை முடித்துக் கொண்டான். அவன் அவசரத்தை ராஜபுத்திரியும் புரிந்துகொண்டிருக்க வேண்டும். அடுத்த இரண்டே நாழிகைக்குள் உணவு அருந்த அவனுக்கு அழைப்பு வந்தது ராஜபுத்திரியிடமிருந்து. "நான்



இங்கேயே உணவருந்துகிறேனென்று ராஜபுத்திரியிடம் சொல்லிவிடு" என்றான் ஹரிதாஸ் ஜாலா, வந்த வீரனிடம். அந்தச் செய்தியை ஏற்றுச் செல்ல மறுத்த வீரன், "தங்களிடம் பேச வேண்டியிருக்கிறதாம். தங்களுக்கு இங்கு உணவு பரிமாற வேண்டாமென்பது ராஜபுத்திரியின் உத்தரவு" என்றான்.

ஹரிதாஸ் ஜாலா உள்ளூரச் சிரித்துக்கொண்டான், பெண்களின் பிடிவாதத்தை நினைத்து. ராஜபுதனத்தின் சுதந்தரத்துக்காக எத்தனையோ போர்களில் பங்கு கொண்ட தான் அந்தச் சமயத்தில் ஜஹாங்கீருக்கும் ராஜபுத்திரிக்கும் அடிமையாகிவிட்டதை நினைத்து, "என்ன வீரன் நான்" என்று தன்னைப் பற்றிக் கேலியும் செய்து கொண்டான். அப்படிச் சுய இகழ்ச்சியில் ஈடுபட்டு ராஜபுத்திரி இருந்த இடம் சென்ற ஹரிதாஸ் ஜாலா, வாயிற்படியிலேயே பிரமித்துப் பல விநாடிகள் நின்றுவிட்டான்.

பாலைவனத்தில் ஒட்டகத்தின் மீது பார்த்த சாதாரண ராஜபுத்திரியல்ல அந்த மாளிகை அறையில் அவன் கண்ட மங்கை. மணப்பெண் போல சிங்காரித்துக் கொண்டிருந்த சித்தினிப் பெண்ணைக் கண்ட அவன் வியப்பால் வாயைப் பிளந்தான். மெல்லிய பட்டு அவள் உடலை வளைத்து மறைக்க முற்பட்டு முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது. காதிலாடிய குண்டலங்கள் அவள் கன்னத்தைத் தடவி 'நாங்கள் உனக்குப் போட்டி' என்று முத்து ஜிமிக்கிகள் நகைத்தன. கையிலிருந்த பெரும் ரத்தின வளையல்களும் இடுப்பில் சுற்றி வந்த மெல்லிய தங்கத் தகட்டின் சதங்கைகளும் அவள் அழகை நூறு மடங்கு அதிகமாக எடுத்துக் காட்டின. அவள் அணிந்திருந்த ஆபரணங்கள் மட்டுமல்ல, அவள் உட்கார்ந்திருந்த கோலமும் மணப் பெண்ணின் கோலமாயிருந்தது. அவள் முக்காடிட்டுத்

தலைகுனிந்து மஞ்சத்தில் ஒருக்களித்து உட்கார்ந்திருந்தாள். அவன் வருகையைக் காலடி சத்தத்தால் உணர்ந்த ராஜபுத்திரி, தலையை நிமிர்த்தாமலும் அவனை ஏறெடுத்துப் பார்க்காமலும் "வாருங்கள்" என்றாள் நிதானமாக.

அடுத்த விநாடி இரண்டே எட்டில் நடந்து ராஜ புத்திரியிருந்த இடத்தை அணுகிய ஹரிதாஸ் ஜாலா, அவளருகில் மஞ்சத்தில் அமர்ந்து அவள் முக்காட்டைச் சிறிது நீக்கித் தலையை நிமிர்த்து அவளை நோக்கினான். அவள் முகத்தில் வருத்தமும் மகிழ்ச்சியும் ஏதோ ஓர் உறுதியும் கலந்து கிடந்தன. அப்படி பல உணர்ச்சிகளுக்குக் காரணம் புரியாததால் ஹரி தாஸ் ஜாலா கேட்டான், "ராஜபுத்திரி! எதற்கு இந்தக் கோலம்?" என்று.

"எந்தக் கோலம்?" என்று வினவினாள் ராஜபுத்திரி, தன் கண்களை அவன் கண்களுடன் உறவாடவிட்டு.

"மணப்பெண் போல் அலங்கரித்துக் கொண்டிருக்கிறாயே?" என்று வினவினான் ஹரிதாஸ் ஜாலா.

"ஆம்" என்றாள் அவள்.

"மணம் செய்து கொள்ளப் போகிறாயா?"

"ஆம்."

"அப்படியானால் என் கதி என்ன?"

"மாப்பிள்ளை கதிதான்!"

"இரண்டாம் முறை விவாகமென்றால் நான் எப்படி மாப்பிள்ளையாவேன்!"



"தமயந்தியும் இரண்டாம் முறை விவாகம் செய்து கொண்டாள், ஆனால் புருஷன் பழைய நளன்தானே? அவனுக்குத்தானே திரும்பவும் மாலை சூட்டினாள்?"

"அதுபோல...?"

"நானும் உங்களை மறுபடியும் மணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்று அவள், தன் கையால் அவன் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

ஹரிதாஸின் கையும் அவள் கையை மிக பலமாகப் பிடித்துக் கொண்டது. "திருமணம் எப்பொழுது துவங்கும்?'' என்றான் அவன், வேடிக்கையாகக் கேட்பது போல் உணர்ச்சிகள் பொங்க.

"துவங்கிவிட்டது" என்றாள் ராஜபுத்திரி, அவன் மீது சாய்ந்து.

"எப்பொழுது?"

"இப்பொழுதுதான்"

"இப்பொழுதா?"

"ஆம்; நீங்கள்தானே துவக்கி வைத்தீர்கள்?"

"நானா! துவக்கி வைத்தேனா?"

''முக்காட்டை நீங்கள் தூக்கி என் முகத்தைப் பார்க்கவில்லையா?"

"ஆம், பார்த்தேன்."

ராஜபுத்திரி அவன்மீது சாய்ந்து கொண்டாள்! அவன் காதுக்கருகில் உதடுகளைக் கொண்டு சென்று, ''மணமகன் மணமகள் முக்காட்டை எப்போது விலக்கிப் பார்ப்பது வழக்கம் ராஜபுதனத்தில்?" என்று ரகசியமாகக் கேட்டாள்.

ஹரிதாஸ் ஜாலாவின் விழிகள் பெரிதாக மலர்ந்தன. அவற்றில் பயத்தின் சாயையும் தெரிந்தது. அச்சம் நிரம்பிய கண்களுடன் அவளை நோக்கிய ஹரிதாஸ் ஜாலாவுக்கு, அவள் சொற்கள் எதைக் குறிக்கின்றன என்பது திட்டமாகத் தெரிந்தது. உடல்கூடச் சற்று அவனுக்கு நடுங்கியது "வேண்டாம் ராஜபுத்திரி, வேண்டாம்; சற்றுப் பொறுப்போம்" என்று குரல் நடுங்கக் கெஞ்சவும் கெஞ்சினான் அவன்.

## 20. விதியே நீ சொல்

ராஜபுத்திரியின் அந்தரங்க எண்ணத்தைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, "வேண்டாம் ராஜபுத்திரி! சற்றுப் பொறுப்போம்" என்ற சொற்களை மெள்ளவே உச்சரித்தானானாலும், அந்தச் சொற்களை அந்தப் பெரு விடுதியின் அறையின் பிரமாண்டமான சுவர்கள் காதில் வாங்கிப் பேரொலி செய்த பிரமை ஏற்பட்டது. அவளுக்கு. அந்தச் சுவர்களின் உச்சியில் விரிந்த வண்ண விமானத்தில் தீட்டப்பட்டிருந்த பொம்மைகள் கூடத் தன்னை விந்தையுடன் பார்ப்பது போலிருந்தது ராஜபுதனத்தின் பழைய படைத் தலைவனுக்கு. ராஜபுத்திரி என்ன சொன்னாள், எதற்குத் தூண்டுகிறாள் என்பதை மிகத் தெளிவாக அறிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலாவுக்கு வியப்பை விட அச்சமே இதயத்தில் ஓங்கி நின்றதால், அவன் அவளைப் பார்ப்பதை விலக்கிக் கொண்டு எழுந்து சற்று விலகி நின்று கண்களைத் தரையில் ஓட்டிக் கொண்டு மீண்டும் சொன்னான்: "ராஜபுத்திரி! கிடைத்தற்கரிய புதையல் கிடைக்கும் போது, அதைக் கையால் தொடவும் திறனற்று நிற்கிறேன் நான், என் நிலைமை அப்பேர்ப்பட்டது" என்று.



ராஜபுத்திரி முக்காட்டை மீண்டும் சிறிது இறக்கி விட்டு அதன் மடிந்த கூரிய நுனி முகத்தை அரைப் பக்கம் மறைக்க, தலை நிமிர்ந்து ஹரிதாஸ் ஜாலாவை நோக்கினாள். பிறகு, "இப்படிப் பாருங்கள்" என்றாள். ஹரிதாஸ் ஜாலாவும் தலை நிமிர்ந்து அவளை நோக்கினான். அவள் விழிகள் கம்பீரமாக அவன் கண்களைச் சந்தித்தன. அந்தக் கண்களில் அந்தச் சமயம் வழக்கமாக இருக்கவேண்டிய நாணம் இல்லாததைக் கண்டு வியப்படைந்தான் அவன்.

ராஜபுத்திரிகளின் முக்காட்டை முதன் முதலில் ஒரு ராஜபுத்திரன் நீக்குவது நிஷேத அறையில்தான். அப்பொழுது அவள் மலர் முகத்தைப் புருஷனின் கண் வண்டுகள் துருவித் துழாவ முடியும். அதன்பின் நிகழ்வதெல்லாம் இயற்கையின் கூற்று. அந்த இயற்கை அளிக்கும் பூர்ணத்துவத்தின் பூர்வாங்க சடங்கே முக்காடு விலக்குதல். அந்தச் செய்கைக்குத் தன்னைத் தூண்டிய ராஜபுத்திரி அடுத்தபடி தங்கள் காதல் அனுபவத்தின் பூர்ணத்துவத்தையே எதிர் பார்க்கிறாள் என்பதை அறிந்த ஹரிதாஸ் ஜாலா, அந்தச் சமயத்தில் பெண்களுக்கு இருக்க வேண்டிய நாணத்தின் சிறு சாயைகூட ராஜபுத்திரியின் கண்களில் இல்லாததை கவனித்து வியப்பே அடைந்தான். அந்த வியப்பு அவன் முகத்தில் சந்தேகத்துக்கு இடமின்றிப் பரவியதை ராஜபுத்திரியும் கவனித்தாள். இருப்பினும், அவள் முகம் நாணத்தால் சிவக்கவில்லை. கண்கள் கம்பீரத்துடன் அவனை நோக்கின. 'நிரம்பா மென் சொல்' என்று இலக்கியம் வருணிக்கும் தழுதழுத்த வார்த்தைகளும் அவளிடமிருந்து வெளிவரவில்லை. சொற்கள் திடமாகவே உதிர்ந்தன. "சந்தர்ப்பத்தை உத்தேசித்து உணர்ச்சிகள் மாறுபடுவது இயற்கை வீரரே!" என்றாள் ராஜபுத்திரி.

எதுவும் விளங்காமலே கேட்டான் ஹரிதாஸ் ஜாலா பதிலுக்கு, "எந்தச் சந்தர்ப்பம் ராஜபுத்திரி?" என்று.

"நாமிருக்கும் சந்தர்ப்பம்" என்று திடமாகவே பதில் சொன்ன ராஜபுத்திரியும் மஞ்சத்திலிருந்து எழுந்திருந்து அவனுக்குச் சற்று அருகில் வந்து நின்று கொண்டாள்.

ராஜபுத்திரி அப்படி நெருங்கி வந்தது ஹரிதாஸ் ஜாலாவின் உணர்ச்சிகளை மீண்டும் மீண்டும் புரட்டியது. ஆகவே, "இப்பொழுது நாமிருக்கும் சந்தர்ப்பம் வீரரே" என்று அவள் விளக்கித் தெளிவாகச் சொன்ன பதிலைக்கூட அவன் சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லையாகையால் மீண்டும் திணறிக் கொண்டே, "பிதாமகர் கூட ஊரில் இல்லை" என்று மென்று விழுங்கினான்.

"பிதாமகருக்கும் இதற்கும் சம்பந்தமில்லை" என்றாள் ராஜபுத்திரி.

"வேறு யாருக்கும் இதற்கும் சம்பந்தம்?" என்று வினவினான் ஹரிதாஸ் ஜாலா.

ராஜபுத்திரியின் கண்கள் அவன் கண்களைத் திடமாகச் சந்தித்தன. "ராணாவுக்கும் இதற்கும் சம்பந்தம்" என்றாள் அவள்.

"அவருக்கு இதில் என்ன சம்பந்தம்?" என்று வினவினான் ஹரிதாஸ்.

"என்னை வேறொருவருக்கு மணமுடிக்க திட்டமிட்டிருப்பதாக சுந்தர்தாஸ் கூறவில்லையா கூடாரத்தில்?" என்று ராஜபுத்திரி கேட்டாள்.

"ஆம், சொன்னான்."

"யாருக்கு மணமுடிக்க உத்தேசம்?"



"எனக்கு எப்படித் தெரியும்?"

"ஊகித்துப் பாருங்கள்."

"ஊகிக்க புத்தி மறுக்கிறது ராஜபுத்திரி."

"அப்படியானால் உங்களுக்கு பதில் நான் ஊகிக்கட்டுமா?"

"சொல், யாரது?"

"சுந்தர்தாஸ்" என்றாள் ராஜபுத்திரி. ராஜபுத்திரியின் அந்த பதில் ஹரிதாஸைத் திடுக்கிட வைத்தது. "இருக்காது ராஜபுத்திரி, ஒருநாளும் இருக்காது" என்றான் ஹரிதாஸ்.

"ஏன் இருக்காது?"

"சுந்தர்தாஸின் குலம்..."

"அதைப் பற்றி இப்பொழுது கவலைப்படுவார் இல்லை."

"ஏன்?"

"குலம், வீரம் இவற்றை கவனிக்கும் காலம் ராணா பிரதாப்போடு போய்விட்டது. இப்பொழுதெல்லாம்..."

"சொல் ராஜபுத்திரி."

"சந்தர்ப்பவாதம், சுகமான சுமுகமான முடிவுகள் இவை ராணாவின் சுற்றுவட்டாரங்களில் வலுத்திருக்கின்றன. அதன் பிரதான கர்த்தா சுந்தர்தாஸ். அவனைத் திருப்தி செய்ய ராணா எதையும் செய்வார்."

"பிதாமகரை மீறியா?"

"ஆம்."

"நமக்குத்தான் ஏற்கெனவே விவாகம் ஆகிவிட்டதே

"அது யாருக்கும் தெரியாதல்லவா?"

"பிதாமகருக்குத் தெரியுமே!" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

ராஜபுத்திரி அவனுக்கு வெகு அருகில் வந்து அவன் தோள் மீது வைத்துக்கொண்டு, "பிதாமகருக்குத் தெரியும். ஆனால் ராணாவுக்குத் தெரியாது. ராணா சுந்தர்தாஸுக்கு உறுதிமொழி கொடுத்து விட்டார், என்னை அளிப்பதாக. ராணா சொல் மாற முடியுமா?" என்று வினவினாள்.

ஹரிதாஸ் ஜாலாவின் முகத்தில் கவலை மெள்ள மெள்ள விரிந்தது. அத்துடன் கோபக்குறியும் மெள்ள மெள்ளக் கண்களில் படர்ந்தது, "ராணா சொல் மட்டுமா மாற முடியாது ராஜபுத்திரி? என் வாளையும் மீற முடியாது" என்றான் கோபம் குரலில் தொனிக்க.

"இருக்கலாம். ஆனால் வாளின் உபயோகத்துக்கு அவகாசமிருக்கிறது. சுந்தர்தாஸ் பரம அயோக்கியன். பிதாமகர் வருவதற்குள் ராணாவே பின் வாங்க முடியாத பெரும் சிக்கலை சிருஷ்டித்துவிடுவான். ராணாவின் சொல்லையும் தேக்கி நிறுத்தக்கூடிய சக்தி ராஜபுதனத்தில் ஒன்றுதான்" என்ற ராஜபுத்திரி, ஹரிதாஸின் மார்பின் மீது தன் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

எந்தச் சக்தியை அவள் குறிப்பிடுகிறாள் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்ட ஹரிதாஸ் ஜாலா, அவள் முக்காட்டைச் சிறிது தள்ளி தலைமுகப்பின் குழல்களைக் கோதிவிட்டான். தான் அவளை பால்யத்தில் மணமுடித்தது, பிதாமகர் இன்னும் சில பிரபுக்கள் ஆகியோர்களைத் தவிர யாருக்கும் தெரியாதென்பதையும், அன்று அந்த மாளிகை வீரர்கள் அறிய ராஜபுத்திரியின் அறையில் தான் தங்கிவிடும் பட்சத்தில்



அந்தக் காந்தருவ விவாகத்தை உணரும் மாளிகை வீரர்கள், அந்த மணத்தையும் ராஜபுத்திரியின் கற்பையும் காக்க ராணாவைக்கூட எதிர்ப்பார்கள் என்பதையும், அப்படித் திருமண விஷயம் பகிரங்கமாகப் பரவிவிட்டால், அதை உடைக்க ராணாவும் அஞ்சுவாரென்பதையும் உணர்ந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அந்தக் காரணத்தை முன்னிட்டே ராஜபுத்திரி தன்னை அறைக்குள் அழைத்திருக்கிறாளென்பதையும் புரிந்து கொண்டான்.

பல விஷயங்கள் அந்தச் சமயத்தில் புரிந்தது அவனுக்கு. காதலின் பூர்த்திக்கு அழைத்த அவள் குரலிலோ முகத்திலோ நாணமில்லாதிருந்தது ஏன் என்பதை அறிந்து கொண்டான் அவன். ராஜபுத்திரி அந்தச் சமயத்தில் செய்ய முற்பட்டது தன் கடமையாகையால், காதலைவிடக் கடமை உணர்ச்சி அந்தச் சமயத்தில் அவள் இதயத்தில் ஓங்கி நிற்பதைப் புரிந்து கொண்டான். தன்னை அர்ப்பணிக்க அவள் வலுவில் அழைத்த சொற்கள்கூட கர்மத்தைச் செய்ய முற்பட்ட ஒரு வீராங்கனையின் சொற்கள் போல ஒலித்தனவேயொழிய, காதல் வசப்பட்டு மதியிழந்த மங்கையின் சொற்களைப் போல ஒலிக்காததன் காரணத்தைப் புரிந்து கொண்டான் அந்த வாலிப வீரன். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் ராஜபுத்திரி ஸ்திரீகளின் அடிப்படையான குணங்களின் உரம், கற்பின் மாபெரும் சக்தி, தியாகத்தில் அவர்களுக்கிருந்த இணையிலா உறுதி இவற்றை நினைத்த ஹரிதாஸ் ஜாலா, "இவர்களால் தான் ராஜபுதனம் வரலாற்றில் வாழ்கிறது" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

இந்த உணர்வாலும் நினைப்புகளாலும் ஏற்பட்ட பெருமை, பிரமை இவற்றையும் மீறித் தன் மனத்தில் மட்டும் காதலும் பயமும் எழுந்து நின்றதை எண்ணிய

ஹரிதாஸ் ஜாலா, தான் போர்க்களத்தில் வீரனே யொழிய, காதற்கூடத்தில் பெரும் கோழை என்பதை நினைத்து உள்ளூரச் சிரித்துக்கொண்டான். அவன் மனத்தில் ஓங்கி நின்றதெல்லாம் எத்தகைய ஒரு மாணிக்கம் தன் கையில் சிக்கியிருக்கிறதென்ற நினைப் புத்தான். இந்த மாணிக்கத்துக்கு ராஜபுதனத்தின் நாகரத்தினம் எந்த விதத்தில் நிகராகும் என்று தன்னைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டான். 'இத்தகைய மாணிக்கங்கள் ராஜபுதனத்தில் இருக்கும் போது அந்த நாகதீபம் ஜஹாங்கீரின் கைக்குப் போனால்தானென்ன?' என்று நினைத்தான்.

இப்படித் திரும்பத் திரும்ப பலபடி நினைத்தாலும், கையில் சிக்கி நின்ற அந்தப் பெண்ணெனும் ரத்தினம், அசல் மாணிக்கத்தைப் போல கெட்டியில்லாமல் புஷ்பம் போல் மென்மையாயிருந்தாலும், அதை ஆசை யுடன் நெடுக அவன் கைகள் தடவிக் கொடுத்தன. அந்த ஸ்பரிசத்தில் ராஜபுதனப் புஷ்பம் சுழன்றது. அதன் இதழ்கள் அவன் உடல்களில் ஆங்காங்கு படவே, ஹரிதாஸ் ஜாலாவின் உறுதியெல்லாம் காற்றில் பறந்தது. அவன் திடீரென்று அவளை இறுக அணைத்தான். பிறகு இரு கைகளாலும் தோளைப் பிடித்துச் சற்று எட்ட நிற்க வைத்துப் பார்த்தான். அடுத்தபடி அவன் வலது கை அவள் தோளிலிருந்து விலகி முக்காட்டைச் சரேலென அடியோடு நீக்கியது. அந்தப் பணியை முடித்த வலது கை, அவள் முகவாய்க் கட்டையில் பதிந்து கன்னம், இரண்டையும் அழுந்தப் பிடித்தது. கண்கள் நீண்ட நேரம் சந்தித்தன. அதே நேரத்தில் அவன் இடதுகை அவள் இடையிலிறங்கி வளைந்து இறுக்கி அவளை அருகே இழுத்தது. பூர்ண சம்மதத்துடன் தனது கடமையைச் செய்ய ராஜபுத்திரி யும் அருகில் நெருங்கினாள். அடுத்த விநாடி அறைக்



கதவு தடதடவென இடிபட்டது. இருவரும் அதிர்ச்சி யுற்று விலகி நின்றார்கள்.

ராஜபுத்திரியின் குரலில் அந்த அதிர்ச்சி தெரிந்தது. "விதி விளையாடிவிட்டது வீரரே" என்று கூறிய அவள், "யாரது? வா உள்ளே!" என்று உத்தரவிட்டாள்.

திறந்திருந்த அந்த போஜன அறைக்கதவை மரியா தைக்கு இடித்த வீரன், வெகு வேகமாக உள்ளே வந்து ராஜபுத்திரியையும் ஹரிதாஸ் ஜாலாவையும் வணங் கினான்.

"என்ன விசேஷம்?" என்று ராஜபுத்திரி உஷ்ணத் துடன் கேட்டாள்.

"ராணாவின் வீரர்கள் வந்திருக்கிறார்கள்" என்றான் அந்த வீரன்.

"சரி; வரச்சொல்" என்றாள் ராஜபுத்திரி.

அடுத்த சில விநாடிகளில் ராணாவின் மெய்க் காவலர் இருவர் உள்ளே நுழைந்ததைக் கண்ட ராஜபுத்திரி, கம்பீரமாக அந்த அறை நடுவில் நின்று கொண்டு வெளிநாட்டுத் தூதரை வரவேற்கும் ராணி போல் அவர்களை வரவேற்றாள். வந்த மெய்க்காவல ரிருவரும் ராஜபுத்திரியை தலைதாழ்த்தி மிகுந்த மரியாதையுடன் வணங்கி, "ராணா அனுப்பியிருக்கிறார் ராஜபுத்திரி" என்று சொற்பமாக வார்த்தைகளைச் சொன்னார்கள்.

"ராணாவின் மெய்க்காவலரை நானறிவேன். மெய்க் காவலரை அனுப்பும்படியான அத்தனை பெரிய அலுவல் என்ன ராணாவுக்கு இப்பொழுது?" என்று கேட்டாள் அவள்.

"ராஜபுத்திரி அறியாததல்ல. ராஜபுதனத்தின் பெரும் படைத் தலைவர்களை அழைக்க வேறொரு படைத் தலைவரோ அல்லது அதே அந்தஸ்து பெற்ற மெய்க் காவலரோதான் அனுப்பப்படுவது வழக்கம்" என்றான் தூதரில் ஒருவன்.

"ராணா எந்தப் படைத்தலைவரை அழைக்க விரும்புகிறார்?'' என்று ஏதுமறியாதது போல் கேட்டாள் ராஜபுத்திரி.

பதிலுக்கு ஹரிதாஸ் ஜாலாவை நோக்கிய அந்தத் தூதனை, "இவரை உங்களுக்கு ஏற்கெனவே தெரியுமா?" என்று வினவினாள் ராஜபுத்திரி.

"ஹரிதாஸ் ஜாலாவை அறியாதவர்கள் ராஜபுதனத்தில் கிடையாது" என்றான் அந்தத் தூதன் மறுபடியும்.

"இவர் இப்பொழுது படைத்தலைவர் அல்லவே". என்றாள் ராஜபுத்திரி.

தூதன் முகத்தில் உணர்ச்சியேதுமில்லை. "அதை நிர்ணயிப்பது நீங்களுமல்ல, நானுமல்ல'' என்றான் தூதன்.

ராஜபுத்திரி புரிந்து கொண்டாள். யாருக்கு என்ன பதவி என்பதை நிர்ணயிப்பது ராணாவே தவிர, வேறு யாருமில்லை என்பதைத் தான் அறிவுறுத்துகிறான் என்பதை அறிந்து கொண்ட ராஜபுத்திரி, "படைத் தலைவர் எப்பொழுது வர வேண்டும்?'' என்று வினவினாள்.

"இப்பொழுதே! எங்களுடன்" என்றான் தூதன்.

"அத்தனை அவசரமா?"

"ஆம்."

இந்தக் கேள்வி அர்த்தமற்றது என்பது ராஜபுத்திரிக்குத் தெரிந்தும் கேட்டாள். அவள் அதைக் கேட்டும் அசைவற்று நின்ற இடத்திலேயே நின்ற மெய்க்காவலன், "கையுடன் இன்று அழைத்துவர ராணா உத்தரவிட்டிருக்கிறார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்" என்றான்.

அதைக்கேட்ட பின்பும் ராஜபுத்திரி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அவளைத் தன் கைச்சைகையால் தடுத்த ஹரிதாஸ், "சரி! வெளியே நில்லுங்கள். என் புரவியைத் தயார் செய்யச் சொல்லுங்கள். இதோ வந்துவிட்டேன்" என்றதும், அவ்விரு மெய்க்காவலரும் வெளியே சென்றனர். அவர்கள் வெளியே சென்றதும் கதவு மூடப்பட்டதும் ராஜபுத்திரி ஹரிதாஸின் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள். அவள் கைகள் அவனை இறுக்கின. "வேண்டாம், போகாதீர்கள்" என்று குரல் நடுங்கக் கூறவும் செய்தாள்.

"அஞ்சாதே ராஜபுத்திரி! இந்த ராணாவல்ல, ராஜபுதனம் முழுவதும் திரண்டாலும் நம்மைப் பிரிக்க முடியாது. எதற்கு அழைக்கிறார் என்பதை அறிந்து வருகிறேன்" என்று சொல்லி, அந்த அறையிலிருந்து தனது அறையை நோக்கிச் சென்றான்.

ராஜபுத்திரி அவன் போவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள். உணவு அருந்தாமலே செல்லும் ஹரிதாஸை, உணவு வர்க்கங்களும் மஞ்சத்திலிருந்து பரிதாபமாகப் பார்த்தன. ராஜபுத்திரி பெருமூச்சு விட்டாள். பிறகு திரும்பி வந்து மஞ்சத்தில் உட்கார்ந்து முகத்தைத் தன் இரு கைகளாலும் மூடிக் கொண்டாள்.

"கணவனைக் காப்பாற்ற இன்று என்னை ஒப்படைக்க எண்ணினேன். ஆனால் ஏன் இப்படி நடந்தது? விதியே நீ சொல்?" என்று கேட்டாள் சற்று இரைந்து.

விதி பதில் சொல்லிற்று. அங்கல்ல, ராணாவின் மாளிகையில், பதில் பயங்கரமாயிருந்தது. ஹரிதாஸ் ஜாலாவைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது அதன் பதில். பதிலை விதி வாயால் சொல்ல வைத்தது. மன்னரின் முதல் கட்டளை மெள்ள மெள்ள வெளிவந்தது. "நாகதீபம் என்ற ஒரு ரத்தினம் இருக்கிறது..." என்று ராணா துவக்கினார் தமது கட்டளையை.

## 21. ராஜபுதனத்தின் உயிர்

மேவார் ராணா அமரசிம்மன் உத்தரவுப்படி பிதாமகரின் மாளிகையிலிருந்து மெய்க்காவலரால் இரவில் அழைத்துச் செல்லப்பட்ட ஹரிதாஸ் ஜாலா, அரண்மனையை அடையும் முன்பு யோசனையில் ஆழ்ந்தான். வந்த சில நாழிகைக்குள்ளாக ராணா தன் வரவை எப்படி அறிந்தார்? அறிந்ததும் ஏன் அத்தனை அவசரமாகத் தன்னைக் கையுடன் கொண்டு வரும்படி உத்தரவு பிறப்பித்தார் என்ற கேள்விகளை மீண்டும் மீண்டும் தனக்குள் கேட்டுக் கொண்டான். தான் ஒண்டாலா கோட்டைக்கு வந்தது அவருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும் என்பதற்குச் சுலபத்தில் விடை கிடைத்தது அவனுக்கு. அவருக்குத் தன் வரவை அறிவிப்பதற்கும், முடியுமானால் சூது செய்து தனக்குத் தீங்கு விளைவிப்பதற்குமே சுந்தர்தாஸ் கோட்டையை அணுகியதும், தங்களிடமிருந்து பிரிந்து அரசர் மாளிகையை நோக்கிச் சென்றுவிட்டானென்பதைச் சந்தேகமற அறிந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. ஆனால் அரசர் அத்தனை அவசரமாக, இரவு முற்றி எல்லாரும் உறங்கச் செல்லும் நேரத்தில் எதற்காக அழைத்தார்? என்னதான் சுந்தர்தாஸ் சூது செய்திருந்தாலும் காலை வரையில் காக்காமல் மன்னர் ஏன்



உடனடியாக மெய்க்காவலரை அனுப்பினார் என்பது மட்டும் புரியவில்லை அவனுக்கு. சுந்தர்தாஸும் அறியாத தீவிரக் குழப்பம் ஏதோ மன்னர் மனத்தில் இருக்க வேண்டுமென்றும், அதனாலேயே அத்தனை அவசரமாகத் தன்னை அழைத்திருக்கிறாரென்றும் ஊகித்தான் அவன். அப்படி இந்த அழைப்பு சுந்தர்தாஸின் சூதினாலிருந்தால், அதை உடைத்தெறியத் தான் நடந்து கொள்ள வேண்டிய மார்க்கத்தைப் பற்றியும் அவன் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

இப்படிப் பல யோசனைகளுடன் தெருக்களில் சென்றபோதும் இந்தக் கோட்டையின் நிர்க்கதியான நிலைமை அவன் கண்களில் படத்தான் செய்தது. அங்கிருந்த போர் வீரர் யாருக்கும் போரிலோ கோட்டைப் பாதுகாப்பிலோ நோக்கம் சிறிதுமில்லை என்பதை கவனித்தான் அவன். அதற்கு அவனுக்குக் காரணம் புரியவில்லை. 'பிதாமகர் ஊரிலில்லாததால் நிலைமை இப்படி இருக்கிறதா? அல்லது ஒருவேளை அரசரே வேண்டுமென்று அந்த நிலையை ஏற்படுத்தியிருக்கிறாரா?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டும், விடையேதும் கிடைக்கவில்லை அவனுக்கு. அங்கு விடை கிடைக்கவில்லையே தவிர அரண்மனையில் கிடைத்தது. அந்த விடை கிடைத்ததும் ராஜபுத்திரர் ஆபத்தும் தன் ஆபத்தும் ஆயிரம்மடங்கு உயர்ந்திருப்பதை உணர்ந்த ஹரிதாஸ் ஜாலா, தான் மட்டும் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளாவிட்டால், ஒண்டலா கோட்டை கண்மூடிக் கண் திறப்பதற்குள் எதிரி வசம் சிக்கிவிடும் என்பதையும் புரிந்து கொண்டான்.

பெரும்படைத் தலைவனுக்குள்ள மரியாதை அனைத்தும் காட்டப்பட்டது அரசர் அரண்மனையில் அந்த வாலிப வீரனுக்கு. அவன் புரவி அரண்மனை

வாயிலில் வந்து நின்றதும், காவலர் விரைந்து குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து குதிரையை நிறுத்தினார்கள். மற்றொரு வீரன் ஹரிதாஸ் ஜாலாவின் காலுக்குக் கைகொடுத்துத் தாங்கி இறக்கிவிட்டான். இறங்கி அவன் பிரதான வாயிலின் படிகளில் ஏறியதும் அரண்மனையின் காவலர் தலைவனான பிரதானி முதல் வாயிற்படியிலேயே அவனைச் சந்தித்து, "ராஜபுதனத்தின் சிறந்த படைத்தலைவர் வரவால் இந்த அரண்மனை இன்று புனிதப்படுகிறது" என்று முகமன் கூறி வரவேற்றார்.

"ராஜபுதனத்தில் காலடி வைக்க நேர்ந்ததால் நானும் புனிதப்பட்டு விட்டேன்" என்று பதிலுக்குச் சம்பிரதாய வார்த்தை பேசிய ஹரிதாஸ் ஜாலா, "அரசர் எங்கிருக்கிறார்?" என்று கேட்டான்.

"மன்னரிடம் தங்களை அழைத்துப் போகவே வாயிலில் காத்திருக்கிறேன்!" என்று மிகவும் பணிவுடன் கூறிய பிரதானி, அவனுக்கு வழிகாட்டி முன் செல்ல, ஹரிதாஸ் ஜாலா அவரைப் பின்தொடர்ந்தான். ஒண்டாலா கோட்டையில் இருந்த மன்னர் மாளிகை மிகவும் பெரியதில்லாவிட்டாலும், மிகவும் வசதி வாய்ந்தது என்பதை, அதைக் கண்டதுமே புரிந்து கொண்டான் ராஜபுதனத்தின் படைத் தலைவன். அந்த அரண்மனையில் கட்டுகள் பல இருந்ததன்றி ஒவ்வொரு கட்டும் தனித்தனி அரணைப்போல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ராணா பிரதாபசிம்மனால் புனர் நிர்மாணம் செய்து செப்பனிடப்பட்ட அந்தப் பழைய அரண்மனையைச் சிற்பிகள் எத்தனை திறம்படக் கட்டியிருக்கிறார்களென்பதைப் பார்த்து பிரமித்தான், ஹரிதாஸ் ஜாலா.

அதை அரண்மனையாகவும் வைத்துக் கொள்ளலாம். ஒண்டாலா அரணுக்கு உள்ளிருந்த இன்னொரு சிறு அரணாகவும் வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு கட்டிலும் சுவர்கள் அழகாகப் பல சித்திரங்களுடனும், சாளரங்களுடனும் காட்சி அளித்தன. ஆனால் சுவர்கள் கெட்டியாயிருந்தன. சாளரங்கள் மரத்தால் செய்யப்படாமல் பெரும் துளைகளின் கும்பல்களைக் கொண்டு சுவர்களின் ஒரு பகுதியே சாளரங்களாக இருந்தன. அரண்மனைக்குள் எதிரி நுழைந்தாலும் அந்த ஒவ்வொரு கட்டிலும் அவனுக்குப் போர் மரியாதையை நிரம்பக் காட்டுவதற்கும், எதிரிகளை நூற்றுக்கணக்கில் வீழ்த்துவதற்கும் வசதி இருந்தது. அந்த வசதிகளைக் கண்ட ஹரிதாஸ் ஜாலாவின் உடல் புல்லரித்தது. 'ராணா பிரதாப் போன்ற ஒரு மகாவீரனைப் போல் போர்த்தினவு உள்ளவரால்தான் இத்தகைய ஓர் அரண்மனையை நிர்மாணம் செய்ய முடியும்' என்பதை அறிந்த ஹரிதாஸ் ஜாலா, 'அப்பேர்ப்பட்ட ராணாவுக்கு அமரசிம்மன் பிறந்தாரே!' என்று உள்ளூரக் குமுறினான்.

அந்தக் குமுறலுடன் அரசர் முன்னிலையில் நிறுத்தப்பட்ட ஹரிதாஸ் ஜாலா, ராணாவை நோக்கித் தலை தரையில் தொடும்படியாக வணங்கி எழுந்து நின்றான். நின்றவன் ராணாவின் முகத்தை நன்றாக ஆராய்ந்தான். ஆராய்ந்ததன் விளைவாக ராணாவின் மனத்தில் சிறிதும் சாந்தியோ சந்துஷ்டியோ இல்லை என்பதைப் புரிந்து கொண்டான். அமரசிம்மனின் கண்கள் மிக அழகாயிருந்தன. ஆனால் அவற்றில் உற்சாகமில்லை. சலனம் மிகுதியாக இருந்தது. வீரர்களான இரண்டு மக்களுக்குத் தந்தையான அவர் முகத்தில் வீரத்தின் களையைக் காணோம். அதற்கு பதில் கவலையே அதிகமாயிருந்தது. கவலை முகத்தில் இருந்ததேயொழிய அக்கம்பக்கத்தில் காவல் ஏதுமில்லை. அரசர் தன்னந்தனியே உட்கார்ந்திருந்தார். அரசர் அப்படி உட்கார்ந்திருந்ததைக் கண்ட ஹரிதாஸ்

ஜாலாவின் இதயத்தில் அனுதாபம் பெரிதும் எழுந்தது. அந்த அனுதாபகக் குறியை அரசரும் கவனித்திருக்க வேண்டும்; ஆகவே பிரதானியை அப்புறம் செல்லும் படி ஆக்ஞாபித்த ஹரிதாஸை அருகில் வரும்படி அழைத்து, "அது தேவைதான் ஹரிதாஸ். இப்பொழுது நிரம்பவும் தேவை" என்று மெள்ளக் கூறினார்.

அந்த வார்த்தைகள் ஹரிதாஸின் சிந்தையைச் சரே லெனத் தாக்கின. அரசர் வீரரோ அல்லரோ மிகவும் நுண்ணறிவு படைத்தவர் என்பதை மட்டும் தீர்மானித் துக் கொண்டான். தன் மன உணர்ச்சியை ஒரு விநாடி யில் அரசர் எடை போட்டு விட்டாரென்பதைப் புரிந்து கொண்டும் புரியாதவன் போலக் கேட்டான். "ராணாவின் தேவை எது என்பது புரியவில்லை" என்றான்.

"உன் உள்ளத்தில் என்னைக் கண்டதும் எழுந்த அனுதாபம்" என்றார் ராணா அமரசிம்மன்.

இதற்கு உடனே பதில் சொல்லவில்லை ஹரிதாஸ். சொன்னபோதும் தயங்கித் தயங்கியே சொன்னான். "மன்னரிடம் அனுதாபப்பட இந்த அடிமைக்கு அத்தனை ஆணவமில்லை" என்று.

ராணாவின் இதழ்களில் சோகப் புன்முறுவல் படர்ந்தது. "ஹரிதாஸ்! மொகலாயர் சிறை உன்னையும் மாற்றிவிட்டதா?" என்று கேட்டார்.

"நீங்கள் சொல்வது விளங்கவில்லை எனக்கு?"

மன்னர் ஆசனத்திலிருந்து எழுந்திருந்து எதிரே யிருந்த பெரும் தாழ்வாரத்தின் கைப்பிடியை நோக்கி நடந்தார். ஹரிதாஸ் ஜாலாவும் பின் தொடர்ந்தான். அங்கு சென்றதும் தாழ்வாரத்தின் கைப்பிடிமேல் சாய்ந்து கொண்டும் எதிரே தெரிந்த புவனா நதியின்



மீது கண்களை நாட்டிக் கொண்டும் ஹரிதாஸ் ஜாலா வைப் பாராமலும் அழைத்தார் மன்னர், 'ஹரிதாஸ்!' என்று.

"மகாராணா!"

"ராஜபுதனம் உனக்குப் புதிதல்லவே?"

"அல்லவென்பது மகாராணாவுக்குத் தெரியாத தல்ல."

"உன் ராணாவையும் உனக்குத் தெரியும்."

"மகாராணாவைத் தெரியாதவன் ராஜபுத்திரனா யிருக்க முடியுமா?"

"உன் மகாராணா மனிதர்களை ஆராயும் சக்தி படைத்தவர்."

"ஆம்."

"ஆகவே உன்னையும் ஆராய முடியுமல்லவா?"

"முடியாதென்று யார் சொன்னது?"

ராணா இதற்கு பதில் சொல்லாமல் சிறிது நேரம் மௌனம் சாதித்தார். பிறகு சொன்னார். "ஹரிதாஸ்! நீ நம்மிடம் வீரனாயிருந்து படைத் தலைமைப் பதவிக்கு உயர்ந்தது வரை எனக்கு உன்னை நன்றாகத் தெரியும். அந்த ஹரிதாஸ் ஜாலா உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவன்..." என்று வாச கத்தை மன்னர் முடிக்காமலே விட்டதை ஹரிதாஸ் ஜாலா கவனித்தான். "அப்படியானால் இப்பொழு துள்ள ஹரிதாஸ் ஜாலா?" என்று கூறினான்.

"சிறிது மாறிவிட்டான்."

"எப்படி?"

"உள்ளதைச் சொல்ல அச்சப்படுகிறான் அல்லது தயங்குகிறான்."

"அப்படியேதுமில்லை."

ராணா திடீரென்று அவனை நோக்கித் திரும் பினார். "பொய் சொல்லாதே ஹரிதாஸ்! என்னைக் கண்டதும் உன் இதயத்தில் அனுதாபம் சுடர்விட்டது. அதைச் சொல்ல ஏன் மறுக்கிறாய்?" கேட்டார்.

ஹரிதாஸ் ஜாலா பதில் சொல்லவில்லை. தன் இதயத்தை ராணா ஊடுருவிப் பார்த்துவிட்டதைப் புரிந்து கொண்டதால் மௌனமே சாதித்தான். ராணாவே தொடர்ந்து பேசினார்: "ஹரிதாஸ்! நீ இங்கிருந்தபோது ஓரளவு மறைவில்லாமல் பேசுவது வழக்கம். ராணாவுக்குப் பிடிக்காததை மந்திராலோசனையில் பேசுபவர் இருவர் என்பதை ராஜபுதனத்தில் சகலரும் அறிவார்கள். என்னை அரியணையிலிருந்து கீழே இழுத்துப் போரிலிறங்கச் செய்த பிதாமகர் ஒருவர்; படைத்தலைவனான ஹரிதாஸ் மற்றொருவன். இதையறியாதவர்கள் இல்லை. அப்படிப்பட்ட ஹரிதாஸ் ஏன் மாறிவிட்டான்! மொகலாயர் சிறை மாற்றி விட்டதா?" என்று கேட்டார் உணர்ச்சியுடன் ராணா.

"சிறை மாற்றவில்லை ராணா! இங்குள்ள நிலைமை மாற்றிவிட்டது" என்றான் ஹரிதாஸ் ஜாலா பதிலுக்கு.

மகாராணா மெள்ளப் புன்முறுவலுடன் அவனை நோக்கினார், பிறகு அவனருகே வந்து காதோடு காதாக, "உண்மையில் மோசந்தான் ஹரிதாஸ்" என்றார்.

மகாராணா எதை மோசமென்று சொல்கிறார்? என் மனத்திலுள்ளதைப் புரிந்து கொண்டுதான் சொல்



கிறாரா, புரியாமல் சொல்கிறாரா என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்ட ஹரிதாஸ் ஜாலா, மன்னரின் அடுத்த பேச்சைக் கேட்டுத் திகைத்தான். மன்னர் மேலும் ரகசியமாகச் சொன்னார்: "இந்தக் கோட்டையின் நிலைமை மிகவும் மோசம். இங்குள்ள வீரர்கள் காவல் புரியவில்லை. மேலுக்குத்தான் காவலிருக்கிறது. மற்றபடி வீரர்கள் கேளிக்கையிலும் வேடிக்கையிலும் காலம் கழிக்கிறார்கள்."

இதைக் கேட்ட ஹரிதாஸ் ஜாலா பிரமித்தான். "இது தங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"நன்றாகத் தெரியும்" என்றார் ராணா.

"அப்படியானால் நிலைமை ஏன் இப்படிச் சீர்கெட விட்டிருக்கிறீர்கள்" என்று கூறினான் ஹரிதாஸ் ஜாலா.

"நான் விடவில்லை."

"பின் யார் விட்டது?"

"சுந்தர்தாஸ்!" அரசர் இந்த பதிலை நிதானமாகவும், அழுத்தியும் சொன்னார்.

"சுந்தர்தாஸ்! சுந்தர்தாஸ்!" என்று இருமுறை ஆச்சரியத்தில் வினவினான் ஹரிதாஸ் ஜாலா.

மகாராணா திடீரென சுற்றுமுற்றும் பார்த்தார். இரைய வேண்டாம் என்பதற்கு அறிகுறியாக வாயைப் பொத்திக் காட்டி, "இங்கு சுவர்களுக்கும் காதுகள் உண்டு" என்றார்.

"அப்படியானால்..." ஹரிதாஸின் கேள்வி மிக ரகசியமாக எழுந்தது.

"இந்த அரண்மனையில் சுந்தர்தாஸின் ஒற்றர்கள் பலர் இருக்கிறார்கள்..."

“அப்படியானால்...?” மீண்டும் அதே சொல்லைத் திருப்பினான் ஹரிதாஸ் ஜாலா,

“சுந்தர்தாஸ் பரம அயோக்கியன்” என்றார் ராணா, சந்தேகத்துக்குச் சிறிதும் இடமில்லாமல்,

“இது தெரிந்துமா நீங்கள்... நீங்கள்...”

“அவனைப் பதவியில் வைத்திருக்கிறேன்; வேறு வழியில்லை.”

“ஏன்?”

“அவன் இஷ்டப்பட்டிருந்தால் இந்தக் கோட்டை இரண்டு நாள் முன்பு மொகலாயர் வசப்பட்டிருக்கும்.”

“அத்தனை வல்லவனா அவன்?”

“ஆம்.”

“எந்த விதத்தில் வல்லவன்?”

ராணா மிகுந்த எச்சரிக்கையுடனும் வெறுப்புடனும் வார்த்தைகளை உதிர்த்தார், “வேவு பார்ப்பதில்” என்று.

ஹரிதாஸ் ஜாலாவின் புருவங்கள் சந்தேகத்தால் உயர்ந்தன. “வேவு பார்ப்பதிலா?” என்றான் அந்தச் சந்தேகம் குரலிலும் ஒலிக்க.

“ஆம்” ராணாவின் பதில் திட்டவட்டமாக இருந்தது.

“யாருக்கு வேவு பார்க்கிறான்?”

“மொகலாயருக்கு.”

“என்ன?”

“பதறாதே, உண்மை அது. சில நாட்களாகவே எனக்கு இது தெரியும்.”

“இதைப் பிதாமகரிடம் சொல்லவில்லையா நீங்கள்?”

“இல்லை.”

“மகாராணா!”

“பிதாமகரிடம் சொன்னால் காரியம் கெட்டுவிடும். பிதாமகர் சுந்தர்தாஸை உடனே வெட்டுப்பாறைக்கு அனுப்பி விடுவார். அல்லது தூக்கு மரத்தில் தொங்க விடுவார். அடுத்தது இந்தக் கோட்டையில் ரணகளம் ஏற்படும்.”

ஹரிதாஸ் ஜாலா சிறிது நேரம் யோசித்தான்; “அப்படியானால் இவனை எப்படிச் சமாளிக்க உத்தேசம்?” என்று கேட்டான், சில விநாடிகளுக்குப் பிறகு.

“தந்திரக்காரனைத் தந்திரத்தால் வெற்றி கொள்ள வேண்டும்” என்றார் ராணா.

“என்ன தந்திரத்தைக் கையாளப் போகிறீர்கள்?”

“அவன் எதிர்பார்க்கும் பொருள் ஒன்றிருக்கிறது அதை அவன் கையில் கிட்டாமல் செய்து விட வேண்டும்.”

“எப்படிச் செய்வது?”

“அதை நீ பாதுகாக்க வேண்டும்” என்று ராண தொடர்ந்தார் தமது பேச்சை. அடுத்த சொற்களை சொல்லு முன்பு அவர் கையை ஹரிதாஸின் தோளி போட்டுக் கொண்டு அவன் காதுக்கு மட்டும் கேட்கு படியாகச் சொல்லத் தொடங்கி, “ஹரிதாஸ்! என் டம் நாகதீபம் என்ற மாணிக்கம் ஒன்று இருக்கிறது என்றார்.

ஹரிதாஸ் ஜாலாவின் இதயம் 'படக் படக்' கென்று அடித்துக் கொண்டது. மகாராணா மேலும் சொன்னார்: "இணையற்ற இரத்தினம் உலகத்தில் அதைப் போல் எதுவும் கிடையாது. அதை சுந்தர்தாஸ் திருடப் பார்க்கிறான். அதை அவன் கையில் சிக்காமல் காப்பாற்ற வேண்டும். அதை உன் கையில் ஒப்படைக்கப் போகிறேன். அதை மட்டும் நீ காப்பாற்றினால் என்னைக் காப்பாற்றியவனாவாய்."

மகாராணா இந்த வார்த்தைகளை உணர்ச்சியுடனும் சோகத்துடனும் சொன்னார். ஹரிதாஸ் ஜாலாவின் உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. விதியின் விசித்திர வழிகளை நினைத்து வியந்தான் அவன். "அந்த மாணிக்கம்" என்று ஏதோ குழறினான் அவன்.

மகாராணா இந்த வார்த்தைகளை உணர்ச்சியுடனும் சோகத்துடனும் சொன்னார். ஹரிதாஸ் ஜாலாவின் உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. விதியின் விசித்திர வழிகளை நினைத்து வியந்தான் அவன். "அந்த மாணிக்கம்" என்று ஏதோ குழறினான் அவன்.

மகாராணா வாசகத்தை இடையில் வெட்டி: "ராஜபுதனத்தின் உயிர். அது போனால் ராஜபுதனம் போய் விடும்!"

## 22. சரித்திர இரத்தினம்

**எ**ந்த நாகதீபத்தை முடியுமானால் நேர்வழியிலும் முடியாவிட்டால் வேறு முறையிலும் கொண்டு வருமாறு மொகலாயச் சக்ரவர்த்தியான ஜஹாங்கீர் பணித்தானோ, எதைக் கொண்டு வருவதாகத் தன் வாளின் மீது ஆணை வைத்து வந்திருக்கிறானோ, அந்த



நாக தீபத்தைக் காக்கும் பொறுப்பை ராணா தன் மீதே சுமத்துவது கண்டு பெரும் வியப்படைந்த ஹரிதாஸ் ஜாலா, அந்த நாகதீபம் ராஜபுதனத்தின் உயிர் என்றும், அது இல்லையேல் ராஜபுதனம் இல்லையென்றும் ராணா கூறியதும், அப்பேர்ப்பட்ட மகத்துவம் அதற்கு என்ன இருக்க முடியுமென்று நினைத்துப் பார்த்தான். அந்த மாபெரும் ரகசியம் மன்னர்களுக்கும், ஜஹாங்கீருக்கும், ராணா அமரசிம்மனுக்கும் விளங்கியிருக்கிறதென்பதை விட அத்துடன் ஒட்டிய வரலாறு ஏதோ ஒன்று இருக்க வேண்டுமென்பதை மட்டும் ஊகித்துக் கொண்டான். இத்தகைய யோசனையைத் தவறாகப் பொருள் செய்து கொண்டு, "உனக்கு வியப்பாகத்தானிருக்கும் ஹரிதாஸ். ஒரு மாணிக்கத்துக்கு என்ன அத்தனை சக்தி என்பது ஆச்சரியமாக இருக்கும். நீ முதலில் அதைப் பார். பிறகு அதன் மகத்துவத்தைச் சொல்கிறேன், வா இப்படி" என்று அவனை அழைத்துக் கொண்டு, தனது ஆசனத்திலிருந்து எழுந்து அவனைச் சந்தித்த அறையிலிருந்து உட்புறம் நோக்கி மெள்ள நடந்தார். ஹரிதாஸ் ஜாலாவின் மனம் பலதரப்பட்ட துறைகளில் சஞ்சரித்துக் கொண்டு இருந்ததால், அவன் ஏதும் பேசாமலே ராணாவைப் பின் தொடர்ந்தான். ராணா மிகவும் மௌனமாகவும் அடி மேலடி வைத்தும் ஏதோ தெய்வ சந்நிதானத்துக்குச் செல்லும் பக்தன் போலவும், முதல் இரண்டு கட்டுகளைத் தாண்டி நடந்தார். இரண்டு கட்டுகளிலும் காவல் வீரர் இரண்டொருவர் இருந்தாலும், உருவிய வாளும் கையுமாக அவர்கள் நின்று கொண்டிருந்ததையும், முன்னெச்சரிக்கையின்றி யார் கட்டுக் கதவுகளைத் திறந்தாலும், அவர்கள் விசாரணையின்றி இந்தத் தளத்திலேயே வெட்டிப் போடப்படுவார்கள் என்பதையும், அந்த வீரர்கள் நின்ற தோரணையிலிருந்து புரிந்து கொண்ட ஹரிதாஸ்

ஜாலா, நாகதீபத்தின் மதிப்பு மிக உயர்ந்ததாக இல்லா விட்டால், ராணா இத்தனை பந்தோபஸ்தை அதற்கு வைத்திருக்க மாட்டார் என்று தன்னுள்ளே சொல்லிக் கொண்டான். அந்த இரண்டு கட்டுகளைத் தாண்டிய தும் ராணா திடீரென வேறொரு வழியில் திரும்பித் திரையொன்றை விலக்கி உள்ளே நுழைந்தார்.

ஹரிதாஸ் ஜாலா மன்னரைத் தொடராமல் ஸ்தம் பித்து நின்றான். மகாராணா நுழைந்தது பொக்கிஷ அறை அல்லவென்பதையும், அரண்மனையின் வலது புறத்திலிருந்த அந்தப்புரம் என்பதையும் திரைச்சீலை விலக்கப்பட்டதிலிருந்தே புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, ராஜபுத்திரர் வழக்கப்படி வெளியே நின்றான். திரைக்குள்ளே சென்ற மன்னர் மீண்டும் திரையை விலக்கி வெளியே தலையை நீட்டி, "ஏன் நின்று விட்டாய்? வா" என்று அழைத்தார்.

மன்னர் அப்படி ஆணையிட்டும் ஹரிதாஸ் ஜாலா வின் கால் இருந்த இடத்தைவிட்டுப் பெயரவில்லை. "அந்தப்புரமாயிற்றே" என்று இழுத்தான் தயக்கத்துடன்.

"இருந்தாலென்ன?" மன்னர் குரலில் சற்றுச் சினம் இருந்தது.

"ராணாவின் அந்தப்புரத்துக்குள் நுழைபவர்களுக்கு மரண தண்டனை உண்டு ராஜபுதன வழக்கப்படி" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"தண்டனை விதிக்க வேண்டியது யார்?"

"ராணாதான்."

"நானே அழைக்கிறேன்."

அதைக் கேட்டும் பண்பாடு மிகுந்த ராஜபுத்திரனின் கால்கள் நகர மறுத்தன. "இருப்பினும்..." என்று சங்கடத்



துடன் ஏதோ சொல்ல முற்பட்ட ஹரிதாஸ் ஜாலா வின் சொற்களை, மன்னர் சினத்துடன் குறுக்கே புகுந்து வெட்டினார். "ஹரிதாஸ்!" என்று அவர் குரல் பயங்கரமாக ஒலித்தது.

"ராணா!" பணிவுடன் எழுந்தது ஹரிதாஸின் பதில்.

"ராணாவின் உத்தரவை மீறுபவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா?"

"தெரியும்... மரண தண்டனை."

"உத்தரவை மீறாதே, வா என்னைத் தொடர்ந்து" என்று கூறிவிட்டுத் திரைச்சீலையை அகற்றி ஹரிதாஸ் ஜாலாவுக்கு வழிவிட்டு நின்றார் ராணா. வேறு வழி யின்றி அந்தப்புரத்திற்குள் புகுந்தான் ஹரிதாஸ், ராணா வழிகாட்டிக் கொண்டு நடக்க, அவனும் அவரைத் தொடர்ந்து நடந்தான். அந்தப்புரத்துக்குள் அறைகள் பல இருந்தன. உள்ளே ராணாவின் மகிஷிகளுக்குத் தோழிகளாய் வந்த ராஜபுதனப் பெண்மணிகள் பலர் வழி நெடுக உலாவிக் கொண்டிருந்தனர். ராணாவைக் கண்டதும், அந்த அழகிகள் பலர் வழிவிட்டு நின் றார்கள். அவருடன் வந்த ஹரிதாஸ் ஜாலாவைக் கண் டதும் பயத்துக்குப் பதில் வியப்பையே காட் டினார்கள். அந்தப்புரத்தில் ராணாவும் அவருடைய புத்திரர்களும் மைத்துனரும் தவிர வேறு யாரும் புகுவதற்கு அதிகாரமில்லாதிருக்க, ஒரு புது ஆடவனை ராணா அழைத்துக் கொண்டு நுழைந்து யாரையும் அலட்சியம் செய்யாமல் நெடுகப் போய்க் கொண்டிருந்ததைக் கண்டு, ஒருவருக்கொருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டார்கள். ராணாவின் குரல் கேட்டதுமே முதலில் வலப்பக்க அறையிலிருந்த ராஜமகிஷியொருத்தி தலையை வெளியே நீட்டி ராணா தனியாக வரவில்லை என்பதை அறிந்ததும்

தலையை உள்ளுக்குள்ளே இழுத்துக் கொண்டாள். அந்த மலர் முகத்தை ஒரு விநாடி சரேலென்று பார்த்த ராணா புன்முறுவல் செய்து விட்டு மேலே நடந்தார்.

இப்படிப் பல பெண்கள் குறுக்கிட்டு நடமாடிய போதிலும், தன்னை அவர்கள் உற்றுப் பார்த்த போதிலும், ஹரிதாஸ் ஜாலா குனிந்த தலை நிமிராமல் புக்ககத்துக்குள் வரும் புதுநாட்டுப் பெண்ணைப் போல், மன்னரைப் பின்தொடர்ந்து நடந்தான். மன்னர் இரண்டு பக்கத்து அறைக்குள் இடையே இருந்த நீண்ட தாழ்வாரத்தில் நடந்து சென்று கடைசியாக இருந்த ஒரு பெரு அறையின் முன்பு வந்து நின்றார். அந்த அறையின் முகப்பில் பெருந் திரைச் சீலைகள் விலை உயர்ந்த பட்டுகளால் தயாரிக்கப்பட்டிருந்ததையும், அவற்றில் பெரும் சரிகைச் சித்திரங்கள் போடப்பட்டு விளக்கொளியில் அந்தச் சித்திரங்கள் ஜாஜ்வல்லிய மாகப் பிரகாசித்துக் கொண்டிருந்ததையும் கவனித் தான் ஹரிதாஸ். அந்தத் திரைச் சீலைகளுக்கு முன்பு வந்ததும் சட்டென்று நின்ற ராணா, "யாரங்கே?" என்று இருமுறை அழைத்தார்.

தாதியொருத்தி வெளியே தலையை நீட்டி ராணா வைப் பார்த்ததும், தலை தாழ்த்தித் திரையை நீக்க முயன்றாள். "வேண்டாம்" என்று கையால் சைகை செய்த ராணா, "மகாராணியைப் பார்க்க என்னுடன் மற்றொருவரும் வந்திருப்பதாகச் சொல்" என்றார். மகாராணாவின் இந்த எச்சரிக்கையாலும் ஏற்பாடு களாலும் அந்த அறை பெரிய மகாராணியின் அறை என்பதைப் புரிந்துகொண்ட ஹரிதாஸ் ஜாலா, பெரும் அச்சத்துடன் நின்றான். ராஜபுதனத்தின் பிரதம மந்திரியும் பிதாமகரும் கூட எதிரில் காணமுடியாத மேவாரின் பட்ட மகிஷியைத் தான் சந்திக்கப் போவதை நினைத்தவுடன், ஹரிதாஸ் ஜாலாவின்



நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. வாள் பலத்தாலேயே சாம்ராஜ்யத்தைப் பரப்பிய ஜஹாங்கீர் முன்பு அச்சமின்றி நின்ற ஹரிதாஸ் ஜாலாவின் பண் புள்ள உள்ளம் ராஜபுதனப் பட்டமகிஷியும், இளவரச னும் பட்டத்துக்குரியவனுமான கருணாசிம்மனின் தாயுமான ராஜபுதனத்தின் பிரதான அழகியைச் சந்திக்கப் போகிறோமென்ற நினைப்பால் நடுங்கவே செய்தது. சில நிமிஷங்கள் கழித்துத் திரை விலக்கப்பட் டதும் பட்டமகிஷியின் அறைக்குள் நுழைந்த ராணாவை மிகுந்த அச்சத்துடனேயே பின் தொடர்ந் தான் ஹரிதாஸ் ஜாலா.

அந்த விசாலமான அறையின் நடுவிலிருந்த மஞ்சத் தில் அமர்ந்த மகாராணி, ராணா நுழைந்ததும் எழுந் திருந்து தலை வணங்கி தலை முக்காட்டை நன்றாக இழுத்துவிட்டு முகத்தை மறைத்து நின்றாள். அதைக் கண்ட ராணா ஹரிதாஸின் அச்சத்தை மேலும் உயர்த்த சொன்னார்: "இவனை நீ பார்க்கலாம் ராணி! நம் மானத்தைக் காக்க இவனை அழைத்து வந்திருக் கிறேன்" என்று.

அதைக் கேட்டும் குனிந்த தலையை நிமிர்த்தாத ராணி "நம் மானத்தைக் காக்கவா?" என்று கேட்டாள். அவள் குரலில் வியப்புத் தொனி இருந்தது.

"ஆம் மகாராணி!" என்று திடமாகச் சொன்னார் ராணா.

"புரியவில்லை மகாராணா," என்றாள் மகாராணி.

"நாகதீபத்தைக் காக்க இவனை அழைத்து வந்திருக் கிறேன்" என்றார் ராணா, உறுதி பூர்ணமாக ஒலித்த குரலில்.

இதைக்கேட்ட ராணியின் போக்கு திடீரென மாறு தலடைந்தது. தலையை மின்னல் வேகத்தில் உயர்த்திய மகாராணி, தாமரையும் கண்டால் வெட்கும் முகத்தை மறைந்திருந்த பட்டுச் சீலையை விலக்கினாள். மிக அழகிய கண்கள் ஹரிதாஸ் ஜாலாவை ஏறிட்டு நீண்ட நேரம் பார்த்தன. அந்தக் கண்கள் மெள்ள மெள்ள மென்மைப்பட்டதைக் கண்ட ராணா சாந்திக்கு அறிகுறியாகப் பெருமூச்செறிந்தார்.

அடுத்தபடி ஒரு கேள்வி கேட்ட ராணியின் குரலும் மென்மையாக ஒலித்தது. "இவர் யார் மகாராணா?"

"ஹரிதாஸ் ஜாலா!" என்றார் மகாராணா.

இதைக் கேட்டதும் மகாராணி கண்களில் லேசாக அச்சம் உதயமாவதைக் கவனித்தார் ராணா. "ஏன் மகாராணி! ஹரிதாஸ் ஜாலாவைப் பற்றி நீ கேள்விப் பட்டதில்லையா! கேள்விப்படாதவர்கள் ராஜபுதனத் தில் யாருமில்லையே" என்று கூறினார்.

"ஹரிதாஸ் ஜாலாவைப் பற்றிக் கேல்விப்படாவிட் டால் நான் ராஜபுதனத்தின் ராணியாக எப்படி இருக்க முடியும்?" என்ற ராணியின் குரலில் பெரும் சந்தேகத் தொனி இருந்ததை ராணா மட்டுமல்ல ஹரிதாஸும் கவனித்தான். ராணிக்குத் தன்னைப் பற்றி முன்பே ஏதோ செய்தி எட்டி இருக்கிறதென்பதைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அது என்னவாயிருக்கு மென்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் அதைப் பற்றி ராணாவே பேச்சைத் தொடங்கிக் கேட்டார். "ஏன் மகாராணி, ஹரிதாஸைப் பற்றி என்ன கேள்விப்பட்டாய்?" என்று.

"மொகலாயர் சிறையிலிருந்திருக்கிறார்..." மேலே சொல்லத் தயங்கினாள் ராணி.



"ஆம்" என்ற ராணாவின் குரலில், "மேலே என்ன" என்ற கேள்வியும் தொக்கி நின்றது.

"சமீபத்தில்தான் விடுதலையடைந்திருக்கிறார்..."

"ஆம்."

"மொகலாயர் தூதராக வந்திருப்பதாகக் கேள்வி."

"ஆம்."

"ஆனால்?"

"ஒற்றனென்று நினைக்கிறாய்." ராணாவின் முத்தாய்ப்பு சரேலென்று வெளிவந்தது.

அந்த இருவர் சம்பாஷணையையும் கேட்ட ஹரிதாஸ் ஜாலா பெரிதும் திகைப்படைந்து நின்றான். தான் ஒண்டாலா கோட்டையை அடைவதற்குள் தன் னைப் பற்றி பூரா விவரமும் ஒண்டாலா கோட்டைக் குள் மட்டுமல்ல, அந்தப்புரத்துக்குள்ளும் நுழைந்து விட்டதைக் கண்டு பெரும் பிரமிப்பு அடைந்தான். தன் இதயத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்த பரம ரகசி யங்களை ராணாவும் அந்த மகிஷியும் சர்வ சகஜமாகப் பேசுவதைக் கேட்ட அவன் மேலே என்ன நடக்குமோ வென்று ஓரளவு அச்சமும் கொண்டிருந்த தருணத்தில் மகாராணா சிரித்தது பெரும் விந்தையாய் இருந்தது ஹரிதாஸ் ஜாலாவுக்கு. ஆனால் மகாராணாவின் அடுத்த பரிகாச வார்த்தைகள் அவன் இதயத்தில் வேறு உணர்ச்சிகளை கிளப்பின.

"மகாராணி! உங்கள் இருவரில் யார் சிறந்த ஒற்றர் என்பது புரியவில்லை" என்றார் மகாராணா.

"மகாராணா!" கோபத்துடன் எழுந்தது பட்ட மகிஷியின் பேச்சு.

"கோபிக்காதே மகாராணி! இவன் உளவறிய வந்திருப்பதாக நீ சொல்கிறாய். ஆனால், இவனைப் பற்றி நீ ஏற்கெனவே பூரணமாக உளவறிந்து வைத்திருக்கிறாய். இதில் யார்...?" மகாராணா வார்த்தையை முடிக்கவில்லை.

மகாராணி ஒரு விநாடி மௌனமாயிருந்தாள். பிறகு கேட்டாள், "ஹரிதாஸ் ஒற்றனல்லவென்பதை நீங்கள் நிச்சயமாகக் கூறமுடியுமா?" என்று.

"முடியாது."

"அப்படியானால்..."

"ஒற்றனென்றும் கூறமுடியாது. இவன் விஷயத்திலிருப்பது சந்தேகந்தான். இவனையே கேட்டுவிடலாமே" என்ற மகாராணா. "ஹரிதாஸ்! நீ ஒற்றனா தூதனா?"

மகாராணியின் கண்கள் ஆச்சரியத்தில் பெரிதாய் மலர்ந்தன.

"இவரையே கேட்டால்..." என்று ஏதோ துவங்கியவளை ராணாவின் குரல் கடுமையுடன் தடுத்தது. "இவன் ஜாலா வம்சம்" என்று.

"ஆம்..." என்றாள் ராணி.

"ஜாலா வம்சத்தார் உயிரை இழப்பார்கள். பொய் சொல்ல மாட்டார்கள். ராஜபுதனத்தின் ராணியான நீ இதை அறிந்திருக்க வேண்டும்."

இப்படிக் கடுமையாகக் கூறிய ராணா, "சொல் ஹரிதாஸ். நீ யார்... தூதனா, ஒற்றனா?" என்று ஹரிதாஸை நோக்கிக் கூறினார்.

"தூதன்." சந்தேகமின்றி பதில் சொன்னான்.



ராணா மகாராணியை வெற்றிப் பார்வையுடன் பார்த்தார். அத்துடன் சொல்லவும் சொன்னார். "ராணிகளின் உறவினர்களால் ராஜபுதனம் பலமுறை கெட்டிருக்கிறது மகாராணி, ஆனால் அமரசிம்மன் அதற்கு இடங்கொடுக்க முடியாது. சுந்தர்தாஸ் முன்பே உன்னிடம் வந்து இல்லாத பொய்களைக் கூறி விட்டுச் சென்றிருப்பது எனக்குத் தெரியும்..." என்று மேலும் ஏதோ சொல்லப் போன ராணாவை "மகாராணா" என்ற ராணியின் அதட்டலான குரல் சிறிது தேக்கியது.

"என்ன மகாராணி?" என்று ராணா கேட்டார்.

"அந்தப்புரத்தின் மீதும் வேவு பார்க்க ஆள் வைத்திருக்கிறீர்களா?"

"இல்லையே."

"பின் சுந்தர்தாஸ் என்னைச் சந்தித்துச் சென்றது உங்களுக்கு எப்டித் தெரியும்?"

"சுந்தர்தாஸின் குணத்தால் தெரியும். அது மட்டுமல்ல!"

"வேறென்ன?"

"உன் பார்வையும் பேச்சும் காட்டிக் கொடுத்தன."

"எப்படி?"

"சுந்தர்தாஸ் வந்து போய்விட்டானென்பதை உன் பார்வையிலிருந்து தெரிந்து கொண்டேன். மீதியை ஊகித்தேன். இத்தனை ஊகமில்லாமல் நான் ராஜபுதனத்தை ஆள முடியுமா? தவிர மகாராணி, என் அந்தப்புரமும், சதிக் கூடமாகாமல் பார்த்துக் கொள்வதும் என் கடமை அல்லவா?" என்று கூறிய மகாராணா, "சரி மகாராணி! நாக தீபத்தைக் கொண்டுவா"

என்று திட்டமாகக் கூறியதன்றி, "சுந்தர்தாஸ் பரம அயோக்கியன்" என்றும் தெரிவித்தார்.

ராணியின் முகத்தில் கோபம் ஏறியது. "அவன் எனக்கு ஒன்றுவிட்ட சகோதரன்."

"கூடப் பிறந்தவனாயிருந்தாலுந்தானென்ன, உடன் பிறந்தே கொல்லும் வியாதி."

மகாராணி மேற்கொண்டு பேசவில்லை. மகாராணா வின் முகத்தில் இருந்த ஏதோ ஒரு பார்வை அவளை உள்ளே விடுவிடு என்று செல்ல வைத்தது. உள்ளிருந்து ஒரு பேழையைக் கையில் கொண்டு வந்த மகாராணி அதைத் திறந்தாள். அந்த அறை பூராவும் திடீரெனச் செங்கதிர்கள் பாய்ந்தன. சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்தப் பெரும் இரத்தினத்தின் மீது கண்களை நாட்டிய ஹரிதாஸ் ஜாலா, கண்களை அதில் இருந்து மீட்க முடியாமல் திண்டாடினான்.

## 23. பதினைந்து நாட்களுக்கு

சிசோதய வம்சத்தினரால் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்கப்பட்டு வந்த அந்தக் குடும்ப இரத்தினத்தின் மீது முதல் முதலாகக் கண்களை நாட்டிய ஹரிதாஸ் ஜாலா, விநாடிகள் ஓடஓட அதன் பெருமையைப் பரிபூரணமாக உணர்ந்து கொண்டதால், பேச நா எழாமல் பிரமை பிடித்து நின்றான். மகாராணி பேழையைத் திறந்தவுடன் அவன் அதன் மத்தியில் கண்டதும் ஒரு பெரும் சிவப்புக் கல்தான். அதிக ஒளியும் அதனிடம் தெரியவில்லை ஆரம்பத்தில், ஆனால் மெள்ள மெள்ள ஆதவனின் காலைக் கிரணங்கள் போல அதிலிருந்து லேசான செங்கதிர்கள்



கிளம்பத் தொடங்கின. விநாடிக்கு விநாடி அந்தச் செங்கதிர்கள் அதிகமாகி அந்த அறையின் நிறத்தையே சிவப்பாக அடிக்கத் தொடங்கின. முதலில் ஏதோ பழுதடைந்தது போல் காணப்பட்ட அந்த நாகரத்தினம் மெள்ள மெள்ளச் சிவந்து சில விநாடிக்குள் பெரும் நெருப்புத் துண்டம் போல் அந்தப் பேழைக்குள் ஜொலித்தது. அந்த நெருப்புத் துண்டத்திலிருந்து புகை வாணம் போல் கிளம்பிய சிவந்த கதிர்கள் அறையில் இரத்தச் சிவப்பை எங்கும் அள்ளித் தெளித்தன. சில விநாடிக்குள் அறைக்குள்ளிருந்த பந்தங்கள் விளக்குகள், திரைச் சீலைகள் எல்லாமை சிவப்பு மயமாக மாறின. ராணாவும் ராணியுங்கூட அந்தச் சிவப்பில் மூழ்கி அமரருலகிலிருந்து அப்பொழுது இவ்வுலகம் வந்த தேவதைகள் போல் காட்சியளித்தனர். அந்த அற்புதத்தைக் கண்டு பிரமிப்பால் ஏதும் பேசாமல் நின்ற ஹரிதாஸ் ஜாலாவின் காதில் அரசர் எங்கோ தொலைவிலிருந்து பேசுவது போன்ற பிரமை ஏற்பட்டது.

"ஹரிதாஸ்! சிசோதயர்களின் இணையற்ற, தெய்விகமான குடும்ப இரத்தினத்தை உன் கண்கள் பார்க்கின்றன இன்று. இதைப் பார்த்தவர்கள் வெகு சிலர். அபகரிக்க முயன்றவர்கள், யாரும் இதுவரை உயிருடன் இருந்ததில்லை. இதைத் திருட முயன்றதற்காக எங்கள் பெரியோர்கள் பலரைத் தூக்கிலிட்டிருக்கிறார்கள். வெட்டியிருக்கிறார்கள்" என்று ராணா மிகவும் உறுதியான குரலில் மெள்ள மெள்ள வார்த்தைகளை உதிர்த்தார்.

மகாராணாவின் சொற்கள் அந்த இரத்தினத்தின் மதிப்பை மிகவும் உயர்த்திக் காட்டவே, அந்த இரத்தினத்தைப் பற்றி ஏதோ பெரும் இரகசியம் இருக்கிறதென்பதைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அதை அறிய விரும்பி இரத்தினத்தை விட்டுக் கண்ணை

எடுக்காமலே, "மகாராஜா! ஓர் இரத்தினத்துக்காக அத்தனை உயிர்க் கொலையா?" என்று வினவினான் மிகவும் பயபக்தியுடன்.

"இது சாதாரண இரத்தினமல்ல ஹரிதாஸ்! இது எங்கள் குடும்பத்தின், ஏன் ராஜபுதனத்தின் உயிர். உயிரைக் கவர வருபவர்களுக்குக் கொடுக்கும் தண்டனை இதைக் கவர வருபவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது" என்று விளக்கிய மகாராஜா, இரண்டடி நடந்து அந்தப் பேழையை மூடினார்.

அந்த அறையில் திடீர் மாறுதல் ஏற்பட்டது. அறையின் சிவப்பு மந்திரத்தால் மறைவது போல் மறைந்தது. மகாராணாவும் மகாராணியுங்கூட அமர உலகத்திலிருந்து மனித உலகத்துக்கு மீண்டார்கள், அப்படி இரத்தினப் பேழையை மூடியதால் ஏற்பட்ட மாறுதலால் இரு கண்களையும் துடைத்துக் கொண்டு மகாராணாவையும் மகாராணியையும் ஏறெடுத்து நோக்கிய ஹரிதாஸ் ஜாலா கேட்டான்: "ஏன் பேழையை மூடி விட்டீர்கள் மகாராணா?" என்று.

"இரத்தினத்தின் ஒளி வீச்சு மதியை மயக்கவல்லது. நாம் தெளிவாகப் பேச முடியாது. ஆகையால்தான் பேழையை மூடினேன். ஹரிதாஸ்! இரத்தினத்தை நீ பார்த்து விட்டாய். ஆனால் இதன் வரலாற்றை நீ அறிய மாட்டாய். அறிந்தவர்கள் சிலர் உண்டு. அதில் இருவர்..." என்று மகாராணா மேற்கொண்டு என்ன காரணத்தாலோ தயங்கினார்.

"சொல்லுங்கள் மகாராணா?" என்ற ஆவலுடன் கேட்டான் ஹரிதாஸ் ஜாலா.

ராணாவின் பதில் ஹரிதாஸ் ஜாலாவை அயர வைத்தது. "அதில் ஒருவர் ஜஹாங்கீர் நூர்ஜகான்"



என்று மெள்ள அழுத்தி வார்த்தைகளை உச்சரித்தார் ராணா.

ஹரிதாஸ் ஜாலா பதில் சொல்லவில்லை. உள்ளே எழுந்து மோதிய உணர்ச்சி அலைகளால் மௌனம் சாதித்தான். மகாராணாவே மேற்கொண்டு சொன்னார்: "இந்த இரத்தினத்தின் சிறப்பு ஜஹாங்கீரின் காதுக்கு எட்டி இருக்கிறது. இது யாரிடம் இருக்கிறதோ அவர்கள் சுதந்திரத்தை இழக்க மாட்டார்கள் என்ற ராஜபுதன மக்களின் நம்பிக்கையும் மொகலாயச் சக்கரவர்த்தியின் காதில் விழுந்திருக்கிறது. அதை எப்படியாவது வரவழைத்து நூர்ஜகான் கிரீடத்தில் பதிக்கப் பார்க்கிறார் ஜஹாங்கீர். இது என்று ராஜபுனத்தை விட்டு நீங்குகிறதோ அன்று முதல் ராஜபுதனத்தின் சுதந்திரம் பறிபோய்விடும்..."

இந்த இடத்தில் மகாராணா தனது பேச்சை நிறுத்தி ஹரிதாஸின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். "மகாராணா ராஜபுதனத்தின் சுதந்திரம் வீரர்களின் வாட்களாலல்லவா காக்கப்படுகிறது?" என்றான் ஹரிதாஸ்.

மகாராணாவின் முகத்தில் சிந்தனை தீவிரமாகப் படர்ந்தது. "ஆம் ஹரிதாஸ்! ராஜபுதனத்தின் வீரர்கள் தாம் ராஜபுதனத்தைக் காக்கிறார்கள். ஆனால் எதற்கும் ஒரு மூல மந்திரம் உண்டு. மூலபலம் உண்டு. அந்த மூலமந்திரம், மூலபலம் இந்த இரத்தினமென்று என் முன்னோர்கள் நம்பியிருந்தார்கள். அது சரியான நம்பிக்கையோ, அல்லவோ எனக்குத் தெரியாது. ஆனால் அந்த நம்பிக்கைக்கு ஆதாரங்கள் இருக்கின்றன" என்றார்.

"என்ன ஆதாரங்கள் ராணா?" என்று வினவினான் ஹரிதாஸ்.

"சிசோதய வம்சத்தை ஸ்தாபித்த பாப்பா ராவூல் கழுத்தில் இந்த இரத்தினத்தைக் கட்டியவர் ஒரு முனிவர் என்று வரலாறு இருக்கிறது, அதன் சக்தியால் பாப்பாராவூல் கீழ்த்திசையில் ராஜ்யத்தை ஸ்தாபிப் பார் என்று முனிவர் சொன்னாராம். சிசோதய வம்சம், ராஜபுதன அரசு ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு பலமுறை சித்தூர் அழிந்தது. ராஜபுதன வீரர்கள் மாண்டார்கள், ஆனால் சுதந்தரம் பறிபோகவில்லை. என் தந்தை ராணா பிரதாப் சிம்மர் வரலாறுதான் உனக்குத் தெரியுமே. அவரிடம் வீரபலம் எத்தனை யிருந்தது?"

"மிகச் சொற்பம். ராஜா தோடர்மால், மான்ஸிங் எல்லோருமே அக்பரிடம் சேர்ந்து விட்டார்கள்."

"அப்படியிருந்தும் ராணா பிரதாப் இருபத்து ஐந்து ஆண்டுகள் மொகலாய சாம்ராஜ்யத்தை ஆட்டி வைத் தார். நாடிழந்த, படையிழந்த அவர் ராஜபுதனத்தின் மலைகளிலும் காடுகளிலும் அலைந்தார். ராஜபுதன சுதந்திரக் கொடியுடன், ராஜபுதன மானத்துடன், அத்தனை மலைகளிலும் காடுகளிலும் ஓடியபொழு தும் இந்தப் பேழையை அவர் கைவிடவில்லை. இந்த நாகரத்தினம் நாகம் போன்றது. சிலசமயம் படத்தைப் போட்டுக் கொண்டு படுக்கிறது. மறுபடியும் பட மெடுத்துச் சீறுகிறது. பிரதாப்புக்குப் பின் ராஜபுதனம் சீறி எழவில்லையா ஹரிதாஸ்? எத்தனை முறை பிதாமகரைத் தளபதியாகக் கொண்ட ராஜபுதனப் படைகள் மொகலாயர் படைகளை வெற்றி கொண் டன! இதுவரை பதினான்கு பெரும் போர்கள் நடந் திருக்கின்றன. பதினான்கிலும் வெற்றி கண்டிருக் கிறோம்" என்றார் மகாராணா உணர்ச்சியுடன்.

ஹரிதாஸும் உணர்ச்சி வசப்பட்டான். "ஆம், ராணா, ஆம்! வெற்றி கண்டிருக்கிறோம். ஆனால் அந்த



வெற்றிகள்..." ஏதோ கேட்க முற்பட்ட ஹரிதாஸ் பேச்சைச் சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

அவன் கேள்வியை ஊகித்துக் கொண்ட ராணா சொன்னார்: "வெற்றிகளுக்கு இந்த இரத்தினந்தான் காரணமா என்று கேட்கிறாய். ஆம் என்று நம்புகிறேன். என் குடும்பத்தினர் அனைவரும் நம்பியிருக்கிறார்கள். என் மூதாதையர்கள் அனைவரும் நம்பியிருக்கிறார்கள். என் மூதாதையர்கள் சாதாரண வீரர்கள் அல்லரென் பது வரலாறு அறியும். அவர்களும் நம்பியிருக் கிறார்கள்" என்று மேலும் பேச முற்பட்ட அவர், "அது மட்டுமல்ல..." என்றார்.

"வேறென்ன மகாராணா?" என்று கேட்டான் ஹரிதாஸ்.

"இப்போது எதிரியான ஜஹாங்கீரும் நம்புகிறார். இது என்னிடம் இருக்கும் வரையில் ராஜபுதனம் தலை வணங்காது என நினைக்கிறார். ஆகவே இதை உயிரைக் கொடுத்தாவது காக்க வேண்டும்" என்று மகாராணா உக்கிரகத்துடன் பேசினார்.

ஹரிதாஸ் ஜாலா ஏதோ சொல்லத் தொடங்கினான். அவனைப் பேச வேண்டாமென்று சைகை செய்த மகாராணா, "ஹரிதாஸ்! இதை உயிரைக் கொடுத்து நீ காக்க வேண்டும். இனி இந்த அரண்மனையும் இதைக் காக்காதென்று தோன்றுகிறது" என்றார்.

மகாராணியின் புருவங்கள் கோபத்துடன் எழுந்தன. "என்னைச் சந்தேகிக்கிறீர்களா மகாராணா?" என்று சீறினாள் மகாராணி.

"மகாராணி! உன்னிடமிருந்து இதைக் காப்பாற்ற முயலவில்லை நான். உன் உறவினரிடமிருந்து காக்க முயலுகின்றேன்" என்றார் திட்டமாக மகாராணா.

"அவன்தான்..." என்று ஏதோ ஆரம்பித்த மகாராணியை இடையே மறித்த மகாராணா, "இந்த இரத்தினத்தைக் காப்பாற்றுவதாக உறுதி கூறியிருக்கிறான். அதற்காகச் சில நிபந்தனைகளையும் விதித்தான். நிபந்தனையுடன் ராஜபுதனத்துக்குச் சேவை செய்ய வருபவர்களை நான் நம்புவதில்லை மகாராணி. இருப்பினும் உன் உறவினன் என்பதற்காகப் பொறுத்தேன். அவன் நிபந்தனைகளை ஏற்றேன். ஜயன் சந்தாவத் வம்ச மகளொருத்தியை அவனுக்கு மண முடித்து வைக்கவும் ஒப்புக் கொண்டேன். இருப்பினும் அவன் உண்மையுடன் நடக்கவில்லை. ஒண்டாலா கோட்டை அநாதையாக இருக்கிறது. அவன் இங்கு வைத்திருக்கும் வீரர்களுக்குக் காவலில் சிரத்தையில்லை. இந்த சமயத்தில் இந்தக் கோட்டை தாக்கப்பட்டால் போரின்றிச் சரணடைந்து விடும். அவனை இனி நம்ப முடியாது. நமது சுதந்திரத்தைக் காக்கும் நாகதீபத்தைச் சரியான கரங்களில் ஒப்படைக்க வேண்டும்" என்று ஆத்திரத்துடன் பதில் கூறியதன்றி, அந்தப் பேழையை எடுத்துக் கொள்ளும்படியும் ஆக்ஞாபித்தார் ஹரிதாஸுக்கு.

பதிலேதும் பேசாமல் பேழையை எடுத்துக்கொண்ட ஹரிதாஸ் ஜாலா, மகாராணிக்குத் தலைவணங்கினான். மகாராணாவும் மகாராணியை நோக்கி, "மகாராணி! கவலைப்படாதே. இந்த நாகரத்தினம் வெகு சீக்கிரம் உன்னிடம் வந்து சேரும்" என்று கூறி விட்டு, அந்த அறையைவிட்டு வெளியே நடந்தார். ஹரிதாஸ் பேழை என்னும் அந்தப் பெரும் பொறுப்பைச் சுமந்து கொண்டு அவரைத் தொடர்ந்து சென்றான். பழையபடி அந்தத் தாழ்வாரத்தின் வழியே வந்து தமது அந்தரங்க அறையை அடைந்த மகாராணா, தமது ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு பெருமூச்சுவிட்டார். பிறகு சொன்னார்: "ஹரிதாஸ்! நீ தாங்கி நிற்பது



வெறும் இரத்தினமல்ல. ராஜபுதனத்தின் மானம் உன் கையிலிருக்கிறது" என்று.

ஹரிதாஸ் ஜாலா பதில் ஏதும் சொல்லவில்லை. அடுத்து மகாராணா என்ன சொல்லப் போகிறார் என்பதை எதிர்பார்த்து நின்றான். சில விநாடிக்குப் பிறகு மகாராணா ஆக்ஞாபித்தார். "உன் வாளை உருவிக் கொள் ஹரிதாஸ்" என்றார். உறுதி நிரம்பிய குரலில்.

ஹரிதாஸ் உறையிலிருந்த தனது நீண்ட வாளை உருவிக் கொண்டான். மகாராணா இடப்போகும் ஆணை என்னவென்று தெரிந்ததால் இவன் இதயம் படக் படக்கென்று அடித்துக் கொண்டது. அந்தப் படபடப்பை அதிகமாக்க ராணா ஆக்ஞாபித்தார்: "உன் வாளின் மேல் ஆணை வை, நாகதீபத்தை உயிருள்ள வரை காப்பதாக."

இதைச் சொன்ன மகாராணாவின் குரலில் அதிகாரம் மிதமிஞ்சி ஒலித்தது. அந்த ஆணையை இட்டால் தன் கதி அதோ கதியாகிவிடும் என்பதைப் புரிந்துகொண்ட ஹரிதாஸ் ஜாலா சிலையென நின்றான். 'இந்த நாகதீபத்தைக் கொண்டுவர ஆணை வாங்கினான் ஜஹாங்கீர். அதைக் காக்க ஆணை செய்யச் சொல்கிறார் மகாராணா. நேர் விரோதமான இந்தப் பொறுப்புக்களை எப்படி நிர்வகிப்பது. ஜஹாங்கீர் உத்தரவை நிறைவேற்றினால் ராஜபுதனத்தில் போர் நின்றுவிடும். மகாராணாவின் உத்தரவை நிறைவேற்றினால் ராஜபுதனத்தில் போர் தொடரும். ஆனால் மானம் நிலைக்கும், மானம் முக்கியந்தான். அதற்கு ஆணையிட வேண்டியதும் ராஜபுதன மண்ணில் பிறந்த எனது கடமை. ஆனால் முதல் ஆணையை எப்படி மீறுவது?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு தயங்கினான்.

அவன் தயக்கத்தைக் கண்ட மகாராணாவின் முகத்தில் கோபம் துளிர்விட்டது. "ஆணையிட என்ன தயக்கம் ஹரிதாஸ்?" என்று வினவினார் ராணா கோபத்துடன்.

தனது கையிலிருந்த வாளையும் நோக்கி மகாராணாவையும் நோக்கினான் ஒரு விநாடி ஹரிதாஸ். "மகாராணா! இந்த ஆணையை இட என்னால் முடியாது" என்றான், பிறகு திட்டமாக.

மகாராணாவின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. "ஏன் முடியாது?" என்று வினவினார்.

"காரணம் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்" என்றான் ஹரிதாஸ் மீண்டும்.

"அரசன் ஆணையை மறுப்பதற்கு தண்டனை என்ன தெரியுமா?"

"தெரியும். மரணம்."

"அதற்குத் தயாராயிருக்கிறாயா?"

"வாழ்க்கை முழுவதுமே அதற்குத் தயாராயிருந்திருக்கிறேன்."

"இதைக் கேட்ட ராணா நீண்டநேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். கடைசியில் கேட்டார்: "இதை ஒரு பட்சம் அதாவது பதினைந்து நாட்கள்... காக்க முடியுமா உன்னால்?" என்று.

ஹரிதாஸ் ஆசுவாசப் பெருமூச்சு விட்டான். பதினைந்து நாட்களுக்குப் பிறகுதான் முதல் ஆணையை நிலை நிறுத்தலாம் என்று தீர்மானித்த அவன், "சரி மகாராணா! இன்றிலிருந்து பதினைந்து நாட்கள் வரை நான் இந்த நாகதீபத்தைக் காக்கிறேன், என் வாளின் மேல் ஆணை. ஆனால் பதினைந்து நாட்களுக்குள் நீங்கள் என்னிடமிருந்து இதைப் பெற்றுக் கொள்ளாவிட்டால்..." என்று சொல்லிக் கொண்டு போனதைத் தடுக்க, மகாராணா புன்முறுவல் கொண்டு ஆசனத்தைவிட்டு எழுந்திருந்து, "பதினைந்து நாட்களுக்குப் பிறகு இது உன் வசத்திலிருந்தால் இதை எது வேண்டுமானாலும் செய்து கொள்" என்றார்.



ஹரிதாஸ் மகாராணாவுக்குத் தலை வணங்கிவிட்டுத் திரும்பிச் செல்ல முயன்றான். "எங்கு செல்கிறாய் ஹரிதாஸ்?" என்றழைத்து அவனைத் தடுத்தார் ராணா.

"ஜயன் சந்தாவத்தின் இல்லத்துக்கு" என்றான் ஹரிதாஸ்."

"அங்கு நீ போகவில்லை இப்பொழுது."

"வேறெங்கு போகிறேன்?"

"சித்தூருக்கு."

இதைக் கேட்ட ஹரிதாஸ் வாயடைத்து நின்றான். மகாராணா சிரித்தார். "ஆம்; நமது தலைநகருக்குத்தான். வா இப்படி என்னுடன்" என்று பின்னாலிருந்த ரகசியக் கதவொன்றைத் திறந்து, மாளிகைத் தோட்டத்துக்கு அவனை அழைத்து வந்தார். அங்கு நான்கு புரவி வீரர்கள் அவனை அழைத்துச் செல்லத் தயாராகக் காத்திருந்தார்கள். அவனுக்கும் ஒரு புரவி சேணம் போட்டுத் தயாராயிருந்தது. "ஹரிதாஸ் இந்தப் பேழையுடன் தலைநகரில் காத்திரு. இன்றிலிருந்து பதினைந்தாம் நாள் நானே உன்னிடம் இதைப் பெற்றுக் கொள்கிறேன்" என்றார்.

ஹரிதாஸ் ஜாலா ஏதும் பேசாமல் புரவியில் ஏறப் போனான். "இன்னும் ஒரு வார்த்தை" என்றார் ராணா.

ஹரிதாஸ் திரும்ப ராணாவை நோக்கினான். "சுந்தர்தாஸை இடையில் சந்திப்பாய். சந்தித்தால் அவனைக் கொன்றுவிடு. உயிருடன் விட்டு வைக்காதே" என்று கூறிவிட்டு, ராணா மீண்டும் அரண்மனைப் பின்புற வாயிலை நோக்கி நடந்தார்.

## 24. சுற்றும் வழியும் சூழ்ந்த வீரரும்

சிசோதய வம்சத் திலகமான ராணா அமரசிம்மனாலேயே வழியனுப்பப்பட்டு ஒண்டாலா கோட்டையின் அரண்மனைப் பின்புற வாயிலாகக் காவலர் நால்வருடன் வெளிப் போந்த ஹரிதாஸ் ஜாலாவின் இதயத்தில் கோட்டையைவிட்டு அவன் தாண்டி வெகு நேரத்துக்குப் பின்பும் உணர்ச்சிகள் வெகுவேகமாகச் சுழன்று கொண்டிருந்தன. ஏதேதோ எண்ணங்கள் அவன் புத்தியில் எழுந்து எழுந்து வரும். வந்ததால் அவன் அவற்றில் திளைத்து மூழ்கிக் குழம்பிக் கொண்டிருந்தானேயொழிய அக்கம் பக்கத்தில் வந்து கொண்டிருந்த நான்கு காவலரைக்கூட கவனிக்கும் சக்தியை இழந்திருந்தான். நாகதீபத்தைக் கொண்டு வருவதாக ஜஹாங்கீரிடம் வாளின் மேல் ஆணை வைத்து வந்த நாளிலிருந்து பிரதி தினம் தனது வாழ்க்கையில் திடீரென ஏற்பட்டு வந்த திகைக்கத் தக்க திருப்பங்களை அவன் எண்ணினான். அவற்றை எண்ணி எண்ணி மனம் சிதற எதிரே விரிந்த பாலைவனத்தையும் அருகில் அப்பொழுதும் ஓடிய புவனா நதியையும் ஊன்றி ஊன்றிப் பார்த்தான். இக்கதையின் ஆரம்பத்தில் அவன் பாலைவனத்தில் சிரித்த வறண்ட சிரிப்பு, மனம் குழம்பிய இந்த நேரத்தில் அவனிடமிருந்து எழுந்து பாலைவனத்தின் நிர்க்கதியான வெளியே ஊடுருவவில்லை. ஆரம்பத்தில் அவன் பார்வையி



லிருந்த வெறுப்பும் இகழ்ச்சியும்கூட சித்தூரை நோக்கிப் புரவியில் அமர்ந்து சென்று கொண்டிருந்த அந்தச் சமயத்தில் அவன் கண்களில் விரியவில்லை. கண்களில் விரிந்ததெல்லாம் பெரும் கனவு. சென்ற ஒரு வாரத்தில் தினம் தினம் ஏற்பட்ட அவன் வாழ்க்கைக் கதையைப் பற்றிய கனவு.

'ராஜபுதனத்தின் பிரதான படைத்தலைவர்களில் ஒருவனான நான், ராஜபுதனத்தின் உயிராகச் சிசோதய மன்னர் நம்பி வந்த பரம்பரை இரத்தினமான நாகதீபத்தை முடியுமானால் கேட்டும், முடியாவிட்டால் வேறு வகையிலும் கொண்டுவர ஆணையிட்டு வந்ததே விசித்திரம். வந்தவனுக்கு வழியில் மனைவியொருத்தி கிடைத்தது விசித்திரம். அந்த மனைவி வலுவில் மணவறைக்கும் அழைத்தது, அதைவிட விசித்திரம். எந்த நாகதீபத்தை ஜஹாங்கீரிடம் கொண்டு போக நினைத்தானோ, அந்த நாகதீபத்தை பதினைந்து நாள் காப்பதாக ராணாவுக்கு உறுதி கூறி இதோ சித்தூரை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேனே, 'இது எல்லாவற்றையும் விட பரம விசித்திரம்' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட ஹரிதாஸ் ஜாலா, திரும்பத் திரும்ப தன் புத்தியைச் சூழ்ந்த பழங்காட்சிகளை உதற எண்ணியும் முடியவில்லை. அவன் மனத்திலே மீண்டும் மீண்டும் ராஜபுத்திரியின் எழில் முகம் எழுந்தது. ஜயன் சந்தாவத் 'இவன் உன் கணவன்' என்று ராஜபுத்திரிக்கு முதலில், அறிமுகப்படுத்திய அந்தக் கம்பீர ஏளனச் சிரிப்பு முகம் எழுந்தது. 'சுந்தர்தாஸை வழியில் சந்தித்தால் கொன்றுவிடு' என்று ராணா கூறிச் சென்றாரே, அந்த ராணாவின் சோக முகமும் எழுந்தது. ஒவ்வொரு சேதியைச் சொல்லியபோதிலும் இறுதியில் ஹரிதாஸ் ஜாலாவின் இதயத்தில் நிலைத்து வேரூன்றி நின்றது ராணா அமரசிம்மன் முகம்தான்.

அன்றிரவு ராணாவை அவன் அதிக நேரம் சந்திக்கா விட்டாலும், சந்தித்த கொஞ்ச நேரத்திற்குள் ராணா வைப் பற்றிய பல விஷயங்களை அவன் புரிந்து கொண்டான். எத்தனயோ பேர், பலப்பல ராஜபுத்திர வம்சங்கள், அவற்றின் கிளைகள் இத்தனையும் சூழ்ந் திருக்கும் ராணா ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் புரிந்து வைத்திருப்பதையும், ஒவ்வொருவர் போக்கு வரத்து நடவடிக்கைகள் ஆகிய அனைத்தையும் கண் காணித்து வந்ததையும் எண்ணிப் பார்த்து, சிசோதய வம்சத் திலகத்தின் திறமையைப் பற்றிப் பெரிதும் உள்ளூர வியந்து கொண்டான். மகாராணி பேசிய இரண்டொரு பேச்சிலிருந்தும் பார்வையிலிருந்தும் சுந்தர்தாஸ் வந்து போயிருப்பதையும் அவன் செய்திருக் கும் திரிசமனையும் மகாராணா புரிந்து கொண்டு விட்டதை எண்ண, அவன் வியப்பு உச்ச நிலையை அடைந்தது. மொகலாயரிடம் சமாதானம் செய்து கொள்ள முயன்ற ராணாவைப் பிதாமகர் அரியணையி லிருந்து கையைப் பிடித்து இழுத்து இறக்கிப் போருக்கு அழைத்துச் சென்ற நாளிலிருந்து ராணா அடியோடு மாறிவிட்டதையும் பல போர்களையும் கண்டுவிட்ட தால், அவர் அறிவும் பார்வையும் மிகக் கூர்மை யடைந்து விட்டதையும் நினைத்த அவன், ராணாவின் கண்களில் மண்ணைத் தூவுவதோ நாகதீபத்தை அவரையும் மீறி அபகரித்துச் செல்வதோ நடவாத காரியமென்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டான். தன்னிடம் நாகதீபத்தைக் காக்க ஆணை வாங்கிக் கொண்ட ராணா, தன்னை முழுவதும் நம்பவில்லை என்பதையும் சித்தூருக்குத் தன்னை நான்கு காவலரு டன் பயணப்படுத்திவிட்டதிலிருந்து தெரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, ராஜபுத்திரக் கிளை வம்சங்கள் மட்டும் பிளவுபடாமலிருந்தால் ராணாவை ஜஹாங்கி ரால் இந்த ஜன்மத்தில் வெற்றிகொள்ள முடியாதென்ப



தையும் தீர்மானித்துக் கொண்டான். இத்தகைய எண்ணங்களுடன் புரவியில் ஊர்ந்து சென்ற ஹரிதாஸ் ஜாலா, தான் அதற்குமேல் செய்யக்கூடிய காரிய மென்ன என்பதை யோசிக்கத் தொடங்கினான்.

ஜஹாங்கீர் என்னிடம் வாங்கிக் கொண்ட ஆணை யில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒரு பகுதி தூது. ராஜபுதனத்தின் போரை நிறுத்துவதற்கும் பரிசாக நாகதீபத்தைத் தரவேண்டுமென்று ராணாவைக் கேட்க வேண்டும் என்பது தூது நோக்கம். நாகதீபத்தைப் பற்றி ராணா கூறிய வரலாற்றுக்கும், பிறகு அதைக் காக்க அவர் கொண்ட உறுதிக்குப் பின்பும் அதைத் தூது சொல்லிப் பெறுவது என்பது நடக்காது என்பது திண்ணமாயிற்று. ஆகவே முதல் பகுதி பயனற்றது. இரண்டாம் பகுதி நாகதீபத்தைப் பலவந்தமாகக் கைப் பற்றுவது. அது இப்பொழுது சாத்தியம். நாகதீபத்தின் பேழை இதோ என் அங்கிப்பையில் இதயத்துக்கெதிரே ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. வருகிற இந்த நான்கு காவலரை வாள் கொண்டு சமாளிப்பது மிகவும் சுலபம். ஆனால் ராணா பதினைந்து நாட்களுக்கு ஆணையால் கட்டுப்படுத்தி விட்டாரே! என்ன செய் வது? என் நிலைமை எத்தனை தர்மசங்கடமானது? என்று தனக்குள்ளேயே பேசிக் கொண்டான். தனது கேள்விகளுக்கு ஏதும் விடை கிடைக்காததால் “பதினைந்து நாட்கள் முடிந்த பின்பு மேற்கொண்டு செய்ய வேண்டியதை யோசித்துக் கொள்ளலாம்” என்று தனக்குத் தானே உத்தரவிட்டுக் கொண்டான். இப்படியொரு தீர்மானத்துக்கு வந்ததால் புத்திக் குழப் பம் சிறிது நீங்கவே ராஜபுத்திரியைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான் ராஜபுதனத்தின் படைத்தலைவன்.

மகாராணாவுடன் இருந்த அரைஜாம நேரத்தில் பல விஷயங்களைப் புரிந்து கொண்டானானாலும் முக்கி

யமான ஒரு விஷயம் மட்டும் அவன் மனத்தில் ஊன்றி நின்றது. சுந்தர்தாஸ் நாகதீபத்தைக் காக்கக் கூறிய நிபந்தனைகளைப் பற்றி மகாராணா மகாராணியிடம் கூறியது அவன் மனதை விட்டு அகலவேயில்லை. ஜயன் சந்தாவத் வம்ச மகளொருத்தியையும் அவனுக்கு மணமுடித்து வைக்க ஒப்புக் கொணடேன். இருப் பினும் அவன் உண்மையுடன் நடக்கவில்லை என்ற ராணாவின் சொற்களை அவன் மறுபடியும் எண்ணிப் பார்த்து 'ராணா குறிப்பிட ஜயன் சந்தாவத் வம்ச மகள் ராஜபுத்திரியாகத் தானிருக்க வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டதால், பெரும் சீற்றத்துக்கும் உள்ளானான் ஹரிதாஸ் ஜாலா. அப்படி ராணா சுந்தர் தாஸுக்கு உறுதி கூறியிருந்தால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டவரென்பதையும் அவன் உணர்ந்திருந்த தால் ராணா அந்த இரவில் ஜயன் சந்தாவத் மாளிகை யில் தங்கவிடாமல் அழைத்து வந்ததற்கும் காரணமி ருக்க வேண்டும் என்றும் தீர்மானித்துக் கொண்டான். 'என்னைப் பற்றியும் ராஜபுத்திரியைப் பற்றியும் ராணா ஏதோ தெரிந்து கொண்டிருக்கிறார். ஆகையால் தான் காந்தருவ மணத்தைத் தடுக்க முயன்றிருக்கிறார்' என்று நினைத்த அந்த ராஜபுத்திர வாலிபன், 'சுந்தர் தாஸைச் சந்தித்தால் கொன்றுவிடு' என்று ராணா கூறியதன் காரணத்தையும் உணர்ந்து கொண்டான். 'சுந்தர் தாஸைக் கொன்றுவிட்டால் ராஜபுத்திர துரோகி ஒருவன் ஒழிந்து போவான். அத்துடன் தமது வாக்குறுதி யையும் நிறைவேற்ற அவசியமிருக்காது' என ராணா நினைத்திருக்கிறார் எனவும் ஊகித்த ஹரிதாஸ் ஜாலா, 'மகாராணா! நீங்கள் ஒன்று புரிந்து கொள்ள வில்லையே, எனக்கும் ராஜபுத்திரிக்கும் ஏற்கெனவே விவாகமாகி விட்டதே!' என்று ராணாவுக்கு பதிலும் சொல்லிக் கொண்டான். அது மட்டுமல்ல, தான் காக்க வேண்டியது ஓர் இரத்தினமல்ல, இரண்டு



இரத்தினங்கள் என்றும் உறுதி பூண்டான். 'ஒன்று இந்த நாகரத்தினத்தைப் பதினைந்து நாட்களுக்குக் காப் பாற்ற வேண்டும். அடுத்தது எனது இதய இரத்தினம் ராஜபுத்திரியை ராணாவிடமிருந்து என்ன உலகம் முழு வதும் திரண்டு எதிர்த்தாலும் காக்க வேண்டும்' என்று கூறி, மீண்டும் ஆணையிடுவதுபோல வாளின் பிடி மீது கையை வைத்து மெள்ள அதைத் தடவிக் கொடுத்தான்.

இப்படிப் பல சிந்தனைகளில் மூழ்கிப் புரவியை நடத்தி வந்த ஹரிதாஸ் ஜாலா, இரவு அகன்று பொழுது புலரத் தொடங்கிவிட்டதைக் கூட கவனிக் காது மேலும் புரவியை நடத்திச் செல்லவே கூட வந்த காவலனொருவன் அவனை சற்றே நெருங்கி, "படைத் தலைவர் மன்னிக்க வேண்டும்..." என்று ஏதோ கூற முற்பட்டான். அதனால் இந்த உலகத்தின் சூழ்நிலைக்கு இழுக்கப்பட்ட ஹரிதாஸ் ஜாலா, சட்டென்று புரவியை நிறுத்தி அக்கம் பக்கத்தை கவனித்தான். காலைப் பொழுதில் பாலைவனம் மிக ரமணீயமாகக் காட்சியளித்தது. மணலை லேசாக நனைத்திருந்த பின்பனி அப்பொழுதும் தூர இருந்த மணல் மேடுகள் மீது வெள்ளை வெளேரென இறங்கிக் கொண்டு இருந்தது. பொழுது புலர முற்பட்டதால் வீசிய சில்லென்ற காலைக் காற்று உடலுக்குப் பேரின்பமாயிருந்ததால், உள்ளத்தைக்கூடக் குளிர வைத்தது. அதுவரை அவன் புவனா நதிக்கரையோரமே வந்து கொண்டிருந்ததால் திடீரென அது எதிர்ப்புறம் திரும்ப முற்பட்டதைக் கண்ட ஹரிதாஸ் ஜாலா, இனி தான் செல்லவேண்டியது ஆற்றோரமில்லை என்பதை யும் முழுப் பாலைவனமேயென்பதையும் புரிந்து கொண்டான். அதுவரை கம்பீர நடை போட்டு வந்த அவன் புரவியும் பனி நனைத்திருந்த தன் உடலை

ஒருமுறை உதறிக் கொண்டு கால்களையும் இரண்டு மூன்று முறை தூக்கித் தூக்கி நிலத்தில் வைத்தது.

இத்தனையும் கவனித்த ஹரிதாஸ் ஜாலா, கூட வந்த காவலன் சொல்ல வந்ததை ஊகித்துக் கொண்டான். கையால் மெள்ளப் புரவியிலிருந்து மணலில் குதித்தான். மற்ற காவலரும் அவனுடன் குதிக்கவே அவர்களை நோக்கிக் கூறினான் ஹரிதாஸ் ஜாலா: "இனி புவனா எதிர்ப்புறம் ஓடும்" என்று.

முதலில் அவனை அணுகிய காவலன், "ஆம் படைத் தலைவரே! இனி நதிக்கு எதிர்ப்புறத்தில் தான் நாம் செல்ல வேண்டும். சென்றால் சித்தூர் நான்கு நாள் பயணமிருக்கிறது" என்று கூறினான்.

தனக்கும் அது தெரியும் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த ஹரிதாஸ் ஜாலா, ஹாராவளி மலைத் தொடரிருந்த திசையை நோக்கிக் கண்களைத் திருப்பினான். 'அருகிலிருப்பது போல் தோன்றும் அந்த மலை எத்தனை தூரத்திலிருக்கிறது? கைக்கொட்டியது போல் இருக்கும் பொருள்கள் வாழ்க்கையில் எப்படி தூரத்தே இருக்கின்றனவோ அப்படித்தானே இருக்கிறது இதுவும்! அதோ சமீபத்தில் போல் தெரியும் அந்த மலை நான்கு நாள் பயணம்' என்று வேதாந்தமாகத் தனக்குள் சொல்லிக் கொண்டு காவலரை நோக்கி, "புரவிகளை நீராட்டுங்கள். நீங்களும் காலைக் கடன்களை முடித்துக் கொள்ளுங்கள். யாராவது குடம் கொண்டு வந்திருந்தால் நீர் நிரப்பிக் கொள்ளுங்கள். இனி நாம் ஹாராவளியை நோக்கித் திரும்பினால் இன்று முழுவதும் பாலைவனப் பயணந்தான்" என்று உத்தரவிட்டு உள்ள கஷ்டத்தையும் குறிப்பிட்டான்.

காவலர்கள் புரவிகளின் சேணங்களை நீக்கிவிட்டார்கள். கட்டுப்பாடு நீங்கிய புரவிகள் முதலில்



துள்ளிக் குதித்தன. இரண்டு புரவிகள் மணலில் படுத்து உடலைப் புரட்டி ஆசுவாசம் செய்து கொண்டன. மற்றுமிரண்டு நன்றாக வாய்களைத் திறந்து பற்களைக் காட்டிக் கனைக்கவும் செய்தன. அந்த வாயில்லாப் பிராணிகள் எப்படியெல்லாம் தங்கள் அலுப்பைத் தீர்த்துக் கொள்ளுகின்றன என்பதைப் பார்த்து, "அலுப்புத் தீர இயற்கை எத்தனை எத்தனை வழிகளைச் சொல்லிக் கொடுத்திருக்கிறது" என்று வியந்த ஹரிதாஸ் ஜாலா, வழக்கம்போல் தான் ஊர்ந்து வந்த புரவியின் சேணத்தையும் நீக்கி அதையும் புவனாவின் குளிர்ந்த நீரில் குளிப்பாட்ட ஏற்பாடுகளைச் செய்தான். புரவியை குளிப்பாட்ட இறங்கு முன்பு தன் அங்கியின் பையிலிருந்த நாகதீபத்தின், சிறு பேழையைக் கச்சையில் பத்திரப்படுத்தியதன்றி, அங்கியையும் இடுப்பில் சுற்றிக் கட்டிக் கொண்டு, உடையை முழுவதும் நீக்காமல் சராயையும் சுருட்டி மேலேறச் செய்து கொண்டு அரை நிர்வாணமாகப் புரவியை நீரில் இழுத்துச் சென்று கழுவி மீண்டும் கரைக்கு விரட்டினான். பிறகு தனது அங்கி, கச்சை, கால்சராய் இவற்றை ஒரு மூட்டையாகச் சுற்றி கரையில் வைத்து, அவற்றுக்குக் காவலாகத் தன் கத்தியையும் கைக்கெட்டும் தூரத்தில் வைத்து, புவனாவின் கரையோரத்திலேயே குளித்து தூரக் கிளம்பிய பகலவனை நோக்கி அர்க்கியங்களையும் வாரிவிட்டான். காலைக் கடன்களை முடித்துக் கொண்டதும் அந்தப் பழைய உடைகளை மீண்டும் அணிந்து கொண்டு மேற்கொண்டு பயணத்துக்குத் தயாராகவே கதிரவன் கொடுமை அதிகமாகுமுன்பே ஐவரும் பயணப்பட்டு புவனாவைப் பிரிந்து சற்றே காயத் தொடங்கிவிட்ட பாலைவன மணலில் புரவிகளை தட்டிவிட்டனர்.

மணலைச் சிறிதும் லட்சியம் செய்யாமலே அந்த சாதிப் புரவிகள் ஓட்டமும் நடையுமாகச் சென்றன.

இரு காவலர் முன் செல்ல இரு காவலர் பின் தொடர்ந்து வர, பாலைவனத்தில் அன்று பகற் பூராவும் பயணம் செய்தான் ஹரிதாஸ் ஜாலா.

முதல் ஜாமத்தில் அதிகமாகத் தகிக்கத் தொடங்கிய சூரிய உஷ்ணம் இரண்டாம் ஜாமத்தில் உச்சநிலையை அடைந்ததும் அதைப் பற்றிக் கவலைப் படாமலும் உணவைக்கூட எதிர்பாராமலும் புரவியை நடத்திய ஹரிதாஸ் உடல் உரத்தையும் சகிப்புத் தன்மையையும் கண்ட காவலர் வியந்தனர். உறுதியும் திடமும் அவர்களுக்கில்லாததால், சிறிது புரவிகளை நிறுத்தி உணவருந்தவும் நீரருந்தவும் ஹரிதாஸ் ஜாலாவை அனுமதியும் கேட்டனர். அவர்கள் உணவை முடிக்க அனுமதி தந்த ஹரிதாஸ் ஜாலா, காவலன் கொடுத்த உணவை மறுத்து, "ஒரு வாய் குடிநீர் கொடுங்கள் போதும்" என்று கூறினான். காவலர் அவனை அதற்கு மேல் கட்டாயப்படுத்தாமல் உணவருந்தி முடித்து, அவ னுக்கு ஒரு குவளை குடிநீர் மட்டும் கொடுத்தார்கள். புரவியிலிருந்து இறங்காமலே நீரைக் குடித்த ஹரிதாஸ் ஜாலா, காவலர் தயாரானதும் மீண்டும் புரவியை நடத்தினான்.

சுற்றிலும் அனல் வாரி கொட்டிக் கொண்டிருந்தது. பாலைவன வெளியில் தூரத்தில் நீர் பல இடங்களில் ஒளிவிட்டது. அதைப் போலத்தான் பலர் வாழ்வும் இருக்கிறதென்று தீர்மானித்த ஹரிதாஸ் ஜாலா மறுபடியும் சிந்தனையில் இறங்கினான். பழைய எண் ணங்கள் சிந்தையில் பழையபடி உலாவவே அவன் சுற்றிலும் நெருப்பை வாரிக் கொட்டும் சூழ்நிலையைக் கூட கவனிக்காமல் சிந்தனை உலகத்திலேயே மூழ்கிக் கிடந்தான். உலகை மறந்த அவனை மற்ற காவலர் வழி காட்டி அழைத்துச் சென்றார்கள். முன்னால் ஓடிய புரவிகளைத் தொடர்ந்து ஹரிதாஸ் ஜாலாவின் புரவி



யும் ஓடியது. பகல் பயணம் பரம நரகமாய் இருந்தது அந்தக் கூட்டத்துக்கு. இரவிலும் பாலைவனத்திலேயே சஞ்சரிக்கும் படியாயிருந்தாலும் இரவின் பனி பெரி தும் பயணத்துக்கு இதமாயிருக்கும் என்ற நினைப்பால், பகல் நெருப்பு ஜ்வாலையை லட்சியம் செய்யாமலே சென்றான் ஹரிதாஸ் ஜாலா. இப்படிப் பயணம் செய்த ஹரிதாஸ் ஜாலாவின் அலட்சியத்தைக் கோபித்தோ என்னவோ கதிரவன் மெள்ளத் தன் உஷ்ணத்தை ஒடுக்கிக் கொண்டான். தூக்கத்துக்குப் பின்வரும் சுகம் போல் மகிழ்ச்சியளிக்கும் மாலை நேரமும் மெள்ள மெள்ள நெருங்கி வந்தது.

பாலைவனத்தை ஆட்கொண்ட மாலைநேர மஞ்சள் வெயில் பகலின் கொடுமையை அடியோடு மறைத்தது, காவலர் தங்கள் புரவிகளைச் சிறிது நிறுத்தி வியர்வை யைக் குதிரைச் சீலைகளால் துடைத்துக் கொண்டு ஆசுவாசப் பெருமூச்சு விட்டார்கள். மீண்டும் துவங் கிய பயணம் இடைவிடாது நடந்தது. ஹரிதாஸ் ஜாலா அக்கம் பக்கமெதையும் கவனியாமல் வீரர்களைப் பின் தொடர்ந்து புரவியை நடத்தினான். இரவு நெருங்கி வெகு நேரத்துக்குப் பின் ஒரு சோலையொன்று வரவே வீரர்கள் அங்கு இறங்கினார்கள். ஹரிதாஸ் ஜாலா புரவியை விட்டு இறங்கவில்லை. சுற்றும் முற்றும் சந்தேகத்துடன் பார்த்தான். பிறகு காவலரில் ஒருவனை விளித்து, "நாம் வழி தவறி விட்டோமென்று நினைக் கிறேன்" என்று கூறினான்.

அவன் அழைத்த காவலன் புரவியைவிட்டு மெள்ள அவனருகில் வந்த சமயத்தில் மற்றொரு காவலன் பந்தமொன்றைக் கொளுத்திச் சற்று தூரத்தில் பூமியில் நட்டான். அந்தப் பந்தத்தின் வெளிச்சத்தில் சோலை நன்றாகத் தெரிந்தது. அந்தச் சோலையை மறுபடியும் இருமுறை பார்த்த ஹரிதாஸ் ஜாலா காவலனை

நோக்கி "சித்தூர் செல்லும் மார்க்கம் இதுவல்லவே?" என்றான்.

காவலன் நேரிடையாகப் பதில் சொல்லவில்லை. "இப்படியும் போகலாம், படைத்தலைவரே!" என்று கூறினான்.

"போகலாம். ஆனால் நான்கு நாட்களில் நாம் போய்ச் சேர முடியாதே. இது சுற்றி வளைத்தல்லவா செல்லும்?" என்று கேட்டான் ஹரிதாஸ் ஜாலா.

"ஆம்; இருந்தாலும் இந்த வழி சற்று சௌகரிய மானது. அடுத்து அடுத்துப் பாலைவனச் சோலைகள் உள்ளன" என்றான் காவலன்.

"சோலைகள் எதற்கு?" என்று உஷ்ணத்துடன் கேட்டான் ஹரிதாஸ் ஜாலா.

"இன்றைய வெப்பத்தைக் கவனித்தீர்களல்லவா?"

"கவனித்தேன்."

"இந்த வெப்பத்தில் போனால் புரவிகள் மாண்டு விடும்."

"யார் சொன்னது? ராஜபுதனப் புரவிகள் இதை விட உஷ்ணத்தைத் தாங்கவல்லவை."

"ஆம், உண்மைதான் படைத்தலைவரே."

"அப்படியானால் எதற்கு இந்த வழியில் போக வேண்டும்?"

"இவை ராஜபுதனப் புரவிகள் அல்லாததால்."

"வேறு என்ன புரவிகள் இவை."

"மொகலாயர் புரவிகள்."



இந்த பதிலை மிகவும் பணிவுடன் கூறினான் காவலன். ஹரிதாஸ் ஜாலாவின் கை வாளிடம் சென்றது. "யார் நீங்கள்?" என்ற கர்ஜனையும் அவன் தொண்டையிலிருந்து பயங்கரமாக எழுந்தது.

"அதை என்னைக் கேட்பது நல்லது" என்று பின்னா லிருந்து எழுந்த குரலைக் கேட்டு திடீரெனப் புரவி யைச் சுழற்றித் திருப்பினான் ஹரிதாஸ் ஜாலா. அவன் பின்னால் சோலை மரமொன்றில் சாய்ந்து கொண்டு சுந்தர்தாஸ் நின்றிருந்தான். சோலையிலிருந்து சரே லெனக் கிளம்பிய வீரர்கள் விநாடி நேரத்தில் ஹரி தாஸ் ஜாலாவை வளைத்துக் கொண்டார்கள்.

## 25. ஒண்டாலாவின் நிலை

**சுந்தர்தாஸின்** குரலைக் கேட்டுத் தனது புரவியைக் கண வேகத்தில் சுழற்றித் திருப்பிய வீரனான ஹரிதாஸ் ஜாலா, சோலை மரமொன்றில் சுந்தர்தாஸ் மிக ஒய்யாரமாகவும் அலட்சியத்துடனும் சாய்ந்து நின்று கொண்டிருந்ததைக் கவனித்ததும், கோபத்தின் எல்லையை அடைந்தானானாலும், அடுத்த விநாடி சோலைக்குள்ளிலிருந்து ஈசல்களைப் போல் கிளம்பி தன்னைச் சூழ்ந்து வந்த வீரர் கூட்டத்தைக் கண்டதும் கோபத்தை உள்ளடக்கித் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான். தன்னை அவர்கள் சூழ்ச்சியால் வளைத் துக் கொண்ட இடம் பாலைவன வெளியாயிருந்தால் அம்புபோல் குதிரையைப் பாயவிட்டு அவர்களை ஊடுருவிச் செல்லத் தன்னால் முடியும் என்பதையும், மரங்கள் அடர்த்தியாயிருந்த அந்தச் சோலையில் புரவியைத் தட்டிவிட்டு ஊடுருவுவது கூட இயலாத காரியமென்பதையும் உணர்ந்து கொண்டதால்,

திருப்பிய புரவியைத் திடமாக நிறுத்தி அதைவிட்டுக் கீழிறங்காமலே சுந்தர்தாஸை உற்று நோக்கினான். சுந்தர்தாஸின் கண்கள் அவன் கண்களை ஒரே விநாடி தான் சந்தித்தன. பிறகு அவை சுற்றிலும் வாட்களை உருவி நின்ற வீரர்களை வலம் வந்தன. அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்துகொண்ட ஹரிதாஸ் ஜாலா, உறுதி நிரம்பிய குரலில் கேட்டான்: "சுந்தர்தாஸ்! ஆயிரம் வீரர்கள் சூழ்ந்தாலும் அஞ்சாத வம்சம் ஜாலாவின் வம்சம் என்பது நீ அறியவில்லையா?" என்று.

சுந்தர்தாஸின் குரலிலும் உறுதியிருந்தது. உறுதி மட்டுமல்ல, விஷமமும் கலந்திருந்தது அதில். "அதையும் அறிவேன். அந்த வம்சத்தினர் அறிவாளிகள் என்பதையும் அறிவேன்" என்று கூறினான், அவன் விஷமப் புன்முறுவலுடன்.

"அதை நீ உணர்ந்திருப்பது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"அந்த மகிழ்ச்சிக்குக் காரணம் எனக்குப் புரியவில்லை."

"காரணம் தெரிய வேண்டுமா?"

"தெரிந்தால் நல்லது."

"அப்படியானால் சொல்கிறேன் கேள். உன் குடும்பத்தார் அறிவாளிகள் அல்லவா?"

"ஆம்."

"அறிவாளிகள் சமயமறிந்து நடப்பவர்கள்."

"அதுதான் நியாயம்."



"சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி விட்டுக் கொடுப்பது தான் அறிவுக்குச் சான்று."

"அதுவும் உண்மை."

இந்த பதிலைக் கேட்டதும் சுந்தர்தாஸின் முகத்தில் சந்தேகச் சாயை படர்ந்தது. தான் சொல்வதையெல்லாம் ஹரிதாஸ் ஜாலா ஆமோதித்துப் பேசியதன் உட்கருத்து என்ன என்பதை அறிய அவனால் முடியாததால், அவனை மற்றுமொருமுறை கூர்ந்து நோக்கிய சுந்தர்தாஸ், "என் கருத்தையெல்லாம் ஹரிதாஸ் ஜாலா ஆதரித்துப் பழக்கமில்லை. இன்று போக்கே புதிதாக இருக்கிறதே?" என்றான்.

சுந்தர்தாஸின் முகத்தில் திளைத்துப் பரவிய சந்தேகச் சாயையைக் கவனித்தும் கவனிக்காதவன் போலவே ஹரிதாஸ் ஜாலா தனது முக பாவத்தை வைத்துக் கொண்டு, "காலம் பழைய பழக்கத்தை மாற்றுகிறது. அதைப் பொறுத்துப் போக்கும் மாறுகிறது" என்றான்.

"நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை!" சுந்தர்தாஸ் நிதானத்தைக் கைவிட்டு உஷ்ணத்தைக் குரலில் காட்டினான்.

"இதில் விளங்காதது ஏதுமில்லை?" ஹரிதாஸ் ஜாலாவின் குரல் புதுமாதிரி ஒலித்தது. கண்ணிலும் புரிந்து கொள்ள முடியாத பார்வை இருந்தது.

ஆகவே சுந்தர்தாஸ் குழம்பினான். அவன் குழம்பிய நேரத்தில் புரவியிலிருந்து குதித்து அவனருகே மின்னல் வேகத்தில் வந்துவிட்ட ஹரிதாஸ் ஜாலா, தன் இடையிலிருந்த குறுவாளை எடுத்து அவன் வயிற்றில் அழுத்தி விட்டுச் சுற்றிலுமிருந்த வீரர்களை நோக்கி, "யாரும் அருகில் நெருங்க வேண்டாம், நெருங்கினால் உங்கள்

தலைவன் பிணமாகி விடுவான்” என்று கோபமும் உக்கிரமும் கலந்த குரலில் எச்சரித்த ஹரிதாஸ் ஜாலா, சுந்தர்தாஸைப் பார்த்து “சுந்தர்தாஸ்! நான் உன் எதிரியாயிருந்தவன் தான். ஆனால், இன்று நான் உன் எதிரியல்ல. இரண்டு பேர் நோக்கமும் ஒன்றுதான். இப்பொழுது உன் வீரர்களை விலகிச் செல்லச் சொல். நாமிருவரும் தனித்துப் பேசுவோம்” என்றான்.

ஹரிதாஸ் ஜாலாவின் துணிகரச் செயல் சிறிதும் வியப்பை அளிக்கவில்லை சுந்தர்தாஸுக்கு. ஜாலாவின் குடும்பத்தினர் எந்தச் சந்தர்ப்பத்திலும் அஞ்சாதவர்கள் என ராஜபுதனமே அறிந்திருந்ததாலும், தான் சற்றுத் தவறாக நடந்துகொள்ள முயன்றாலும், தனது உயிர் அரைக்காசு பெறாதென்று சுந்தர்தாஸ் சந்தேகமற உணர்ந்திருந்ததாலும், அவன் வீரர்களைப் பின்னடையும்படி கையால் சாடை காட்டினான். வீரர்கள் பின்னடைந்த பின்பு குறுவாளை மீண்டும் இடையில் செருகிக் கொண்ட ஹரிதாஸ் ஜாலா மெள்ளத் தன் புரவியை இழுத்துப் பக்கத்திலிருந்த மரமொன்றில் கட்டினான். பிறகு சுந்தர்தாஸை நோக்கி, “சுந்தர்தாஸ்! நாம் இங்குதான் பேச வேண்டுமா அல்லது நீ தங்க கூடாரம் ஏதாவது அடித்திருக்கிறாயா?” என்று வினவினான். “கூடாரம் இருக்கிறது” என்று சுந்தர்தாஸ் சொன்னான், உணர்ச்சி வறண்டு விட்ட குரலில்.

“அப்படியானால் அங்கு செல்வோம். தனித்துப் பேசலாம்” என்றான் ஹரிதாஸ் ஜாலா.

சுந்தர்தாஸ் சில விநாடிகள் தயங்கினான். பிறகு எதிரே விலகி நின்ற வீரர்களையும் கவனித்தான் அவன். மனத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா சொன்னான்: “சந்தேகம் எதுவும் வேண்டாம் சுந்தர்தாஸ்! என் வாளின்மீது ஆணையாகச் சொல்கிறேன். நீயாக எனக்குத் தீங்கு



விளைவிக்க முனையாவிட்டால் இந்த வாளை உனக்கு எதிராக வீச மாட்டேன். தவிர, நம் இருவர் பாதையும் இணையும் இடம் ஒன்றுதான், வேறல்ல.”

இதைக் கேட்டதும் என்ன காரணத்தாலோ மிரண்டு விழித்தான் சுந்தர்தாஸ். வீரர்களை மறுபடியும் ஒருமுறை குழப்பத்துடன் பார்த்தான், அடுத்தபடி வேறெதுவும் பேசாமல் தன்னுடன் வரும்படி ஹரிதாஸ் ஜாலாவுக்கு வழிகாட்டிச் சோலைக்குள் அழைத்துச் சென்றான். சுந்தர்தாஸைத் தொடர்ந்து ஹரிதாஸ் ஜாலாவும், ஹரிதாஸ் ஜாலாவைச் சற்று எட்டவே சூழ்ந்து மற்ற வீரர்களும் சிறிது தூரம் பயணம் செய்ததும் அந்தச் சோலை நடுவிலிருந்த கூடாரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்ததும் எச்சரிக்கையுடன் காவல் புரியும்படி அவர்களுக்கு உத்தரவிட்ட சுந்தர்தாஸ், ஹரிதாஸ் ஜாலாவை அழைத்துக்கொண்டு கூடாரத்துக்குள் நுழைந்தான். கூடாரத்துக்குள் உட்காரவோ படுக்கவோ அதிக வசதி ஏதுமில்லாதிருந்ததையும் கீழே விரித்திருந்த ஒரு மாபெரும் கம்பளத்தைத் தவிர மஞ்சமேதுமில்லாததையும் கவனித்த ஹரிதாஸ் ஜாலா, அந்தக் கூடாரத்தை எந்த விநாடியிலும் பிரித்துச் சுருட்டிச் செல்ல சுந்தர்தாஸ் தயாராக வைத்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டான். இப்படிக் கூடாரம் பயணத்துக்குத் தயாராகியிருப்பதில் பயன் என்ன என்பது மட்டும் அவனுக்குப் புரியவில்லையாகையால் அதைப் பற்றிக் கேட்கத் தன் கண்களை சுந்தர்தாஸை நோக்கி உயர்த்தினான்.

கேள்வி எழுப்பிய அந்தக் கூரிய கண்களைக் கண்ட சுந்தர்தாஸ், ஹரிதாஸ் ஜாலாவின் உள்ளத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டான். ஆனாலும் அதைப் பற்றி ஏதும் பிரஸ்தாபிக்காமலும் பதில் சொல்லாமலும் அவனைக் கம்பளத்தில் உட்காரச் சொல்லித்

தானும் உட்கார்ந்து கொண்டான். வெளியிலிருந்த வீரனொருவனை அழைத்து இருவருக்கும் மது கொண்டு வரவும் கட்டளையிட்டான், மது வந்ததும் அதை இரு கிண்ணங்களில் ஊற்றி ஒன்றை ஹரிதாஸ் ஜாலாவிடம் கொடுத்து மற்றொன்றைத் தான் எடுத்து உறிஞ்சினான். சாதாரணமாக நிதானமாகக் காரியத்திலிறங்கியதைக் கண்ட ஹரிதாஸ் ஜாலா, அதற்குக் காரணம் புரியாமல் விழித்தான். மதுவை உறிஞ்சிக் கீழே வைத்த சுந்தர்தாஸ் காரணத்தைப் புரிய வைக்கத் துவங்கி "ஹரிதாஸ்! இந்தச் சோலையில் நீ என்னை எதிர்பார்த்திருக்கமாட்டாய் இல்லையா?" என்றான்.

"சோலையை நான் எதிர்பார்க்கவில்லை, நான் செல்ல முயன்ற திசை வேறு" என்று சர்வசாதாரணமாகச் சொன்னான் ஹரிதாஸ் ஜாலா.

"சித்தூருக்குப் பாலைவனக் குறுக்கு வழியாகச் செல்லப் பார்த்திருப்பாய்."

"ஆம்."

"ஆனால் இங்கு அழைத்துவர வீரர்களுக்கு உத்தரவிட்டிருந்தேன்."

"நான் சித்தூருக்குப் போவேனென்பது உனக்கெப்படித் தெரியும்?"

"நாகதீபத்தைக் காக்க ராணா வேறு என்ன செய்ய முடியும்? என்னிடம் அவருக்கு நம்பிக்கையில்லை. நம்பிக்கையானவரிடம் கொடுத்துச் சித்தூருக்கு அனுப்பினால் அதை பத்திரப்படுத்தலாம்."

"அதற்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டேனென்பது உனக்கெப்படித் தெரியும்?"



"தெரியாது. யாரிடமாவது அது சித்தூருக்கு அனுப்பப்படும் என்பது மட்டும் தெரியும். அது எப்படி எந்த வழியாக அனுப்பப்படும் என்பதும் தெரியும். அதை எடுத்துச் செல்லுபவர் யாராயிருந்தாலும் இங்கு கொண்டு வரும்படி உத்தரவிட்டேன் என் வீரர்களுக்கு."

"இந்த வீரர்கள்தான் துணை வருவார்கள் என்பது உனக்கெப்படித் தெரியும்?"

"என் வீரர்களைத் தவிர யாரும் துணை வர முடியாது. ஒண்டாலா கோட்டையில் இருக்கும் வீரர்களில் பாதிப்பேர் என்னைச் சேர்ந்தவர்கள். அரண்மனையில் இருப்பவர்கள் அத்தனை பேரும் என் வீரர்கள்."

இதைக் கேட்டதும் மகாராணாவின் நிர்க்கதியான நிலையைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, சுந்தர்தாஸின் அயோக்கியத்தனத்தின் எல்லையை நினைத்துப் பெரிதும் வியந்தான். இப்படியொரு கோடாரிக்காம்பு ராஜபுதனத்துக்கு ஏற்பட்டதை எண்ணி அதன் துர்க்கதியை நினைத்து உள்ளூர துக்கமும் கொண்டான். ஆனால், அந்த உணர்ச்சிகள் எதையும் வெளிக்குக் காட்டாமல், "ராணாவின் நிலை பரிதாபமானது!" என்று கூறினான் ஹரிதாஸ், சுந்தர் தாஸை நோக்கி.

"பரிதாபமானது என்பதைவிட மிகவும் ஆபத்தானது என்று கூறுவது பொருந்தும்" என்று கூறிய சுந்தர்தாஸ், ஹரிதாஸ் ஜாலாவைப் பொருள்பட நோக்கினான்.

"ஆபத்தானதா!" ஹரிதாஸின் குரலில் வியப்பிருந்தது.

"ஆம்; ஹரிதாஸ்! மிகவும் ஆபத்தான நிலையிலிருக்கிறார் மகாராணா" என்று சுந்தர்தாஸ் வருத்தப்படுபவன் போல் பாசாங்கு செய்தான்.

"என்ன ஆபத்தோ?"

"ஜஹாங்கீர் எங்கிருக்கிறார் தெரியுமா?"

"ஆஜ்மீரில்..."

"இல்லை."

"பின் எங்கே?"

பதிலுக்குப் பெரும் வெடியை எடுத்து வீசினான் சுந்தர்தாஸ். "ஒண்டாலா கோட்டையின் வாயிலில் இருக்கிறார்!" என்ற சுந்தர்தாஸ் திடீரென உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருந்தான். அவனுக்கு முன்னரே துள்ளி எழுந்துவிட்ட ஹரிதாஸ் ஜாலாவின் கண்கள் ஈட்டிகளென ஜொலித்தன. அவன் கை மிகப் பலமாக சுந்தர்தாஸின் அங்கியைப் பிடித்தது, "உண்மையாகவா?" என்று கேட்டான் ஆத்திரம் மிதமிஞ்சி தொனித்த குரலில் ஹரிதாஸ்.

சுந்தர்தாஸ் அந்த ஆத்திரத்தைக் கண்டு சிறிதும் அஞ்சாமல் ஹரிதாஸின் கைப்பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சிறிது விலகி நின்று, "ஜாலா வம்சத்தினர் இடி தலையில் விழுந்தாலும் உணர்ச்சிகளைக் கைவிடாதவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்' என வெறுப்புடன் கூறினான்.

ஹரிதாஸ் ஜாலா அவனைச் சுட்டுவிடுவது போல் பார்த்தான். "இடி ஜாலா வம்சத்தின் தலைமேல் விழவில்லை சுந்தர்தாஸ், ராஜபுதனத்தின் தலைமேல் விழுந்திருக்கிறது" என்று சீறினான்.



"இன்னும் விழவில்லை, விழப்போகிறது" என்று திருத்திய சுந்தர்தாஸ், "அதை விழாமல் நாம் தடுக்கலாம்" என்று கூறினான்.

"எப்படித் தடுப்பது?"

"ஜஹாங்கீருக்கு வேண்டியதைக் கொடுக்கலாம்."

"என்ன வேண்டும் அவருக்கு?"

"உன் வசமிருக்கும் நாகதீபம்."

இதைக் கேட்ட ஹரிதாஸ் ஜாலா, சீற்றத்தைக் கைவிட்டுப் பிரமிப்பின் வசப்பட்டான்.

ஜஹாங்கீருக்கு வேண்டிய நாகதீபத்தைக் கொடுத்துவிட்டால், ராஜபுதனத்தின் தலைமேல் விழ இருக்கும் இடியைத் தவிர்க்கலாம் என சுந்தர்தாஸ் கூறியதைக் கேட்டதால் பெரும் வியப்பின் வசப்பட்ட ஹரிதாஸ் ஜாலா, "என்னிடம் நாகதீபம் இருப்பது உனக்குத் தெரியக் காரணமிருக்கிறது. ஆனால் அதை ஜஹாங்கீர் விரும்புவது உனக்கெப்படித் தெரியும்?" என்று வினவினான் வியப்பு குரலும் ஊடுருவ.

"உன்னை ஜஹாங்கீர் சிறையிலிருந்து விடுவிக்கவில்லையா?" என்று வினவினான் சுந்தர்தாஸ்.

"ஆம்." ஹரிதாஸின் பதில் சந்தேகத்துடன் உதிர்ந்தது.

"உன்னை முன்பே அவருக்குத் தெரியுமா?" என்று மறுபடியும் வினவினான் சுந்தர்தாஸ்.

"தெரியாது."

"அப்படியிருக்க உன்னிடம் நாகதீபத்தைக் கொண்டு வரும் பணியை ஒப்படைப்பானேன்?"

ஹரிதாஸ் ஜாலாவின் மனத்தில் அதுவரை புரியாத பல விஷயங்கள் அப்பொழுதுதான் புரிந்தன. சுந்தர் தாஸ்தான் தன்னை இந்தப் பணிக்கு இழுத்திருக்க வேண்டுமென்று அறிந்து கொண்ட ஹரிதாஸ், “அப்படியா விஷயம்?” என்றான் வறண்ட குரலில்.

“ஆம், ஹரிதாஸ்! ஜாலா வம்சத்தினர் இடும் ஆணையை நிறைவேற்றுவார்கள் என்று நான்தான் அவருக்குச் சொன்னேன்! என் ஓலையைக் கண்ட பிறகு தான் உன்னை சிறையிலிருந்து அழைத்திருக்க வேண்டும் அவர்!” என்று கூறினான் சுந்தர்தாஸ்.

மொகலாயருக்குக் கையாட்கள் எப்பொழுதும் ஹிந்து சமூகத்தில் இருக்கிறார்கள் என்பதை நினைத்து வெறுப்புப் பெருமூச்சு விட்ட ஹரிதாஸ் ஜாலா, “நீயோ ஒண்டாலா கோட்டையிலிருந்திருக்கிறாய். நாகதீபம் மகாராணியிடம் இருந்திருக்கிறது. கோட்டையிலுள்ள வீரர்கள் பெரும்பாலோர் உன்னைச் சேர்ந்தவர்கள். அப்படியிருக்க நீயே பலவந்தமாக நாகதீபத்தைக் கைப்பற்றியிருக்கலாமே” என்றான், சுந்தர்தாஸை நோக்கி.

“அதை நான் மிகவும் சுலபமாகச் செய்திருக்கலாம்” என்று ஒப்புக் கொண்டான் சுந்தர்தாஸ்,

“பின் ஏன் செய்யவில்லை?” என்று வினவினான்.

சுந்தர்தாஸ் சில விநாடிகள் மௌனம் சாதித்தான். பிறகு மெல்லச் சொன்னான்: “நாட்டுக்கு வரலாறு என்பது ஒன்றிருக்கிறது...” என்று.

“ஆம். இருக்கிறது.”

“அதில் தேசத் துரோகிகளின் பட்டியலில் பெயர் வருவது விரும்பத்தக்கதல்ல.”



“ஆம்.”

“ஆகவே இந்தப் பணியில் நேரடியாக நான் பாடுபட விரும்பவில்லை.”

“எனக்கு அந்தப் பெயர் வந்தால் பாதகமில்லை போலிருக்கிறது.”

சுந்தர்தாஸ் சிறிது யோசித்துவிட்டுச் சொன்னான், “அதல்ல என் எண்ணம். இஷ்டப்பட்டிருந்தால் நீ ஜஹாங்கீர் இட்ட பணியை மறுத்திருக்கலாம். மறுக்காததால் அதற்கான விளைவையும் பெயரையும் ஏற்றுத் தானே ஆகவேண்டும்?” என்று சுந்தர்தாஸ் ஹரிதாஸ் ஜாலாவை விஷமத்துடன் பார்த்தான்.

சுந்தர்தாஸின் கயமையின் எல்லையை நினைத்து உள்ளூர வியந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அவன் நாட்டுக்கு துரோகம் செய்து சரித்திரத்தில் நல்ல பெயர் வாங்கிக் கொள்ள முயல்வதை எண்ணி, அதிலிருந்த விபரீதத்தை நினைத்துப் பார்த்தான். நாட்டினிடம் நல்ல எண்ணமுடைய தான் எத்தனை விபரீத ஆணைகளை இடவேண்டி வந்திருக்கிறது என்பதையும் சிந்தித்து தன் வாழ்வின் போக்கை எண்ணி மெள்ள நகைக்கவும் செய்தான். அந்த நகைப்பில் பழைய வறட்சி இருந்தது. அலட்சியமும் இருந்தது.

நகைப்புக்குக் காரணம் புரியாத சுந்தர்தாஸ் வினவினான், “ஏன் நகைக்கிறாய் ஹரிதாஸ்?” என்று.

“துரோகி நல்லவனாகவும் நல்லவன் துரோகியாகவும் உலகத்தின் கண்களில் காட்சியளிக்க நேர்ந்த விபரீதத்தை எண்ணி நகைத்தேன்” என்றான் ஹரிதாஸ் ஜாலா.

“வாழ்வின் வழியே அதுதானே!” என்று சுந்தர் தாஸ் தத்துவம் பேசினான்.

"வாழ்வின் தத்துவங்களை நீ நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறாய் சுந்தர்தாஸ்" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"பிழைப்பதற்கு அதுதான் மார்க்கம்."

"அதை நீ நன்கு புரிந்து கொண்டிருக்கிறாய்."

"புரிந்து கொண்டால்தான் இன்று நான் ராஜபுதனத்தின் வாழ்வை நிர்ணயிக்கும் ஸ்தானத்தில் இருக்கிறேன்."

"நீயா அதன் வாழ்வை நிர்ணயிக்கப் போகிறாய்?"

"ஆம், வகையறியாத ராணா வருஷக்கணக்கில் அதிக பலமுள்ள மொகலாயப் படைகளோடு போரிட்டு ராஜபுதனத்தின் வீரர்களில் பாதிப்பேரை ஒழித்து விட்டார். மீதி பாதிப் பேரும் மாளும் முன்பு ஒன்று ராணா பணிய வேண்டும், அல்லது அழிய வேண்டும்" என்றான்.

"அப்படியா!"

"ஆம். இது வெறும் பேச்சல்ல, இங்கு நாம் பேசிக் கொண்டிருக்கும் இதே தருணத்தில், ஒண்டாலா கோட்டையை நோக்கி மொகலாயப் படைகள் நகருகின்றன. ஜஹாங்கீரின் பெரும் பீரங்கிகள் பாலைவனத்தில் இழுத்துச் செல்லப்பட்டுக் கோட்டையை நோக்கித் தங்கள் பெருவாய்களைத் திறந்து கொண்டிருக்கின்றன. எந்த நிமிஷமும் அந்த வாய்களிலிருந்து பெரும் அக்னி வெடிகள் கிளம்பலாம். பயங்கரமான ஆபத்திலிருக்கின்றது ஒண்டாலா. மகாராணாவும் ஆபத்திலிருக்கிறார். அதைக் காக்கக் கூடியவர் நாம் இருவருந்தான்" என்றான் சுந்தர்தாஸ்.



ஹரிதாஸின் கண்கள் முன்பு ஒண்டாலா கோட்டை எழுந்தது. அதில் ராணாவின் வீரமும் எழுந்தது. அந்த முகத்தை நோக்கி மொகலாயர் பீரங்கிகளும் பயங்கரமாக எழுந்தன.

## 26. சிறிய உதவி பெரிய பலன்

சித்தூருக்குச் செல்லும் சுற்று வழிப்பாதையின் இடையேயிருந்த சோலையின் கூடாரத்தில் சுந்தர்தாஸ் ஒண்டாலாவின் நிலைபற்றிய விளக்கிய விவரங்களைக் கேட்ட ஹரிதாஸ் ஜாலாவின் இதயத்தில் துன்பமும் கோபமும் கலந்து உறவாடின பல நிமிடங்களுக்கு.

ஜஹாங்கீரிடம் ஆணையிட்டு வந்த நாளிலிருந்து அன்று வரை தன்னைக் குழப்பி வந்த பல விஷயங்களுக்கு சுந்தர்தாஸின் பேச்சு விளக்கம் தந்துவிட்டதை ராஜபுதனத்தின் அந்த மாஜிப் படைத்தலைவன் உணர்ந்தான். ஆரம்பத்திலிருந்தே மொகலாயருடன் போரை விரும்பாதவரும் ஜயன் சந்தாவத்தின் வலுக் கட்டாயத்தினால் போரில் ஈடுபட்டவருமான சித்தூர் மகாராணா தொடர்ந்து போரினால் ராஜபுதனம் அழிவதை விரும்பாமல் ஜஹாங்கீருடன் ரகசிய சமாதானப் பேச்சு வார்த்தை நடத்துவதாக இருந்த வதந்தியில் ஓரளவு உண்மை இருந்திருக்க வேண்டுமென்றும், அந்த இச்சையை உள்ளிருந்து தூண்டியவன் சுந்தர்தாஸாயிருக்க வேண்டுமென்றும் தனக்குள் சொல்லிக் கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. அப்படி ராணாவின் அந்தரங்கஸ்தனாக இருந்த சுந்தர்தாஸ் ராணாவின் பலவீனத்தைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டிருந்தாலும் சந்தாவதர்கள் போன்ற வீர ராஜபுத்திரர்களின் கைகள் அரசருக்கு மேலாக ஓங்கி நின்ற ராஜ

புதனத்தில் ஏதும் செய்ய முடியவில்லை என்பதையும் புரிந்து கொண்டான். இத்தகைய யோசனைகளால் முதலில் ராணாவின் மீது ஏற்பட்ட கோபத்தைக்கூட பெரிதும் கைவிட்டு அவர்மீது அனுதாபமே கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. ராணா உள்ளூர சமாதானத்தை விரும்புவதற்குக் காரணம், அவருக்கு மக்கள் வாஞ்சையும் அவர்கள் அநாவசியமாக அழிவதில் இஷ்டமில்லாததுமே காரணமென்பதை அறிந்துகொண்ட ஹரிதாஸ் ஜாலா, ராணாவின் புத்திக் கூர்மையும் முன்னெச்சரிக்கையுமே சுந்தர்தாஸின் முழுப் பிரயாசையிலிருந்து அவரை அதுவரை காத்து வைத்திருக்கிறதென்று தீர்மானித்துக் கொண்டான்.

தான் முன்னொருமுறை ராணாவையும் சுந்தர் தாஸையும் இணைத்து சுயநலக் குடும்பமென்று ராஜபுத்தியிரிடம் சொன்னதை நினைத்துப் பார்த்து, அது எத்தனை பிசகு என்பதையும் உணர்ந்தான். ராணா ஜஹாங்கீரிடம் சமாதானத்தை விரும்புவது மக்கள் நன்மைக்காக, அவரது கோழைத்தனத்தினா லல்ல என்று தனக்குள் உறுதிப்படுத்திக் கொண்ட ஹரிதாஸ் ஜாலா, ஏதோ ஒரு முடிவுக்கு வந்து சுந்தர் தாஸை ஏறிட்டு நோக்கிக் கேட்டான்: "உண்மையில் ஒண்டாலா ஆபத்திலிருக்கிறதா?" என்று.

"இது விஷயத்தில் தான் பொய் சொல்லவேண்டிய அவசியமில்லை" என்று சுட்டிக் காட்டினான் சுந்தர் தாஸ்.

"ஆம்; அவசியமில்லை" என்று ஒப்புக் கொண்ட, ஹரிதாஸ் ஜாலா மேலும் கேட்டான், "ஒண்டாலாவை ஜஹாங்கீரின் படைகள் கைப்பற்ற முடியுமா?" என்று.

"நிச்சயமாய் முடியும்" என்றான் சுந்தர்தாஸ்.



மீண்டும் சிந்தனையில் இறங்கினான் ஹரிதாஸ் ஜாலா. தான் ஜஹாங்கீரிடம் சிறைப்படுவதற்குமுன்பு நடந்த ஒண்டாலா போரைப் பற்றிய விவரங்கள் அவன் சித்தத்தில் எழுந்துலாவின. ஏராளமான மொகலாயப் படைகளை சந்தாவதர்களும், சக்தாவதர்களும், இதர ராஜபுத்திரர்களும் நன்கு சிதற அடித்து ஓட்டிய அந்த ரணகளத்தை எண்ணிப் பெருமிதங்கொண்டான் அவன். அன்றும் இதே கோட்டைதான். அதோ ஒண்டாலாவின் மூன்று வாயில்களை நோக்கி ராஜ புதனத்தின் புரவிப் படை பாய்ந்து செல்கிறது. என்ன வீரச் செயல்! எத்தனை சேதம் மொகலாயர் படைகளுக்கு. அதோ சந்தாவதரின் பெரும் வாளெழுந்து மொகலாயர் தளபதியை வெட்டி வீழ்த்திற்று. கோட்டை வாயில்களில் நுழைகின்ற ராஜபுத்திரப் படைகள். ஒண்டாலா கோட்டையை மொகலாயர்களிட மிருந்து எந்தத் தியாகத்தில் வீரத்தில் கைப்பற்றினர் ராஜபுத்திரர்கள். அந்த ஒண்டாலா கோட்டையை இப்பொழுதா விட்டுவிடுவார்கள்? இப்படியெல்லாம் பழைய கதையை எண்ணிய ஹரிதாஸ் ஜாலா சுந்தர் தாஸை நோக்கி, "சரித்திரத்தை மறந்துவிட்டாய் சுந்தர் தாஸ்" என்றான்.

"எந்தச் சரித்திரத்தை?"

"ஒண்டாலா பிடிபட்ட சரித்திரத்தை."

"நான் மறுக்கவில்லை."

"அப்படியானால் ஒண்டாலாவில் இன்று மட்டும் மொகலாயர்கள் எப்படி வெற்றி பெறுவார்கள்?"

"ஒண்டாலா ராஜபுத்திரர்களின் பெரும் நாசத்தால் பிடிபட்டது."

“வீரத்தால் என்று சொல், தியாகத்தால் என்று சொல்.”

“சொற்கள் எதை வேண்டுமானாலும் போட்டுக் கொள் ஹரிதாஸ், ஆனால் விளைவு படுநாசம். ஒண்டாலாவைக் கைப்பற்றியதால் ராஜபுத்திர வீர மரபுகள் பல மாண்டுவிட்டன. இப்பொழுது அதைக் காக்க சொற்ப வீரர்கள் இருக்கிறார்கள்...” என்று சொல்லிக் கொண்டு போன சுந்தர்தாஸை மடக்கிய ஹரிதாஸ், “அதில் உன் வீரர்கள் பாதி, அவர்களும் போர் சன்னத்தில் இல்லை” என்றான்.

“ஆம்.”

“ஒண்டாலாவை மொகலாயரிடம் ஒப்படைக்க முன்னதாகவே தீர்மானித்து விட்டாயா?”

“ஆம்.”

“இது சதியல்லவா?”

“இல்லை. ராஜபுதனத்தின் உயிர்ச்சேதத்தைத் தடுக்கும் பணி.”

“இந்தப் பணிக்காக ஜஹாங்கீரிடம் என்ன எதிர் பார்க்கிறாய்?”

சுந்தர்தாஸின் முகத்தில் சீற்றம் எழுந்தது. “என்னை நாட்டுக்குத் துரோகியென்கிறாயா?” என்று வினவினான் அவன் கோபத்துடன்.

“வேறு என்னவென்று நினைக்கச் சொல்கிறாய்?” என்று வினவினான், ஹரிதாஸ் சீற்றம் மிகுந்த தன் விழிகளை சுந்தர்தாஸ் மீது நாட்டி.

அதைக்கண்ட சுந்தர்தாஸ் சிறிதும் அஞ்சவில்லை. சிறிது நேரம் ஏதோ யோசித்தான். “நான் ஏன் வீண்



தர்க்கம் செய்ய வேண்டும் ஹரிதாஸ். நீ இப்பொழுது என்னிடம் சிறைப்பட்டிருக்கிறாய். நாம் இங்கிருந்து நாளை மீண்டும் ஒண்டாலாவுக்குப் பயணப்படுகிறோம்” என்று கூறிவிட்டுக் கூடாரத்தை விட்டு வெளியே சென்று விட்டான்.

அவன் சென்ற பிறகு ஹரிதாஸ் ஜாலா கூடாரத்துக்குள் நீண்ட நேரம் உலாவினான். அவன் மனத்தில் துன்ப முள் மீண்டும் மீண்டும் குத்திக்கொண்டிருந்தது. ஒண்டாலாவின் பழைய போரையும் அதற்குப்பின் ஜஹாங்கீரின் மகன் குர்வேலின் படுதோல்வியையும் நினைத்துப் பார்த்த ஹரிதாஸ் ஜாலா, “அப்போர்ப் பட்ட ராஜபுதனம் கடைசியாக மொகலாயருக்குத் தலைவணங்கும் நிலையில் இருக்கிறதா?” என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அந்தத் துன்பத்தினாலும் ஒண்டாலா பிடிபட்டால் ராஜபுத்திரியின் கதி என்னவென்ற நினைப்பாலும் பெரும் குழப்பத்துக்குள்ளான ஹரிதாஸ் ஜாலா தானிருக்கும் நிலையில் என்ன செய்வதென்பதை அறியாமல் திணறினான். அந்தத் திணறல் அவனுக்கு அடுத்த இரண்டு நாளும் இருந்து கொண்டுதானிருந்தது. அத்தனை திணறலிலும் ஒரு விஷயம் ஹரிதாஸ் ஜாலாவுக்குத் திண்ணமாகத் தெரிந்தது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் சுந்தர்தாஸ் தன்னிடமிருந்து நாகதீபத்தை கைப்பற்ற முயலமாட்டான் என்பதுதான் அது. நாகதீபத்தைத் தன்னைக் கொண்டே ஜஹாங்கீர் கையில் சமர்ப்பித்து அதற்குண்டான பழியை நிரந்தரமாகத் தன் மேல் சுமத்தித் தான், ராஜபுதனத்தில் தலைக் காட்டாமல் அடித்து விடுவதே சுந்தர்தாஸின் நோக்கமென்பதையும், அப்படித் தன்னை ராஜபுதனம் வெறுத்தால் ராஜபுத்திரியைக் கைக்கொள்ளவும் அவன் உத்தேசித்திருக்கிறானென்பதையும் தீர்மானித்துக் கொண்டான் ஹரிதாஸ் ஜாலா, நாகதீபம் சம்பந்தப்

பட்டவரை என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்தான்.

திரும்பத் திரும்ப இவ்வண்ணம் விஷயத்தை அலசிக் கொண்டதாலும், நாகதீபத்தைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்ததாலும் சுந்தர்தாஸ் சென்ற பிறகு அந்தக் கூடாரத் தில் விரிக்கப்பட்டிருந்த இரத்தினக் கம்பளத்திலேயே நன்றாகக் கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. நாகதீபம் சம்பந்தப்பட்டவரை உடனடியாக அதற்கு ஏதும் ஆபத்து இல்லை என்பதை அறிந்து கொண்டதால், ஓரளவு நிம்மதி ஏற்பட்டாலும் சுந்தர்தாஸ் ராஜபுத்திரியைப் பற்றி நிரவியிருந்த திட்டத் தால் மனம் மிகவும் சலனப் பட்டிருப்பதால் உறக்கம் மட்டும் வரவில்லை அந்த வாலிப வீரனுக்கு. அப்படி உறக்கம் வராததால் மறுபடியும் மறுபடியும் எழுந்து எழுந்து உட்கார்ந்து கொண்டும், சிந்தனையிலிறங்கியும் நாகதீபத்தையும் இரண்டு மூன்று முறை எடுத்துப் பார்த் துக் கொண்டு இரவைக் கழித்துக் கொண்டிருந்தான். அந்தச் சோலையில் இரவு எங்கும் நிம்மதியைச் சிருஷ் டித்திருந்தும், கூடாரத்தின் தனிமையும் ஓரளவு சாந் தியை நிலவச் செய்திருந்தும், நிம்மதியோ சாந்தியோ அற்ற மனத்துடன் ஹரிதாஸ் ஜாலா விழித்திருந்தான். அவன் மனம் மீண்டும் மீண்டும் ஒண்டாலா கோட் டையிலிருந்த ராஜபுத்திரியை நாடிச் சென்றது. இந்த நேரத்தில் அவள் என்ன செய்து கொண்டிருப்பாள்? அவளுக்கும் உறக்கம் பிடிக்காதோ என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். திடீரெனத் தாங்களிரு வரும் பிரிக்கப்பட்ட இரவிலிருந்து அந்த இரவு வரை அவள் நிலைமை மிகவும் சங்கடமானதாக இருக்க வேண்டுமென்ற நினைப்பும் அவன் மனத்தில் எழவே, 'நான் சென்றுள்ள பணியைப் பற்றியோ இடத்தைப் பற்றியோ மன்னர் ராஜபுத்திரிக்கு அறிவித்திருப்பாரா? அல்லது அறிவிக்க மறந்திருப்பாரா?' என்றும் வினவிக் கொண்டான். இப்படிப் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டு இரவைப் போக்கிய ஹரிதாஸ் ஜாலாவை விடியற்காலையிலேயே வந்து சந்தித்த வீரனொருவன், "தலைவர் புறப்படத் தயாராகிவிட்டார்" என அறிவித் தான்.

"யார் தலைவர்?" சீற்றத்துடன் எழுந்தது ஹரிதாஸ் ஜாலாவின் கேள்வி.

"சுந்தர்தாஸ் மகராஜ்." பணியுடன் தலைவணங்கிப் பதில் கூறினான் வீரன்.

ஹரிதாஸ் ஜாலாவின் இதழ்களில் இகழ்ச்சி நகை பூத்தது. "சுந்தர்தாஸ் எப்பொழுது மகராஜ் ஆனார்?" என்று வினவினான் இகழ்ச்சியுடன் ஹரிதாஸ் ஜாலா.

"மொகலாயர்கள் அவரை அப்படித்தான் அழைக் கிறார்கள்!"

"நீயும் மொகலாயனா?"

"இல்லை; மொகலாயப் படையிலிருக்கும் ராஜபுத் திரன்."

"நீ எப்படி ஒண்டாலாவுக்கு வந்தாய்?"

"மகராஜ் அழைத்து வந்தார்கள், என்னையும் பலரையும்."

"மொகலாயர் படையெடுத்தால் கோட்டைக்கு உலை வைப்பதற்காக அழைத்து வந்தாரா?"

இதற்கு அந்த வீரன் பதில் சொல்லவில்லை. ஹரி தாஸ் ஜாலாவை உஷ்ணத்துடன் நோக்கினான் ஒரு விநாடி. "ஊழியனை மிரட்டுவதை விடத் தலைவரை மிரட்டிக் கேட்பதுதான் ஹரிதாஸ் ஜாலாவைப் போன்ற சிறந்த படைத்தலைவருக்கு அழகு!" -கூறி விட்டு வெளியே சென்றான் அந்த வீரன்.

அந்த வீரன் சொற்களில் உண்மை புதைந்து கிடப்பதை உணர்ந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. "சுந்தர்தாஸ் மீதுள்ள சீற்றத்தைப் பணிமகனிடம் காட்டிப் பயனென்ன?" என்று தன்னைத் தானே கடிந்தும் கொண்டான். பிறகு எழுந்திருந்து கூடாரத்து மூலையிலுள்ள நீர்க் கலயத்திலிருந்து நீர் மொண்டு வெளியே வந்து பல் துலக்கி முகம் கழுவிக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டான். மீண்டும் கூடாரத்துக்குள் வந்து ஆடைகளைச் சீர்படுத்திக் கொண்டதும் வீரனொருவன் கொண்டு வந்த மதுவைச் சிறிது அருந்தி விட்டுப் புறப்படச் சன்னத்தமாக வெளியே வந்தான். கூடாரத்தின் வாயிலில் வீரர்கள் புறப்படத் தயாராகக் காத்திருந்தார்கள். அவன் புரவியும் சேணம் மாட்டிப் பயணத்துக்குத் தயார்படுத்தப்பட்டிருந்தது. அந்தப் புரவியின் பக்கத்தில் நின்ற புரவியொன்றில் சுந்தர்தாஸ் கம்பீரமாக அமர்ந்திருந்தான். ஹரிதாஸ் ஜாலா அவனை ஒரு விநாடி ஏறெடுத்து நோக்கிவிட்டுத் தன் புரவியின் மீது பாய்ந்து ஏறினான். அடுத்த விநாடி வீரர் கூட்டம் சோலையின் உட்புறத்தில் புகுந்தது.

சோலையின் ஊடே சிறிது நேரம் பயணப்பட்டதும் மீண்டும் பாலைவன வழியாகச் சென்றார்கள். அன்று பகல் முழுவதும் பாலைவனத்திலும் இடையிடையே இருந்த சோலைகளிலும் சுந்தர்தாஸ் பயணம் செய்தான். அன்று இரவில் வேறொரு சோலையில் தனது படைவீரனைத் தங்க உத்தரவிட்டான். சுந்தர்தாஸ் சென்ற திசையிலிருந்தும் வேகத்திலிருந்தும் சீக்கிரம் ஒண்டாலாவை அடைவது அவன் நோக்கமல்ல என்பதைப் புரிந்து கொண்டான் ஹரிதாஸ் ஜாலா. அது மட்டுமல்லாமல் அவ்வப்பொழுது தங்கிய இடங்களில் அவன் அடிக்கடி மேற்கு நோக்கிப் புரவி வீரர்களை ஏவியதிலிருந்து, யாருடைய வருகையையோ எதிர்பார்க்கிறான் என்பதையும் அறிந்து கொண்டான்.



'ஒண்டாலாவின் முன்பு ஜஹாங்கீர் இருந்தால் இவன் அங்கு போக வேண்டியவன்தானே? அப்படியிருக்க ஏன் சுற்று வழியில் பயணம் செய்கிறான்? தவிர யாரை எதிர்பார்க்கிறான்?' என்று கேட்டு விடை காணாமல் தவித்தான்.

விடை அன்றும் கிடைக்கவில்லை. அடுத்த ஒரு வாரமும் கிடைக்கவில்லை. சுந்தர்தாஸ் பயணத்தைப் பெரிதும் தாமதித்துத் தாமதித்து நடத்தினான். ஒண்டாலாவைச் சுற்றித் தொலைவிலிருந்த ஊர்களைப் பார்த்துப் பார்த்துத் தங்கினான். இப்படி ஒரு வாரம் கழிந்தது. ஆனால் அந்த வாரத்துக்குப் பின் சுந்தர் தாஸின் நிதானம் மெள்ள மெள்ளக் குலைந்து கொண்டு வருவதைக் கண்ட ஹரிதாஸ் ஜாலா, ஏதோ ஏமாற்றம் சுந்தர்தாஸின் திட்டத்தில் ஏற்பட்டுவிட்டது என்பதை மட்டும் புரிந்துகொண்டான். அதுவரை இருந்த நிதானம் குலைந்துவிட்டதால், சுந்தர்தாஸ் காரணமில்லாமல் வீரர்கள் மீது எரிந்து விழத் தொடங்கினான். குற்றமில்லாதவர்கள் மீதெல்லாம் குற்றம் கற்பித்துச் சீறினான். அப்படி அவன் சீறிக்கொண்டிருந்த ஒரு சமயத்தில்தான் ஹரிதாஸ் அவன் அநீதியைச் சகிக்காமல் தலையிட்டான். புரவியொன்றின் சேணம் நழுவிக் கிடந்ததற்காக ஒரு வீரனைச் சாட்டை கொண்டு அடிக்க ஓடிய சுந்தர்தாஸை இடைபுகுந்து தடுத்த ஹரிதாஸ் ஜாலா, "சுந்தர்தாஸ்! ராஜபுதனத்தின் வீரர்களை எந்தத் தலைவனும் சாட்டை கொண்டு அடிக்கும் பழக்கமில்லை" என்று கூறினான்.

சுந்தர்தாஸின் கண்கள் நெருப்பைக் கக்கின. "அதை எனக்கு போதிக்க நீ யார்?" என்று அதட்டினான்.

"ராஜபுதனத்தின் வீரர்களில் ஒருவன்." ஹரிதாஸ் ஜாலாவின் பதில் மிகுந்த நிதானத்துடன் வந்தது.

"உன் வேலையை மட்டும் நீ கவனிப்பது நல்லது."

"அதைத்தான் கவனித்துக் கொண்டிருக்கிறேன்?"

"என்ன அது?"

"ஒரு ராஜபுத்திரனுக்கு அநீதி விளைவிக்கப்படும் போது, இன்னொரு ராஜபுத்திரன் அதைப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை."

"இந்த விஷயங்களில் உன் தலையீட்டை நான் விரும்பவில்லை"

"விரும்பாவிட்டால் குறையைத் தீர்த்துக்கொள்ள வழியிருக்கிறது."

"என்ன வழி?"

அது என்ன வழியென்பதை சுந்தர்தாஸ் உணர்ந்தே இருந்தான். ராஜபுத்திரர்களுக்குள் தீவிரக் கருத்து வேற்றுமை ஏற்படும் சமயங்களில், கத்தி கொண்டு முடிவை ஏற்படுத்திக் கொள்ளும் வழக்கத்தை ஹரிதாஸ் ஜாலா குறிப்பிடுகிறானென்பதை அறிந்து கொண்ட சுந்தர்தாஸ், அவனையும் அவனால் காப்பாற்றப்பட்ட வீரனையும் ஒரு முறை வெறித்து நோக்கிவிட்டு வேறு திசையில் சென்றுவிட்டான். மேற்கொண்டு எந்த இடத்திலும் நிற்காமலும், அவமானத்திலிருந்து தன்னால் காப்பாற்றப்பட்ட வீரனை ஏறெடுத்துப் பார்க்காமலும், ஹரிதாஸ் ஜாலாவும் தன் கூடாரத்தை நோக்கிச் சென்றுவிட்டான். அந்தச் சம்பவம் சிறிய சம்பவம்தான். ஆனால் சின்னஞ்சிறிய சம்பவங்கள் உலக சரித்திரத்தை மாற்றி இருக்கின்றனவல்லவா? அப்படி அந்த சிறிய சம்பவம், சிறிய உதவி ஹரிதாஸ் ஜாலாவின் நிலைமையைப் பெரிதும் மாற்றியது. அதனால் கிடைத்த பலன் பெரும் பலன். அதை நினைத்துப் பிற்காலத்தில் பல முறை வியந்தான்



ஹரிதாஸ் ஜாலா. பலன் உடனே கிடைக்கவில்லை. மீண்டும் ஒரு வாரம் கழித்துக் கிடைத்தது. நன்றாக இருள் சூழ்ந்த இரவில் கிடைத்தது. நன்றாக கூடாரத் தில் உறங்கிக் கொண்டு இருந்த ஹரிதாஸ் ஜாலாவை சுந்தர்தாஸின் சாட்டையிலிருந்து தப்பிய அந்த வீரன், நள்ளிரவில் வந்து அசைத்து எழுப்பினான். அதனால் வாரிச் சுருட்டி எழுந்த ஹரிதாஸை கூச்சலிட வேண் டாமென்று சைகை செய்து தன்னுடன் வரும்படி ஜாடை காட்டினான்.

## 27. ஒண்டாலாவில் நினைத்ததும் நடந்ததும்

**ந**ள்ளிரவில் வீரன் வந்து எழுப்பியதும், வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்த ஹரிதாஸ் ஜாலா, அவன் வாயில் கையை வைத்து ஏதும் பேச வேண்டா மென சைகை செய்து, தன்னுடன் வரும்படி ஜாடை காட்டியதும், ஏதோ முக்கியமான நிகழ்ச்சி ஏற்பட் டிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தவனாய், மிகுந்த வேகத்துடன் தனது ஆடைகளைச் சரிப்படுத் திக் கொண்டு கலைந்திருந்த தலையைச் சீர் செய்து, இடையில் குறுவாள் ஒன்றையும் சொருகிக் கொண்டு அந்த வீரனைத் தொடர்ந்தான். கூடாரத்திலிருந்து வெளிப்போந்த அந்த வீரன் கூடார வாயிலில் வந்ததும் நாற்புறமும் பார்த்து எச்சரிக்கை செய்து கொண்டு, அடிமேலடி வைத்து சற்று எட்ட இருந்த மற்றொரு கூடாரத்தை நோக்கிச் சென்றான். அந்தக் கூடாரத்தை அணுகியதும், கூடார வாயிலுக்காகச் செல்லாமல் அதன் பின்புறமாக நடந்து கூடாரச் சீலையை ஒட்டி நின்று கொண்டு ஹரிதாஸையும் தன்னை நெருங்கு மாறு சைகை செய்தான். அவன் காட்டிய சைகையை அனுசரித்துக் கூடாரச் சீலைக்கு அருகில் வந்த ஹரி

தாஸ் ஜாலாவுக்கு கூடாரத்துக்குள் இருவர் பேசுவது நன்றாகக் காதில் விழவே, யார் பேசுகிறார்கள் என்று உற்றுக் கேட்டான். ஒருவன் குரல் ஹரிதாஸ் ஜாலாவுக்கு ஏற்கெனவே பழக்கமான சுந்தர் தாஸின் குரல், இன்னொருவன் குரல் எங்கோ கேட்ட மாதிரியிருந்தாலும் எங்கு கேட்டோம் என்பதை நிச்சயிக்க முடியாமல் திண்டாடிய ஹரிதாஸ் ஜாலாவுக்கு உதவ, அருகில் இருந்த வீரன் கூடாரத்தின் பின்பக்கச் சீலையை மெள்ளப் பிரித்தான். முக்கோண வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்த அந்தக் கூடாரத்தின் பின் பகுதி இரண்டு சீலைகளால் பொருத்தப்பட்டிருந்தால், இரண்டும் சந்தித்த இடத்தை மெள்ள நீக்கி, வீரன் உள்ளே பார்க்கும்படி ஹரிதாஸ் ஜாலாவை ஊக்கினான். ஹரிதாஸ் ஜாலா ஒருபுறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு உட்புறத்தை ஒரு கண்ணால் ஆராய்ந்தான். அந்த உட்புறத்தை ஆர்ய்ந்த அவன் வதனத்தில் சிந்தனைச் சாயை தீவிரமாகப் படர்ந்தது. சுந்தர்தாஸுக்கு எதிரே நின்றவனை எங்கோ பார்த்திருந்த நினைப்பு அவனுக்கு இருந்தது; ஆனால் எங்கே பார்த்தோம் என்பது மட்டும் திண்ணமாகப் புரியவில்லை. இருப்பினும் அதைப்பற்றி ஆராயாமல் உள்ளே என்ன நடக்கிறது என்பதை மட்டும் கவனித்த ஹரிதாஸ் ஜாலா, சுந்தர்தாஸுக்கு எதிரில் நின்றவன் மொகலாயனென்பதையும் அவன் சீற்றத்துக்கெதிரே சுந்தர்தாஸ் நடுங்கி நின்று கொண்டிருப்பதையும் கவனித்தான். வந்திருப்பவன் மொகலாய தூதனென்பதையும், மொகலாயர் விரும்பாத ஏதோ விஷயம் நடந்திருக்க வேண்டுமென்பதையும் ஊகித்துக் கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அவர்கள் இருவர் சம்பாஷணையையும் காதைத் தீட்டிக் கொண்டு கேட்டான். அவன் ஒற்றைக் கண் பார்வை கூடாரத்தின் உட்புறத்தை [illegible] இல்லை.



உட்புறத்தில் நின்ற மொகலாயன் தன் நீண்ட மீசையையும், முகவாய்க்கட்டையின் நட்டநடுவில் லேசாக வளர்ந்து சற்றே நீண்டிருந்த குறுந்தாடியையும் இரண்டு மூன்று முறை தடவி விட்டுக் கொண்டு, "சுந்தர்தாஸ், பாதுஷா ஜஹாங்கீரிடம் இதைச் செய்கிறேனென்று உறுதி கூறி, அதைச் செய்யத் தவறியவன் பிழைத்ததில்லை தெரியுமா உங்களுக்கு'' என்று சீறினான்.

"தெரியும். ஆனால், எதிர்பாராமல் நேரிட்டுவிடும் விளைவுகளுக்கு நான் என்ன செய்ய முடியும்?" என்ற சுந்தர்தாஸின் குரல் கேட்பதற்குப் பரிதாபமாயிருந்தது.

"நீ எதிர்பாராமல் இது எப்படி நடந்திருக்க முடியும்" என்று வினவினான் மொகலாய வீரன்.

"நான்தான் முக்கிய அலுவலாக ஒண்டாலாவை விட்டுப் புறப்பட்டு விட்டேனே?" என்றான் சுந்தர் தாஸ் மீண்டும் பரிதாபக் குரலில்.

"உன் அலுவல் என்ன, ஏன் புறப்பட்டாய் என்பதல்ல கேள்வி. எந்தத் தைரியத்தில் நீ மொகலாயப் படையை ஒண்டாலாவைத் தாக்கச் சொன்னாய் என்பதுதான் கேள்வி" என்றான் மொகலாய வீரன், குற்றவாளியை விசாரிக்கும் நீதிபதியைப் போல.

"ஒண்டாலாவில் என் பணியை நன்றாகத்தான் நிறைவேற்றி வைத்திருந்தேன்."

"என்ன நிறைவேற்றி வைத்திருந்தாய்?"

"அரசரிடம் சொல்லி ஜயன் சந்தாவத்தை வேறு அலுவலாக ஒண்டாலாவிலிருந்து அனுப்பினேன்..."

"உம், பிறகு?"

தாஸ் ஜாலாவுக்கு கூடாரத்துக்குள் இருவர் பேசுவது நன்றாகக் காதில் விழவே, யார் பேசுகிறார்கள் என்று உற்றுக் கேட்டான். ஒருவன் குரல் ஹரிதாஸ் ஜாலாவுக்கு ஏற்கெனவே பழக்கமான சுந்தர் தாஸின் குரல், இன்னொருவன் குரல் எங்கோ கேட்ட மாதிரியிருந்தாலும் எங்கு கேட்டோம் என்பதை நிச்சயிக்க முடியாமல் திண்டாடிய ஹரிதாஸ் ஜாலாவுக்கு உதவ, அருகில் இருந்த வீரன் கூடாரத்தின் பின்பக்கச் சீலையை மெள்ளப் பிரித்தான். முக்கோண வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்த அந்தக் கூடாரத்தின் பின் பகுதி இரண்டு சீலைகளால் பொருத்தப்பட்டிருந்ததால், இரண்டும் சந்தித்த இடத்தை மெள்ள நீக்கி, வீரன் உள்ளே பார்க்கும்படி ஹரிதாஸ் ஜாலாவை ஊக்கினான். ஹரிதாஸ் ஜாலா ஒருபுறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு உட்புறத்தை ஒரு கண்ணால் ஆராய்ந்தான். அந்த உட்புறத்தை ஆர்ய்ந்த அவன் வதனத்தில் சிந்தனைச் சாயை தீவிரமாகப் படர்ந்தது. சுந்தர்தாஸுக்கு எதிரே நின்றவனை எங்கோ பார்த்திருந்த நினைப்பு அவனுக்கு இருந்தது; ஆனால் எங்கே பார்த்தோம் என்பது மட்டும் திண்ணமாகப் புரியவில்லை. இருப்பினும் அதைப்பற்றி ஆராயாமல் உள்ளே என்ன நடக்கிறது என்பதை மட்டும் கவனித்த ஹரிதாஸ் ஜாலா, சுந்தர்தாஸுக்கு எதிரில் நின்றவன் மொகலாயனென்பதையும் அவன் சீற்றத்துக்கெதிரே சுந்தர்தாஸ் நடுங்கி நின்று கொண்டிருப்பதையும் கவனித்தான். வந்திருப்பவன் மொகலாய தூதனென்பதையும், மொகலாயர் விரும்பாத ஏதோ விஷயம் நடந்திருக்க வேண்டுமென்பதையும் ஊகித்துக் கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அவர்கள் இருவர் சம்பாஷணையையும் காதைத் தீட்டிக் கொண்டு கேட்டான். அவன் ஒற்றைக் கண் பார்வை கூடாரத்தின் உட்புறத்தை விட்டு அகலவே இல்லை.



உட்புறத்தில் நின்ற மொகலாயன் தன் நீண்ட மீசையையும், முகவாய்க்கட்டையின் நட்டநடுவில் லேசாக வளர்ந்து சற்றே நீண்டிருந்த குறுந்தாடியையும் இரண்டு மூன்று முறை தடவி விட்டுக் கொண்டு, "சுந்தர்தாஸ், பாதுஷா ஜஹாங்கீரிடம் இதைச் செய்கிறேனென்று உறுதி கூறி, அதைச் செய்யத் தவறியவன் பிழைத்ததில்லை தெரியுமா உங்களுக்கு" என்று சீறினான்.

"தெரியும். ஆனால், எதிர்பாராமல் நேரிட்டுவிடும் விளைவுகளுக்கு நான் என்ன செய்ய முடியும்?" என்ற சுந்தர்தாஸின் குரல் கேட்பதற்குப் பரிதாபமாயிருந்தது.

"நீ எதிர்பாராமல் இது எப்படி நடந்திருக்க முடியும்" என்று வினவினான் மொகலாய வீரன்.

"நான்தான் முக்கிய அலுவலாக ஒண்டாலாவை விட்டுப் புறப்பட்டு விட்டேனே?" என்றான் சுந்தர்தாஸ் மீண்டும் பரிதாபக் குரலில்.

"உன் அலுவல் என்ன, ஏன் புறப்பட்டாய் என்பதல்ல கேள்வி. எந்தத் தைரியத்தில் நீ மொகலாயப் படையை ஒண்டாலாவைத் தாக்கச் சொன்னாய் என்பதுதான் கேள்வி" என்றான் மொகலாய வீரன், குற்றவாளியை விசாரிக்கும் நீதிபதியைப் போல.

"ஒண்டாலாவில் என் பணியை நன்றாகத்தான் நிறைவேற்றி வைத்திருந்தேன்."

"என்ன நிறைவேற்றி வைத்திருந்தாய்?"

"அரசரிடம் சொல்லி ஜயன் சந்தாவத்தை வேறு அலுவலாக ஒண்டாலாவிலிருந்து அனுப்பினேன்..."

"உம், பிறகு?"

"ஒண்டாலா கோட்டைக்குள் என் வீரர்களில் பாதிப் பேரைப் புகுத்தி, மீதி வீரருக்கும் காவலில் சிரத்தையில்லாமல் செய்தேன்."

"பிறகு?"

"அரண்மனையிலிருந்து அமரசிம்மன் வெளிவராதபடியும் வேறு யாருக்கும் தூது அனுப்ப முடியாதபடியும் என் ஆட்களை அரண்மனை முழுவதும் நிரப்பினேன்..."

"நீ சொல்லுவது உண்மையாயிருந்தால், அந்தக் கோட்டையை மொகலாயப் படைகள் தாக்கியதும் கோட்டை பழமென நழுவிப் பாதுஷா கைகளில் விழுந்திருக்க வேண்டும்."

"ஆம்."

"ஆனால் விழவில்லை தெரியுமா?"

"இப்பொழுதுதான் அதைச் சொன்னாய்."

"ஆம் இப்பொழுதுதான் அதைச் சொன்னேன். அதுமட்டுமல்ல" என்ற அந்த மொகலாய வீரன் சுந்தர்தாஸை நோக்கி நெருப்புத் துண்டங்களென ஒளி வீசிய கண்களை திருப்பினான். அத்துடன் தொடர்ந்தும் சொன்னான் "படைகள் போருக்குத் தயாராயிருந்தன, மொகலாயர், கோட்டையை நீ சொன்னபடி இரவில் தான் அணுகினார்கள். அவர்கள் கதவுகளை நெருங்கும்வரை தூங்கிக் கிடந்த கோட்டை, திடீரென உயிர் பெற்றது. வாயிற்கதவுகளும் நிமிஷ மாத்திரத்தில் திறந்து வெள்ளம்போல் ராஜபுதனப் புரவி வீரர் பாய்ந்து வந்தார்கள். பக்க வாயில்கள் இரண்டின் வழியாகவும் சந்தாவதர்களும் வெகு வேகத்துடன் கிளம்பி நமது படைகளை ஊடுருவி விட்டார்கள்" என்று.



இதைச் சொன்ன அந்த மொகலாய வீரன் அடுத்த விநாடி கோப நகைநகைத்து, "சுந்தர்தாஸ்! கோட்டையின் நடுவாயிலும் திறந்தது. வீரர்கள் வந்தார்கள். அவர்களுக்குத் தலைமை வகித்து வந்தது யார் தெரியுமா?" என்று கேட்டான்.

"யார்?" சுந்தர்தாஸின் குரலில் திகில் மண்டிக் கிடந்தது.

"ஊகித்துச் சொல் பார்ப்போம்" என்றான். மொகலாய வீரன் இகழ்ச்சியுடன்.

"ராணாவா?" ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்டான் சுந்தர்தாஸ்.

"இல்லை."

"வேறு யார்?"

"நீ கோட்டையை விட்டு அனுப்பிவிட்டதாகச் சொன்னாயே..." மொகலாய வீரன் வார்த்தையை முடிக்கவில்லை.

சுந்தர்தாஸின் முகத்தில் பயத்தின் சாயை படர்ந்தது. "யார்... யார்..." என்று குளறினான்.

"ஆம் சுந்தர்தாஸ்! யார் பெயரைச் சொல்ல நீ அஞ்சுகிறாயோ அவர்தான்– ஜயன் சந்தாவத்?" என்றான் அந்த மொகலாய வீரன்.

சுந்தர்தாஸ் இடி தலைமேல் விழுந்து விட்டதுபோல் அதிர்ச்சியுற்று நின்றான். "ஜயன் சந்தாவத்! ஜயன் சந்தாவத்! அவர் எப்படி வந்தார் அங்கே? அவரைத்தான் நான் அரசரிடம் சொல்லி அனுப்பிவிட்டேனே?" என்று தட்டுத் தடுமாறிப் பேசினான் சுந்தர்தாஸ்.

மொகலாயன் முகத்தில் இகழ்ச்சிக் குறி படர்ந்தது. "நாட்டுக்குத் துரோகம் செய்ய முனைபவர்களைவிட நாட்டுப்பற்று உள்ளவர்களுக்கு அதிக ஊகமிருப்பதால் ஏற்படும் விளைவு இது" என்றான் அவன்.

இதைத் தாங்காத சுந்தர்தாஸ், "யார் நாட்டுக்கு துரோகி? வார்த்தைகளை அளந்து பேசு. நானும் ராஜ புதனத்தின் படைத்தலைவர்களில் ஒருவன்" என்று சீறினான்.

"ராஜபுதனத்திடம் பரிதாபப்படுகிறேன் சுந்தர்தாஸ்" என்று மொகலாய வீரன் மேலும் தொடர்ந்து, "சுந்தர் தாஸ்! மொகலாயருக்கு ஒண்டாலா சண்டையில் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஜயன் சந்தாவத்தின் தாக்குதலால் உருண்ட தலைகளை மூன்று நாள் திரட்டி இருக்கிறது மொகலாயர் படை. நீ எழுதியது போல், ஒண்டாலா சரணடையவில்லை. இன்னும் கம்பீரமாக நின்றிருக்கிறது, இதற்கு நீ யாருக்குப் பதில் சொல்ல வேண்டும் தெரியுமா?" என்று கேட்டான்.

"யாருக்கு, பாதுஷாவுக்குத்தானே?" என்று சுந்தர் தாஸ் வினவினான்.

"இல்லை."

"சுல்தான் பர்வேஸுக்கா?"

"இல்லை."

"பின் யாருக்கு?"

"ஜஹாங்கீர் எந்த மகனை அதிர்ஷ்டசாலி என்று நினைக்கிறார்?"

மொகலாய வீரனின் இந்தக் கேள்வி சர்வசாதாரண மானதுதான். ஆனால் அதைக் கேட்டதும் சுந்தர்தாஸ் மெள்ள நடுங்கினான். "யார், சுல்தான் குர்ரமா?"



என்று வினவினான் திகிலும் வியப்பும் குரலில் புகுந்துலாவ.

"ஆம், சுல்தான் குர்ரம்தான் இந்தப் படையெடுப் புக்குத் தலைவர். ஒண்டாலாவின் தோல்விக்குப் பின்பு ராஜபுதனத்தைப் படிய வைக்காமல் திரும்புவதில்லை யென பாதுஷாவுக்கு ஓலை அனுப்பி இருக்கிறார்" என்றான் மொகலாய வீரன்.

சுந்தர்தாஸுக்கு என்ன சொல்வதென்றே புரியாத தால் விழித்தான். மொகலாய வீரன் மேற்கொண்டு உத்தரவிட்டான் சுந்தர்தாஸுக்கு, "நாளையே நீ என்னுடன் புறப்பட வேண்டும்" என்று.

"எங்கு புறப்பட வேண்டும்?"

"சுல்தான் குர்ரம் இருக்குமிடத்திற்கு. மீதியைக் காலையில் பேசிக்கொள்வோம்" என்ற அந்த மொக லாய வீரன் சுந்தர்தாஸின் பதிலுக்குக் காத்திராமல் விடுவிடு என்று வெளியே சென்றான். வெளியில் இருந்து அவன் வீரனொருவனை விளித்துத் தனக் கொரு தனிக்கூடாரம் ஒன்று அமைக்கும்படி உத்தர விட்டது ஹரிதாஸ் ஜாலாவின் காதில் தெளிவாக விழவே, மேற்கொண்டு அங்கு நிற்கப் பிரியப்படாத அவன், கூடவே வந்த வீரனையும் அழைத்துக் கொண்டு மரங்களின் இருட்டில் நடந்து பழையபடி தன் கூடாரத்துக்கு வந்து சேர்ந்தான்.

கூடாரத்துக்கு வந்ததும் ஆழ்ந்த யோசனையில் இறங்கினான், ஹரிதாஸ் ஜாலா. ஒண்டாலாவை விட்டு தான் கிளம்பி அன்றுடன் பத்து தினங்கள் முடிந்து விட்டதைக் கணக்குப் பார்த்துக்கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அடுத்த ஐந்து நாட்களைக் கடந்துவிட்டால் ராணாவிடம் தான் செய்திருந்த ஆணை ரத்தாகி விடுமென்றும், பிறகு தான் நாகதீபத்தை ஜஹாங்கீருக்கு

அனுப்புவதில் தடையேதுமிருக்காதென்றும் தீர்மானித்தான். அப்படி அனுப்பிவிடும் பட்சத்தில் ஜஹாங்கிருக்கும் தான் செய்த ஆணை பயனளித்து விடுவதால் அதற்குமேல் தனது சுதந்தரத்தைக் கட்டுப்படுத்த மொகலாய சக்ரவர்த்தியாலும் முடியாதென்பதையும் உணர்ந்துகொண்ட ஹரிதாஸ் ஜாலாவின் மனத்தில் திடீரென ஒரு திட்டம் உருவாயிற்று. 'ஆம் அதுதான் சரி' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்ட அந்த வாலிப வீரன், தன்முன் நன்றியறிதலுடன் நின்று கொண்டிருந்த வீரனை நோக்கி, "வீரனே, நீ இன்று எனக்கு ஒரு பேருதவி செய்து இருக்கிறாய். இன்னோர் உதவியும் செய்ய முடியுமா?" என்று வினவினான்.

"சொல்லுங்கள் படைத்தலைவரே" என்றான் வீரன்."

"இப்பொழுது ஒரு மொகலாய வீரனைப் பார்த்தோமே, சுந்தர்தாஸின் கூடாரத்தில்..." என்று துவங்கினான் ஹரிதாஸ் ஜாலா.

"ஆம்; பார்த்தோம்."

"அவன் யார் தெரியுமா உனக்கு?"

"தெரியாது."

"நான் எங்கோ பார்த்திருக்கிறேன் அவனை."

"எங்கே?"

"ஒன்றுமில்லை, அந்த வீரனை நான் சந்திக்க வேண்டும்."

"கூடாது, கூடாது."

"ஏன்?"

"பெரிய ஆபத்தல்லவா அது?"



ஹரிதாஸ் புன்முறுவல் காட்டினான். "எதிரிகளிடமிருந்து நமக்கு எப்பொழுதும் ஆபத்து குறைவு வீரனே! ஆபத்தெல்லாம் நம்முடன் இருக்கும் மனிதர்களால் தான். ராஜபுதனத்தைக் கைப்பற்ற ஜஹாங்கீர் முயல்வது தவறல்ல. குற்றமல்ல. அதைக் காட்டிக் கொடுக்கத் தயாராய் இருக்கும் சுந்தர்தாஸ் போன்றவர்கள்தான் உண்மைப் புல்லுருவிகள். அவர்களுக்குத் தான் நாம் அஞ்ச வேண்டும். நீ சென்று மொகலாய வீரனுக்குக் கூடாரமடித்ததும் என்னிடம் வந்து சொல்" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

ஹரிதாஸ் ஜாலாவின் ஆணையைச் சிரமேல் ஏற்றுச் சென்ற அந்த வீரன் சுமார் ஒரு நாழிகை கழித்துத் திரும்பி கூடாரம் அடித்து முடிந்து அந்த மொகலாய வீரனும் படுத்து விட்டதாகக் கூறினான். அடுத்த விநாடி அந்த வீரனைத் தொடர்ந்து வெளியே கிளம்பிய ஹரிதாஸ் ஜாலா, மொகலாய வீரன் கூடார வாயிலில் காவலன் ஒருவன் நின்றிருந்ததால் கூடாரத்தின் பின்புறம் சென்று அங்கிருந்த சீலையை மெள்ள குறுவாளால் கிழித்துச் சீலையைப் பிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்து, கூட வந்த வீரனைச் சென்று விடும்படி சைகை செய்து சீலையை மூடிவிட்டான். பிறகு மெள்ள ஓசைப்படாமல் மொகலாய வீரன் படுத்திருந்த இடத்தை அணுகிய ஹரிதாஸ் ஜாலா அவனை மெள்ளத் தட்டி, அப்படி எதிர்பாராதவிதமாக எழுப்பப்பட்ட மொகலாய வீரன் அதிர்ச்சியுற்று எழுந்திருந்து எதிரே நின்ற ஹரிதாஸ் ஜாலாவைப் பார்த்தவுடன், வியப்பின் எல்லையை அடைந்தவனாய், "யார்? நீயா!" என்று கூறினான்.

ஹரிதாஸ் ஜாலாவின் புத்தியிலும் அவனை எங்கோ பார்த்திருக்கிறோம் என்ற நினைப்பு மலரவே, அவன் விழிகளும் ஆச்சரியத்தின் எல்லையில் சஞ்சரித்தன.

"என்ன ஆச்சரியமான சந்திப்பு!" என்றான் ஹரிதாஸ் ஜாலா. எதிரியின் கைகளை அன்புடன் பிடிக்கத் தனது கைகளை நீட்டினான்.

ஹரிதாஸ் ஜாலாவின் கைகளைப் பற்றவில்லை அந்த வீரன், பதிலுக்குத் தலையை நன்றாகத் தாழ்த்தி வணங்கினான், ராஜபுதனத்தின் படைத்தலைவனுக்கு.

## 28. இரும்பு வளையம்

நட்புரிமையுடன் கையைப் பிடிக்கச் சென்ற ஹரிதாஸ் ஜாலாவின் கைகளைப் பார்த்ததும் மொகலாய வீரன் தலை தாழ்த்தி அந்தக் கைகளை வணங்கினானென்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. ஜஹாங்கீர் அளித்த முத்திரை மோதிரம் அந்தச் சமயத்தில் ஹரிதாஸின் கைவிரலில் பளபளத்துக் கொண்டிருந்தது. அதற்குத் தலைவணங்கிய அந்த மொகலாய வீரன், "இதுவரையிலிருந்த குழப்பம் நீங்கிவிட்டது" என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டான்.

"இதுவரை என்ன குழப்பமிருந்தது உங்களுக்கு?"

"உங்களை எங்கோ பார்த்த நினைப்பிருந்தது..." என்று இழுத்தான் மொகலாய வீரன்.

"எனக்கும் அப்படித்தானிருந்தது" என்று ஒப்புக் கொண்டான் ஹரிதாஸ் ஜாலா.

"ஆனால் எங்கு பார்த்தோம் என்று புரியவில்லை."

"இப்பொழுது புரிந்துவிட்டதா?"

"புரிந்துவிட்டது. பாதுஷாவின் அரண்மனையில் சந்தித்தோம்" என்றான் மொகலாய வீரன்.



அப்பொழுதுதான் விஷயம் தெளிவுபட்டது ஹரிதாஸ் ஜாலாவுக்கும், "ஆம் ஆம், நீங்கள்தான் பாதுஷா ஜஹாங்கீரின் முன் அறையில் இருந்தீர்கள். நீங்கள்தான் என்னை பாதுஷாவிடம் அழைத்துச் சென்றீர்கள்" என்று கூறினான் ஹரிதாஸ் ஜாலா, விவரம் புரிந்ததற்கான குறி முகத்தில் விரிய.

"ஆம்" என்பதற்கறிகுறியாகத் தலையசைத்த மொகலாய வீரன், "ஆம் ஆம், அந்த இடத்தில்தான் சந்தித்தோம். நன்றாக நினைவிருக்கிறது எனக்கு. பாதுஷா உங்களிடம் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். நீங்கள் வரும்போது சிறைக்காவலாளிகளுடன் வந்தீர்கள். போகும்போது சுந்தர புருஷராகச் சென்றீர்கள். பாதுஷா உங்களை விடுவித்த காரணம் யாருக்கும் புரியவில்லை. ஆனால் நீங்கள் வெளியில் வரும்போது உங்கள் கையிலிருந்த பாதுஷாவின் முத்திரை மோதிரம் உங்களை யாரும் அணுக முடியாமல் செய்து விட்டது" என்றும் கூறி, பழைய சம்பவங்களை அப்படியே திருப்பிச் சொன்னான்.

ஜஹாங்கீரின் சந்திப்பு ஹரிதாஸ் ஜாலாவின் சித்தத்திலும் வலம் வந்தது. அன்று தான் செய்த ஆணையை மீண்டும் நினைத்து அங்கிக்குள்ளே இதயத்தின் பக்கத்திலிருந்த நாகதீபமடங்கிய சிமிழையும் வலது கையால் தடவிப் பார்த்துக் கொண்டான் அந்த வாலிப வீரன். அதைக்கண்ட மொகலாய வீரன் கேட்டான், "என்ன இதயத்தைத் தடவிச் சிந்திக்கிறீர்கள்? நான் சொன்னது சரியல்லவா?" என்று.

"நீங்கள் சொன்னது முற்றிலும் உண்மை" என்று ஹரிதாஸ் ஜாலா மேலும் தொடர்ந்து, "நான் இதயத்தைத் தடவவில்லை, இதயத்தின் அருகில் நான் வைத்திருக்கும் பொருளைத் தடவிப் பார்த்தேன். அது போய்

விட்டால் பெரும் விபரீதம் ஏற்படும்'' என்று கூறினான்.

மொகலாய வீரன் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. "அத்தனை அற்புதப் பொருளா அது?" என்று ஆச்சரியத்துடன் வினவவும் செய்தான்.

"ஆம்." உறுதியாக வந்தது ஹரிதாஸ் ஜாலாவின் பதில்.

"என்ன பொருள் அது?"

"பொருள் என்ன என்று சொல்ல முடியாது. யார் விரும்புவது என்று சொல்ல முடியும்."

"யார் விரும்புவது!"

"ராணி சாகிபா நூர்ஜஹான்!"

"என்ன!" அதிர்ச்சி மிகுந்த குரலில் கேட்டான் மொகலாய வீரன்.

"ஆம்; ராணி சாகிபா விரும்பினார்கள். அதை எப்படியும் கொண்டு வரும்படி பாதுஷா பணித்தார்; கொண்டு வருவதாக ஆணையிட்டு வந்தேன். கைப் பற்றியும் விட்டேன். வந்த வழியில் சுந்தர்தாஸ் என்னை சிறைப்படுத்தினான்" என்று மிகத் தந்திரமாக மித்திர பேதத்தில் புகுந்த ஹரிதாஸ் ஜாலா மொகலாய வீரனை ஏறிட்டு நோக்கினான்.

மொகாலாய வீரன் முகம் குங்குமமாகச் சிவந்தது. அவன் விழிகள் நெருப்பைக் கக்கின. உதடுகள் ஒரு விநாடி துடித்தன. "அத்தனை ஆணவமா அவனுக்கு?" என்று சீறினான் மொகலாய வீரன். அத்துடன் தன் இதயத்தின் மீது கையை வைத்துக்கொண்டு இரைந்தான். "அல்லாவின் (ஸல்) ஆணையாகச் சொல்கிறேன். இந்த மகம்மது பெக் உயிருடன் இருக்கும் வரையில்



சுந்தர்தாஸ் உங்கள் மீது கையை வைக்க முடியாது. அவன் ஏற்கெனவே செய்துள்ள துரோகத்துக்கே சுல்தான் குர்ரம் அவனைத் தூக்கிலிடலாம். பாதுஷாவின் விவகாரத்தில் தலையிட்டால் அவன் உயிர் அரைக் காசு பெறாது" என்று.

மகம்மது பெக்கின் ஆணை மிக உக்கிரமாயிருந்தது. அதைக் கண்டு உள்ளூர உவகை கொண்ட ஹரிதாஸ் ஜாலா அதற்கு மேலும் தூபம் போட முற்பட்டு, "உங்களுக்குத் தேவையானால் அந்தப் பொருளைக் காட்டுகிறேன்" என்று அங்கியின் பைக்குள் கையையும் விட்டான்.

"வேண்டாம்! வேண்டாம்!" என்று கூச்சலிட்ட மகம்மது பெக், "ராணி சாகிபா இஷ்டப்பட்டதை இந்த அற்பன் கண்ணால் பார்ப்பதும் தகாது'' என்றான்.

ஹரிதாஸ் ஜாலா அவன் ராஜ விசுவாசத்தை எண்ணி மகிழ்ந்தான். இருப்பினும் அவனைத் தன் பக்கத்தில் பூராவாக இழுக்க நினைத்து, "நான் தங்களைப் பெயர் சொல்லி அழைக்கலாமா?" என்று அன்புடன் வினவினான்.

"தாராளமாக அழையுங்கள்" என்றான் மகம்மது பெக்.

"மகம்மது பெக்."

"சொல்லுங்கள்."

"என் பெயர் ஹரிதாஸ் ஜாலா."

"யார்..?"

"ஆம்! ராஜபுதனத்தின் பழைய படைத்தலைவன்."

"நினைத்தேன் அப்பொழுதே. பாதுஷா பெரும் பணிகளை சாதாரண வீரர்களிடம் ஒப்படைக்க மாட்டாரே என்று. நீங்கள் ஹரிதாஸ் ஜாலாவா?"

"ஆம் மகம்மது பெக். என்னை யாரென்று அறிந்த பின்புதான் பாதுஷா, ராணா அமரசிம்மனிடமிருந்து ஓர் அரிய பொருளைக் கொண்டு வரும்படி பணித்தார். அதைக் கொண்டும் வந்தேன். இடையில் இவனிடம் சிக்கிக் கொண்டேன்."

"ஹரிதாஸ் ஜாலா! இவனைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். என்ன செய்ய வேண்டுமென்று என்னிடம் சொல்லுங்கள்" என்று கேட்டான் மகம்மது பெக், உணர்ச்சியுடன்.

"நாம் நாளை பயணப்பட வேண்டும்" என்றான் ஹரிதாஸ் ஜாலா.

"எங்கு?" என்று வினவினான் மகம்மது பெக்.

"சுல்தான் குர்ரம் இருக்குமிடத்திற்கு" என்று கூறினான் ஹரிதாஸ் ஜாலா.

மகம்மது பெக்கின் பதில் தடங்கல் சிறிதுமின்றி வந்தது. "அவசியம் புறப்படுவோம்" என்றான் அவன்.

"சுந்தர்தாஸும் உடன் வருவதாகச் சொன்னால்?" ஹரிதாஸ் ஜாலா இதைக் கேட்ட போது, அவன் குரலில் அதிருப்தி மண்டிக் கிடந்தது.

அதைக் கவனித்த மகம்மது பெக் கூறினான்: "கவலைப்படாதீர்கள். அவனை இங்கேயே நான் நிறுத்தி விடுகிறேன்."

பிறகு சில விநாடிகள் ஏதோ யோசனையில் இறங்கிய ஜாலா, "இப்பொழுது சுல்தான் குர்ரம் எங்கிருக்கிறார்?" என்று வினவினான்.



"ஒண்டாலாவை விட்டுப் பின்வாங்கி விட்டார். அங்கிருந்து மூன்று நாள் பயணத்தில் இருக்கிறார்" என்றான் மகம்மது.

மீண்டும் யோசனையில் இறங்கிய ஹரிதாஸ் ஜாலா, ஏதோ ஒரு முடிவுக்கு வந்து, "சரி மகம்மது பெக், விடியுமுன்பு நாம் புறப்பட்டுவிடுவோம், சுல்தான் குர்ரம் இருக்குமிடத்திற்கு. இந்தப் பொருளை அவரிடம் சேர்ப்பித்தால் தான் மனம் நிம்மதி அடையும்" என்று கூறிவிட்டு, மகம்மது பெக்கிடம் விடைபெற்று வெளியே வந்தான். மீண்டும் தனது கூடாரத்திற்கு வந்து சேர்ந்து பழையபடி கீழிருந்த இரத்தினக் கம்பளத்தில் படுத்து யோசனையில் இறங்கினான்.

"சுந்தர்தாஸிடமிருந்து தப்பினால் இந்த நாகதீபம் உடனடியாக ஜஹாங்கீரிடம் போகாது. இன்று நான் ராணாவை விட்டுப் பிரிந்து பத்து நாளாகிறது. பதினைந்து நாள் வரை இந்த நாகதீபத்தைக் காப்பதாக ராணாவுக்கு உறுதி கூறியிருக்கிறேன். சுல்தான் குர்ரம் ஒண்டாலாவில் இருந்து மூன்று நாள் பயணத்தில் இருப்பதால், அவர் முகாமை இங்கிருந்து ஐந்து நாள் பயணத்திற்குப் பின்புதான் அடையமுடியும். அதற்குள் பதினைந்து நாள் தவணை தாண்டிவிடும். ராணாவுக்கு நான் கொடுத்த வாக்குறுதி அத்துடன் தீர்ந்துவிடுகிறது. பிறகு ஜஹாங்கீரிடம் செய்த ஆணைதான் மீதி இருக்கும். இந்த நாகதீபத்தைக் கொடுத்து அதையும் நிறைவேற்றி விடுகிறேன். அதற்கு ஜஹாங்கீர் அளிக்கும் வெகுமதி ராஜபுதனத்துடன் சமாதானம். ஆனால் அந்த வெகுமதியை நான் ஏற்க வேண்டியதில்லை. மறத்துவிடுகிறேன். எனது விடுதலையைக் கேட்கிறேன் வெகுமதியாக. மீண்டும் ராஜபுதனம் திரும்பி மொகலாயருக்கு எதிராகப் போரிடுகிறேன். நாக தீபத்தை எதிரிக்கு அளித்த பாவத்தை என் கத்தியைக் கொண்டு

மொகலாயர் இரத்தத்தால் துடைக்கிறேன்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டே ஹரிதாஸ் நாகதீபத்தின் பேழையை எடுத்து அதைத் திறந்து அதன் உள்ளிருந்த சரித்திர இரத்தினத்தை நோக்கினான். அதன் செவ்விய கதிர்கள் அந்தக் கூடாரமெங்கும் பரவின. நாகதீபம் படுத்திருந்த ஹரிதாஸ் ஜாலாவின் முகத்துக்கருகே இருந்தால் அவன் முகத்தை இரத்தக் குழம்பாக அடித்து இருந்தது. 'அப்பப்பா! இந்தக் கல்லுக்குத்தான் என்ன சக்தி! இதைப் பற்றி எத்தனை பேருக்கு எவ்வளவு மூட நம்பிக்கைகள்! வாள் செய்ய முடியாததை இது எப்படிச் செய்யும்? கற்களை நம்பி ராஜபுதனம் வாழப்போகிறதா? அல்லது வீரர் வாட்களை நம்பி வாழப் போகிறதா?' என்று அந்த நாகதீபத்தை நோக்கி சீறவும் சீறனான் அந்த வீரன். பிறகு பேழையை மூடி அங்கிக்குள் வைத்துக் கொண்டு உறங்கக் கண்களை மூடினான்.

பொழுது புலர்ந்தது. சோலையில் எங்கும் இன்பம் நிலவிக் கிடந்தது. ஆனால் சுந்தர்தாஸின் இதயம் மட்டும் அந்த இன்பத்தை அனுபவிக்க முடியாமல் எரிமலையாகிக் கிடந்தது. மகம்மது பெக்கும் ஹரிதாஸ் ஜாலாவும் சேர்ந்து விடியற்காலையில் தன் கூடாரத்துக்கு வந்து தன்னை எழுப்பியதே பெரும் சந்தேகத்தை விளைவித்தது அவனுக்கு. இருவரும் சேர்ந்து புறப்படப் போவதாக மகம்மது பெக் கூறியது பெரும் சீற்றத்தை விளைவித்தது அவன் சித்தத்தில். ஆனால் அந்தச் சீற்றத்தை சிறிதும் லட்சியம் செய்யாத மகம்மது பெக், "இவரைப் பாதுஷாவிடம் அழைத்துப் போகிறேன்" என்றான், கட்டளையிடும் தலைவனைப் போல.

"நான் அழைத்துப் போவதாக இருந்தேன்" என்றான் சுந்தர்தாஸ் கோபத்துடன்.





"அந்தச் சிரமம் உனக்குத் தேவையில்லை" என்றான் முகம்மது சர்வ சாதாரணமாக.

"நானும் உடன் வரட்டுமா?"

"உயிரின்மேல் ஆசையில்லையேல் வரலாம்."

"ஏன் உயிருக்கென்ன ஆபத்து?"

"ஒண்டாலாவில் மொகலாயர் அடைந்த தோல்விக்கு சுல்தான் குர்ரம் தோடா செய்து போடுவார் என்று நினைக்கிறாயா?" என்று கேட்ட மகம்மது, பெரிதாக நகைத்தான்.

முதல் நாளிரவு அவர்கள் இருவர் சம்பாஷணையையும் ஒட்டுக் கேட்டிருந்த ஹரிதாஸ் ஜாலா, ஏதுமறியாதது போல் பாசாங்கு செய்து, "என்ன! ஒண்டாலாவில் போர் நடந்ததா?" என்று வினவினான்.

சுந்தர்தாஸின் முகத்தில் அச்சத்தின் குறி பெரிதாகப் படர்ந்தது. அதை கவனித்த மகம்மது பெக் இகழ்ச்சி கலந்த பார்வையொன்றை அவன்மீது வீசிவிட்டு, "வாருங்கள் போகலாம்" என்று ஹரிதாஸை நோக்கிக் கொண்டே தன் புரவியைக் கொண்டுவரச் சொல்லி அதன்மீது தாவினான். ஹரிதாஸ் ஜாலாவும் புரவி மீது ஆரோகணித்ததும் இருவரும் சோலையை விட்டு வெளியே செல்லப் புரவிகளை முடுக்கினார்கள்.

அவர்கள் இருவரும் போவதைப் பார்த்துக்கொண்டு ஸ்தம்பித்து நின்றான் சுந்தர்தாஸ். அவன் முகத்தில் கோபம் பெரிதும் தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தது. கோபத்தை அவர்கள் மீது காட்ட முடியாததால் அக்கம் பக்கத்தில் இருந்த வீரர்கள் மீது எரிந்து விழுந்தான். "உம் சீக்கிரம் கிளம்புங்கள். ஒண்டாலாவுக்குச் செல்வோம்" என்று உத்தரவு பிறப்பித்தான் அவன். ஒண்டாலாவுக்குப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்

டிருந்த சமயத்தில் சுல்தான் குர்ரத்தின் பாசறையை நோக்கி ஹரிதாஸ் ஜாலாவும், மகம்மது பெக்கும் விரைந்து கொண்டிருந்தார்கள். மகம்மது பெக்குடன் அடுத்து ஐந்து நாட்கள் பயணம் செய்த ஹரிதாஸ் ஜாலா வழியில் கண்களில் தென்பட்ட நிலையால் பெரிதும் அச்சத்துக்கும் கோபத்துக்கும் உள்ளானான். அதுமட்டுமல்ல, சுல்தான் குர்ரத்தின் உள்ளமும் நன்றாகப் புரிந்தது அவனுக்கு. ராஜபுதனம் கடைசியாக ஜஹாங்கீரிடம் சரணாகதி அடைந்து விடுமென்பதற்கான அறிகுறிகளை, பயணம் செய்த ஐந்து நாட்களிலும் கண்டான்.

வழிநெடுக சுல்தான் குர்ரத்தின் படைகள் பெருவாரியாக கூட்டம் கூட்டமாக முகாம் செய்திருந்தன. ஒவ்வோர் இடத்திலும் ஏராளமான ராஜபுத்திர விவசாயிகள், வணிகர், பெண்கள் ஆகிய பிரஜைகள் ஏராளமாகச் சிறை செய்யப்பட்டு வளைத்துக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அந்தச் சிறை முகாம்களில் சிலவற்றில் ராணாவின் உறவினரும் இருந்தார்கள். புரோகிதர்களின் குடும்பங்கள் இருந்தன.

"இதென்ன அநீதி!" என்று ஒரு முறை வாய்விட்டே சொன்னான், ஹரிதாஸ் ஜாலா.

மகம்மது பெக் பதிலுக்கு புன்முறுவல் செய்தான். 'இவர்களுக்கு எந்த அநீதியும் இழைக்கப்படவில்லை. பத்திரமாகக் காக்கப்படுகிறார்கள்" என்று சுட்டிக் காட்டினான்.

"இந்த சாதாரணப் பிரஜைகளை ஏன் சிறை செய்ய வேண்டும்?" என்று வினவினான், ஹரிதாஸ் ஜாலா.

"மக்கள் நலனுக்கு மன்னர் பொறுப்பாளி" என்றான் மகம்மது பெக்.



"ஆம்."

"அந்த நலனைக் காக்க முடியாத மன்னனை வெறுப்பார்கள்."

"ஆம்."

"அந்த வெறுப்பைத்தான் சுல்தான் குர்ரம் தூண்டி வருகிறார். சுல்தான் குர்ரத்தின் முறை தனிப்பட்டது."

"என்ன முறை அது?"

"ஒண்டாலாவைச் சுற்றிப் பெரிய இரும்பு வளையம், வளைக்கப்பட்டு இருக்கிறது."

"இரும்பு வளையமா?"

"ஆம், ஒண்டாலாவைச் சுற்றியுள்ள கிராமங்களைப் பிடித்திருக்கிறார் சுல்தான். அந்த கிராம மக்களை எல்லாம் சிறையில் வைத்திருக்கிறார். ஒண்டாலாவை இப்படியொரு சிறைக்கூடம் வளைத்திருக்கிறது."

"கிராமங்களைப் பிடித்து என்ன பயன்? கோட்டையை அல்லவா பிடிக்க வேண்டும்?"

மகம்மது பெக் புன்முறுவல் செய்தான். "அதிலும் தத்துவம் இருக்கிறது" என்று கூறி, கண்ணைச் சிமிட்டினான் மகம்மது பெக்.

"என்ன தத்துவம் அது?" என்று வினவினான் ஹரிதாஸ்.

அந்தத் தத்துவத்தை மகம்மது பெக் விளக்கவில்லை. ஆறாம் நாள் சுல்தான் குர்ரமே விளக்கினான். அந்த விளக்கம் நாகதீபத்தின் விதியையும் ராஜ புதனத்தின் விதியையும் ஒருங்கே நிர்ணயித்துவிட்டது.

# 29. தயமூரின் வழி

ராணா அமரசிம்மனிடம் இட்ட ஆணைப்படி நாகதீபத்தைப் பதினைந்து நாட்களுக்குத் தன் இதயத்தின் அருகே வைத்துக் காத்துப் பதினாறாம் நாள் சுல்தான் குர்ரத்தின் பாசறையை மகம்மது பெக்குடன் அடைந்த ஹரிதாஸ் ஜாலாவுக்கு, சுற்றுப்புற கிராமங்களையும் ராஜபுத்திர வம்சப் பெண்டிர் குழந்தைகளையும் பிடித்து சிறையிட்ட மர்மத்தை சுல்தான் குர்ரமே விளக்கியதும், ராஜபுதனத்தின் மாஜிப் படைத்தலைவன், ஜஹாங்கீர் மகனின் புத்தி சாதுர்யத்தை நினைத்துப் பெரிதும் வியந்தான். இனி குர்ரத்தினிடமிருந்து ஜயன் சந்தாவத்தாலும் மேவாரின் சுதந்தரத்தைக் காக்க முடியாதென்ற முடிவுக்கு வந்தான்.

சுல்தான் குர்ரத்தின் போர்ப்பாசறைக் கூடாரத்துக்குள் மகம்மது பெக்கினால் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தப்பட்ட ஹரிதாஸ் ஜாலா, எதிரே புன்சிரிப்புடன் சிம்ம மஞ்சத்தில் அமர்ந்திருந்த குர்ரத்தை நோக்கினான். ஜஹாங்கீரின் முகத்தை உரித்து வைத்தது போல் இருந்த குர்ரத்தின் முகத்தில், ஜஹாங்கீர் முகத்தில் சதா சுடர்விட்ட வீரர்களையை விட அழகும் தந்திரமும் அதிகமாகக் காணப்பட்டன. பிற்காலத்தில் ஷாஷஹான் என்ற பெயருடன் மொகலாய சாம்ராஜ்ய அரசுக் கட்டில் ஏறி இந்தியாவின் நிரந்தரக் கலைச் சின்னமான தாஜ்மகாலையும் கட்டிய இளவரசன் குர்ரம், பால் வடியும் தனது வதனத்தில் முளைத்திருந்த இரு அழகிய விழிகளால் ஹரிதாஸ் ஜாலாவைத் திரும்ப நோக்கினான். ஈட்டியென ஜொலித்த ராஜபுதன வீரனின் கண்களும் அந்த ஈட்டியின் முனையில் புஷ்ப மாலையென வழவழப்புடன் வளைய வந்த சுல்தான் குர்ரத்தின் கண்களும் சில



விநாடிகள் ஒன்றையொன்று கவ்வி நின்றன. கடைசியில் இன்பப் புன்முறுவலொன்றும் குர்ரத்தின் கடையிதழ்களில் உதயமாயிற்று. "ஹரிதாஸ் ஜாலாவைப் பற்றி நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன்" என்ற சொற்களும் குர்ரத்தின் உதடுகளிலிருந்து இனிமையுடன் உதிர்ந்தன.

சொற்களின் இனிமை, உதடுகளில் தெரிந்த புன்முறுவல் இரண்டுக்கும் பின்னால் ஆழ்ந்த மனம் சுல்தானுக்கு இருப்பதைப் புரிந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா குர்ரத்துக்குத் தலைவணங்கி, "மொகலாய இளவரசர் என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பது ஜாலா வம்சத்திற்கே பெருமையளிக்கிறது" என்றான்.

சுல்தானின் அழகிய விழிகள் ஜாலாவின் முகத்தில் மீண்டும் பதிந்தன. "என் தந்தையே உங்கள் வம்சத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்" என்றான் குர்ரம் மீண்டும் பரிவுடன்.

"என்ன சொல்லியிருக்கிறார்?"

"ஜாலா வம்சத்தினர் சத்திய சந்தர்கள் என்று."

"அது மட்டுந்தானா?"

"இல்லை, இட்ட ஆணையை நிறைவேற்றத் தவறாதவர்கள் என்றும் கூறி இருக்கிறார்" என்று கூறிய குர்ரம் மீண்டும் புன்முறுவல் செய்தான்.

குர்ரத்தின் சொற்களிலிருந்தும் அவன் புன்முறுவலிலிருந்தும் நாகதீபத்தைக் கொண்டு வர ஜஹாங்கீரிடம் தான் ஆணையிட்டதை அறிந்து கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்ட ஹரிதாஸ் ஜாலா, அப்படி அறிந்து கொண்டதை எத்தனை பக்குவமாகக் குர்ரம் தெரியப்படுத்துகிறானென்பதை நினைத்துப் பெரிதும் வியப்பெய்தினான். ஆனால் அந்த வியப்பை

வெளிக்குக் காட்டாமல் கூறினான், "ஜாலா வம்சத்தினர் ஆணையிடும் போது நிபந்தனையுடன் ஆணையிடுகிறார்கள்" என்று.

"உன் ஆணைக்கு என்ன நிபந்தனையிட்டாய்?" என்று சர்வசாதாரணமாகக் கேட்டான் குர்ரம்.

"நிபந்தனையை நான் தெரிவிக்கவில்லை, சக்கரவர்த்தியே தெரிவித்தார்."

"என்ன தெரிவித்தார் என் தந்தை?"

"நாகதீபத்தை நான் கொண்டு வந்தால் ராஜபுதனப் போரை நிறுத்துவதாகக் கூறினார்."

சுல்தான் குர்ரத்தின் அழகிய விழிகள் சில விநாடிகள் நிலத்தில் தாழ்ந்தன; "ஆம்; போரை நிறுத்த வேண்டியதுதான். மனிதர்களை நாசப்படுத்தும் போர் எதற்கு?" என்றான் சில விநாடிகள் கழித்து.

இதைக்கேட்ட ஹரிதாஸ் ஜாலாவின் கண்களில் வியப்பு விரிந்தது. "போர் தேவையில்லையா?" என்றும் வினவினான், அந்த வியப்பு குரலிலும் துலங்க.

"தேவையில்லை." திட்டமாக வந்தது குர்ரத்தின் பதில்.

"தேவையில்லை என்பதற்கு என்ன அத்தாட்சி?" என்று கேட்டான் ஹரிதாஸ் ஜாலா சற்றுக் கோபத்துடன்.

"நான் ஒண்டாலாவைத் தாக்காததே அத்தாட்சி."

"ஒண்டாலாவைத் தாக்காவிட்டால் சுற்றுப்புறங்களை ஏன் பிடித்திருக்கிறீர்கள்? ஏன் ராஜபுதனப் பெண்களையும் குழந்தைகளையும் சிறைப் பிடித்திருக்கிறீர்கள்?"



சுல்தான் குர்ரம் தன் சிம்ம மஞ்சத்திலிருந்து எழுந்திருந்தான். "சுற்றுப்புறங்களைப் பிடிப்பதில் தத்துவம் இருக்கிறது. அது என் பாட்டன் அறிந்தது" என்று கூறி குர்ரம் மேலும் சொன்னான்: 'கேள் ஹரிதாஸ்! என் பாட்டனுக்குப் பாட்டனொருவர் இருந்தார். அவர் பெயர் தயமூர்லங். அவர் உறவினரால் நாட்டிலிருந்து துரத்தப்பட்டார். பலமுறை தலைநகரைத் திரும்பப் பிடிக்கப் படையெடுத்துத் தோல்வி அடைந்தார். அப்படித் தோல்வி அடைந்து ஓடிய ஒரு சமயத்தில் ஒரு கிழவியின் குடிசையில் போய் உணவு கேட்டார். கிழவிக்கு உணவு கேட்டவர் தயமூர் என்பது தெரிந்தது. அவள் ஒரு கிண்ணத்தில் சுடச்சுட உணவைப் பிசைந்து கொடுத்தாள். தயமூர் அவசரமாகக் கிண்ணச் சோற்றில் கை வைத்தார். உணவுச் சூட்டில் கை சுட்டுவிடவே அலறிக் கையை எடுத்தார். கிழவி நகைத்தாள். நகைத்து விட்டு, 'தயமூர்! நீ போரிடும் லட்சணந்தான் உனக்கு உண்பதிலுமிருக்கிறது. சுடும் உணவின் நடுவில் கையை வைக்காதே. சுற்றுப் புறங்களில் இருப்பதைச் சிறுக சிறுக எடுத்துச் சாப்பிடு, சுடாது; கிண்ணமும் காலியாகி விடும்' என்று கூறினாள். அந்தப் படிப்பினை தயமூருக்கு வெற்றி தந்தது. சுற்றுப் புறங்களைச் சிறுகச் சிறுகக் கைப்பற்றினார். நாடு முழுவதும் காலக்கிரமத்தில் அவருக்குப் பணிந்தது. வெகு சீக்கிரம் அண்டை நாடுகளில் தயமூரின் பெயரைக் கேட்டு நடுங்கின. அந்தத் தத்துவத்தை நான் கையாளுகிறேன். அது மட்டுமல்ல..."

குர்ரம் இந்த இடத்தில் சற்று நிதானிக்கவே ஹரிதாஸ் ஜாலா கேட்டான், "வேறென்ன?" என்று.

குர்ரம் மேலும் சொன்னான்: "என் மூதாதையின் வழிப்படி சுற்றுப்புறங்களைப் பிடித்து மேவாரைப் பணிய வைக்க முயலுகிறேன். ஆனால் அது மட்டு

மல்ல. தயமூர் பெரும் மூர்க்கர். பிடிக்காதவர்களைக் கொடுமைப்படுத்தினார். நான் அன்பு வழியைக் கடைப்பிடிக்கிறேன். பிடித்த ராஜபுத்திரப் பெண்களைப் பார்க்கவும் கூடாதென கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருக்கிறேன். காரணம், சுதந்தர வீரர்களான மேவார் வம்சனத்தினருக்கு கண்ணியமான சமாதானத்தை அளிக்க விரும்புகிறேன். இந்த சமாதானம் அவர்கள் நிபந்தனைப்படி நடக்கும்."

குர்ரத்தின் தந்திரத்தையும் பெருந்தன்மையையும் கண்டு பெரிதும் வியப்படைந்த ஹரிதாஸ் ஜாலா ஏதும் பேச முடியாமல் ஸ்தம்பித்து நின்றான். அக்பரையும் ஜஹாங்கீரையும் எதிர்த்து நின்ற மேவார் இந்தக் கண்ணியத்துக்கு முன்பு தலைகுனிந்து விட்டால் ஆச்சரியப்பட ஏதுமில்லையென்றே நினைத்தான். ஆகவே நீண்ட நேரம் யோசனையில் ஆழ்ந்த ஹரிதாஸ் ஜாலா, மெள்ளத் தன் அங்கிக்குள் கையைவிட்டு நாக தீபமடங்கிய பேழையை எடுத்துக் குர்ரத்திடம் நீட்டினான். குர்ரம் பதிலேதும் சொல்லாமல் அதைத் தன் கையில் வாங்கிக் கொண்டு மெள்ளப் பேழையைத் திறந்தான். திறந்தவன் அப்படியே சித்தப்பிரமை பிடித்தவன் போல் சிம்ம மஞ்சத்தில் மீண்டும் உட்கார்ந்தான். நீண்ட நேரம் இந்த சரித்திர இரத்தினத்தின் கண்களைப் பதிய வைத்த குர்ரம், கடைசியில் நன்றி விரிந்த கண்களை ஹரிதாஸ் ஜாலாவின் முகத்தில் ஓடவிட்டான்.

ஹரிதாஸ் ஜாலாவின் உடல் லேசாக நடுங்கியது. விதியின் தூண்டுதலால் செய்யத் தகாத செய்கையைச் செய்து விட்டதாகத் தோன்றியது அவனுக்கு. இதயம் படக்படக்கென்று அடித்துக்கொண்டது. "இளவரசே! என் ஆணையை நிறைவேற்றிவிட்டேன்'' என்று சொற்கள் குளறிக் குளறி வெளிவந்தன.



"ஆம் வீரனே, நிறைவேற்றிவிட்டாய். தயமூரின் பரம்பரை உனக்கு கடமைப்பட்டிருக்கிறது. இந்த இரத்தினம் இருக்கும் இடத்தில் வெற்றி இருப்பதாக வதந்தி இருக்கிறது. அது உண்மையாக அல்லா (ஸல்) அருள் புரியட்டும். இந்த நாட்டில் அமைதி நிலவட்டும்" என்றான் குர்ரம், கூடாரத்தின் மேற்புறமாகக் கண்களை உயர்த்தி.

ஹரிதாஸ் ஜாலா பதில் சொல்லவில்லை. உணர்ச்சிகளின் அலைகளில் அவன் புரண்டு கொண்டிருந்தான். குர்ரம் நாகதீபத்தின் பேழையை மூடி தன் அங்கிக்குள் பத்திரப்படுத்திக் கொண்டான். "ஹரிதாஸ்! சீக்கிரம் இதைப்பற்றி என் தந்தைக்கு அறிவித்து விடுகிறேன். அதற்காக முகம்மது பெக்கையே அனுப்புகிறேன். உனக்கு என்ன வேண்டும், கேள்" என்றான்.

தடங்கலின்றிக் கேட்டான் ஹரிதாஸ், "ஒண்டாலாவுக்குத் திரும்ப அனுமதிக்க வேண்டும்" என்று.

"எதற்கு?'' குர்ரத்தின் கேள்வியில் ஆச்சரியம் ஒலித்தது.

''உங்களுக்கெதிராகப் போரிட!'' தயக்கமின்றி வந்தது ஹரிதாஸின் பதில்.

"இனி அமைதி நிலவப் போகிறதே ஹரிதாஸ்'' என்றான் குர்ரம்.

"முடியுமானால் அதைத் தடுப்பேன்."

"ஏன்?''

"ராணா பிரதாப் அமைதியை விரும்பவில்லை. சுதந்தரத்தை விரும்பினார்."

"ஆனால் அமரசிம்மர் அமைதியை விரும்புகிறாரே."

"யார் சொன்னது?"

"நேற்றே இதற்குத் தூதர் வந்து போனார்."

"யார் அந்த தூதர்?"

"சுபகரண்சிங்."

ஹரிதாஸ் ஜாலா அதிர்ச்சியுற்று நின்றான். ராஜபுதனத்துச் சிறந்த படைத் தலைவர்களில் ஒருவரான சுபகரண்சிங்கே இதற்கு வருவதானால் ராஜபுதனம் தலைதாழ்த்தியது போலத் தானென்று முடிவு செய்தான். இருப்பினும் ஒண்டாலா போகத் தீர்மானித்த ஹரிதாஸ் ஜாலா, "எனக்கு விடையளியுங்கள் சுல்தான். நான் உங்களைப் போரில் சந்திக்கிறேன்" என்று கூறினான்.

குர்ரம் மிகக் கம்பீரமாக எழுந்து நின்றான். "சுதந்தரமாகப் போய்வா ஹரிதாஸ் ஜாலா. ஆனால் இனி நாம் போரில் சந்திக்க மாட்டோம். சமாதானப் பேச்சுப் பேசத்தான் சந்திப்போம். வெற்றியை அளிக்கும் நாகதீபம் என் கையில் வந்துவிட்டது" என்று கூறிவிட்டுக் கையைத் தட்டினான். அந்த அழைப்புக்குப் பணிந்து உள்ளே வந்த மகம்மது பெக்கிடம் சொன்னான்: "முகம்மது பெக்! ஹரிதாஸ் ஜாலா நமது தந்தையின் கட்டளையை நிறைவேற்றி நமது சாம்ராஜ்யத்துக்கு பெரும்பணி செய்திருக்கிறார். இவருக்குப் புரவியொன்று கொடுத்து ஒண்டாலாவுக்குச் செல்ல ஏற்பாடு செய். இவர் மீது யார் கை வைத்தாலும் குர்ரத்தின் மீது கைவைத்ததாகும் என்ற ஓலை எழுதிக் கொடு." இதைக் கூறிய குர்ரம் பேட்டி முடிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான்.

குர்ரத்தின் பாசறையிலிருந்து வெளிப்போந்த ஹரிதாஸ் ஜாலா, எப்படியும் மேவாரைப் பணிய



விடக் கூடாதென்று உறுதியுடன் ஒண்டாலாவை நோக்கிச் சென்றான். கேவலம் ஓர் இரத்தினம், சிருஷ்டியின் ஒரு கல், ஓர் அரசின் கதியை நிர்ணயிக்கக் கூடாதென்று தீர்மானித்தான். ஜயன் சந்தாவத்தை எப்படியும் தூண்டி மீண்டும் போர் செய்யும் எண்ணத்துடன் ஒண்டலாவை அடைந்தான். ஆனால் அவன் எண்ணம் நிறைவேறவில்லை. குர்ரத்தின் வாக்கே பலித்தது. அதைப்பற்றி ஜஹாங்கீரே தமது கைப்பட எழுதி வைத்திருக்கின்றார். ஜஹாங்கீரின் சுயசரித்திர ஏடு இப்படிக் கூறுகிறது:

"நான் அரியணை ஏறி எட்டாவது வருஷத்தில் என் அதிர்ஷ்ட மகன் குர்ரம் ராணாவிடமிருந்து கைபற்றிய ஆலம் கோமான் என்ற யானையையும் மற்றும் பதினேழு யானைகளையும் எனக்கு அனுப்பி வைத்தான்... அதையடுத்து சில நாட்களில் ராணா அமரசிம்மன் பணிய விரும்புவதாகச் செய்தி வந்தது. எனது மகன் குர்ரம் மேவாரைச் சுற்றியுள்ள பல இடங்களையும் மேவாரின் பெரிய குடும்பங்களின் தாய்மார்கள், மனைவிமார்கள், குழந்தைகள் மற்றுமுள்ள உறவினர்கள் இவர்களைச் சிறைபிடித்து விட்டதாலும் ராணா பணிய வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது... நான் ஆஜ்மீரை விட்டு வேட்டையாடித் திரும்பியபொழுது எனது மகன் குர்ரம் ராணா தன்னைச் சந்தித்துவிட்டதாக மகம்மது பெக், என்ற வீரனிடம் தகவல் அனுப்பியிருந்தான். இதைக் கேட்டதும் நான் மகம்மது பெக்குக்கு ஒரு யானை, ஒரு குதிரை இவற்றைப் பரிசளித்து ஜுல் பெகர்கான் என்ற பட்டத்தையும் அளித்தேன்."

ஜஹாங்கீரின் இந்தச் சொற்கள் சரித்திர ஏடுகளில் பொறிக்கப்பட்டு இருக்கின்றன. பாபருக்கும் அக்பருக்கும் பணியாதது ஜஹாங்கீருக்குப் பணிந்தது. இது

"ஊருக்குள் சென்று பார். எங்கும் ஒரே ஓலம். ராஜபுதன மகாவீரர்களின் மனைவிமார்கள் சிறைப்பட்டிருக்கிறார்கள் எதிரிகளிடம். இதுவரை அவர்கள் மானம் காக்கப்பட்டிருக்கிறது. மானத்தைக் காக்கத் தானே சுதந்தரம். அதில்லாத சுதந்திரம் எதற்கு? பயனில்லை ஹரிதாஸ், பயனில்லை. ராஜபுதனப் பிரதானிகள் மானமிழக்க, அந்தக் குடும்பங்கள் அலற என் கௌரவத்தைக் காக்க நான் இஷ்டப்படவில்லை. ஏற்கெனவே சமாதானத் தூதனாக சுபகரண்சிங்கை அனுப்பிவிட்டேன். இனி நீ செல் அந்தப் பணிக்கு. அதை எத்தனை கௌரவமாக முடிக்க முடியுமோ அவ்வளவு கௌரவமாக முடித்து வை" என்றார்.

ஹரிதாஸ் ஜாலா பெருமூச்செறிந்து வெளியே சென்றான். அடுத்த இரண்டு மூன்று நாட்களில் ராணாவின் சமாதானத் தூதனாக குர்ரத்திடம் சென்றான். மேவாரின் மகாராணா சுல்தான் குர்ரத்திடம் மறுமுறை வராமலே ஹரிதாஸ் ஜாலா சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுத்தான். மகாராணாவுக்கு உடல் நிலை சரியில்லை என்று சொல்லி சின்ன ராணா கருணாசிம்மனை அழைத்துச் சென்றான்.

சுல்தான் குர்ரம் மிகுந்த பெருந்தன்மையுடன் நடந்து கொண்டான். "மகாராணாவைத் தொந்தரவு செய்ய வேண்டாம்" என்று கூறி, கருணாசிம்மனைக் கையைப் பிடித்து அழைத்துத் தனக்கு அடுத்த ஆசனத்தில் உட்கார்த்திக் கொண்டான். இந்தச் சமாதான ஏற்பாடுகளின் போது சுந்தர்தாஸும் இடையிடையே ஹரிதாஸுடன் வந்து கொண்டிருந்தாலும் அவனை ஏன் வருகிறாய், போகிறாய் என்று மகாராணாவின் சுற்றுவட்டாரங்களிலும் யாரும் கேட்கவில்லை. சுல்தான் குர்ரத்தின் வட்டாரங்களிலும் யாரும் கேட்கவில்லை.



பல ஆண்டுகள் மொகலாயர் படையெடுப்புக்குப் பணியாத மேவார் கடைசியாகப் பணிந்தது. அந்தப் பணிவு நிபந்தனைகளை ஏற்பாடு செய்த ஹரிதாஸ் ஜாலா ஒண்டாலாவின் ராஜபுத்திரியைச் சந்திக்கப் பயந்து கொண்டிருந்தான். நாகதீபத்தை மொகலாயரிடம் அளித்த அற்பனை எப்படி ஜயன் சந்தாவத்தின் பேத்தி ஏற்பாள் என்று அவள் மாளிகைப் பக்கமே நாடவில்லை அவன்.

அவனை ஒரு நாள் ராணாவே அழைத்துச் சென்றார் ராஜபுத்திரியிடம். சந்தாவதர்கள் மாளிகைக் கூட்டத்தில் திரை மறைவில் நின்ற ராஜபுத்திரி, "ராணாவின் வரவுக்குக் காரணம் எனக்குத் தெரியும். ஆனால் அவரை நான் பார்க்க இஷ்டப்படவில்லை" என்றாள்.

"கணவனைப் புறக்கணிப்பது பதிவிரதா தர்மமல்லவே ராஜபுத்திரி" என்று கெஞ்சினார் மகாராணா.

"ராஜபுத்திர வீர மகளிருக்கு வேறொரு பாடமும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்'' என்றாள் ராஜபுத்திரி சீற்றத்துடன்.

"அது என்ன பாடம் ராஜபுத்திரி?" என்று வினவினார் ராணா.

"நாட்டுத் துரோகிகளுக்கு இடங்கொடாதிருப்பது" என்றாள் ராஜபுத்திரி.

"உன் கணவர் நாட்டுக்குத் துரோகியல்ல."

"யார் சொன்னது?"

"நான் சொல்கிறேன் - மேவார் ராணா."

"நாகதீபத்தைக் காக்க நீங்கள் யாரிடம் கொடுத்தீர்கள்?"

“உன் கணவரிடம் கொடுத்தேன். பதினைந்து நாட்கள் வரை காக்க. அந்த காலவரையறைக்குப் பிறகு அவர் அதை எது வேண்டுமானாலும் செய்யலாம் என்றேன்.”

“என்ன செய்தார் அவர்?”

“அதன் மூலம் ராஜபுதனப் பெண்மணிகளின் மானத்தைக் காத்தார். உன் ராணா மொகலாயருக்குத் தலை வணங்காமலே கண்ணியமான சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்.”

ராணாவின் அத்தனை வார்த்தைகளும் செவிடன் காதில் ஊதிய சங்காய் விடவே ராணா மிகுந்த கோபத்துடன், “ஹரிதாஸ்! பெண்களிடம் நியாயம் பலிக்காது. துராக்கிருகந்தான் பலிக்கும்'' என்று கூறினார். அத்துடன், “நான் வருகிறேன். நான் சம்பந்தப்பட்டவரை அந்த நாகரத்தினத்துக்குப் பதில் இந்தக் குடும்ப இரத்தினத்தை உனக்கு அளித்துவிட்டேன். கைப்பற்றுவது உனது சாமர்த்தியம்” என்று சொல்லி விட்டு வெளியேறினார்.

மாளிகைக்கூடத்தின் கதவு சாத்தப்பட்டது. பலமாகச் சிரித்தான் ஹரிதாஸ் ஜாலா. அந்தச் சிரிப்பில் கூடம் அதிர்ந்தது. அது கதை ஆரம்பத்தில் சிரித்த வறட்டுச் சிரிப்பல்ல. இன்பத்தைக் கைப்பற்றத் திட்டமிட்ட களிவெறிச் சிரிப்பு. அடுத்த விநாடி ஹரிதாஸ் ஜாலாவின் வாள் வெளி வந்தது. இடையே இருந்த திரை சரேலென்று கிழிக்கப்பட்டது. ஒரு விநாடி மௌனநிலை. அடுத்த விநாடி மீண்டும் பலத்த சிரிப்பு. அதன் ஊடே, “விடுங்கள், விடுங்கள்!” என்ற கூச்சல் மேலுக்கு வெறுப்பாயிருந்தது. அதனிடையே இன்ப நாதம் ஊடுருவிச் சென்றன.